தமிழ்நாடு அரசு

நிர்வாகச் சீர்திருத்த ஆணைக்குழு

CONNEMARA PUBLIC LIBRARY
19 DEC 1973
MADRAS
9624

ஊராட்சி வளர்ச்சி நிர்வாக அறிக்கை

URATCI VALARCCI NIRVAKA ARIKKAI

©

சென்னை,
ஜூன் 1973

நிர்வாகச் சீர்திருத்த ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்

1. திரு டி. ஏ. வர்கீஸ், I.C.S. (Retd.) .. தலைவர்.
2. திரு கே. எஸ். சிவசுப்ரமணியன், I.A.S. .. உறுப்பினர்.
3. திரு வி. கார்த்திகேயன், I.A.S. .. உறுப்பினர்.
4. திரு ஏ. ஆர். சுப்பையா, M.L.A. .. உறுப்பினர்.
5. திரு வி. கிருஷ்ணசாமி, I.A.S. .. உறுப்பினர்—செயலாளர்.

204000
3345/23
10
V211,6'N73R
31L3;2
SV82

பொருளடக்கம்

அத்தியாயம் எண்.	தலைப்பு.	பக்க எண்.
1.	வரலாற்றுப் பின்னணி	1
2.	தற்போதுள்ள அமைப்பு	4
3.	ஊராட்சிகள்	6
	(அ) ஊராட்சிகளின் அளவும் மக்கள் தொகையும் ..	6
	(ஆ) நிதி வாயில்கள்	12
	(இ) வரி வசூல்	14
	(ஈ) தெரு விளக்குகள்	19
	(உ) சுகாதாரம்	20
	(ஊ) பணிகள்	21
	(எ) நிதிகளைச் சீராகப் பயன்படுத்துவதற்கான கோட்பாடுகள்.	21
4.	பேரூராட்சிகள்	21
5.	ஊராட்சி ஒன்றியங்கள்	24
	(அ) பரப்பளவு	24
	(ஆ) நகர மலைப் பகுதிகளைச் சேர்ந்த ஊராட்சி ஒன்றியங்களின் தனிப் பிரச்சினைகள்.	25
	(இ) ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் தேர்தல் ..	26
	(ஈ) வருவாய் வாயில்கள்	27
	(உ) ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள் மேற்கொள்ளுகிற பயணங்கள்.	30
6.	ஊராட்சி ஒன்றியங்களின் அலுவல்கள் ..	30
	(அ) வேளாண்மை	31
	(ஆ) கால்நடை வளர்ப்பு	39
	(இ) கல்வி	41
	(ஈ) குடும்ப நலத் திட்டம்	46
	(உ) மக்கள் நல்வாழ்வு	47

அத்தியாயம் எண்.	தலைப்பு.	பக்க எண்.
	(ஊ) கூட்டுறவு	48
	(எ) தொழில்கள்	48
	(ஏ) பணிகள் திட்டம்	49
	(ஐ) மகளிர் நலன்	52
7.	மாவட்ட வளர்ச்சி மன்றங்கள்	52
8.	கணக்குகளும் தணிக்கையும்	56
9.	பணியாளர் நிர்வாகம்	63
10.	ஊராட்சி வளர்ச்சிப் பணியை மேலும் செவ்விய முறையில் மேற்பார்வையிடல்.	73
11.	அதிகாரப் பிரிவினை	82
	பரிவுரைகளின் சுருக்கம்—	
	திரு வ. ஆர். சுப்பையா முதலியார், எம்.எல்.ஏ., அவர்களின் கருத்து வேறுபாட்டுக் குறிப்பு.	102
	இணைப்புகள்	107—125

CONNEMARA PUBLIC LIBRARY
19 DEC 1975
MADRAS

1. வரலாற்றுப் பின்னணி

1·1. இந்தியத் துணைக் கண்டத்திலே வேத கால முதற்கொண்டே தல சுயாட்சி முறை வழக்கில் இருந்து வந்திருக்கிறது. பண்டைக் காலத்தில், இம்முறை மிகப் பரவலாக இருந்தது. பிரிட்டிஷ் ஆட்சி நாட்களில் இருந்ததைக் காட்டிலும், ஏன் இன்றைய நாளில் இருப்பதைக் காட்டிலும் அப்போது இம்முறை மேலும் ஆக்கப்பூர்வமாகவும் கண்கூடாகவும் வெற்றிகரமாகவும் செயல்பட்டு வந்திருக்கிறது. பிரிட்டிஷ் ஆட்சிக்கு முற்பட்ட இந்தியா, கிராமக் குடியாட்சிகள் நிறைந்த நாடெனப் பொருத்தமாகப் பலகாலும் விவரிக்கப்பட்டிருக்கிறது. சோழப் பெருமன்னர் முதல் பராந்தகச் சோழர் காலத்திலேயே, மிகவும் ஏற்றம் பெற்றதும் தன்னாட்சி பெற்றதுமான சுயாட்சி முறை ஒன்று கிராம நிலையில் இருந்துவந்துள்ளது. உத்திரமேரூரில் கி.பி. 921-ம் ஆண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளிலிருந்து இதை அறியலாம். இத்தகைய கிராம அமைப்புகள் கிராமத்தினராலேயே நிர்வகிக்கப்பட்டு வந்திருக்கின்றன. உரிய தகுதிகள் பெற்றவர்கள் சீட்டுக் குலுக்கிப் போடும் குடவோலை முறை மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். வரிகள் விதித்து வாங்கவும் தகராறுகளைத் தீர்த்துவைக்கவும், முழு சுயாட்சியுடன் உள்ளூர் வசதிகள் எல்லாவற்றையும் நிர்வகிக்கவும் இவர்களுக்கு அதிகாரம் இருந்தது. இவர்கள் ஆண்டு வாரியம், தோட்ட வாரியம், ஏரி வாரியம், பொன் வாரியம் போன்ற பல்வேறு வாரியங்களாக அமைப்பெற்றுச் சிறப்பான திறமையுடன் தங்கள் பொறுப்புக்களைக் கவனித்து வந்திருக்கின்றனர். பண்டைக் காலத்தில் போக்குவரத்து–தகவல் வசதிகளின்மையும், ஒவ்வொரு கிராமமும் பொருளாதார வகையில் தன்னிறைவுடன் இருந்ததும், கிராமத்தினருக்கு மத்திய அரசுக்குள்ளேயே சுயாட்சி நடத்துவதற்கான பெரும் வாய்ப்பினை உறுதிப்படுத்தின. மத்தியில் அடிக்கடி அரச வமிசங்கள் மாறியபோதிலும், அதன் காரணமாக, இத்தகைய சுயாட்சி உரிமை பெற்ற கிராமச் சமுதாயங்களை அது சிறிதும் பாதிக்கவில்லை. கிராமச் சமுதாயங்கள், பன்னூறு ஆண்டுகளாக தங்கள் தனித் தன்மையைப் பேணிப் பாதுகாத்துவர முடிந்தது.

1·2. பிரிட்டிஷ் ஆட்சி தொடங்கியதும், அதன்கீழ் அமைந்த வலிமை மிக்க மத்திய அரசு உழவருடனோ யதேச்சாதிகாரம் பெற்ற உள்ளூர்த் தலைவருடனோ நேரடியாகவே விவகாரங்களைத் தீர்த்துக் கொண்டதால், இந்தியாவில் கிராமச் சுயாட்சி முறை படிப்படியாக அற்றுப் போயிற்று. 1858ஆம் ஆண்டுக்குப் பின்னரே, பிரிட்டிஷ் அரசு, தன்னாட்சி உரிமை பெற்ற உள்ளாட்சி மன்றங்கள் அமைப்பது குறித்துத் தீவிரமாகச் சிந்திக்க முற்பட்டது. 1870 ஆம் ஆண்டு மேயோ பிரபுவின் தீர்மானமும், 1882 ஆம் ஆண்டு ரிப்பன் பிரபுவின் தீர்மானமும், உள்ளாட்சி

மன்றங்களின் முதற்தொகுதி உருப்பெறுவதற்கு உண்மையில் வழிகோலின. ஆயினும், சென்னையில், சென்னை மாநகராட்சி 1688 ஆம் ஆண்டு செப்டம்பர் 29 ஆம் நாள் மன்னரிடமிருந்து பெற்ற சாசனத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்டது. இவ்வாறாக, இந்தியாவில் முதன்முதலில் நகராட்சி அமைந்த தனிச் சிறப்பு சென்னையையே சார்ந்ததாகும். குடிமக்களது முயற்சியின் பேரில் நகராட்சிகள் பெருவாரியாக அமையப் பெறுவதற்கு 1850ஆம் ஆண்டு 26ஆவது சட்டம் அதிகாரமளித்தது. கல்வி, மருத்துவ வசதிகள் போன்று உள்ளூர் மேம்பாடுகளுக்காக சில 'செஸ்' வரிகள் விதித்து வாங்க, சென்னை 1863 ஆம் ஆண்டு 6-வது சட்டம், 1866 ஆம் ஆண்டு 3-வது சட்டம், சென்னை உள்ளாட்சி மன்ற நிதிகள் சட்டம் (4/1891 ஆம் சட்டம்) ஆகியவை அதிகாரமளித்தன. ஆனால், இவை வரி வருவாய் நிர்வாகத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றங்களை ஏற்படுத்தவில்லை.

1·3. தல சுயாட்சி பற்றி முதன் முதலில் இயற்றப்பட்ட முக்கியமான சட்டம் 1884ஆம் ஆண்டு சென்னை உள்ளாட்சி மன்றங்கள் சட்டமாகும். இச் சட்டத்தின் கீழ், சிறிய நகரங்களும், கிராமத் தொகுதிகளும், ஊராட்சிகளின் பொறுப்பில் உள்ள ஒன்றியங்களாக அமைக்கப்பட்டன. இந்த ஒன்றியங்களில் கிராமத் தலைவர்கள் அலுவல் முறையில் உறுப்பினராயிருந்தனர். இந்த ஒன்றியங்கள் சாலைப் பராமரிப்பு, தெருவிளக்கு வசதி, துப்புரவு இவற்றைக் கவனிக்கும் பொறுப்பை ஏற்றிருந்தன. இதே சட்டத்தின்கீழ், வட்ட வாரியங்களும், மாவட்ட வாரியங்களும் ஏற்படுத்தப்பட்டன. இவற்றுக்கு முறையே வருவாய்க் கோட்ட அதிகாரியும், மாவட்ட ஆட்சித் தலைவரும் அலுவல் முறையில் தலைவர்களாக இருந்தனர். மாவட்ட வாரியங்கள் வட்ட வாரியங்கள் மீது மேலதிகாரம் செலுத்தின. வட்ட வாரியங்கள் ஒன்றியங்கள் மீது அவ்வாறே அதிகாரம் செலுத்தின. இந்த உள்ளாட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் யாவரும் நியமனம் செய்யப்பட்டனர். ஆனால், தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அனுமதிக்கும் அதிகாரம் கவர்னருக்கு இருந்தது. ஆயினும் இந்த விருப்ப உரிமை ஒருபோதும் செயல்படுத்தப்படவில்லை. 1897 ஆம் ஆண்டில், சென்னை ராஜதானியில் 3324 உறுப்பினர்களைக் கொண்ட 361 ஒன்றியங்கள் இருந்தன. 1762 உறுப்பினர்களைக் கொண்ட 103 வட்ட, மாவட்ட வாரியங்கள் இருந்தன.

1·4. 1909-ல் அதிகாரப் பிரிவினை பற்றிய 'ராயல் கமிஷன்' மாண்டேகு–செம்ஸ்ஃபோர்டு அறிக்கை, 1918 ஆம் ஆண்டு இந்திய அரசு தீர்மானம் ஆகியவை உள்ளாட்சி மன்றங்கள் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளைக் கொண்டதாயிருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தின. சென்னை 1920 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் சட்டம் (சட்டம் 14/1920) சென்னை 1920 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் ஆகியவற்றின் கீழ், புதிய ஊராட்சிகள் அமைக்கப்பட்டன. உள்ளூரில் 25 வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவரும், வாக்களித்து ஊராட்சி உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தகுதி பெற்றனர். இந்த ஊராட்சிகளை மேற்பார்வையிட்டு முறைப்படுத்துவதற்காக, தலைமைப் பதிவாளர் ஒருவர் நியமிக்கப்பட்டார். மாவட்ட வாரியங்கள், வட்ட வாரியங்கள், ஒன்றி

யங்கள் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைப் பெருவாரியாகக் கொண்டிருந்ததுடன், வரி விதிக்கும் அதிகாரங்களைப் பெருமளவில் பெற்றிருந்தன. நெருக்கடி ஏற்பட்டால் மட்டுமே, மாவட்ட ஆட்சித்தலைவர்களும், அரசும் ஊராட்சி விவகாரங்களில் தலையிட்டனர்.

1·5. 1928 ஆம் ஆண்டுக்குள், ஊராட்சிகளின் எண்ணிக்கை 3000-க்கு மேலாகப் பல்கிப் பெருகியது. தலைமைப் பதிவாளர் மேற்பார்வைப் பணியினைச் சரிவர நிறைவேற்ற இயலவில்லை. ஆகவே அரசு, ஊராட்சிகளை மாவட்ட ஆட்சித் தலைவர்களது பொறுப்புக்கு மாற்றியது. 1930-ல், 1920 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் சென்னை 1930 ஆம் ஆண்டு 11-வது சட்டத்தினுல் ரத்து செய்யப்பட்டது. ஊராட்சிகள், ஒன்றியங்களுக்கு நிகராக்கப்பட்டு சென்னை 1920 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் சட்டத்தின் ஆட்சிக்குள் கொண்டுவரப்பட்டன. சிறிது காலத்திற்குப் பின்னர், ஒன்றியங்கள் ஊராட்சிகளாக மாற்றப்பட்டன.

1·6. வட்ட வாரியங்கள் செய்யும் அலுவல்களையே மாவட்ட வாரியங்களும் கணிசமாகச் செய்வதாக அரசு கருதியது. மேலும், கிராம நிலைக்கு மேல், இருவகையான உள்ளாட்சி மன்ற அமைப்புகள் இருக்க வேண்டிய அவசியமில்லை என்றும் கருதியது. எனவே, 1934-ல் அரசு, வட்ட வாரியங்களை எடுத்துவிட்டது.

1–7. மாவட்ட வாரியங்களின் பொறுப்பிலிருந்து ஊராட்சிகளை எடுத்துவிட சென்னை 1946 ஆம் ஆண்டு 12-வது சட்டம் விழைந்தது. ஆனல், நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாறுதல்களினுலும், அடங்கல் சட்டம் ஒன்றைக் கொண்டுவர விரும்பியதாலும், இச்சட்டம் 1948-ல் செயலற்றுப்போக அனுமதிக்கப்பட்டது.

1·8. இந்திய அரசியலமைப்பின் 40-வது பிரிவு, ஊராட்சிகளை உருவாக்கி, அவற்றுக்குப் போதிய அதிகாரங்களையும், நிதிவாயில்களையும் கொடுத்து, தல சுயாட்சியின் தன்னுட்சி அங்கங்களாக அவற்றை உருவாக்கும் கடமையினை மாநில அரசுகளுக்கு விதிக்கிறது. இந்தக் குறிக்கோளையொட்டி, சென்னை 1950-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம், 500-க்கு மேற்பட்டவர்களைக் கொண்ட கிராமத்திற்கு ஒரு ஊராட்சியை அமைக்கும் வகையில் இயற்றப்பட்டது. இவை தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டவையாயிருக்கும். அவை கவனிக்க வேண்டிய உள்ளாட்சி அலுவல்களைக் கொண்ட விரிவான பட்டியல் இச்சட்டத்தில் கொடுக்கப்பட்டது. இந்த ஊராட்சிகள் மீது மாவட்ட வாரியங்களுக்கு அதிகாரம் எதுமில்லை. உள்ளாட்சி மன்ற ஆய்வாளர் மூலம் இவை நிர்வகிக்கப்பட்டன.

1·9. 1950—1958 ஆண்டுகளுக்கிடையில், கிராமப் பகுதிகளின் வளர்ச்சியில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த மாறுதல்கள் ஏற்பட்டன. இந்தியாவின் ஒவ்வொரு பகுதியையும் உள்ளடக்கும் வகையில் தேசிய நலவளர்ச்சிப் பணிகளும் சமுதாய வளர்ச்சித் திட்டங்களும் உருவாக்கப்பட்டன. சமுதாய வளர்ச்சி வட்டாரங்கள் வளர்ச்சி வட்டாரத்திற்கு 66,000பேர் முதய

1, 0,000, பேர் வரையுள்ள வீதத்தில் அமைக்கப்பட்டன. சமூக, பொருளாதார, பண்பாட்டுத் தேவைகளை உள்ளடக்கி மொத்தமாக சமுதாயம் ஒருங்கிணைந்து பெறும் வளர்ச்சி, தேசிய நல வளர்ச்சிப் பணிகள் மூலமாகவும், சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் வாயிலாகவும் ஏற்பட முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்தத் திட்டங்களின் கீழ், ஒரே பதவித் தரத்தில் உள்ள பலதுறை வளர்ச்சி அதிகாரிகள் கொண்ட ஒருங்கிணைப்புக் குழு,வளர்ச்சி வட்டார நிலையில் செயல்பட்டது. குடியாட்சி அதிகாரப் பிரிவினை பற்றி பல்வந்த்ராய் மேத்தா குழு (1957), வளர்ச்சி நடவடிக்கைகளில் உள்ளூர் மக்கள் பங்கு பெறும் வகையில் மக்கள் ஆதரவுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து சமிதியுடன் சமுதாய வளர்ச்சி அமைப்பு ஒருங்கிணைக்கப்படவேண்டுமென்று எடுத்துக் கூறியது.

1·10. இவ்வாறாக கிராம நிலையில் ஊராட்சிகளையும், வட்டார நிலையில் ஊராட்சி ஒன்றியங்களையும் அமைக்கின்ற தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் இயற்றப்பட்டது. ஊராட்சி ஒன்றியம் ஊராட்சிகளின் கூட்டு அமைப்பாக உருவாக்கப்பட்டது. ஊராட்சிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் ஊராட்சி ஒன்றியத்தின் உறுப்பினர்களாவர். இவர்களுள் ஒருவர் ஊராட்சி ஒன்றியத்தின் தலைவராகத் தேர்ந்து எடுக்கப்படுவார். மாவட்ட வாரியங்கள் நீக்கப்பட்டு அவற்றுக்குப் பதிலாக, மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் எனப்படுகிற ஆலோசனைக் குழுக்கள் கொண்டுவரப்பட்டன. உற்பத்தி அலுவல்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி மன்றங்களிடம் ஒப்படைக்கப்பட்டதே தமிழ்நாடு 1958ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் கொண்டுவந்ததில் ஏற்பட்ட மிகவும் குறிப்பிடத்தக்க மாற்றமாகும். இந்த உள்ளாட்சி மன்றங்கள் இதுகாறும் நகராட்சி அலுவல்களை மட்டுமே செய்து வந்தன. வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, கூட்டுறவு, பாசனம், கிராமத் தொழில்கள் முதலிய உற்பத்தி அலுவல்கள் உள்ளாட்சி மன்றங்களிடம் ஒப்படைக்கப்பட்டதால், இவற்றுக்குத் துணை புரிந்து பணியாற்றுவதற்குப் பல்வேறு வகைப்பட்ட தொழில் நுட்பப் பணியாளர்களை நியமிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஃபிர்க்கா வளர்ச்சித் திட்டங்களையும், சமுதாய வளர்ச்சித் திட்டங்களையும் நிறைவேற்றுகையில், அவ்வாறு செயல்படுவதற்கு வேண்டிய சிறப்புத் திறமையைப் பெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களும், வருவாய்க் கோட்ட அதிகாரிகளும் சம்பந்தப்பட்ட பல்வேறு துறைகளுக்கிடையே சிறப்புத் திறமையுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கு இந்த மாற்றம் காரணமாயிற்று.

2. தற்போதுள்ள அமைப்பு

2·1. தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டு தற்போது 12,628 ஊராட்சிகளும், 598 பேரூராட்சிகளும், 12 நகரியங்களும், 374 ஊராட்சி ஒன்றியங்களும் உள்ளன. 323 லட்சம் கிராம மக்களைக் கொண்டு இம் மாநிலத்தின் நகராட்சியல்லாத பகுதி முழுவதும் இந்த அமைப்புகளின் நிர்வாகத்தின் கீழ் வருகிறது.

2·2. தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாக அமைந்துள்ள ஊராட்சிகள் ஊராட்சி ஒன்றியங்கள் முதலியவற்றின் எண்ணிக்கைகளைக் கீழ்க்காணும் அட்டவணையிலிருந்து தெரிந்துகொள்ளலாம் :—

வருவாய் மாவட்டம்.	வளர்ச்சி மாவட்டங்களின் எண்ணிக்கை.	வருவாய்க் கோட்டங்களின் எண்ணிக்கை.	வருவாய் வட்டங்களின் எண்ணிக்கை.	ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை.	நகரியங்களின் எண்ணிக்கை.	ஊராட்சிகளின் எண்ணிக்கை.	வருவாய்க் கிராமங்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
செங்கற்பட்டு	2	4	8	27	1	1207	2,294
கோயம்புத்தூர்	2	4	9	41	2	749	991
தருமபுரி	1	2	6	16	..	579	1,107
கன்னியாகுமரி	1	1	4	9	1	224	64
மதுரை	2	4	12	34	2	857	1,102
நீலகிரி	1	2	3	4	1	27	54
வடஆர்சகாடு	2	4	13	36	..	1,582	1,918
ராமநாதபுரம்	2	4	9	32	1	1,297	1,370
சேலம்	2	4	8	35	1	723	861
தென் ஆர்க்காடு	2	4	8	34	1	1,745	2,288
திருநெல்வேலி	2	4	11	31	2	827	1,048
தஞ்சாவூர்	2	6	12	36	..	1,594	2,046
திருச்சிராப்பள்ளி	2	5	13	39	..	1,217	1,442
மொத்தம் .	23	48	116	374	12	12,628	16,585

2·3. ஊராட்சிகளுக்கு அரசுப் பணியாளர் எவருமிலர் ; ஆனல், பேரூராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் பணியாற்றப் பெருவாரி யான அளவில் அரசுப் பணியாளர் உளர். தேசிய நல வளர்ச்சிப் பணி, சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் அதிகாரிகள், பணியாளர்கள் யாவரும், அந்தந்த ஊராட்சி ஒன்றியப் பொறுப்பின் கீழ் வைக்கப்பட்டுள்ளனர். வளர்ச்சி வட்டார அதிகாரி ஊராட்சி ஒன்றிய ஆணையாளரெனப் பெயரிடப்பட்டுள்ளார். இவர் ஊராட்சி ஒன்றியக் குழுவின் தலைமை நிர்வாகியாவார்.

2·4. வருவாய்க் கோட்ட அதிகாரியும் மாவட்ட ஆட்சித் தலைவரும் ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மீது நிர்வாகக் கட்டுப்பாட்டுப் பொறுப்பு வகிக்கின்றனர். மாவட்ட ஆட்சித் தலைவர் வளர்ச்சி நடவடிக்கைகளில் நாட்டஞ் செலுத்தும் வகையில் அவரிடமிருந்து வாலாய மான வருவாய்த்துறைப் பணியில் பெரும் பகுதி மாற்றப்பட்டு மாவட்ட வருவாய் அதிகாரியி ம் கொடுக்கப்பட்டுள்ளது,

2·5. மாநில நிலையில், ஊர் வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் பொதுவான மேற்பார்வை, பொறுப்பு இவற்றின்கீழ், ஊராட்சி வளர்ச்சித் துறைக்கு கிராம வளர்ச்சி இயக்குநர் தலைமை தாங்குகிறார்.

2·6. வளர்ச்சி வட்டார நிலையில் வளர்ச்சி நடவடிக்கைகள் யாவுமே அநேகமாக ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக நடைபெறுவதால், ஊராட்சி ஒன்றியங்களின் செலவின் அளவு படிப்படியாகப் பெருகி வருவது கீழ்க்காணும் அட்டவணையிலிருந்து தெரியவரும் :—

ஆண்டு.	ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக மொத்தச்செலவு. (ரூ. லட்சத்தில்.)	ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்குமாகும் செலவு. (ரூ. லட்சத்தில்.)
1966–67	47 48	12 70
1967–68	52 70	14 09
1968–69	52 62	14 07
1969–70	59 15	15 81
1970–71	65 26	17 45
1971–72	72 08	19 27
1972–73	77 14	20 63
1973–74	94 69	25 32

3. ஊராட்சிகள்

(அ) ஊராட்சிகளின் அளவும் மக்கட் தொகையும்

3·1. **ஊராட்சிகளின் அளவு.**—தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின்படி, 500 பேருக்குக் குறையாமல் மக்கள் தொகையை உடைய கிராமங்கள் ஓர் ஊராட்சியாக அமைக்கப் படுவதற்குத் தகுதியுடையனவாகும். இதனால் பெருமளவில் மிகச்சிறிய ஊராட்சிகள் உருவாக வழியேற்பட்டுள்ளது. 1967 ஆம் ஆண்டில், 247 லட்சம் மக்கள் தொகை கொண்ட 12,881 ஊராட்சிகள் இருந்தன. எனவே, ஓர் ஊராட்சியில் சராசரியாக உள்ள மக்கள் தொகை 1914 பேர் எனக் கணக்கிடப்பட்டது. 247 லட்சம் மக்கள் தொகையில் பேரூராட்சிகளின் மக்கள் தொகையும் அடங்கியிருப்பதால், உண்மையில் ஓர் ஊராட்சியின் சராசரி மக்கள் தொகை எண்ணிக்கை இந்த எண்ணிக்கையைக் காட்டிலும் மிகக் குறைவாக இருந்திருக்கக்கூடும். கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகம், 12,642 ஊராட்சிகளை அவற்றின் மக்கள் தொகையையொட்டி ஆய்வு செய்தது. அதன் முடிவு பின்வருமாறு :—

மக்கள்தொகை.	**ஊராட்சிகளின் எண்ணிக்கை.**
500 பேருக்குக் குறைவாக	179
500 பேர் முதல் 1000 பேர் வரை	3,029
1000 பேர் முதல் 1900 பேர் வரை	4,853
1901 பேர் முதல் 3000 பேர் வரை	2,658
3001 பேருக்கு மேலாக	1,923
மொத்தம்	12,642

65 சதவீதம் ஊராட்சிகளில், சராசரியாக 1914 பேருக்குக் குறைவாகவே மக்கள் தொகை இருந்தது என்பதை மேற்குறிப்பிட்ட ஆய்விலிருந்து தெரிந்து கொள்ளலாம். 500 பேருக்குக் குறைவாக மக்கள் தொகையை யுடைய ஊராட்சிகள் 179 இருக்கின்றன என்பதையும் தெரிந்து கொள்ளலாம். தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பே இந்த ஊராட்சிகள் இருந்து வந்தன. மேற்படி சட்டத்தின் 190-வது பிரிவைச் சேர்ந்த விதித்துறையின் மூலம் அவை தனிப்பட்ட ஊராட்சிகளாகவே தொடர்ந்து இருந்துவர அனுமதிக்கப் பட்டன.

3.2. இந்த ஊராட்சிகள் மக்கள் தொகையைப் பொறுத்தமட்டில் சிறியனவாக இருப்பது தவிர, இவை, போதிய வரிவருவாய் இல்லாதவை யாகவும் இருக்கின்றன. 1971–72 ஆம் ஆண்டில் ஊராட்சிகள் அனைத்திற்கும் வரிக்கேட்புத் தொகை 162 லட்சமாக இருந்தது. எனவே, சராசரியாக, ஒவ்வொரு ஊராட்சிக்கும் ரூ. 1,300க்குக் குறைவாக வரி கேட்புத் தொகை இருந்தது. ஊராட்சி வரிகளை வசூலிப்பதற்காக ஒவ்வொரு ஊராட்சிக்கும் சராசரியாக ரூ. 600 முதல் ரூ. 800 வரை அரசு செலவு செய்வதைக் கவனத்திற்கொண்டோமானால், ஊராட்சிகளின் குறைந்த வருமானத்தையும் அவை போதியனவாக இல்லாதிருப்பதையும் நாம் புரிந்து கொள்ளமுடியும். வரி கேட்புத் தொகையில் சுமார் 50 சதவீதம் மட்டுமே தற்போது வசூல் செய்யப்படுகிறது. இதனால், ஊராட்சிகளின் தற்போதைய ஆண்டு வரி வருமானம் வரி வசூல் செலவினைச் சரிகட்டவே போதுமானதாக இருக்கிறது. வரி வசூல் செய்வதில் திறமையற்ற அமைப்பு மூலமாக ஆதாயமற்ற இந்த வரி விதிப்பு முறைகளைச் செயல்படுத்துவதற்குப் பதிலாக, வரி வசூல் செலவினை மானியமாக ஊராட்சிக்கு அரசு கொடுக்கலாம் என்ற கருத்து ஒருவருக்குப் பெரும்பாலும் எழுகிறது. இது வரவேற்கப்படும் என்பதோடு மட்டுமல்லாமல் ஊராட்சிகளின் வருவாய் நிச்சயமாகக் கிடைக்கும், உரிய காலத்தில் கிடைக்கும் உறுதியாகக் கிடைக்கும் என்று கூறவும் முடியும். இத்தகைய சொற்ப வருவாயைக் கொண்டு ஊராட்சிகள், ஊராட்சி முறை அமைப்பில் தமது பங்கினைச் சரிவர நிறைவேற்ற முடியவில்லை என்று கூறினால் அதில் வியப்பேதும் இராது.

3·3. பொதுவாக, ஊராட்சிகளுக்குப் பொது அலுவலகம் இல்லை. ஊராட்சித் தலைவர்களுக்கு உதவி செய்யப் பணியாளர் எவருமில்லை. பொதுவாக, பொது நிதிகளை நிர்வகிப்பதற்கு அவசியமான அலுவலகப் பணியையும் கணக்கு வைப்புப் பணியையும், கவனிக்க போதுமான சாதனங்களும் நேரமும் ஊராட்சித் தலைவர்களுக்கு இல்லை. தலைவர்களில் பலர் ஓரளவுக்கே கல்வி கற்றுள்ளனர். மேலும், அவர்கள் தங்கள் பிழைப்புக்காகத் தங்கள் வாழ்க்கைத்/தொழிலை அல்லது வேலையைகவனிக்க வேண்டியுள்ளது. இவர்களுக்குத்தான் அலுவலக உதவி உண்மையில் தேவையுள்ளது. ஊராட்சிகளின் தற்போதைய நிதி நிலையில், பல ஊராட்சிகள் பகுதி நேர எழுத்தர் ஒருவரை நியமிக்கக்கூட இயலாதுள்ளன. எனவே, ஊராட்சிகளை அமைப்பதற்கான அடிப்படைக்கூறானது, நியாயமான நிர்வாகச் செலவுகளுக்கு வகை செய்யக்கூடிய பெரிய ஊராட்சிகளை அமைப்பதற்கேற்ற வகையில் மாற்றியமைக்கப்படவேண்டும் என்ற

முடிவுக்கு நாம் வருவது தவிர்க்க முடியாததாகிறது. இந்த அணுகு முறையானது மாநிலத்தில் உள்ள நடப்புப் போக்கிற்கு ஏற்ப இல்லை என்பதை ஆணைக்குழு அறியும். அண்மை ஆண்டுகளில் பல ஊராட்சிகள், பெரும்பாலும் அரசியல் நோக்கங்களுக்காக இரண்டாகப்பிரிக்கப்பட்டுள்ளன. உள்ளாட்சி நிர்வாகத்தில் மக்கள் அதிக அளவு பங்கெடுத்துக்கொள்ள ஊக்கமளிப்பதே உள்ளாட்சி முறையின் நோக்கமாகும் என்றும், இதன் அடிப்படையில் ஊராட்சிகளின் எண்ணிக்கை பெருகுவதனால் மக்களின் பிரதிநிதிகள் பலர் உள்ளாட்சி நிர்வாகத்தில் பங்கெடுத்துக்கொள்ள இயலும் என்றும் இதற்கு நியாயம் கூறப்படுகிறது. ஊராட்சிகள் பல வற்றில், சிற்றூர்கள் ஆங்காங்கே சிதறிக் கிடந்து, பொதுவான வளர்ச்சி பற்றிய அக்கறையின்றி இருக்கின்றன. இத்தகைய ஊராட்சிகளில் சில சிற்றூர்கள் புறக்கணிக்கப்படுகின்றன என்றும் ஆகவே, உள்ளூர் தேவைகளை நிறைவு செய்ய இந்த ஊராட்சிகள் இன்னும் சிறிய பிரிவுகளாகப் பிரிக்கப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடுகிறது என்றும் வாதிடப்படுகிறது.

3·4. இக்கருத்துரைகள் தகுதியானவையென வெளிப்படையாகத் தோன்றலாம். ஆயினும், தன்னிறைவானவையும் திறம்படச் செய்யப் படுபவையுமான ஊராட்சிகளை அமைக்கும் முயற்சியில் இவற்றை ஓரளவுக்கு மட்டுமே ஒருவர் ஏற்றுக்கொள்ள முடியும். ஊராட்சிகள் சட்டப்படிக்கான தங்களது அலுவல்களை நிறைவேற்றுவதில் திறமை மிக்கவையாக இருக்க, குறைந்த வருமானத்துடன் அல்லது வருமானம் ஏதுமின்றிச் சிறிய ஊராட்சிகள் பலவற்றை வைத்திருப்பதற்குப் பதிலாக அதிகப்பரப்பும் மக்கள் தொகையையும் போதிய வருவாயும் உடைய பொதுவான ஊராட்சி ஒன்று இருந்தால் மக்களுக்கு அதிக நன்மை பயக்கும் என்பது உறுதி. பொருத்தமான, முனைப்பாகச் செயல்படுகிற, பேச்சுத் திறமை வாய்ந்த பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதன் மூலமாகப் பொதுவான பெரிய ஊராட்சியில் உள்ள ஏற்றத்தாழ்வுகளையும் வெறுப்புகளையும் சலுகைகளையும் சரிசெய்யக்கூடும் என்றுவது ஒருவர் நம்பலாம்; ஆனால், சிறிய ஊராட்சி களின் குறைபாடுகளை மக்களின் நடவடிக்கை எதுவும் நிவர்த்தி செய்ய இயலாது. அத்தகையதோர் சூழ்நிலையில் உள்ளாட்சி மன்றங்கள் அமைக்கப்படுவதன் நோக்கமே நிறைவேறாமற்போய்விடும். எனவே, உள்ளாட்சி மன்றங்கள் திறம்படச் செய்யல்படவேண்டிய தன் அவசியத்தைக் கருதி இணக்கமானதோர் முடிவெடுப்பது தவிர்க்க முடியாததாகும் என்றும், ஊராட்சிகளைப் பிரிக்கும் தற்போதைய போக்கு தடுத்து நிறுத்தப்படுவதோடு இரண்டு மூன்று சிறிய ஊராட்சிகளை இணைத்துப் பெரிதாக்கவும் வேண்டுமென்றும் ஆணைக்குழு உறுதியாகக் கருதுகிறது.

3·5. தன்னிறைவுள்ள ஒரு ஊராட்சியில் சாதாரணமாகச் சுமார் 5,000 பேர் கொண்ட மக்கள் தொகையும் குறைந்த அளவு சுமார் ரூ. 5,000 வரிக்கேட்புத் தொகையும் இருக்கவேண்டுமென்று ஆணைக்குழு கருதுகிறது. எனவே, இந்த வகையில் அமைக்கப்படும் ஊராட்சிகள், தற்போதுள்ள ஊராட்சிகளின் அளவைப்போல் மூன்று முதல் நான்கு மடங்கு அளவுடையதாக இருக்கும். ரூ. 5,000 வரிக்கேட்புத் தொகையுடன் இந்த ஊராட்சிகள் ரூ. 15.000 முதல் ரூ. 20,000 வரையிலான வரவு-செலவுத் திட்டம் ஒன்றை வகுத்துப் பற்றுவரவு செய்யமுடியும்.

மேலும் அவை, சீரான நிர்வாகத்திற்கு வேண்டிய குறைந்த அளவு வசதிகளைக் கொண்டிருக்க இயலும் என்றும் அவற்றின் கணக்குகள் ஓரளவு தணிக்கைக்குட்பட்டிருக்கும் என்றும் நியாயமாக நம்பலாம். ஊராட்சி ஒன்றியக் குழுவில் உள்ளவர்களின் எண்ணிக்கையைக் குறைப்ப தோடு இக்குழுவை மிகவும் அடைவான அமைப்பாகவும் ஆக்கும்.

3·6. தற்போதுள்ள பகுதிநேர கிராம அதிகாரிகளுக்குப் பதிலாக சிவில்பணி விதிமுறைகளுக்குட்பட்ட முழுநேர அரசு அதிகாரிகள் நியமிக்கப்படுவதன் அடிப்படையில் சுமார் 5,000 பேர் கொண்ட மக்கள் தொகை அடங்கும் வகையில் வருவாய்க் கிராமத் தொகுதியை விரிவு படுத்த வேண்டும் என்று மாவட்ட வருவாய் நிர்வாக அறிக்கையில் ஆணைக்குழு பரிந்துரைக்கிறது. ஆயினும், அத்தகைய வருவாய்க் கிராமத் தொகுதி ஒவ்வொன்றிலும்—எவ்வளவு சிறியதாயினும்—கிராம அதிகாரி ஒருவர், கிராம எழுத்தர் ஒருவர், கிராம ஏவலர்கள் சிலர் ஆகியோரைக் கொண்ட கிராமப் பொது அலுவலகம் ஒன்று இருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது. விரிவுபடுத்தப்படும் புதிய வருவாய்க் கிராமம் ஊராட்சியின் பரப்பை ஒத்திருந்தால் அது மிகவும் சாலச்சிறந்ததாகும். பின்னர் கிராம அலுவலகத்திற்கு உள்ளதுபோலவே அதே வளவினுள் ஊராட்சிக்கும் அலுவகம் வைத்துக் கொள்ள ஓரளவு இடவசதி அளிக்கப்படலாம். முறையான அரசுப் பணியாளராக உள்ள கிராம எழுத்தர் ஊராட்சிக் கணக்குகளை வைத்து வருமாறும் கேட்புப் பதிவேடுகளை எழுதுமாறும் ஊராட்சிக்கு எழுத்தர் பணி உதவியை அளிக்குமாறும் கட்டளையிடப் படலாம். நிலவரியுடன், கூடுதலாகச் செலவேதும் செய்யாமல் ஊராட்சி வரிகளையும் வசூலிக்குமாறு கிராம அதிகாரி கட்டளையிடப்படலாம். ஊராட்சிச் சட்டம் வரையப்பட்டபோது, ஊராட்சியின் நிர்வாகத்தை நடத்துவதில் கிராம அதிகாரிகளுக்கு முனைப்பான பங்கு அளிக்கப்பட வேண்டுமா என்பது பற்றி கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டது. பொதுவாகக் கிராம அதிகாரிகள் உள்ளூரில் வசித்துவந்து, உள்ளூரில் தமது சார்பாளர் களையும் செல்வாக்கினையும் உடையவர்கள் என்றும் இவர்கள் ஊராட்சி அலுவல்களில் ஈடுபடுவதன் விளைவாக இவர்களுக்கும், மக்களிடையே யிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கும் இடையே ஒவ்வாத போட்டி மனப்பான்மை எழக்கூடும் என்ற கருத்தின் அடிப்படையில் இது விட்டுவிடப்பட்டது. தற்போதுள்ள கிராம அதிகாரிகளுக்குப் பதிலாக முறையான அரசு பணியாளர்கள் நியமிக்கப்படும்போது இதற்கு இடமே யிராது. எனவே, சிறந்த முறையில் நிர்வகிக்கப்படாமல் தற்போது முடங்கியிருந்துவரும் ஊராட்சிகளுக்கு, பெருஞ்செலவேதுமின்றி நிர்வாக அமைப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதில் புதிய கிராம அதிகாரிகளின் பணிகளைப் பயன்படுத்திக்கொள்ளச் செய்யவேண்டியது விவேகமாகும்.

3·7. அவ்வாறு விரிவுபடுத்தப்படும் ஓர் ஊராட்சிப் பிரிவு, தற்போதுள்ள ஊர்நல உதவியாளரின் அதிகார வரம்புடன் சீராக இணையும். தற்போது ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் சராசரியாக 30 முதல் 35 ஊராட்சிகள் உள்ளன ; அதில் ஊர்நல உதவியாளர்கள் 10 பேர் உள்ளனர். விரிவுபடுத்தப்பட வேண்டுமென்று நாங்கள் கருத்துத் தெரிவித்துள்ள வருவாய்க் கிராமத்திற்கு ஏறக்குறைய சமமானதொரு பகுதியில் ஊர்நல உதவியாளர் ஒவ்வொருவரும் தற்போது பணியாற்றி

வருகின்றனர். இந்த புதிய அமைப்பின்கீழ், கணிசமான கூடுதல் செலவு ஏதுமின்றி, ஊர்நல உதவியாளர்களின் எண்ணிக்கையை ஓரளவு சரிக்கட்டுவதன் மூலம், விரிவுபடுத்தப்படும் ஒவ்வொரு வருவாய்க் கிராமத்திலும், ஊராட்சியிலும் ஊர்நல உதவியாளர் ஒருவர் இருக்க இயலும்.

3.8. கிராம வருவாய் அலுவலகம், ஊராட்சி அலுவலகம், ஊர்நல உதவியாளர் அலுவலகம் ஆகியவை ஒரே இடத்தில் அமைந்திருப்பதால், அப்பகுதியில் சமுதாய மனப்பான்மை உருவாகி பயன்கள் ஏற்படுவதற்கு வழி ஏற்படும் என்று எதிர்பார்க்கலாம்.

3.9. ஊராட்சிகளைச் சீரமைப்பதில் கீழ்க்காணும் கூறுகளைப் பின்பற்றலாம் என்று ஆணைக்குழு கருதுகிறது :—

(a) ஒவ்வோர் ஊராட்சியிலும் 5,000 பேர் கொண்ட மக்கள் தொகையும் ஏறத்தாழ ரூ. 5,000 வரி வருமானமும் இருக்கவேண்டும்.

(b) மாவட்ட வருவாய் நிர்வாகம் குறித்த ஆணைக்குழுவின் அறிக்கையில் கருதப்பட்டுள்ள விரிவுபடுத்தப்பட்ட புதிய வருவாய்க் கிராமத் தொகுதியின் பரப்பை ஒத்து ஊராட்சி அமைந்திருக்க வேண்டும்.

(c) கிராம வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 3—8—71 ஆம் நாளிட்ட 1805ஆம் எண் அ. ஆணையைச் செயல்படுத்துவதற்கு முன்பு இருந்த ஊர்நல உதவியாளரின் அதிகார வரம்பிற்குக் கிட்டதட்டச் சமமாக ஊராட்சி இருக்கவேண்டும்.

3.10. ஊராட்சிகளையும் அவற்றின் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளையும் பெரிதும் குறைக்க வேண்டி வருகிற இப்பரிவுரையைச் செயல்படுத்துவதில் இடர்ப்பாடு ஏற்படும் என்று ஆணைக்குழு அறியும். இக்கருத்துக்குத் தற்போதுள்ள ஊராட்சித் தலைவர்களிடமிருந்து கடும் எதிர்ப்பு இருக்கும். இப்பதவிக்கு வரவிழையும் மற்றவர்களும் இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பர். வகுப்பு அடிப்படையிலும் அரசியல் காரணங்களினாலும், ஊராட்சி எல்லைகளை வரையறுக்கும் பணியில் உள்ளூர் பூசல்களும் எழக்கூடும். இக்கருத்தினை ஏற்றுக்கொள்வதன் மூலம் மக்களுக்கு விளையக்கூடிய நன்மைகளைக் குறிப்பிட்டு வலியுறுத்துவதன் வாயிலாக ஒரு சில ஆண்டுகளுக்குள் எதிர்ப்பினைச் சமாளிக்க முடியுமென்று வலுவான அரசியல் அடிப்படையில் அமைந்த, மக்கள் ஆதரவு பெற்ற ஓர் அரசு நிச்சயமாக நம்பலாம். எவ்வாறாயினும், வளர்ச்சிக்குரிய சரியான வழியாக இதனை விதித்து சூழ்நிலைகள் அனுமதிக்கக்கூடிய அளவுக்கு இந்த வழியைப் பின்பற்ற அரசு முயற்சி செய்யலாம்.

3.11. ஊராட்சி எல்லைகளைத் தற்போது வரையறுப்பதில் சில முரண்பாடுகள் உள்ளன. பொதுவாக, ஊராட்சி எல்லைகள், தற்போதுள்ள வருவாய்க் கிராமங்களின் எல்லைகளையே பின்பற்றி அமைந்து இருக்கின்றன. ஜமீன், இனம் எஸ்டேட்டுகள் ஆகியவற்றை ஒழிப்பதற்கு முன்பு, ரயத்துவாரி வருவாய்க் கிராமங்கள் பலவற்றில் பல்வேறு சிற்றூர்கள் அடங்கியிருந்தன. இவற்றில் சில ஊர்கள் ஜமீன் பகுதிகளுக்குள்ளேயே அடுத்தடுத்து அமைந்திராத பகுதிகளாக இருந்தன. ஜமீன்களும் இனம்

எஸ்டேட்டுகளும் ஒழிக்கப்பட்டு எஸ்டேட் கிராமங்கள் ரயத்துவாரி கிராமங் களாக மாற்றப்பட்டபோது, பகுத்தறிவுக்கேற்ற முறையில் இந்தக் கிராமங்களை மீண்டும் தொகுதியாகச் சேர்க்கும் முயற்சி எதும் மேற் கொள்ளப்படவில்லை ; இதன் விளைவாகப் பல வருவாய்க் கிராமங்களில், அடுத்தடுத்து அமைந்திராமல் நீண்ட தொலைவில் அமைந்துள்ள சிற்றூர்கள் இன்னும் இருக்கின்றன. பகுத்தறிவுக்கு ஒவ்வாத வகையிலும் வருவாய்ப் புள்ளி விவரங்களின் அடிப்படையிலும் இயந்திர ரீதியில் ஊராட்சிகள் அமைக்கப்பட்டபோது, அடுத்தடுத்து அமைந்திராதவையும் 3 அல்லது 4 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளவையுமான கிராமங்கள் ஒரே ஊராட்சியின்கீழ் ஒன்றாகச் சேர்க்கப்படவேண்டி நேரிட்டது. தென்காசி வட்டத்திலுள்ள மத்தளப்பாறை வருவாய்க் கிராமம், இவ்வாறு தவறாகச் சேர்க்கப்பட்டதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். ஒருங்கே அமைந்துள்ள கிராமங்கள் இரண்டு அல்லது மூன்றாகப் பிரிக்கப்பட்டதற்குப் பல எடுத்துக் காட்டுகள் உள்ளன. ஒவ்வொரு கிராமமும் அந்தந்தக் கிராமத்திலிருந்து 2 அல்லது 3 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அதனதன் மூல கிராமங்களோடு சேர்த்து வெவ்வேறு ஊராட்சிகளுடன் இணைக்கப்பட்டிருக் கின்றன. இதற்கு எடுத்துக்காட்டாகத் தென்காசி வட்டத்தில் இத்தகைய தொரு நேர்வு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—



இவ்வகை முரண்பாடுகளைச் சரிசெய்வது உடனடி அவசியமாகும். இத்தகைய நேர்வுகள் அனைத்தையும் கண்டறிந்து இத்தகைய ஊராட்சி களின் அதிகார வரம்புகளைப் பகுத்தறிவுக்கு ஏற்ற வகையில் திருத்தி

யமைப்பதற்கான செயர்குறிப்புகளை அனுப்பிவைக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கட்டளையிடப்படலாம் என்று ஆணைக்குழு பரிந்துரைக்கிறது. 3–10 பத்தியில் செய்துள்ள பரிவுரையை நீண்டகால நோக்கமாகச் செயல்படுத்தப்படவேண்டியிருக்கையில், இந்த வகையில் சரிசெய்யும் நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படவேண்டும்.

3.12. ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவதற்கான விதிகளும் மாற்றியமைக்கப்படவேண்டியதாகிறது. தற்போது, 5,000 பேருக்கு மேற்பட்டு மக்கள் தொகையும் ரூ. 10,000-ம் அதற்கு மேற்பட்டும் வரி வருமானமும் உடைய ஓர் ஊராட்சியில் நகரத்தின் அம்சங்கள் தோன்றுகையில் அது பேரூராட்சியாக அறிவிக்கப்படவேண்டும். இவ்வாறு தரம் உயர்த்துவதற்கான விருப்பம் ஊராட்சியிடமிருந்து எழுவதில்லை ; அரசிடமிருந்தே எழுகிறது. அரசின் அவாவை அரசு கணக்குத் துறைத் தலைவர் செயலுக்குக் கொண்டுவருகிறார். ஓர் ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்தும் ஒவ்வோர் ஆணையும், நடைமுறையில் காணும்போது, அந்த ஊராட்சியின் கடும் எதிர்ப்புக்கிடையே பிறப்பிக்கப்படுகிறது.

3.13. ஒரு பேரூராட்சிக்கு நிர்வாக அதிகாரி ஒருவரும் பிற பணியாளர்களும் இருக்கவேண்டும் ; ஆனால், ஊராட்சிக்கு இவர்கள் தேவையில்லை. பணியாளர் குறித்த செலவுகள் பெரிதும் உயர்ந்துள்ளன. பணத்தின் மதிப்பும் குறைந்துவிட்டது. எனவே, ரூ. 10,000 என்ற வரி வருவாய் வரம்பு நடைமுறைக்கு ஒவ்வாததாகிவிடுகிறது. ஓர் ஊராட்சி ஓரளவுக்கு வளர்ச்சியடைந்து கிராமத்தின் குறைந்த அளவு தேவைகளுக்குச் சற்று கூடுதலாக கிராமத்தின் தேவைகளை நிறைவு செய்யும் அளவுக்கு வந்துவிடும்போது அந்த ஊராட்சி பேரூராட்சியாக மாற்றப்படுகிறது—அதாவது உயர் வகுப்பைச் சேர்ந்த ஓர் ஏழையாக—குறைந்த மானியத்துடனும், அதிகரித்த பணியாளர் செலவுடனும் பேரூராட்சியாக மாற்றப்படுகிறது. இதன் விளைவாக அந்த ஊராட்சியினால் மக்களுக்கு கிடைக்கும் பயன் கடுமையாகச் சுருங்கிவிடுகிறது. பணியாளர் குறித்த செலவு உயருவதையும் ரூபாயின் மதிப்பு குறைவதையும் கருத்திற்கொண்டு, ஊராட்சிகளின் வரிக் கேட்புத் தொகை ரூ. 40,000-க்கு மேற்படும் வரை, அவை பேரூராட்சிகளாக மாற்றப்பட வேண்டிய அவசியமில்லையென்று ஆணைக்குழு பரிந்துரைக்கிறது இதுபோலவே, மக்கட்தொகை வரம்பும் 5,000-லிருந்து 15,000 ஆக உயர்த்தப்படலாம்.

(ஆ) நிதி வாயில்கள்

3.14. ஊராட்சிகளுக்கான நிதிவாயில்கள் பின்வருமாறு :—

(a) நிலவரி மீதான உள்ளூர் செஸ் வரியில் 4/9 பங்கு ;

(b) முத்திரைத்தாள் கட்டணத்தின்மீது 5 சதவீதம் மேல்வரி ;

(c) கேளிக்கை வரி ;

(d) ஊராட்சியிடம் நிலைபெற்ற புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்பவர்களிடம் வாங்கப்படும் கட்டணங்கள், மர வரி, மீன்பிடி குத்தகை (பாசிக் குத்தகை) போன்ற பல்வகை வரவுகள் ;

(e) ஊராட்சிகளால் விதித்து வசூலிக்கப்படும் வீட்டு வரி, வண்டி வரி, தொழில் வரி ;

(f) அபாயகரமான, அருவருப்பைத்தரும் தொழில் உரிமக் கட்டணங்கள் ; இவை ஊராட்சி ஒன்றியங்களால் விதித்து வசூலிக்கப்பட்டு, ஊராட்சிகளின் கணக்கில் வரவு வைக்கப்படவேண்டியவை ;

(g) அரசிடமிருந்து கிடைக்கின்ற வீட்டு வரி, இணை மானியம், பணி மானியம், மற்றும் பிறவகை மானியங்கள்.

3. 15. ஊராட்சிகளின் தற்போதைய வருவாய் வாயில்கள் விரும்பிய வாறு வருவாயைப் பெருக்க இடம் தரும் வகையில் நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையனவாக இல்லை. ஊராட்சிகளுக்குக் கூடுதல் நிதி தேவைப்படுகிறது. நல்லகாலமாக, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், குறைந்த அளவுத் தேவைகளை நிறைவு செய்யும் திட்டத்தைச் செயற் படுத்துவதன் மூலமாக கிராமங்கள் வளர்ச்சிக்கு முக்கியத்துவமளிக்க அரசு விழைகிறது. மேற் சொன்ன திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு பெருமளவு நிதி செலவிடப்படும். இது ஊராட்சிகளின் வருவாயை ஓரள விற்குப் பெருகச் செய்யும் என எதிர்பார்க்கலாம். அப்போதும்கூட ஊராட்சிகள், புதிய வருவாய் வாயில்கள் எங்குள்ளன என்பதைக் கண்டறிந்து அவற்றைப் பயன்படுத்துவதற்குரிய முயற்சிகளில் எப்போதும் கண்ணும் கருத்துமாயிருக்கவேண்டும். வீட்டு வரி, வண்டி வரி, தொழில் வரி விதித்து வசூலிக்கும் தற்போதைய நடைமுறை தொடர்ந்து செயலில் இருக்கலாம். இவற்றில், இதுவரை அரையாண்டுக்கொருமுறை வசூ லிக்கப்பட்டு வந்த வீட்டு வரி, ஆண்டுக்கொரு முறை வசூலிக்கப்படுமாறு அண்மையில் மாற்றப்பட்டுள்ளது. இதுபோலவே, வண்டி வரியும், தொழில் வரியும்கூட ஆண்டுக்கு ஒருமுறை வசூலிக்கப்படுமாறு மாற்றி யமைக்கப்படலாம். ஏனெனில், அதன் மூலம், கேட்பு அறிவிப்பு களைத் தயார் செய்வது, வழங்குவது, வரி வசூல் செய்வது ஆகியவற்றில் உள்ள பணிச்சுமை பாதியாகக் குறையும். இந்த வரிப்பளு மிகவும் குறைவாகவே இருக்குமாதலால், இவற்றை ஆண்டுக்கொருமுறை வசூல் செய்வதால் பொதுமக்களுக்கு எவ்விதத் தொல்லையும் ஏற்பட்டுவிடாது. ஊராட்சியின் நிதிநிலையை மேம்படுத்தும் நோக்கத்துடன் சீரமைப்பு வேண்டப்படுகிற மற்றொரு வழிவகையும் உள்ளது. ஊராட்சிகளிடம் நிலைபெற்றுள்ள ஏரி குளங்களில் மீன்பிடி உரிமையையும், ஏரி வண்டல் மண் எடுக்கும் உரிமையையும் குத்தகைக்கு விடுவது ஊராட்சிகளுக்கு முக்கிய வருவாய் வாயிலாகும். இருந்தபோதிலும், உணவு–வேளாண் மைத் துறையில் 31—1—61 ஆம் நாளன்று பிறந்த 304 ஆம் எண் அரசாணையின்படி, ஊராட்சிகள், மீன்பிடி உரிமை குத்தகையை, முந்திய இரண்டாண்டு சராசரி குத்தகைக்குச் சமமான தொகைக்கு மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்கவேண்டியுள்ளது. இதனால் கடந்த பத்து/பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாகக் குத்தகைத்தொகை ஒரே நிலையில் உள்ளது. குத்தகை உரிமையை ஏலத்தில் விடுவதற்கு ஊராட்சிகள் அனுமதிக்கப்பட்டிருந்தால், அவை இன்னும் அதிகக் குத்தகைத் தொகைகளைப் பெற்றிருக்கும். நடைமுறையில் நடப்பது என்னவெனில், மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் பல ஊராட்சிகளிடமிருந்து குறைந்த

தொகைக்குக் குத்தகை எடுத்து மீன்பிடி உரிமையை இன்னும் அதிக தொகைக்குப் பொது ஏலத்தில் உள்குத்தகைக்கு விடுகின்றன. எனவே, மீன்பிடி உரிமைகளை ஊராட்சிகள் பொது ஏலத்தில் விடுவதற்கு அனுமதிக்கப்படலாம் என்று ஆணைக்குழு பரிந்துரைக்கிறது. மற்றவர்களுடன் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும் ஏலம் கேட்கலாம். இந்த ஏற்பாடு கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஊராட்சிகளுக்கும் நியாயமானதாக இருக்கும். இந்த வரியிலிருந்து உரிய அளவு வருவாய் பெறுவதற்கு ஊராட்சிகளுக்கு இந்த ஏற்பாடு உதவியாயிருக்கும்.

(இ) ஊராட்சி வரி வசூல்.

3. 16. தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் 119 (1) பிரிவின் கீழ், வீட்டு வரி, தொழில் வரி, வண்டி வரிகளை ஊராட்சிகள் விதித்து வசூலிக்கின்றன. மேலும் அச்சட்டத்தின், 119(3) பிரிவின்கீழ் திட்டவட்டமான காரியங்களுக்காக விளை நிலங்கள் மீது கூடுதல் வரியையும் அவை எப்போதாகிலும் ஒருமுறை விதித்து வசூலிக்கின்றன. இம்மாநிலம் முழுவதையும் எடுத்துக்கொண்டு பார்த்தால், கீழே கொடுத்துள்ள புள்ளி விவரங்களிலிருந்து, இந்த வரிகளின் அளவு உயர்ந்து வந்துள்ளதைத் தெரிந்துகொள்ளலாம் :—

ஆண்டுதோறும் வரி.	1966–67.	1967–68.	1968-69.	1969–70.	1970-71.
	(ரூபாய் லட்சத்தில்)				
வீட்டுவரி ..	92·21	101·64	107·71	121·23	126·15
வண்டி வரி ..	15·14	15·55	22·22	16.07	13·87
தொழில் வரி ..	5·81	5·78	7·86	7·59	6·87
119 (3) பிரிவின் கீழ் வரி. ..	1·19	2·33	3·60	4·11	2·00
அபாயகரமான அருவருப்பு தரும் தொழில் உரிமக் கட்டணங்கள். ..	11·89	14·99	12·78	12·55	12·17
மொத்தம் ..	126·24	140·29	154·17	161·55	161·06

3. 17. ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறையில் 9—8—1960-ல் பிறந்த 644 ஆம் எண் அரசாணையில், ஊராட்சி வரி வசூல் தொடர்பான பணி கிராம அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த அரசாணையின்படி, கிராமக் கணக்குப்பிள்ளை, ஊராட்சி வரிகள் அனைத்துக்கும் உரிய கேட்புப் பதிவேடுகளைத் தயாரித்துப் பேணிவர வேண்டும்; தனிப்பட்டவர்கள் பெயருக்குக் கேட்பு அறிவிப்புகளையும் பட்டியல்களையும் அவர் தயாரிக்க வேண்டும். அவ்வரிகளை வசூல் செய்து ஊராட்சி ஒன்றியக் கருவூலத்தில் கட்டுவது கிராம மணியக்காரரின் பொறுப்பாகும். கிராம அதிகாரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள கூடுதல் பணியைச் செய்வதற்கென கிராம அதிகாரி

களுக்கு ஊராட்சி வளர்ச்சிப்படி வழங்கப்படுகிறது. பல்வேறு பதவித் தரங்களைச் சேர்ந்த கிராம அதிகாரிகளுக்கு வழங்கப்படும் இந்தப்படியின் வீதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

பதவித் தரம்.	இயல்பான பொறுப்பு. திங்கள் ஒன்றுக்கு ரூ.	குறைந்த பொறுப்பு. திங்கள் ஒன்றுக்கு ரூ
கிராம மணியக்காரர் ..	13	11
கணக்குப்பிள்ளை ..	23	20
தலையாரி, வெட்டியான், நீர்க்கண்டி	10	9

1,000 எக்கருக்குக் குறைந்த நிலப்பரப்பும் ரூ. 2,000-க்கு குறைந்த நிலவரி கேட்புத் தொகையும் உடைய கிராமங்கள் "குறைந்த பொறுப்புள்ள" கிராமங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. மற்ற கிராமங்கள் "இயல்பான பொறுப்பு"ள்ளவையாகும்.

3.18. கிராம அதிகாரிகள் வசூல் பணியைத் திறம்படச் செய்ய வில்லை என்றும் வரிகள் வசூலிக்கப்படாமல் அதிக நிலுவையிலுள்ளன என்றும் ஆணைக் குழுவின் நாட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. உள்ள நிலையைக் கீழ்க்காணும் புள்ளி விவர அறிக்கை, நமக்கு எடுத்துரைக்கும் :—

ஆண்டு.	கேட்பு. நடப்பு-	கேட்பு. நிலுவை.	வசூல். நடப்பு-	வசூல். நிலுவை.	நிலுவை. நடப்பு-	நிலுவை. நிலுவை.	வசூல் சத வீதம். நடப்பு-	வசூல் சத வீதம். நிலுவை.
1969 70	159·09	170·49	86·11	80·67	72·18	82·55	53·80	48·
1970–71	161·07	164·41	63·36	69·11	97·01	89·83	60·00	47
1971–72	162·43	175·43	91·65	100·38	70·24	68·42	56·80	58

3. 19. வகுப்பு, சமுதாயம், அரசியல் ஆகிய காரணங்களின் அடிப்படையில் ஊராட்சித் தலைவர்களுக்கும் கிராம அதிகாரிகளுக்கும் இடையே கேடு பயக்கும் போட்டியும் பகையும் பொதுவாக இருந்து வருகின்றன ; இப்பகை உணர்வு பல வேலைகளில் முற்றி நேரடி மோதலில் முடிவதும் உண்டு. கிராம அதிகாரி பரம்பரையாய் வந்தவர் ; பழைய நிலப்பிரபுத்துவ மரபில் வந்தவர் ; அவருக்கெனக் கணிசமான அளவிற்கு ஆட்படையும் செல்வாக்கும் உள்ளவர் ; எனவே, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சித் தலைவர் மக்களிடையே மதிப்பும் மரியாதையும் பெற்றவராக விளங்குவதை அவர் பொறுத்துக்கொள்ள முடிவதில்லை. இந்தப் பகை உணர்வே ஊராட்சி வரி நிலுவைகள் குவிந்ததற்கு முக்கியமான காரணங்களில் ஒன்றாகும் எனக் கூறப்படுகிறது.

3.20. ஊராட்சி வரிகளைப் பொறுத்தமட்டில் வசூல் செலவு மிக உயர்ந்துள்ளது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஊராட்சி வளர்ச்சிப்படி வாங்குகின்ற பணியாளர்கள் எண்ணிக்கை வருமாறு: கிராம மணியக் காரர்கள் 11,645 பேர்; கணக்குப்பிள்ளைகள் 11,398 பேர்; தோட்டி. வெட்டியான், தலையாரி போன்ற கிராமக் குற்றேவலர் 30,982 பேர். குறைந்த பொறுப்புள்ள கிராமங்கள் எத்தனையென்ற சரியான புள்ளி விவரம் கிடைக்காததால், சராசரியாக மாதந்தோறும் கிராம மணியக் காரருக்கு ரூ. 12-ம் கணக்கப்பிள்ளைக்கு ரூ. 22-ம் கிராமக் குற்றேவலருக்கு ரூ. 10-ம் ஊராட்சி வளர்ச்சிப்படி வழங்கப்படவேண்டியிருக்கும் என்று கொள்ளலாம். இந்த அடிப்படையில், இதற்காகும் மொத்தச் செலவு ரூ. 84 லட்சமாக இருக்கும்; அதாவது இத்தொகை வரிக் கேட்பு மொத்தத் தொகையில் ஏறத்தாழ பேர்பாதியாகும்.

3.21. ஊராட்சிகள், வரி வசூல் பணியைக் கவனிக்கத் தமக்கென்று பகுதிநேர வரி வசூல் செய்பவரை நியமிக்க, அல்லது சில ஊராட்சிகளடங்கிய தொகுதிக்கென வரி வசூல் செய்பவர்களை நியமிக்க அவற்றுக்கு அனுமதியளிப்பது விரும்பத்தக்கது என்று அரசு அதிகாரிகள் அல்லாதவர்கள் பலரும், அரசு அதிகாரிகள் பலரும் ஆணைக்குழுவிடம் தெரிவித்துள்ளனர். ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழிருக்கும் பணியாளர்கள் ஊராட்சியின் கட்டளைக்குச் சரியாக கீழ்ப்படிந்து நடந்து, வரிகளைச் செவ்வையாக வசூல் செய்வர் என்று காரணம் காட்டி இக்கருத்து வலியுறுத்தப்பட்டது. கிராமப் பகுதிகளில் தற்போது படித்து வேலையின்றிச் சோம்பியிருக்கும் ஏராளமான இளைஞர்களுக்கு இது வேலை வாய்ப்புகளை அளிக்கும் என்னும் காரணத்தைக்கூறி இத்திட்டம் மேலும் வலியுறுத்தப்பட்டது.

3.22. இப்பரிவுரையை ஆணைக்குழு கவனமாகப் பரிசீலித்தது. ஒவ்வொரு ஊராட்சிக்கும் பகுதிநேர வரி வசூல் செய்பவரை நியமிப்பது அல்லது நான்கு கிராமங்களடங்கிய ஒரு தொகுதிக்கு முழுநேர வரி வசூல் செய்பவர் ஒருவரை நியமிப்பது என்பது, கிராம அதிகாரிகளைப் பயன்படுத்திக்கொள்வதைக் காட்டிலும் செலவு குறைவதற்கான தீர்வு ஆகாது. ஒவ்வொரு பகுதிநேர எழுத்தருக்கும் மாதமொன்றுக்கு ரூ. 100 வீதம் ஊதியம் கொடுப்பதானால், ஆண்டொன்றுக்கு மொத்தச் செலவு சுமார் ரூ. 150 லட்சம் ஆகும். நான்கு ஊராட்சிகளடங்கிய தொகுதிக்கு நியமிக்கப்படும் முழுநேர எழுத்தர்கள் தங்களை பேரூராட்சிகளின் வரி வசூலிப்பவர்களுடன் ஒப்பிட்டுக் கூறிக்கொள்வர் ஆதலால், அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பள வீதப்படியே இவர்களுக்கும் சம்பளம் கொடுக்கப்படவேண்டியிருக்கும். அவர்களுடைய தற்போதைய சம்பள வீதம் 150—4—170—5—225 ஆகும். இதற்கு மாதமொன்றுக்குச் சராசரிச் செலவு ரூ. 227 ஆகும். வரி வசூலிப்பவர்களுக்கு ஊக்கத்தொகையாக வழங்கப்படும் வழக்கமான ஊதியக் கொடை இதில் அடங்காது. 12,628 ஊராட்சிகளின் வரி வசூல் பணியைக் கவனிக்க வரி வசூல் செய்பவர்கள் 3,157 பேர் தேவைப்படுவர்; அதற்கு ஆண்டுக்கு ரூ. 86 லட்சம் செலவாகும்.

3.23. 1950-க்கும் 1958-க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ஊராட்சித் தொகுதிக்கு முழுநேர வரி வசூல் செய்பவரை நியமிப்பது, ஊராட்சிகளுக்குப் பகுதிநேர வரி வசூல் செய்பவரை நியமிப்பது ஆகிய இரண்டு முறைகளும் சோதனை செய்து பார்க்கப்பட்டு, அவை பொருத்த மற்றவை எனக் கைவிடப்பட்டுவிட்டன. ஏனெனில், அம்முறைகளைப் பயன்படுத்தியதில் வரி வசூல் மிகக் குறைவாகவே இருந்தது ; அடிக்கடி கையாடல்கள் நிகழ்ந்தன ; அவற்றை மேற்பார்வை செய்தல் பலனளிப்பதாக இல்லை. உள்ளாட்சித்துறையில் 22—7—58-ல் பிறந்த 1125 ஆம் எண் அரசாணையில், இந்த ஏற்பாடு மனநிறைவளிப்பதாக இல்லை என்று கைவிடப்பட்டது. பதவி இழந்த வரி வசூலிப்பவர்கள் ஊராட்சி ஒன்றியங்களில் படிப்படியாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

3.24. இந்த வரி வசூலிப்பவர்கள் திறமையாக வரி வசூல் செய்யும் மரபினைக் கொண்டதும் நிலையானதுமான எந்தத் துறையையும் சேர்ந்தவர்களல்லர் ; கிராம மக்கள் அவர்களை மதிக்கவோ பொருட்படுத்தவோ இல்லை. கிராம அதிகாரிகள் பரம்பரையாக கிராம மக்கள் மீது பெற்றிருந்த செல்வாக்கு இவர்களுக்குக் கிடையாது. நிலவரி, ஏனைய அரசு வரிகளைச் செலுத்துவதிற் போலன்றி, உள்ளாட்சி மன்றங்களுக்குச் செலுத்த வேண்டிய வரிகளைச் செலுத்துவதினால், மக்கள் தங்களுக்கு என்ன பயன் கிடைக்கிறது என்று எண்ணுவது வழக்கமாயிருந்தது. விளக்கு எரியாமல் நிற்கும் விளக்குக் கம்பம், மோசமான நிலையில் காணப்படும் சாலை, தண்ணீரின்றி வறண்டுவிட்ட கிணறு, இவைபோல உள்ளாட்சி மன்றங்களால் புறக்கணிக்கப்பட்ட வசதிகள் வரி வசூல் பணிக்கு இடையூறாக மாறுகின்றன. கிராம மக்களிடமிருந்து வரி வசூல் செய்வது ஊராட்சிகளுக்குக் கடினமாகிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஊராட்சித் தலைவர்கள், வரி வசூல் நிலுவைக்காக ஜப்தி ஆணைகள் பிறப்பிக்கத் தயாராயிருப்பதில்லை என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. இதற்குமாறாக (எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் துணிந்து செயலாற்றும்) வலிமையுடைய வகையைச் சேர்ந்த கிராம அதிகாரி ஒருவருக்கு,—கிராமத்தின் வசதிகள் பேணி வரப்பட்டாலும் சரி, அல்லது புறக்கணிக்கப்பட்டாலும் சரி—நிலவரியுடன் சேர்த்து இந்த வரிகளையும் அதிகச் சிரமமின்றி வசூல் செய்வது எளிதாக இருக்கும்.

3. 25. மக்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களாய், தயக்கத்துடனே செயல்படுகின்ற ஊராட்சித் தலைவர்களின் கீழ் பணிபுரியும் பகுதிநேர எழுத்தர்களையும், ஊராட்சித் தொகுதி-முழுநேர எழுத்தர்களையும் நியமிப்பது மிகச் செலவாகும் என்பதோடு மட்டுமன்றி அவர்கள், வலிமை வாய்ந்த வருவாய் வாரியத்தின் அதிகாரத்தின் கீழ் பணிபுரிகின்ற, வழிவழியாய் வரி வசூல் செய்யும் பணியில் ஈடுபட்டு வந்துள்ள கிராம அதிகாரிகளைக் காட்டிலும் செவ்வையாகப் பணியாற்றுவர் என்பது இயலாதவொன்றாகும். மேலும், ஒருமுறை அவர்களைப் பணியில் நியமித்துவிட்டால், அவர்களை வேலையைவிட்டுச் செல்லுமாறு செய்வது பெருஞ்சிரமமாகிவிடும். கடந்த கால அனுபவத்தையொட்டிப் பார்க்கும்போது, ஊராட்சித் தொகுதி முழுநேர எழுத்தர்களை அல்லது ஊராட்சிகளுக்கு பகுதி நேர எழுத்தர்களை நியமிக்கும் செயற்குறிப்பு பயனற்ற முயற்சி என்று ஆணைக்குழு தெளிவாகக் கருதுகிறது.

3.26. ஊராட்சி வரிகளின் அளவு மிகமிகக் குறைவானது; இதற்குப்போய், புதிய வரி வசூல் பணியாளர் அமைப்பை ஏற்படுத்த வேண்டும் எனக் கூறுவது சரியல்ல என ஆணைக்குழு கருதுகிறது. இந்தக் கருத்தையொட்டியே, கிராம அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படும் கிராம வளர்ச்சிப் படிக்கான முழுச் செலவும் அரசால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. நம்மால் தெரிந்தெடுக்கப்படுவதற்கென இருப்பவற்றில் சிறந்தது "கிராம அதிகாரிகள் மூலம் வரி வசூல் செய்யும் ஏற்பாடே" யாகும். ஏனெனில், இதைத் தெரிந்தெடுப்பதானால் நாம் புதிதாக ஒரு பணியாளரமைப்பை ஏற்படுத்த வேண்டியிராது; இன்னும் சிறப்பாக மேற்பார்வை செய்து, முடுக்கிவிடுவதன் மூலம் இந்த அமைப்பை திறமையுடன் செயல்படச் செய்வதற்கு இதில் வழியுண்டு; மேலும், கையாடல்கள் நிகழ்வதற்கு இதில் மிகக் குறைந்த வாய்ப்புகளேயுள்ளன.

3·27. தற்போதைய ஏற்பாட்டிலும் கூட, தஞ்சாவூர், தென்னார்க்காடு மாவட்டங்களிற் போல ஊராட்சி வரி வசூலிலும், சிறப்பு வசூல் இயக்கங்கள் ஏற்பாடு செய்வதிலும் சில மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அக்கறை காட்டிய விடங்களில் பெரும்பாலும் 100 சதவீதம் வசூல் சாதனையை எய்த முடிந்துள்ளது. ஊராட்சி வரி வசூலில் போதிய அக்கறை எடுத்துக் கொள்ளுமாறு வருவாய்த்துறை வாரியத்திற்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் தெளிவான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டால், குறுகிய காலத்திற்குள்ளாக நிலுவைகள் நியாயமான அளவிற்குக் குறைக்கப்பட்டு விடும் என்று ஆணைக்குழு திண்ணமாக நம்புகிறது. தற்போதுள்ள பகுதி நேர கிராம அதிகாரிகளுக்குப் பதிலாக, ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு மாற்றத்தக்க, முழு நேர அரசுப் பணியாளர்களை நியமிக்கின்ற வகையில் மாவட்ட வருவாய் நிர்வாக முறை சீரமைப்புச் செய்யப்பட வேண்டும் என்று கூறும் ஆணைக்குழுவின் செயற்குறிப்பு "ஒரு கல்லில் இரு கனிகளை வீழ்த்துவதற்கொப்ப" சமூகப் பிரச்சினைகளையும் அகற்றி விடும்; கிராம அதிகாரிகளுக்கும் ஊராட்சித் தலைவர்களுக்கும் இடையில் உள்ள கேடு பயக்கும் போட்டிப் பகை உணர்வுகளும் இல்லாதொழியச் செய்துவிடும். முறையான அரசு அதிகாரிகள் பரம்பரைச் சிறப்புரிமைகளைக் கொண்டாடுவதற்கில்லை; எனவே இவர்கள் உள்ளூர் பூசல்களில் தலையிடாமல் தனித்து நின்று செயல்பட இயலும்; அரசின் உறுதியான உத்தரவின் பேரில், ஊராட்சிகளின் தேவைகளைக் கவனிக்க மேலும் சிறந்த முறையில் செயல்படுவர். மேலே 3·6 பாராவில் கூறியுள்ளவாறு, புதிதாக விரிவுபடுத்தப்பட்ட ஊராட்சிகளுடன் பரப்பு ஒத்துள்ள விரிவுபடுத்தப்பட்ட வருவாய்க் கிராமத்தில், ஊராட்சியின் எழுத்து, கணக்குப் பணிகளைக் கவனிப்பதற்கு கிராம எழுத்தர்களையும், ஊராட்சி வரிகளை வசூலிப்பதற்கு கிராம அதிகாரிகளையும், அவர்களது இயல்பான பணிகளில் ஒரு பகுதிகளாகச் செய்யவேண்டுமென ஆணையிடலாம். அவர்கள் முழு நேர அரசுப் பணியாளர்களாகச் சம்பளம் பெறுவதால் அவர்களுக்குச் சிறப்புப் படியேதும் வழங்க வேண்டியது அவசியமில்லை. ஊராட்சியின் நியாயமான தேவைகளை கிராம எழுத்தர்கள் அறிந்து செய்வார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கு, எழுத்தர் தமது இயல்பான வருவாய்ப் பணிகளைச் செய்வதுடன் ஊராட்சித் தலைவரின்

நிர்வாகப் பணிகளில் அவரது அறிவுரைக்கிணங்க அவருக்கு உதவி புரிய வேண்டுமெனத் தகுந்த பொதுவான ஆணைகள் பிறப்பிக்கப்பட வேண்டும்.

3·28. எனவே, ஆணைக்குழு கீழ்க்கண்ட பரிவுரைகளைச் செய்கிறது:—

(a) ஊராட்சி வரிகளை வசூலிக்கும் பொறுப்பு கிராம அதிகாரிகளிடமே தொடர்ந்து இருக்கலாம்.

(b) ஊராட்சி வரி வசூல் அளவை உயர்த்துவதில் உடனடியாக நாட்டம் செலுத்துமாறு வருவாய்த் துறை வாரியத்திற்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் கட்டளையிடப்பட வேண்டும்.

(c) ஆணைக்குழுவினால் ஆலோசனை கூறப்பட்டுள்ளவாறு புதிதாக விரிவு படுத்தப்பட்ட வருவாய்க் கிராமங்களுடன் பரப்பு ஒத்துள்ள விரிவுபடுத்தப்பட்ட ஊராட்சிகளில் கிராம அதிகாரிகள், அவர்களது முறையான பணிகளில் ஒரு பகுதியாக எழுத்து, வரி வசூலிப்புப் பணிகளை ஊராட்சிகளுக்கு இலவசமாகச் செய்யும்படி இவர்களுக்கு ஆணை பிறப்பிக்கப்படலாம்.

(ஈ) ஊராட்சிகளில் தெரு விளக்குகள்

3·29. தற்போது, ஊராட்சிகளில், தெரு விளக்குகளுக்கு மீட்டர்கள் எதும் பொருத்தப்படாது மின்சார வசதி அளிக்கப்படுகின்றது. இந்த முறையின்கீழ், மின்சார வாரியம், ஒவ்வொரு தெரு விளக்கிற்கும், (எவ்வளவு மின் சக்தி பயன்படுத்தப்பட்டது என்பதைக் கணக்கிடாது) ஊராட்சிகளிடமிருந்து ஒரே வீதக்கட்டணத்தை வசூலிக்கிறது. மின்சார வாரியம், மின் சக்தி வழங்குவதுடன் மட்டுமல்லாது. மின் கம்பங்களையும், மின் சாதனங்களையும் நிறுவவும், ஆண்டுக்கு மூன்று முறை மின் குமிழ்களை இலவசமாக மாற்றவும் வேண்டும், ஊராட்சிகளின் நிதிகள் ஊராட்சி ஒன்றியங்களிடம் வைத்து வரப்படுவதால், மின்சார வாரியம் மின் கட்டண பில்களை ஊராட்சி ஒன்றியங்ளுக்கு அனுப்புகிறது. ஊராட்சி ஒன்றியம், ஊராட்சிகளின் நிதிகளிலிருந்து அவற்றுக்குரிய தொகையைச் செலுத்துகிறது.

3·30. இந்த நடைமுறை குறித்து ஊராட்சித் தலைவர்களும், ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும் குறை கூறியுள்ளனர். பழுதடைந்த பழைய மின் குமிழ்களை நீக்கிப் புதியனவற்றைப் போடாத காரணத்தால் தெரு விளக்குகள் பல நாட்கள் எரியாமல் உள்ளன என்றும், தாங்கள் பயனடையாத அந்த மின் விளக்குகளுக்கும் தாங்கள் கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது என்றும் ஊராட்சித் தலைவர்கள் புகார் செய்கின்றனர். பெரிய நிறுவனங்களின் மையக் கொள்முதல் நடைமுறையும் மின் குமிழ்களை மாற்றும் முறையும், சிக்கனத்தைக் கொண்டு செய்யபட்டாலும் அதனால் விரைவான பலன் இல்லாமல் போய்விட்டது. இதனால், கிராமம், விளக்கின்றி இருளடைந்து காணப்படுவதுமன்றி வருத்தம் தோய்ந்த நிலையும் அங்கு காணப்படுகிறது. மின் விளக்குகள் இல்லாததால் இருளும் பெறாத பயனுக்கு தொகை செலுத்த வேண்டியுள்ளதால் மன வருத்தமும் நிலவி வருகிறது. இதன் காரணமாக மக்களின் மனத்தில் கடும் விளைவு ஏற்பட்டுள்ளது. அவர்கள், தங்கள் அடிப்படை வசதிகளில் ஒன்றான தெரு

விளக்கு கூட இல்லையென்ற காரணத்தால் அவர்கள் ஊராட்சி வரிகளைச் செலுத்த மறுக்கின்றனர். வரி செலுத்துபவர்கள், வரி வசூலிப்பவர்கள் ஆகிய இருவரின் நோக்கில் பார்த்தாலும் இது சீர் செய்யப்பட வேண்டிய முக்கியமானதோர் பணியாகும்.

3·31. தெரு விளக்குகளுக்கு மீட்டர்கள் பொருத்தி மின் சக்தி வழங்கப்படலாம் எனவும் கிராமத்தினரின் தேவைகள், நிதி வசதிகள் ஆகியவற்றிற்கு ஏற்ப தற்போதுள்ள குறைந்த அளவுக் கட்டணங்களைக் குறைக்கலாமெனவும் ஆணைக்குழுவிடம் கூறப்பட்டுள்ளது. பழுதடைந்த மின் குமிழ்களை நீக்கிவிட்டுப் புதியன போடும் பொறுப்பு ஊராட்சிகளிடமே ஒப்படைக்கப்படலாம். திருட்டுப் போவதைக் குறைப்பதற்காக சாதாரணமாகப் பயன்படுத்தும் மின் குமிழ்களுக்குப் பதிலாக திருகு மரைகளுடன் கூடிய மின் குமிழ்கள் தெரு விளக்குகளுக்குப் பொருத்தப்படுகின்றன. இந்த மின் குமிழ்களை வெளி அங்காடியில் வாங்குவது சிறிது கடினமானதாகும். மேலும், இவைகள் சாதாரண மின் குமிழ்களைக் காட்டிலும் பொதுவாக விலையுயர்ந்தனவாகும். எனினும், அவைகள் ஒரு மொத்தமாகக் கொள்முதல் செயபவர்களுக்கு ஒப்பந்த வீதங்களில் நியாயமான விலைக்குக் கிடைக்கின்றன. வழங்கல்-விற்பனைத் தலைமை இயக்குநர் ஒப்பந்த வீதங்களின்கீழ் 40 வாட் மின் குமிழ் ஒன்றின் விலை ரூ. 1·30. இதன் விலை வெளிச் சந்தையில் ரூ. 2·50 ஆகும். மாவட்ட வளர்ச்சி அதிகாரிகளும், கிராம வளர்ச்சி இயக்குநரும், வழங்கல்—விற்பனை தலைமை இயக்குநர் ஒப்பந்த வீதங்களின் கீழ் ஒருமொத்தமாக மின் குமிழ்களைக் கொள்முதல் செய்வதற்கு நேரடியாக வாங்கும் அதிகாரிகளாக அறிவிக்கப்படலாம். அவர்கள் ஊராட்சிகளுக்கு இந்த மின் குமிழ்களை வழங்கலாம். ஊராட்சிகள் உள்ளூரிலுள்ள தொழிலாளர்களைக் கொண்டு மின் குமிழ்களைப் பொருத்திக் கொள்ள ஏற்பாடு செய்துகொள்ளலாம். அவசரமாகத் தேவைப்படக்கூடிய நேர்வுகளில், ஊராட்சித் தலைவர்கள், மின் குமிழ்களைத் தாங்களே வாங்கிக் கொள்ளவும் பழுதடைந்த மின் குமிழ்களை எடுத்துவிட்டுப் புதியனவற்றை அமைக்கவும் அதிகாரமளிக்கப்பட வேண்டும். இவ்வாறு செய்வதற்குத் தணிக்கை ஆட்சேபனை எதுவும் இருக்கக்கூடாது. மீட்டர்கள் பொருத்தி மின் வழங்குதல், ஒப்பந்த வீதத்தில் மொத்தமாக மின் குமிழ்கள் வாங்குதல் ஆகியவை இணைந்து சிக்கனம், விரைவு, உள்ளூர் தேவைகளை உடனுக்குடன் கவனித்தல் ஆகியவை இருப்பதை உறுதிப் படுத்தும்.

3·32. மேற்கூறப்பட்ட நடைமுறையைப் பின்பற்றலாமென ஆணைக்குழு பரிவுரை செய்கிறது.

(உ) கிராமச் சுகாதாரம்

3·33 தேங்கி நிற்கும் நீரில் தொற்றுநோய் நீக்க மருந்து தெளித்தல் சாக்கடை நீரை வெளியேற்றுவதற்கு திறந்த அல்லது மூடிய சாக்கடைகள் கட்டுதல் போன்ற சாதாரண பொதுச் சுகாதாரப் பணிகளை மேற்கொள்ளக் கூட ஊராட்சிகளிடம் தற்போது நிதியேதுமில்லை. ஊராட்சி நிதிகளில் பெரும்பகுதி மின் கட்டணங்களுக்கே செலவிடப் படுகின்றது. எனவே, சுமார் 2,000 மக்கள் தொகை கொண்டுள்ள ஊராட்சி ஒவ்வொன்றுக்கும்

இத்தகைய பணிகளை மேற்கொள்வதற்காகவென்றே ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,500 மானியம் கொடுக்கப்பட வேண்டுமென ஆணைக் குழுவிற்கு கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. 2,000 மக்கள் தொகைக்குக் குறைவாக உள்ள கிராமங்களுக்கு ரூ. 1,000 மானியம் வழங்கப்படலாம். இந்த மானியத் தொகை முழுவதும், பொதுச் சுகாதாரத் திட்டங்களுக்கே செலவிடப்பட வேண்டும். அவை, பணியாளர்களுக்காகச் செலவிடப்படக் கூடாது. இந்தக் கருத்துரையை அரசு அனுதாபத்துடன் பரிசீலிக்க வேண்டும் என்று ஆணைக்குழு எடுத்துரைக்கிறது.

(ஊ) பணிகள்.

3·34. ஊராட்சித் தலைவர்களால் நிறைவேற்றப்படும், ரூ. 1,000 மும் அதற்குக் கீழும் மதிப்பிலான பணிகளைக் குறித்து அளவெடுத்தல் சோதனை அளவிடுதல் முறைகள் மன நிறைவு அளிப்பனவாய் இல்லை. அளவெடுதல்கள் ஊராட்சித்தலைவர்களாலேயே தற்போது மேற்கொள்ளப்படுகின்றன. சோதனை அளவெடுத்தல் ஊராட்சி ஒன்றிய மேல்பார்ப்பவர்களால் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. பணியை நிறைவேற்றியவரையே அளவிடுவதற்கு அனுமதிக்கும் முறை, தவறான பழக்கங்களை மேற்கொள்ள வகை செய்யும் ஓர்முறையாகும் எனப்பலரால் ஆணைக் குழுவிடம் முறையிடப் பட்டுள்ளது. அத்தகைய பணிகள் குறித்த அளவெடுதல்கள் ஊராட்சி ஒன்றிய மேல்பர்ர்ப்பவர்களாலும், சோதனை அளவெடுதல்கள் ஊராட்சி ஒன்றியப் பொறியாளர்களாலும் மேற்கொள்ளப்படலாம் என ஆணைக்குழு பரிவுரை செய்கிறது.

(எ) நிதிகளைச் சீராகப் பயன்படுத்துவதற்கான கோட்பாடுகள்.

3·35. ஒரு கிராமத்தின் பல்வேறு தேவைகளை நிறைவேற்றுவதற்கு, ஊராட்சிகளிடம் உள்ள குறைந்த அளவு நிதி வாயில்களைப் பயன்படுத்துவதற்கு ஆலோசனை நெறிக் குறிப்புகள் ஏதும் இல்லை என்பதும் ஆணைக் குழுவின் நாட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. ஊராட்சிகள் பலவற்றில், அவற்றின் நிதிகளில் பெரும்பகுதி மின் கட்டணங்களுக்கே பயன்படுத்தப்படுகின்றது. இதனால், மற்ற தேவைகள் முழுவதுமாகப் புறக்கணிக்கப்படுகின்றன. தெரு விளக்குகள் போடுதல், சாக்கடை அமைத்தல், நீர் வழங்கல், சாலைகள், சுகாதார அமைப்புகள் முதலிய பணிகளை மேற்கொள்வதற்காக நிதிகளை ஒதுக்குவதற்கு ஆலோசனை நெறிக் குறிப்புகள் வகுக்கப்படுவது பயனுள்ளதாகும் எனக் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, ஊராட்சிகளின் பயனுக்காகத் தகுந்த அறிவுரைகள் வழங்கப்படலாமென ஆணைக்குழு பரிவுரை செய்கிறது.

4. பேரூராட்சிகள்.

4·1. 5,000 க்கு மேற்பட்டமக்கள் தொகை கொண்டுள்ளதும் ரூ. 10,000 க்கு மேற்பட்ட வரி வருவாய் உள்ளதும் நகராட்சியல்லாததுமான ஒரு பகுதி நகரத்திற்கானசில அம்சங்களை அது கொண்டிருந்தால் அது பேரூராட்சியாக அறிவிக்கப்பட வேண்டும் நமது மாநிலத்தில் தற்போது 598 பேரூராட்சிகள் உள்ளன. அவை 374 ஊராட்சி ஒன்றியங்களில் பரந்து இடக்கின்றன. 30, 35 ஊராட்சித் தலைவர்களால் ஆட்டிய

படைக்கப்படும் ஊராட்சி ஒன்றியங்கள் தம்முள் உள்ள பேரூராட்சிகளுக்கு நியாயம் வழங்குவதில்லை என்பது ஆணைக்குழுவின் முன் அளிக்கப்பட்ட சாட்சியத்திலிருந்து தெரியவருகிறது. ஏனெனில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஓரிரண்டு பேரூராட்சிகளே உள்ளன. பேரூராட்சி தனது வருவாயில் பெரும்பகுதியைப் பணியாளர் குறித்த செலவுகளுக்காகச் செலவிட வேண்டியுள்ளது. அதன்பின் பேரூரின் சுகாதாரம் போன்ற ஏனைய தேவைகளை நிறைவுசெய்ய அதனிடம் நிதி இருப்பதில்லை. ஊராட்சி ஒன்றியத்திற்கு அரசு வழங்கும் மானியத் தொகையில் பேரூராட்சி களுக்குக் கிடைக்கும் பங்கைவிட உண்மையில் அதிகப்படியான தொகை அவற்றுக்குத் தேவைப்படுகிறது. அப்பொழுதுதான் மிகவும் இன்றியமை யாத, அடிப்படை வசதிகளைச் செய்து தரமுடியும். ஆனால், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் பொதுவாகப் பேரூராட்சிகளுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான பங்குத் தொகையையும் கூட அளிக்க மறுக்கின்றன.

4·2. அவைகளை ஊராட்சிகளாகவே வைத்திருந்தால் தற்போதுள்ள பிரச்சினைகள் பல ஏற்பட்டிருக்கமாட்டா, பாரா 3·11-ல் கொடுக்கப்பட்டுள்ள பரிவுரை இந்தப் பிரச்சினையை இனி குறைக்கும். கீழ்க்கண்டவை குறித்து ஆணைக் குழுவிடம் முறையீடுகள் செய்யப்பட்டுள்ளன.

(a) ஊராட்சிகளுக்கு உள்ளது போன்றே வீட்டு வரி இணை மானியம் பெற பேரூராட்சிகளும் தகுதியுடையனவாகுமெனச் செய்ய வேண்டும்.

(b) திரைப்பட அரங்குகள் தடையின்றிச் செவ்விதின்செயல்படுவதைக் கவனிக்கும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களிடம் அல்லாமல் பேரூராட்சி களிடமே யுள்ளதால் காட்சி வரி, கேளிக்கை வரி மீதான மேல் வரி ஆகியவை பேரூராட்சிகளிடமே கொடுக்கப்பட வேண்டுமேயல்லாது ஊராட்சி ஒன்றியங்களிடம் கொடுக்கப்படக்கூடாது.

(c) வீட்டு வரி, வண்டி வரி, தொழில் வரி ஆகியவை குறித்த வரி விதிப்பு வீதங்கள் உயர்த்தப்பட வேண்டும்.

(d) பணியாளர்கள் சம்பளங்கள் பெரிதும் உயர்ந்துள்ளதன் காரணமாக, இந்தச் செலவில் 25 சதவீததத்தையேனும் அரசு ஈடு செய்ய வேண்டும். பல பேரூராட்சிகளைப் பொறுத்த வரையில் இவ்வாறு உதவித் தொகை அளிப்பதற்கான கோரிக்கை நியாயமானதே என்றும் மேற் கூறப்பட்ட கருத்துரைகளில் பெரும்பாலானவை நியாயமானவை என்பது தெளிவு என்றும் ஆணைக்குழு உணர்கிறது. மேற்கூறப்பட்ட கருத்துரைகளை அரசு ஆய்வு செய்து பேரூராட்சிகளின் நிதி நிலைமைகளை மேம்படுத்து வதற்கு புதிய முறைகளை வகுக்கலாம் என ஆணைக்குழு பரிவுரை செய்கிறது.

4·3. ஊர் வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 26—2—70 நாளிட்ட 541 ஆம் எண் அரசு ஆணையில் வெளியிடப்பட்ட ஆணைகள், வீட்டுச் சொந்தக்காரர்களுக்குத் தொல்லையளிக்கின்றன என்பதும் ஆணைக்குழுவின் நாட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இந்த ஆணையின்கீழ், நிர்வாக

அதிகாரியால் விதிக்கப்பட்ட வீட்டு வரியை 10 சதவீதம் வரை பேரூராட்சி மன்றம் குறைக்கலாமென வரையறுக்கப்பட்டுள்ளது. சில நேரங்களில் நிர்வாக அதிகாரிகள் வீட்டு வரியை வரன் முறையின்றி தம் மனம்போன போக்கில் முடிவு செய்கின்றனர் என்றும் வீட்டு வரி விதிப்பைக் கணிசமான அளவில் குறைப்பதற்கு நியாயமான காரணங்கள் இருந்தும் கூட அந்த நேரங்களில் தாங்கள் குறுக்கிட இயலவில்லை எனவும் பேரூராட்சித் தலைவர்கள் கருதுகின்றனர். அத்தகைய நேர்வுகளில், வருவாய்க் கோட்ட அதிகாரிக்கு மேல் முறையீடு செய்து கொள்ள ஏற்பாடு இருக்கவேண்டு மென அவர்கள் கேட்டுக் கொண்டனர். இது நியாயமான கோரிக்கை என்று தோன்றுகிறது. ஆணைக்குழு, இதைப் பரிந்துரைக்கிறது.

4·4. பேரூராட்சிகளின் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக் குழுக்களில் மிகச் சிறுபான்மையினராக விருப்பதால் அவர்கள் சொல்வது எடுபடவில்லை என்ற காரணத்தினால் அவர்களுக்கு மாவட்ட வளர்ச்சி மன்றங்களில் பிரதிநிதித்துவம் அளிக்கப்படலாமெனக் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எல்லா பேரூராட்சிகளுக்கும் மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் பிரதிநிதித்துவம் கொடுப்பதென்பது சாத்தியமல்ல. தங்களின் பொதுவான பிரச்சினைகள் குறித்து எடுத்துச் சொல்ல பேரூராட்சித் தலைவர்களில் ஒருவரை மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் நியமிப்பது விரும்பத்தக்கதாகும்.

4·5. பேரூராட்சிகளில் வரி வசூல் பணி முழுநேர வரி வசூலிப்பவர்களால் மேற்கொள்ளப்படுகின்றது. அவர்கள் ரூ 150–4–170–5–225 என்ற சம்பள வீதத்தில் பணிபுரிகின்றனர். வரிவசூல் செய்பவருக்கான சராசரிச் சம்பளம் மாதம் ஒன்றுக்கு ரூ. 227 ஆகும். அவர்களின் சம்பளத்தைத் தவிர அவர்களுக்கு கீழ்க்கண்ட வீதங்களின் செயல் ஊக்க ஊதியக் கொடை வழங்கப்படுகிறது :—

கேட்புத் தொகை முழுவதையும் வசூலித்தால்.	ஒரு மாதக்கால சம்பளம் ஊதியக் கொடையாக வழங்கப்படும்.
கேட்புத் தொகையில் 97 சதவீதம் வசூலித்தால்.	ஒருமாதக்கால சம்பளத்தில் 75 சத வீதத்திற்குச் சமமான தொகை ஊதியக் கொடையாக வழங்கப் படும்.
கேட்புத் தொகையில் 95 சதவீதம் வசூலித்தால்.	ஒரு மாதக்கால சம்பளத்தில் 50 சதவீதத்திற்குச் சமமான தொகை ஊதியக் கொடையாக வழங்கப் படும்.

பேரூராட்சிகளால் நியமிக்கப்பட்டுள்ள வரி வசூல் செய்பவர்களின் மொத்த எண்ணிக்கை 1,195 ஆகும். கேட்பு, வசூல், நிலுவை ஆகியவை

குறித்த விவரங்களும், வசூல் செலவு குறித்த விவரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

ஆண்டு.	கேட்புத் தொகை.	வசூல் தொகை.	நிலுவை.	வசூல் செலவு.	கேட்புத் தொகையில் வசூல் தொகையின் சதவீதம்.
		(ரூபாய் லட்சத்தில்)			
1969–70	214·87	172·02	40·63	32·35	80
1970–71	236·64	187·17	48·80	32·35	79·3
1971–72	284·32	210·04	72·66	32·35	73·87

வசூலிப்புத் திறன் 75 சதவீதம், வசூல் செலவு விகிதாச்சாரம் 15 சதவீதம் என இருப்பது மன நிறைவு அளிக்கத் தக்கது எனக் கருதப் படலாம். பேரூராட்சி வரி வசூல்களுக்காக வசூல் நிறுவன அமைப்பில் மாற்றம் எதும் வேண்டுமென ஆணைக்குழு பரிவுரை செய்யவில்லை.

(5). ஊராட்சி ஒன்றியங்கள்.

(அ) பரப்பளவு.

5 1. இம்மாநிலத்தில் ஊராட்சி ஒன்றியங்கள் சமுதாய வளர்ச்சி வட்டாரங்களின் பரப்பை ஒத்துள்ளன. பரப்பு, சதவீதம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு 374 வட்டாரங்களில் ஆய்வு மேற்கொள்ளப் பட்டது. அதன் விவரம் வருமாறு :—

மக்கள் தொகை.	வட்டாரங்களின் எண்ணிக்கை.	சதவீதம்.
60,000-ம் அதற்குக் குறைவும் ..	91	24
60,000 முதல் 80,000 வரை ..	160	43
80,000 முதல் 1,00,000 வரை ..	97	26
100,000-ம் அதற்கு மேலும் ..	26	7
மொத்தம் ..	374	100

பரப்பளவு.	வட்டாரங்களின் எண்ணிக்கை.	சதவீதம்.
77 ச. மைலுக்கும் குறைவானவை	82	22
77 ச. மைல் முதல் 116 ச. மைல் வரை.	140	38
116 ச. மைல் முதல் 154 ச. மைல் வரை.	80	21
154 ச. மைல் முதல் 193 ச. மைல் வரை.	49	13
193 ச. மைலுக்கும் மேற்பட்டவை	23	6
	374	100

சுமார் 81% வட்டாரங்கள் 154 ச. மைலுக்கு குறைவான பரப் புள்ளவை. 67% வட்டாரங்கள் 0,000-க்குக் குறைவான மக்கள் தொகையைக் கொண்டவை. மக்கள் தொகையைக் கருத்திற்கொண்டு பார்த்தாலுஞ்சரி, அல்லது பரப்பைக் கருத்திற்கொண்டு பார்த்தாலுஞ்சரி வட்டாரங்களின் எல்லைகளைப் பெருமளவிற்கு மாற்றியமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

(ஆ) நகர, மலைப் பகுதிகளைச் சேர்ந்த ஊராட்சி ஒன்றியங்களின் தனிப் பிரச்சினைகள்.

5.2. சென்னை மாநகரையும் மற்றும் கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி முதலிய பெரிய நகரங்களையும் அடுத்துள்ள வட்டாரங்கள், பெரிதும் பேரூராட்சிகளையே கொண்டவையாகவும் ஏனைய சாதாரண வட்டார்ரங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டு நகரத் தன்மை வாய்ந்தவை யாகவும் உள்ளன. அங்கு பயிரிடும் நிலங்கள் மிகக் குறைவு; நிலவரி தொடர்பான வாயில்களிலிருந்து கிடைக்கும் வருவாயும் குறைவு. அதிக வருவாய் கிடைக்கின்ற கேளிக்கை வரியின் மூலம் கிடைக்கும் வருவாய் முழுவதையும் பேரூராட்சிகள் எடுத்துக்கொள்கின்றன. இவ்வாறு நகர வட்டாரங்களின் வருவாய் வரையறுத்த அளவுக்கே இருக்க, அவை நிறைவு செய்ய வேண்டிய தேவைகளோ மிக அதிகமாக உள்ளன. நகர்ப்புற வட்டாரங்களில் நகர அமைப்பு முறைகள் பெருகிவருவ தால் கல்வி, பொதுச் சுகாதாரம், நீர் வழங்கல், மருத்துவமனை வசதிகள், சாலைகளைப் பேணுதல் போன்ற பணிகளுக்காகும் செலவுகள், கிராமப்புற வட்டாரங்களில் ஆவதைக் காட்டிலும் அதிகமாகின்றன. நகர்ப்புற வட்டாரங்களில் உள்ள சாலைகளின் வகைப்பாடு வழக்கமாக உயர்ந்ததாய் இருக்கிறது. அங்கு போக்குவரத்து அதிகமாக உள்ளபடியால், அவற்றை அதிகச் செலவில் பேணி வரவேண்டியுள்ளது.

5.3. இவற்றைத் தவிர, கிராமப்புற வட்டாரங்களைக் கருத்திற்கொண்டு தயாரிக்கப்பட்ட, வேளாண்மையை நோக்கமாகக் கொண்ட தர வரவு–செலவுத் திட்டங்கள் நகர்ப்புற வட்டாரங்களுக்குப் பொருந்துவதில்லை. நகர்ப்புற வட்டாரங்களில் பழத் தோட்ட வளர்ப்பு, காய்கறி–பூந்தோட்ட வளர்ப்பு, கோழி வளர்ப்பு, பன்றி வளர்ப்பு, பால் பண்ணை, சிறு தொழில் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். கைவினைப் பணியாளர்களுக்கும், தொழிற்சாலைப் பணி சம்பந்தப்பட்ட தொழிலாளர் களுக்கும் ஊக்கமளித்தல், பெரிய லாரி நிறுத்துமிடங்கள், சேமிப்புக் கிடங்குகள் கட்டுதல் போன்றவை இப்பகுதிகளுக்கு மிகவும் பொருத்த மான திட்டங்களாகும்.

5.4. இதைப்போலவே நீலகிரி மாவட்டத்தில் உள்ள பெரிய மலைப் பகுதி வட்டாரங்களுக்கு, தர திட்டங்களும் வரவு–செலவுத் திட்டங்களும் ஒத்து வருவதில்லை. பேரூராட்சிகள், நகர்ப்புற வட்டாரங்கள், மலைப் பகுதி வட்டாரங்கள் ஆகியவை சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் குறித்து விரிவாக ஆய்வு செய்யவும், அவற்றின் தனித் தேவைகளைக் கண்டறியவும்,

அவற்றின் தேவைகளுக்கேற்ப திட்டங்களையும், மாதிரி வரவு-செலவுத் திட்டங்களையும் தயாரிக்கவும் அரசு, சிறு குழு ஒன்றை நியமிக்கலாம் என்று ஆணைக்குழு பரிவுரைக்கிறது.

(இ) ஊராட்சி ஒன்றியத் தலைவர் தேர்தல்.

5.5. ஊராட்சித் தலைவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுக்கவியலும் வகையில், 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம், 1970 ஆம் ஆண்டு 2 ஆவது சட்டத்தினால் திருத்தப்பட்டது. இருப்பினும், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் தேர்தல் தொடர்ந்து மறைமுகமாகவே நடைபெற்று வருகின்றது. ஏனெனில், ஊராட்சி ஒன்றியக் குழுவின் உறுப்பினர்கள் தங்களுக்குள் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கின்றனர். தற்போதைய இந்த மறைமுகத் தேர்தல், பல மோசடிகளுக்கும் முறைகேடுகளுக்கும் வழி கோலுகிறது. இக்குழுவுக்கு முன்னர் சொல்லப்பட்ட சாட்சியங்களிலிருந்து, ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் தேர்தல் நேரடித் தேர்தலாக்கப் படவேண்டும் என்று ஊராட்சி ஒன்றியத் தலைவர்களிடையே பொதுவாக விருப்பம் உள்ளது தெரிய வருகிறது. தற்பொழுது, ஊராட்சி ஒன்றியத் தலைவர், தன்னைத் தேர்ந்தெடுத்த உறுப்பினர்களுக்குக் கடமைப் பட்டவராக உள்ளார். அவர் தொடர்ந்து தலைவர் பதவி வகிக்க எப்போதும் அவர்களது ஆதரவு அவருக்கு அவசியமாக உள்ளது. அவர் இவ்வாறு உறுப்பினர்களது ஆதரவை நம்பி இருப்பது, அவரது போக்கையே மாற்றி விடுகிறது. மேலும், எது நியாயமானதோ, செய்யப்பட வேண்டியதோ அதைச் செய்யாமல், அவரது ஆதரவாளர்களுக்கு ஏற்றதாக உள்ள காரியங்களையே செய்யுமாறு அடிக்கடி அவர் வற்புறுத்தப் படுகிறார். ஊராட்சி ஒன்றியத்தின் நிர்வாகத்தில் உள்ள குறைபாடுகளில் இதுவும் ஒன்று என்றும் அன்றாடம் உறுப்பினர்களின் ஆதரவை நம்பி இருக்கவேண்டிய ஒரு நிலையிலிருந்து அவர்கள் விடுபட்டால், ஒன்றிய மக்களின் பெருவாரி நலனுக்காகத் தன்னிச்சையாகச் செயல்பட அவரால் முடியும் என்றும் பல ஒன்றியத் தலைவர்கள் கருதினர்.

5.6. நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு தலைவருக்கு, அதிக செயல் சுதந்திரம் இருக்கும் என்பதிலும், அமைப்பின் தலைவர் என்ற முறையில் அந்த அமைப்பை சிறந்த முறையில் நடத்திச் செல்லவியலும் என்பதிலும் ஐயமில்லை. தவறிழைக்கிற ஊராட்சித் தலைவர்கள் குறித்து செய்வதுபோலவே, தவறுகள் புரிகின்ற ஒன்றியத் தலைவர்களைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கு நடைமுறைகள் வகுக்கப்படலாம். ஒன்றியத் தலைவர்களை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுப்பதில் சில அபாயங்களும் இருக்கலாம். ஏனெனில், மன்றத்தின் ஓரளவு பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்று அவரைப் பதவியிலிருந்து நீக்குவதைக் காட்டிலும், நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரை பதவியிலிருந்து அகற்றுவதற்கான நடைமுறைகள் மிகவும் சிக்கலானவை. ஆனால், ஜனநாயக முறையில், எல்லாச் செயல்களைச் செய்யும் போதும் துணிகரமாகச் செயல்பட வேண்டியுள்ளது. நமது பஞ்சாயத்து ஆட்சி முறையில் என்னதான் குறைபாடுகள் இருந்தபோதிலும், இது, நேர்மையான, ஆர்வமுள்ள, சிறந்த பல உள்ளூர் தலைவர்களை உருவாக்கியுள்ளது என்பதை

மறுக்க முடியாது. இவ்விசாரணையின்போது ஆணைக்குழு பல ஒன்றியத் தலைவர்களைச் சந்தித்தது. பெரும்பாலும் அவர்கள் அனைவருமே நிர்வாகத் திறமையுள்ளவர்களாவர். இந்தப் பதவிகளுக்கு இத்தகையவர்கள் தாராளமாகக் கிடைக்கையில், ஓரளவு துணிகரமாகச் செயல்பட வேண்டியது நியாயமானதே.

5.7. ஊராட்சி ஒன்றியத் தலைவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுப்பதனுல், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஊராட்சிகளுக்குமிடையிலான அடிப்படை உறவு பாதிக்கப்படும் என்று வாதிடலாம். ஊராட்சி ஒன்றியங்கள் தற்பொழுது, ஊராட்சிகளின் கூட்டமைப்பாகக் கருதப்படுகின்றன. ஊராட்சி ஒன்றியங்கள், ஒவ்வோர் ஊராட்சியின் தேவைகள், விருப்பங்கள் குறித்து நாட்டம் செலுத்துவதை உறுதிப்படுத்துவதற்காக, ஊராட்சி ஒன்றியத் தலைவர், ஒன்றியக் குழுவினுல் ஒன்றியக் குழுவிற்குப் பொறுப்பு வகிப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்படுகிறுர். ஊராட்சி ஒன்றியத் தலைவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுப்பது, கூட்டாட்சி முறையின் சிறப்பைக் குறைக்கக் கூடும். கொள்கையில் உண்மையில் இது சாத்தியமே. ஆனுல், அது இவ்வாறு இருக்க வேண்டிய அவசியமில்லை. மேலும், நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியத் தலைவர், தொடர்ந்து குழுவின் ஒருமித்த முடிவுக்கு உட்பட்டு, நடந்து கொள்பவராக இருப்பதற்கென, திருத்தச் சட்டத்தில் உரிய பாதுகாப்புகள் சேர்க்கப்பட வேண்டும். எப்படியாயினும், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றிய அளவுகளில் உறுதியான நிர்வாகத்தின் நலனைக் கருதி, கூட்டாட்சிக் கொள்கைகளை ஓரளவுக்கு விட்டுக் கொடுப்பதில் தவறு ஒன்றுமில்லை. ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவருக்கான நேரடித் தேர்தல், ஊராட்சித் தேர்தல்களுடன் நடத்தப்பட வேண்டும் என்று ஆணைக் குழு பரிவுரைக்கிறது.

5.8. மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள் பல ஊராட்சி ஒன்றியங்களில் தலைவர்களாக இருப்பதை ஆணைக்குழு கவனித்தது. ஊராட்சி ஒன்றியத் தலைவர் பதவி, முழு நேரக் கவனிப்பும் தேவைப்படுகிற கடினமானதொரு பதவியாகும். இரண்டு பதவிகளையும் வகிப்பவர்கள், இரண்டிலுமே சரிவரச் செயல்பட முடியாது. புதிய உள்ளூர் தலைவர்களை உருவாக்கி, பொறுப்புள்ள பதவிகளில் அவர்களுக்குப் பயிற்சி அளிப்பது பஞ்சாயத்து ஆட்சி முறையின் நோக்கங்களில் ஒன்று. அதிகப் பணிகள் உள்ள மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள், இப்பதவிகளைப் பிடித்துக் கொண்டார்களேயானுல், இந்த நோக்கம் தோல்வி அடைந்துவிடும். மேலும், சட்டமன்றத்தில் அத்தகைய உறுப்பினர்கள் இருப்பது, சம்பந்தப்பட்ட அமைச்சரின் பொறுப்பைக் குறைத்துவிடும். சட்டமன்றத்தின் மற்ற உறுப்பினர்களுக்கும், ஊராட்சி நிர்வாகத்தைப் பற்றியும் தங்களது சக உறுப்பினர் தலைவராக இருக்கக்கூடிய ஒன்றியத்தின் செயல்களைப் பற்றியும் பொதுவாகக் குறைகூறச் சங்கடமாக இருக்கலாம்.

(ஈ) ஊராட்சி ஒன்றியங்களின் வருவாய் வாயில்கள்.

5.9. ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தற்பொழுது கீழ்க்கண்ட வாயில்களிலிருந்து வருவாய்கள் கிடைக்கின்றன :—

(a) நிலவரி மீதான உள்ளூர் செஸ் வரியில் 5/9 பாகம் ;

(b) நிலவரியின் ஒவ்வொரு ரூபாய்க்கும் விதிக்கப்படும் மேல்வரி ; இது உயர்ந்தது ரூ. 2·50-க்கு மேற்படக்கூடாது—உண்மையான மேல்வரி வீதம் ஊராட்சி ஒன்றியத்தின் விருப்பப்படி முடிவு செய்யப்படுகிறது ;

(c) காட்சி வரியும், கேளிக்கை வரி மீது விதிக்கப்படும் மேல் வரியும் ;

(d) சிறு கற்பாறைகளிலிருந்து கல்வெட்டியெடுக்க விதித்து வசூலிக்கப்படும் குத்தகைத் தொகைகள் ;

(e) ஊராட்சி ஒன்றியத்தின் விருப்பத்திற்கிணங்க மேம்பாடு செய்வதற்கான நிலத்தின் மீது விதிக்கப்படும் சிறப்பு வரிகள் ;

(f) உள்ளூர் செஸ் மேல்வரிக்குச் சமமாக அரசு அளிக்கும் மானியம் ; கல்வி, சாலைகள், சிறு பாசனம் முதலிய குறிப்பிட்ட காரியங்களுக்காக அளிக்கப்படும் மானியங்கள் ;

(g) தலைக்கு ரூ. 1 வீதம் நிலவரி ஒப்படை.

5.10. ஊராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் நிலவரியை அடிப்படையாகக் கொண்டு, அதிக வருவாய்க்கான முறைகள் வகுக்கப் பட்டுள்ளன. மண் வளம், உறுதியான பாசன வசதி ஆகியவற்றைப் பொறுத்து நிலவரி வருவாய் இடத்திற்கு இடம் பெருமளவில் மாறுபடுகிறது. ஒரே சீராக இல்லாத இந்த வருவாய் வாயிலை அடிப்படையாகக் கொள்வதனுல், ஊராட்சி நிதி அமைப்பில் கணிசமான அளவுக்கு மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளது. வளமான நிலப் பகுதிகளைக் கொண்ட ஊராட்சி ஒன்றியங்களுக்கும் பின்தங்கிய நிலப் பகுதிகளைக் கொண்ட ஊராட்சி ஒன்றியங்களுக்கும் கிட்டத்தட்ட ஒரேமாதிரியான தேவைகளும், மக்கள் தொகையும் இருந்த போதிலும், முன்னதற்கு அதிக வருவாயும் இரண்டாவதற்கு வருவாய்ப் பற்றுக்குறையும் ஏற்படுகின்றது. உண்மையில், அதிக முதலீடு தேவையுள்ள பின்தங்கிய பகுதிகளில் இருமடங்கு முடக்கம் ஏற்படுகின்றது. ஏனெனில், பொதுவாக, நிலவரி வருவாய், பகுதிகளின் முதலீட்டுத் தேவைகளுக்கு நேர்மாறாக உள்ளது. எனவே, நியாயமான முறையில் சமமாகப் பங்கீடு செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக, அரசு, தனது மானியத்தைச் சரிக்கட்ட அவ்வப்போது தற்காலிக சமப் பங்கீட்டு விதிமுறைகளை வகுக்கவேண்டிய கட்டாய நிலைக்கு உள்ளாகிறது.

5.11. அரசு, ஊராட்சி நிதிகளை அணுகும் முறையில் சில அடிப்படை மாறுதல் இருக்கவேண்டும் என இக்குழு கருதுகிறது. ஊராட்சி ஒன்றியக் குழு எல்லா வகையான வரிகளையும் விதித்த பின்னரும்கூட, நியாயமான எல்லாத் தேவைகளுக்கும் நிலவரி போன்ற ஒரு குறிப்பிட்ட வருவாய் வாயில் போதாமல் இருக்கையில், அத்தகைய வாயில்களை ஊராட்சிகளுக்கென்று ஒதுக்குவதில் குறிப்பாக எந்தவித நன்மையும் இல்லை. தற்போதைய மொத்த நிலவரி வசூல் சுமார் ரூ. 12 கோடி. ஆனுல், ஊராட்சிகளின் மூலமாகச் செய்யப்படுகின்ற எல்லாவிதமான பணிகளுக்கும் மாநில வரவு-செலவுத் திட்டத்தில் சுமார் ரூ. 100 கோடிக்கு வகை

செய்யப்பட்டுள்ளது. பஞ்சாயத்து ஆட்சி முறையின் முந்திய நிலைகளில் என்னதான் நியாயம் இருந்திருந்தாலும் என்னதான் எதிர்பார்க்கப்பட்டிருந்தாலும், வேளாண்மை நிலங்களுக்கு வரி விதிப்பதில் சில உள்ளாட்சி அதிகாரங்களைச் செயற்படுத்துவதற்கு ஒன்றியக் குழுக்களுக்கு அதிகாரம் அளிப்பதில், தற்போதைய நிலைமைகளின்கீழ் இத்திட்டம் காலத்திற்கு ஒவ்வாததாகிவிட்டது. ஏனெனில், அவற்றைச் செயற்படுத்துவதால் தேவையான மொத்த வருவாய் ஓரளவே உயரும். புதிய திட்டத்தில் கருதப்பட்டுள்ள குறைந்த அளவுத் தேவைகள் குறித்த ஆர்வமிக்க திட்டத்தின்கீழ் ஊராட்சி நிர்வாகத்தின் மூலமாக அதிகத் தொகை செலவிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற ஐந்தாவது திட்டக் காலத்தில் இது இன்னும் மோசமாகும். நிலவரித் தீர்வை, செஸ் மேல் வரி ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் வருவாய் மாநில அளவில் தொகுக்கப்பட்டு, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் மக்கள் தொகை, பரப்பு, பின்தங்கிய நிலை, தனித் தேவைகள் எவையேனும் இருப்பின் அவை, ஆகியவற்றின் அடிப்படையில் இந்த மொத்தத் தொகை அவற்றிற்குப் பிரித்துக் கொடுக்கப்பட வேண்டும் என்று இக்குழு திட்டவட்டமாகக் கருதுகிறது. நிலவரி மீதான செஸ் மேல்வரி வீதங்களை மாற்றுவதற்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள விருப்ப உரிமையைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மாநில அரசு, மாநிலம் முழுவதற்கும் ஒரே சீரான வீதத்தில் மேல்வரி விதிக்கலாம். இச்சிறப்புரிமையைக் கைவிட ஊராட்சி ஒன்றியங்கள் தயங்கமாட்டா. நிலவரி முறையை எளிதாக்க, ஊராட்சி ஒன்றியங்களிடமிருந்து இந்த அதிகாரத்தைத் திரும்பப் பெறவேண்டியது அவசியம் என்று ஆணைக்குழு கருதுகிறது. மேலும், தற்பொழுது தீவிரப் பரிசீலனையில் உள்ள நிலவரி நிர்வாகம் மீதான அறிக்கையில், ஆணைக்குழு இது பற்றி விரிவாக விளக்கும்.

5.12. ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் உரிய முக்கிய வரி வாயில்கள் நீட்சித்தன்மையற்றவை. இவ்வாறாக, முன்னரே முடிவு செய்யப்பட்ட சில வரம்புகளுக்குட்பட்டு நிதிகளை மாநில அரசிடமிருந்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஊராட்சிகளுக்கும் பிரித்துக்கொடுப்பது தவிர்க்க முடியாததாகும். நிதிகளைப் பிரித்துக்கொடுப்பதற்கும், நிலவரி மீதான மேல்வரியின் கீழ்த் தொகுக்கப்பட்ட வரித் தொகையைப் பிரித்து வழங்குவதற்குமான வரையறைகள், மத்திய நிதி ஆணைக்குழுவைப் போன்று அமைக்கப்படவேண்டிய மாநில ஊராட்சி நிதி ஆணைக்குழுவின் பரிவுரைகளை அடிப்படையாகக் கொண்டு, ஐந்து ஆண்டுகளுக்கொருமுறை வகுக்கப்படவேண்டும் என்று இக்குழு பரிவுரைக்கிறது.

5.12.1. தனியார் சந்தைகளை ஊராட்சி ஒன்றியங்கள் கையகப்படுத்தி நேரடியாக நிர்வகிப்பதனால், அவற்றிற்கு கணிசமான அளவுக்கு வருவாய் அளிக்கும் வாயிலாக அவை அமையும் என்று ஆணைக்குழுவிற்குக் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. பல கிராமங்களில், தனியார்கள், அர அல்லது உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து பெருமளவில் புறம்போக்கு நிலங்களை குத்தகைக்கு எடுத்து அங்கு வாரச் சந்தைகள் நடத்தி கணிசமான அளவுக்கு வருமானம் பெறுகின்றனர். ஊராட்சி ஒன்றியங்கள் அந்த நிலங்களை எடுத்துக்கொண்டு, தாங்களே நேரடியாகச் சந்தைகள்

நடத்தலாம்; அல்லது சந்தைகள் நடத்துவதற்கான உரிமை பொது ஏலத்தின் மூலம் வழங்கப்படலாம். இந்தக் கருத்துகள் சிறந்தவை எனவும் நிறைவேற்றுவதற்காக மேலும் இவற்றைப் பயனுள்ள வகையில் பரிசீலிக்கலாம் என்றும் ஆணைக்குழு கருதுகிறது.

உ. ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள் மேற்கொள்கிற பயணங்கள்.

5.13. ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் வளர்ச்சிப் பணி அதிகாரிகள், ஊர்நல ஊழியர்கள் அனைவரும் தங்களது கடமையைச் சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்காக தங்களது பொறுப்பின்கீழ் உள்ள கிராமங்களுக்கு அடிக்கடி சென்று பார்வையிட வேண்டியுள்ளது. விரைவுப் போக்குவரத்திற்காகத் தற்பொழுது ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திடமும் ஒவ்வொரு ஜீப் உளது. சில வரையறைகளுக்குட்பட்டு, இந்த அதிகாரிகளுக்கு வரையறுத்த பயணப் படி வழங்கப்படுகிறது. ஊராட்சி ஒன்றியத் தலைவருக்கும், பார்வையிடும், ஆய்வு செய்யும் அதிகாரிகளுக்கும்கூட ஜீப் தேவைப்படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் தான் ஏற்பாடு செய்கின்ற சிறப்பு இயக்கங்களுக்காக அடிக்கடி ஜீப்பை அனுப்புகிறார். காலாண்டுக்கு ஜீப் ஒன்றுக்கு 900 லிட்டர் பெட்ரோல்தான் பயன்படுத்த வேண்டும் என அரசு வரையறுத்துள்ளது. மாவட்ட அதிகாரிகள் இந்த வரையறையைத் தளர்த்தலாம்; அவ்விதமே அவர்கள் அடிக்கடி தளர்த்தவும் செய்கின்றனர். ஜீப்களைப் பயன்படுத்துவது குறித்து அரசு வரையறை எதுவும் விதிக்கவில்லையென்றாலும், ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள் அனைவரும் தங்களுக்குத் தேவைப்படுகிறபோது ஜீப்களைப் பெறுவதென்பது கடினமானதாகும்.

5.14. ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள் பணியினிமித்தம் இடம்விட்டு இடம் செல்ல வேண்டியதன் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, அப்பணியாளர்கள் தங்களுக்கென்று சொந்தமாக தகுந்த வண்டிகளை வைத்துக்கொள்ள ஊக்கம் அளிக்கப்பட வேண்டும் என்று ஆணைக்குழு கருதுகிறது. ஊர்நல உதவியாளர் சிரமம் ஏதுமின்றி சைக்கிள் ஒன்றில் தன்னுடைய பொறுப்பை நிறைவேற்ற இயலும். வளர்ச்சிப்பணி அதிகாரிகள் மலைப் பகுதிகள் நீங்கலாக, தங்கள் அதிகார வரம்பிலுள்ள பிற பகுதிகளுக்கு ஸ்கூட்டர் அல்லது மோட்டார் சைக்கிளில் சென்று தங்கள் பொறுப்பை நிறைவேற்றலாம். ஊர்நல உதவியாளர்களும் வளர்ச்சிப் பணி அதிகாரிகளும் தங்களுக்கென்று வண்டிகளை வாங்க அவர்களுக்குச் சலுகை வட்டி வீதத்தில் கடன்கள் வழங்கப்படலாம் என்றும், அவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் வரையறுத்த பயணப் படிக்குப் பதிலாக அல்லது அதை மாற்றியமைக்கிற வகையில் போதிய ஊர்திப் படி வழங்கப்படலாம் என்றும் ஆணைக்குழு பரிவுரைக்கிறது. இந்த ஏற்பாட்டினால் பணியாளர்கள் மேலும் அதிகமான கிராமங்களுக்குப் போய்வர முடியும். அரசு ஜீப்புகளுக்கான தேவையும் குறையும்.

6. ஊராட்சி ஒன்றியங்களின் அலுவல்கள்.

6.1. ஊராட்சிச் சட்டம் செயலுக்கு வந்த 1958 ஆம் ஆண்டு முதல், உள்ளாட்சி மன்றங்கள் வழக்கமாக நிறைவேற்றி வருகிற மக்களுக்கு சுகாதார வசதி செய்து தரும் அலுவல்களையும் சமுதாய வளர்ச்சித் திட்டங்

களின்கீழ் நிறைவேற்றக் கருதியுள்ள உற்பத்தி அலுவல்களையும் ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தின் கீழ் ஒன்ருக இணைக்கும் கருத்தை நாம் சோதனை செய்து வந்துள்ளோம். துறைத் தலைவர் தலைமையிடத்தில் இருந்து கொண்டு, கட்டுப்பாட்டு அதிகாரத்தின் பல்வேறு நிலைகளில் இடைநிலை அதிகாரிகள் மூலமாக நேரிடப் பணியாளர்களைக் கட்டுப்படுத்தும் முறையில் அரசின் பல்வேறு துறைகள் அமைந்துள்ளன. ஒருங்கிணைந்த கொள்கையை வகுப்பதிலும், வரவு–செலவுத் திட்டச் சமன நிலையை உறுதி செய்வதிலும் செயலகம் மேற்கொள்கிற பொது ஒருங்கிணைப்பு நீங்கலாக, பல்வேறு துறைகளிடையே இடைப்பட்ட நிலைகளில் தொடர்பு ஏற்படுவதற்குரிய சில விஷயங்கள் இருந்தன. வேளாண்மை, கூட்டுறவு போன்ற ஒன்றுக்கொன்று தொடர்புள்ள துறைகள் பொதுவாகத் தனித்தனியே செயல்பட்டன. மாவட்ட அளவில் ஓரளவு ஒருங்கிணைப்பு நிலவுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முயற்சி செய்தனர். அவர்கள் மக்களை பெரும்பாலும் நேரில் தொடர்பு கொண்டனர். ஆனால், நேரிடப் பணி அளவை அடையுமுன்னர் இந்த முயற்சி வீணுகப் போய்விட்டது. ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்-வட்டார வளர்ச்சி அதிகாரியின்கீழ், நேரிடப் பணி நிலையில் பல்வேறு வளர்ச்சித் துறைகளின் அலுவல்களை சமநிலை அளவில் ஒருங்கிணைக்கும் முயற்சியே சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். அப்போதுதான், விரைவான வளர்ச்சியை உறுதிப்படுத்தும் வகையில் வளர்ச்சி வட்டாரத்தின் மேம்பாடுக்கு நன்கு ஒருங்கிணைந்த முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ள இயலும். தொடர்புள்ள துறைகளில் நிலை அளவில் ஒருங்கிணைப்பு நிலவச் செய்யும் முயற்சிகள் பொதுவாக இடுக்கண்களையும் இடர்ப்பாட்டினையும் ஏற்படுத்துகின்றன. குறிப்பாக, வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, தொடக்கக் கல்வி, பொதுச் சுகாதாரம், கூட்டுறவு, மகளிர் நலன், சமூகக் கல்வி, சிறு பாசனம், சாலைகள் வசதி, குடும்ப நலத் திட்டம், கிராமத் தொழில்கள் போன்ற பணிகளைப் பொறுத்த வரையில் அவற்றிற்கிடையே சமநிலை அளவில் ஒருங்கிணைப்பு ஏற்படுத்துவதில் இடர்ப்பாடுகள் உள்ளன. எனவே, இந்த ஏற்பாட்டில் தோன்றுகின்ற இடுக்கண்களையும் இடர்ப்பாடுகளையும் களைய இந்த ஒருங்கிணைப்பு எந்தெந்தத் துறைகளில் இருக்க வேண்டும் என்பதையும் அதன் உட்பொருளையும் மாற்றியமைக்க வேண்டியது அவசியமா என்பது குறித்து அவ்வப்போது பரிசீலனை செய்வது அவசியமாகிறது இது குறித்து ஆணைக்குழு தனது விசாரணைகளில் கணிசமான நாட்டத்தைச் செலுத்தியது. அதன் முடிவுகள் இந்த அத்தியாயத்தில் விளக்கப்பட்டிருக்கின்றன.

(அ) வேளாண்மை

6.2.1. குடும்பநலத் திட்டத்துடன் கூடிய வேளாண்மை வளர்ச்சி தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் நோக்கங்களில் மிக முக்கியமானதாகும். ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் இத்திட்டங்களை செயல்படுத்துவதன் வாயிலாக இத்திட்டங்களில் மக்கள் பங்கு கொள்ளச் செய்ய இச்சட்டம் விழைகிறது. ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றியதனுல் முழுமையான பலன் கிட்டியதா என்பது குறித்து 15 ஆண்டுகள் சோதனைக்குப் பின்னர் கருத்து வேறுபாடு நிலவுவது வியப்பிற்குரியதொன்றுகும்.

வேளாண்மைத் துறையின் பெரும்பாலான அதிகாரிகளும், முன்னிலையில் உள்ள உழவர்கள் சிலரும் இச் சோதனை குறித்து நம்பிக்கையிழந்துள் ளனர். ஊராட்சி ஒன்றியம் மூலமாக இப்பணியை நிறைவேற்ற வேண் டிய அவசியமின்றி வேளாண்மைத் துறையே நேரடியாக நிறைவேற்ற வேண்டும் என அவர்கள் உறுதியாகக் கருதுகின்றனர். ஊராட்சி ஒன்றியம போன்ற பல நோக்க நிறுவனம் பல பொருள்கள் குறித்துத் தனது நாட்டத்தைச் செலுத்த வேண்டியுள்ளது. தனக்கு மேலுள்ள அதிகாரி கள் வரையறுத்த முன்னுரிமைகளைப் பின்பற்ற வேண்டி உள்ளது. எனவே, உரிய முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய வேளாண்மை வளர்ச்சிக்கு அத்தகைய முன்னுரிமையைக் கொடுக்க அதனால் எப் போதுமே முடிவதில்லை. இக் காரணங்களால் ஊர்நல—உதவியாளர்கள் என்கிற அடிப்படை ஊழியர்கள் அனைவரையும் ஊராட்சி ஒன்றியம் வைத்திருப்பது சரியல்ல என்று அவர்கள் கருதுகின்றனர். அதனால் இயல்பான வேளாண்மை வளர்ச்சிப் பணிகளைக் கவனிக்க பணியாளர் எவரும் துறையில் இல்லாமல் போய்விடுகிறார்கள். குடும்ப நலத் திட்டம் சிறு சேமிப்பு, கண் சிகிச்சை முகாம், கடன் வசூல் போன்ற பல்வேறு வகைப்பட்ட இயக்கங்களில ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் நேரத்தில் பெரும் பகுதியைச் செலவிடுகின்றன என்றும், அக்காலங்களில் ஊர்நல உதவியாளர்கள் உட்பட ஊரட்சி ஒன்றியப் பணியாளர்கள் அனைவரும், வேளாண்மை வளர்ச்சிப் பணி அதிகாரியும் வேளாண்மை வளர்ச்சிப் பணிக்காகவென்றே ஒப்பளிக்கப்பட்ட பணியாளர் களும்கூட, இப்பணிக்காக அனுப்பப்படுகின்றனர் என்றும் அவர்கள் வாதிடுகின்றனர். அவர்கள் கருத்துப்படி வேளாண்மைப் பணி ஆண்டு முழுவதும் நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்றாக ஆகிவிட்டது என்றும், இதற்கு ஆண்டு முழுவதும் வளர்ச்சிப் பணியாளர்களின் நாட்டம் தேவையாயிருக்கிறது என்றும் அவர்கள் கருதுகின்றனர். வேளாண்மை நடவடிக்கைகள் உச்ச கட்டத்தில் இருக்கிற காலங்களில் பல்வேறு இயக் கங்களை முன்யோசனையின்றி அதே காலங்களில் நடத்தத் திட்டமிடுவது குறித்து அவர்கள் மனவருத்தம் அடைந்துள்ளனர். ஊராட்சி ஒன்றியங் கள் வேளாண்மை வளர்ச்சிக்காகத் தங்கள் சொந்த நிதி வாயில்களி லிருந்து ரூ. 23,000 சொற்ப நிதி ஒதுக்கமே செய்கின்றன. பல லட்ச ரூபாய் மதிப்புள்ள விதைகள், உரங்கள், பயிர்ப் பூச்சிக் கொல்லி மருந்து கள் போன்றவற்றை வேளாண்மை நல வளர்ச்சிப் பணியாளர்கள், அடிப் படைப் பணியாளர்கள். ஆகியோர் வாயிலாக வேளாண்மைத்துறை பங்கீடு செய்கிறது. அவ்வாறிருக்க, அவர்கள் மீது ஊராட்சி ஒன்றியங்கள் நிர்வாகக் கட்டுப்பாடும், ஒழுங்கு முறையும் செலுத்துவது நியாயமற்றது என அவர்கள் கருதுகின்றனர். நைட்ரஜன் உரங்கள் அதிகமாகத் தேவைப் படும் மிகு பயன்தரக்கூடிய பயிர் வகைகளைப் பயிரிடும் முறை செயல்படுத் தப்பட்டதன் விளைவாக, வேளாண்மைத் தொழில் மிகவும் சிக்கலான தொன்றாக ஆகிவிட்டது. பல பணிகளைக் கவனித்து வருகிற உற்சாகம் குன்றிய 10 பணியாளர்களை மேற்பார்வை செய்து வருகிற, வேளாண்மை குறித்துச் சிறப்பான அறிவு பெறாத ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் ஒருவர் வேளாண்மையில் ஏற்பட்டுள்ள புதுமை வளர்ச்சிகளை நன்கு புரிந்து கொண்டு, கிராம உழவர்களுக்குச் செவ்விய முறையில் இவற்றைப் பரப்புவார் என்றும் நாம் எதிர்பார்க்க முடியாது.

6.2.2. மாவட்ட வளர்ச்சி அதிகாரிகள், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள், ஊர்நல உதவியாளர்கள் போன்ற ஊராட்சி வளர்ச்சித் துறைப் பணியாளர்கள் குறித்து இவ்வாறு குறைகள் கூறப்பட்டபோதிலும், தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகப் பல ஆண்டுகளாக அவர்கள் சொல்லிவரும் விதண்டாவாதத்தையே மீண்டும் மீண்டும் சொல்லித் தப்பிக்கின்றனர். அவர்கள் எல்லா வகையான வளர்ச்சி நடவடிக்கைகள் குறித்தும் கிராம மக்களை அணுகும்போது வேளாண்மையை ஒரு கருவியாகப் பயன்படுத்துவதாகக் கூறுகின்றனர். உணவு தானியங்களைப் பொறுத்தவரையில் தன்னிறைவு அடைவதற்கான அளவுக்குமேலாக ஓரளவு முன்னேற்றமடைந்துள்ள இம்மாநிலத்தில் பசுமைப் புரட்சியினை உருவாக்கியவர்கள் தாமே என்று அவர்கள் பெருமை பேசுகின்றனர்.

6.2.3. ஆணைக்குழு தம்முன் கூறப்பட்ட சாட்சியங்களைக் கவனமாக அலசிப் பார்த்த பிறகு, முன்னர் தெரிவித்த கருத்திலே ஓரளவு உண்மை இருப்பதாக ஆணைக்குழு அறிகிறது. வளர்ச்சி வட்டாரத்தில் பல காரியங்களுக்காக நடத்தப்படும் இயக்கங்கள் பொதுவாக வேளாண்மைப் பணிக்குப் பாதகம் ஏற்படும் வகையில் செலவில் நடத்தப்பட்டுள்ளது என்பது முற்றிலும் உண்மையே. வேளாண்மை வளர்ச்சிப்பணி அதிகாரியும் வேளாண்மை ஊர்நல உதவியாளர்களும் கூட பொதுவாக இந்த இயக்கங்களுக்கென்று பணிபுரிய அனுப்பப்பட்டனர். இந்த இயக்கங்கள் நடத்தப்பட எப்போதுமே முன்யோசனைப்படி காலம் வரையறுக்கப்படவில்லை. ஊர்நல உதவியாளர்கள், வளர்ச்சிப்பணி அதிகாரிகள் மீதான இரண்டு வகைக் கட்டுப்பாடு வேளாண்மை நல வளர்ச்சிப் பணியினைச் செவ்விய முறையில் நிறைவேற்ற எப்போதுமே உகந்ததாக இல்லை. பிற நடவடிக்கைகள் அனைத்திற்கும் வேளாண்மையே கருவியாக இருக்கிறது என்ற உண்மையை அவர்கள் வெளிப்படையாக ஏற்றுக் கொண்ட போதிலும், ஊராட்சி ஒன்றியங்கள் அதில் எப்போதும் போதிய நாட்டம் செலுத்துவதில்லை. கிராமம் ஒன்றில் பள்ளிக்கூடம் ஒன்றினைத் தொடங்குவது, சாலை ஒன்றைப் போடுவது, அல்லது மேல்நிலை நீர்த்தொட்டி ஒன்றைக் கட்டுவது போன்ற பணிகள் மக்களின் மனத்தில் ஆழமாகப் பதிந்து அவர்களின் நாட்டத்தை ஈர்க்கின்றன. சாதாரண வேளாண்மை வளர்ச்சிப் - பணிகளின் மூலம் அவர்களை எப்போதும் கவர முடியாது. எந்தப் பணிகளை நிறைவேற்றினால் தாம் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவோம் என்று ஊராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் நன்ருக அறிந்துள்ளனர். எனவே, வேளாண்மை வளர்ச்சிப் பணிகளைவிட அப்பணிகளுக்கு அவர்கள் முதலிடம் அளிக்கின்றனர். இவ்வாருக, ஊராட்சி ஒன்றியங்களில் உற்சாகமின்மை நிலவி வந்துள்ளது. இந்தப் போக்கு தடுக்கப்படவியலாதென்று மெய்ப்பிக்கப்பட்டிருந்தால், வேளாண்மைப் பணிகளை ஊராட்சி ஒன்றியங்களிடமிருந்து நீக்கிவிடுமாறு பரிவுரை செய்ய ஆணைக்குழு தயங்கியிருக்காது.

6.2.4. எனினும், நிலைமை இன்னும் கட்டுக்குள் இருப்பதாகவும், அத்தகைய கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியமேற்படவில்லை என்றும் ஆணைக்குழு கருதுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள்

விதிக்கிற முன்னுரிமைகளை ஊராட்சி ஒன்றியங்கள் அப்படியே ஏற்றுக் கொள்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மை. தஞ்சாவூர், வட ஆர்க்காடு போன்ற ஒருசில மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வேளாண்மைத் திட்டங்களில் அதிக நாட்டம் கொண்டு, ஊராட்சி ஒன்றியங்களுக்கென்று குறிப்பிட்ட பணிகளையும் இலக்குகளையும் வரையறுத்தனர். அந்த மாவட்டங்கள் அந்த இலக்குகளை எய்துவதற்காகச் செய்த முயற்சிகள் வேளாண்மைத் துறையிடமிருந்து கூட பாராட்டுதலைப் பெறும் வகையில் அமைந்திருந்தன. தஞ்சாவூர் மாவட்டத்தில் செயலில் உள்ள வேளாண்மை வளர்ச்சி முனைப்புத் திட்டத்திற்குப் பொறுப்பு வகிக்கிற தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பல்வேறு வேளாண்மை நடவடிக்கைகளில் மிகுந்த ஆர்வம் காட்டினார். ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுடன் அவர் நேரிடையாகத் தொடர்பு கொண்டதன் மூலம் ஊராட்சி ஒன்றியங்கள் வேளாண்மை வளர்ச்சியில் பாராட்டத்தக்க திறமையோடு செயலாற்ற ஊக்கம் அளித்தார். உள்ளூர் அரசியல் தலைவர்கள் பொது மக்கள் ஆகியோரின் கருத்துக்கள் ஊராட்சி ஒன்றிய நிர்வாக அமைப்பில் நல்ல விளைவுகளை ஏற்படுத்த வகைசெய்யப்பட்டது. சமுதாய வளர்ச்சித் திட்டத்தினை வகுத்தவர்கள் இதைத்தான் எதிர்பார்த்தனர். அவர்கள் நம்பிக்கை வீண்போகவில்லை. தஞ்சாவூர் திட்டத்தின் இந்தச் செய்தி தற்போது பிற மாவட்டங்களுக்கும் பரவத் தொடங்கியிருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தை நிறைவேற்றுவதன் தத்துவம் பெரும்பாலும் பயனுள்ளதாகும் என்பது இதனால் தெரியவருகிறது. எனவே, ஊராட்சி ஒன்றியங்களிடம் மட்டுமே தவறு உள்ளது என்பதில்லை. முன்னுரிமைகள் குறித்து அரசிடமிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக ஊராட்சி ஒன்றியங்களுக்கு வந்துசேரும் தகவல்கள் தெளிவானவையாகவோ அல்லது திட்டவட்டமானவையாகவோ இல்லாமலிருக்கலாம். ஊராட்சி ஒன்றியங்கள் ஒத்துழைப்பு கொடுத்தால், முன்னுரிமைகளைத் தெளிவாக வகுத்துச் செயல்படுத்துவதன் மூலமும், தலைமைச் செயலக மட்டத்திலிருந்து கிராமத்தில் உள்ள ஊர்நல உதவியாளர்வரை வேளாண்மை உணர்வை ஏற்படுத்துவதன் மூலமும் நிலைமையை அரசு சீர்செய்ய முடியும் என ஆணைக்குழு கருதுகிறது.

6.2.5. வேளாண்மை வளர்ச்சி குறித்து அரசுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் இடையே தொடர்பு வாயில்கள் சரிவர இல்லாமையே வேளாண்மை வளர்ச்சியில் ஊராட்சி ஒன்றியங்கள் உரிய நாட்டம் செலுத்தத் தவறியமைக்குப் பெரும்பாலும் காரணம் எனச் சொல்லலாம். வரி வருவாய், பொது நிர்வாகம் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குள்ள பணிக்கு வழிகாட்டி, அதனை மேற்பார்வையிட்டு, மதிப்பீடு செய்யும் பணியை வருவாய்த் துறை வாரியம் செய்கையில், மாவட்ட ஆட்சித் தலைவர்களின் வளர்ச்சிப் பணி குறித்து வழிவகுத்துக் கொடுக்கவோ, வழிகாட்டியாக விளங்கவோ, மேற்பார்வையிடவோ மதிப்பிடவோ தனிப்பட்ட அதிகாரி அல்லது நிறுவனம் எதுவும் இல்லை. வேளாண்மை வளர்ச்சிக்கான முன்னுரிமை உறுதியாக வரையறுக்கப்படாமல் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களின் விருப்பத்துக்கு விடப்பட்டுள்ளது. வேளாண்மை வளர்ச்சி குறித்து தஞ்சாவூர் மாவட்ட

ஆட்சித் தலைவர் விதித்த முன்னுரிமைகளை அந்த மாவட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்கள் எந்த அளவுக்குப் பின்பற்றியுள்ளன என்பதை நினைவுகூரும்போது இக்குறைபாடு எவ்வளவு கடுமையானதென்று புலப்படும்.

6.2.6. பல்வேறு வேளாண்மைப் பருவங்களையும் வேளாண்மை நடவடிக்கைகளையும் தெளிவாகப் புரிந்துகொண்டு நடைமுறையில் நிறைவேற்ற இயலும் முன்னோடித் திட்டங்களை உரிய முறையில் வகுத்தால்தான் வேளாண்மை வளர்ச்சியில் வெற்றிகாணலாம். வேளாண்மை சார்பான துறைகளின் பணிகள் வேளாண்மைப் பணியோடு தொடர்புடைய வரையில் அந்தத் துறைகளின் பணிகள் கூட உரிய காலங்களில் நிறைவேற்றப்படும் விதத்தில் திட்டமிடப்படவேண்டியது அவசியமாகும். இவ்வாறாக, அறுவடைக்குப்பின்னர் உடனடியாக கூட்டுறவுக் கடன் வசூலிப்பு இயக்கம் (தஞ்சாவூர் மாவட்டத்தில் நடத்தப்பட்டதுபோல) நடத்தப்பட்டால், கொள்முதலுக்காக அதிகமான நெல் கிடைப்பதற்கு உதவியாயிருக்கும். அத்தகைய திட்டங்களை வகுக்கும்போது, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழிகாட்டியாக விளங்கி உதவி செய்வதற்காக நிறுவனம் ஒன்று இருந்தால் அது அவர்களுக்குப் பேருதவியாக இருக்கும். மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நேரிட அனுபவம் அந்த நிறுவனத்துக்குக் கிட்டும். 6.2.13. பாராவிலும், 10,14 பாராவிலும் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளபடி வேளாண்மை உற்பத்தி ஆணையாளர் பதவியை ஏற்படுத்துவதன் மூலம் நிர்வாக அளவில் இத்தேவையை நிறைவு செய்யலாம் என ஆணைக்குழு நம்புகிறது.

6.2.7. நிர்வாகத்தில் வலுவான வேளாண்மை உணர்வை வளர்க்கும் பாதையில் முதல்படி, வேளாண்மைப் பணி தொடர்பான சாதனையின் தரம் எதுவாயிருக்க வேண்டுமென விதிக்க வேண்டும். இது எல்லா நிலைகளிலும் தகுதியை மதிப்பிடுவதற்கு முக்கியமான பகுதியாக அமையும். ஆணைக்குழு, பணியாளர் நிர்வாகம் குறித்த தனது அறிக்கையில், குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு முறை நியமிக்கப்படக்கூடிய பணியாளர்களும், நிர்வாக மதிப்பீடுகளும் மேலும் சிறந்த அறிவியல் அடிப்படையில் மீண்டும் கொண்டுவரப்படவேண்டும் என்று பரிவுரை செய்யக் கருதியுள்ளது. ஊர்நல உதவியாளரின் பணி, ஊராட்சி ஒன்றிய ஆணையாளராலும், வேளாண்மை வளர்ச்சிப் பணி அதிகாரியாலும் மதிப்பிடப்படவேண்டும். வேளாண்மை தொடர்பான பொருள்களில் ஊர்நல உதவியாளரின் ஆர்வம் குறித்தும், தகுதி குறித்தும் பின்னவர் அறிக்கை ஒன்றைக் கொடுக்க வேண்டும். ஊர்நல உதவியாளர்கள் பணியின் பிற கூறுகள் குறித்து ஊராட்சி ஒன்றிய ஆணையாளரின் அறிக்கையுடன் அது சேர்க்கப்படவேண்டும். அதேபோல, வேளாண்மை வளர்ச்சிப் பணி அதிகாரியின் பணி, தொழில் நுட்பத்தகுதி, களப்பணி, அனுபவம் ஆகியவற்றின் நோக்கில் மாவட்ட வேளாண்மை அதிகாரியாலும், நிர்வாக நோக்கில் ஊராட்சி ஒன்றிய ஆணையாளராலும் மதிப்பிடப்படவேண்டும். ஊராட்சி ஒன்றிய ஆணையாளரின் பணி

நிர்வாக நோக்கில் வருவாய்க்கோட்ட அதிகாரியாலும், வேளாண்மை நடவடிக்கையில் காட்டப்படும் ஊக்கம், பற்று ஆகிய நிலையில் மாவட்ட வேளாண்மை அதிகாரியாலும் மதிப்பிடப்படவேண்டும். அதேபோல், வருவாய்க் கோட்ட அதிகாரியின் பணி, வேளாண்மைப் பணியில் அவர் காட்டும் ஆர்வத்தின் அடிப்படையில் வேளாண்மைத் துணை இயக்குநரால் மதிப்பிடப்பட வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவரது பணியை குறிப்பாக வேளாண்மைத் துறையில் அவர் ஆற்றிய பணி குறித்து மாநில உணவு உற்பத்தி ஆணையாளர் (இவரை ஊராட்சி வளர்ச்சி ஆணையாளராக நியமிக்கவும் ஆணைக்குழு பரிவுரை செய்துள்ளது) விரிவாக மதிப்பிட வேண்டும்.

6.2.8. இந்த நேர்வுகள் அனைத்திலும் வேளாண்மைப் பணி தொடர்பான மதிப்பீட்டின் மூலப்பிரதி முறையான மதிப்பீட்டுத் தாள்களுடன் அனுப்பிவைக்கப்படவேண்டும். பதவி உயர்வுதேர்வு ஆகியவற்றிற்கு வேளாண்மைப்பணி குறித்த மதிப்பீடே முக்கியமாகக் கருத்தில் கொள்ளப்படும் என்பது தெளிவாகக் குறிப்பிடப்படவேண்டும். நிர்வாக அதிகாரிகள் அனைவருக்கும் இத்தகையதொரு நடவடிக்கை இயல்பாகவே வேளாண்மைப் பணியில் ஆர்வம் ஏற்படுத்தும் என்று ஆணைக்குழு கருதுகிறது.

6.2.9. ஊர்நல உதவியாளர்கள், கிராம அளவில் பொருத்தமான வேளாண்மை வளர்ச்சிப் பணியாளர்களாகப் பணியாற்றுவதற்கு அவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி போதுமான தகுதியளிக்கிறதென்று வேளாண்மைத் துறையைச் சேர்ந்த பெரும்பாலான அதிகாரிகள் ஒப்புக்கொள்கின்றனர். வேளாண்மைப் பணியில் தகுந்த நினைவுகூர் பயிற்சி வகுப்புகளை நடத்துதல், விருப்பார்வமுள்ள ஊர்நல உதவியாளர்களை வேளாண்மைத் துறையில் சிறப்புப் பட்டயப்படிப்பு படிப்பதற்குத் தெரிந்தெடுத்தல் ஆகியவற்றின் மூலம் வேளாண்மைத் தொழிலில் ஏற்பட்டுள்ள நவீன முன்னேற்றங்களை அறிந்து அதற்கேற்ப ஊர்நல உதவியாளர்கள் பணியாற்ற இயலும்.

6.2.10. ஊர்நல உதவியாளர்கள், தற்போது கல்வி வளர்ச்சிப் பணி அதிகாரியாக அல்லது ஊராட்சி வளர்ச்சிப் பணி அதிகாரியாக அல்லது மேலாளராக பதவி உயர்வு பெறுவோம் என்று நம்பலாம். இந்த வகையான பதவி உயர்வு வாய்ப்புகள், வேளாண்மை வளர்ச்சியில் தனிப்பட்டதொரு பணிக்கு ஊக்கமளிப்பதை நோக்கமாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டவையல்ல என்பது வெளிப்படை. ஊர்நல உதவியாளர்களை, வேளாண்மை வளர்ச்சிப் பணி அதிகாரியாகப் பதவி உயர்வு பெறுவதற்குத் தகுதியுடையவர்களாகச் செய்ய வேண்டுமென்று ஆணைக்குழு பரிவுரை செய்கிறது. இரண்டு ஆண்டுப் பயிற்சியும் பல ஆண்டு நேரிடப் பணியும் இவர்களை, வேளாண்மை வள்ர்ச்சிப் பணி அதிகாரியின் இயல்பான கடமைகளை ஆற்றுவதற்குப் போதுமான தகுதி பெற்றவர்களாகச் செய்யும். ஆணைக்குழு வேளாண்மைத்துறை இயக்குநரைக் கலந்தாலோசித்தது. வேளாண்மை வளர்ச்சி அதிகாரிகளின் அறிக்கைகளையொட்டி ஊர்நல உதவியாளர்களின் வேளாண்மை நடவடிக்கை, விருப்ப ஆர்வம் ஆகியவற்றின் அடிப்படையில் கவனமாகத் தெரிந்

தெடுக்கப்பட்ட அந்த ஊர்நல உதவியாளர்களுக்கு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் அவர்கள் முன்னேற்றமடைந்துள்ள தொழில் நுட்ப முறையைத் தெரிந்துகொள்ளும் வகையில் 2 ஆண்டுப் பயிற்சி அளிக்கப் படலாமெனவும், அப்பயிற்சியில் தேர்ச்சியடைவதற்குட்பட்டு, அவர்களை வேளாண்மை வளர்ச்சிப் பணி அதிகாரிகளாகப் பதவி உயர்த்தலாமென வும், அவர்கள் வேளாண்மைப் பட்டதாரிகளுக்கு நிகராக கருதப்படலா மெனவும் வேளாண்மைத்துறை இயக்குநர் கருதுகிறார். துறையிலுள்ள வேளாண்மைத் துணை அதிகாரிகளது பதவிகளின் எண்ணிக்கையைக் கருதிப்பார்க்கும்போது அத்தகைய பதவி உயர்வுகளுக்காக வேளாண்மை வளர்ச்சி அதிகாரிகள் பதவிகளில் சுமார் 200 பதவிகளை ஒதுக்குவது கடினமாக இராது என்று இயக்குநர் கருதுகிறார். அத்தகைய ஒரு ஏற் பாடானது கடும் உழைப்பும், ஆர்வமும் மிகுந்த ஊர்நல உதவியாளர் களின் முன்னேற்றத்திற்குப் புதிய வழி வகுக்கும். மேற்சொன்ன நட வடிக்கை ஊர்நல உதவியாளர்கள் வேளாண்மைப் பணியைத் திறம்படச் செய்வதற்கு மிகுந்த ஆர்வத்தைக் கொடுக்குமாதலால், அதனைப் பின் பற்றுமாறு ஆணைக்குழு பரிவுரை செய்கிறது. பெருமளவு ஊர்நல உதவியாளர்கள் இரண்டு ஆண்டுப் பயிற்சியைத் தவிர வேளாண்மை யில் ஓராண்டுகால சிறப்புப்பட்டயப் படிப்பு படித்திருப்பதால் அவர்கள் பல்கலைக் கழகப் பட்டதாரிகளுக்கு நிகரான தரம் கொடுக்கப்படாவிடினும், நேரிட பணியாளர்களிலிருந்து பதவி உயர்வு பெற்ற வேளாண்மை வளர்ச்சி அதிகாரிகளுக்கு நிகரான வேளாண்மை வளர்ச்சிப்பணி அதிகாரி களாக, மேலும் நிறுவனப் பயிற்சி எதுவும் இன்றியே பதவி உயர்வு பெறத் தகுதி உடையவர்களாக இருக்கலாம். இரண்டு ஆண்டு முறை யான பயிற்சியும், வேளாண்மைத்துறையில் ஓராண்டு பட்டயப்படிப்பும் பெற்றுள்ள ஊர்நல உதவியாளர்கள் பி.எஸ்.சி. (வேளாண்மை) பட்டம் பெற்றவருக்குச் சமமான அறிவைப் பெறுவதற்குப் பல்கலைக் கழகத்தின் இரண்டு ஆண்டுப் பாடமுறையைப் பயில வேண்டிய அவசியமில்லை. இதற்கு ஓராண்டுக்கால பல்கலைக் கழகப் பாடமுறையே போதுமானதாக இருக்கும் இம்மாதிரியான நடவடிக்கைகளும் பின்பற்றப்படலாமென்று ஆணைக்குழு பரிவுரை செய்கிறது.

6.2.11. ஊர்வளர்ச்சி—உள்ளாட்சித்துறையின் 3-8-1971 ஆம் நாளிட்ட 1805 ஆம் எண் அரசாணை திறம்படச் செயற்படுத்தப்பட வேண்டும்; வேளாண்மை ஊர்நலப் பணியாளர்கள் வேளாண்மை வளர்ச்சி அதிகாரி யின் முழுப் பொறுப்பின் கீழ் கொண்டுவரப் படவேண்டும் என்று வேளாண்மைத் துறை இயக்குநர் தெரிவித்தார். எனினும், ஆணைக்குழு இந்த முறையிலான கருத்தை ஏற்றுக்கொள்ள இயலவில்லை. இதற்கு மாறாக, அந்த அரசாணையில் குறிப்பிட்டபடி ஊர்நல உதவியாளர்களை உற்பத்திப் பணியை மேற்கொண்டுள்ள ஊர்நல உதவியாளர்கள் பொதுப் பணியை மேற்கொண்டுள்ள ஊர்நல உதவியாளர்கள் என்று அவர்கள் புரியும் பணியின் தன்மையையொட்டிப் பிரிப்பது கைவிடப்படலாமென் றும் இதனால் அனுகூலமே ஏற்படும் என்றும் ஆணைக்குழு பரிவுரை செய் கிறது உண்மையில் இந்த அரசாணை பெரும்பாலான ஊராட்சி ஒன்றி யங்களில் செயற்படுத்தப்படவில்லை என்றும், அவ்வாறு செயற்படுத்தப் பட்ட ஊராட்சி ஒன்றியங்களிலும் கூட சிறப்பு இயக்கங்களுக்கு ஊர்நல உதவியாளர்களைப் பயன்படுத்திக்கொள்ளும் பழைய நடைமுறையே

தொடர்ந்து பின்பற்றப்படுகிறது என்றும் ஆணைக்குழுவிற்குத் தெரிய வந்துள்ளது. இத்தகைய செயலானது ஒவ்வொரு ஊர்நல உதவியாளரின் பொறுப்பையும் அதிகப் படுத்துவதில்தான் முடிந்துள்ளது. ஒரே பகுதியில் ஊர்நல உதவியாளர்கள் இருவர் பணியாற்றுவது கிராம மக்களுக்கு அடிக்கடி குழப்பத்தை ஏற்படுத்தியது. உற்பத்தி ஊர்நல உதவியாளர்கள் உற்பத்தி தொடர்பானவை குறித்து தனது பொறுப்பிலுள்ள கிராம மக்களுக்குச் சேவை புரிய இயலாதிருக்கிறோமே என்று குறைபட்டுக் கொள்கிறார்கள். பொது ஊர்நல உதவியாளர்கள் வேளாண்மை வளர்சிப் பணியை மேற்கொள்ளாததால், உழவர்களை அணுகுவதற்கு வாய்ப்பு குறைந்துள்ளது; எனவே, ஊர்நல உதவியாளர்கள் அனைவரும் பல நோக்கப்பணியாளர்களாக இருக்க வேண்டுமென்று ஆணைக்குழு கருதுகிறது. அப்போது அவர்கள் சமுதாய வாழ்க்கையின் இன்றியமையாத கூறுகளடங்கிய ஒருங்கிணைந்த பணிகளை கிராம மக்களுக்கு ஆற்ற இயலும்; அதே நேரத்தில், வேளாண்மைப் பணிக்கு அவர்கள் முதலிடம் கொடுக்கவேண்டும்.

6.2.12. கிராம மக்களிடையே சிறப்பு இயக்கங்களை நடத்துவதில் வியத்தகு திறனை ஊராட்சி ஒன்றியங்கள் உருவாக்கியுள்ளன. எனினும் செய்யவேண்டிய இந்த சிறப்புத்திறனை உதறித் தள்ளுவது முடியாது. மேம்பாடெல்லாம் இந்தச் இயக்கத்தை நடத்தவேண்டிய ஏற்ற காலத்தை நிர்ணயிப்பதேயாகும். ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்த இயக்கங்களை நடத்துவதற்கான காலத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் வேளாண்மைத் துறைத் துணை இயக்குநரையும் மாவட்ட வேளாண்மை அதிகாரிகளையும் கலந்தாலோசித்து நிர்ணயிக்கவேண்டும். என்று ஆணைக்குழு பரிவுரை செய்கிறது. அப்போதுதான், இந்த இயக்கங்களை நடத்துவதற்கு வேளாண்மை நடவடிக்கையுள்ள முனைப்பான காலத்தைத் தவிர்க்க முடியும். மாநில அளவில் ஊராட்சி ஒன்றியங்களை ஒரு இயக்கத்தில் சம்மந்தப்படுத்துவது குறித்த முடிவு எதுவும் வேளாண்மை உற்பத்தி ஊராட்சி வளர்ச்சி ஆணையாளரைக் கலந்தாலோசிக்காமல் எடுக்கப்படக் கூடாது. நன்கு திட்டமிட்ட இயக்கம் என்பதையும் வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கான திறமை ஊராட்சி ஒன்றியங்களிடம் ஐயத்திற்கிடமின்றி உள்ளதால், குடும்ப நலத் திட்டத்துறையில் மேற்கொள்வதைப் போன்று வேளாண்மைத்துறையும் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக பொதுமக்களைப் பெரிதும் கவரக்கூடிய ஒருசில வேளாண்மை இயக்கங்களுக்கு ஏற்பாடு செய்வது நன்மை பயக்கும்.

6.2.13. 10·14 பாராவில், ஊராட்சி வளர்ச்சித் துறைத் தலைவரது பதவியை வருவாய்த்துறை வாரியத்தைச் சேர்ந்த உறுப்பினர் தரமுள்ள அதிகாரி ஒருவர் வகிக்கவேண்டுமென்று ஆணைக்குழு பரிவுரை செய்துள்ளது. அப்போதுதான், அவர் தனது உயரிய கட்டுப்பாட்டில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஊராட்சி வளர்ச்சிப் பணி தொடர்பான பணியைச் சிறப்பாக ஆற்றுமாறு ஊக்குவிக்க இயலும். இதே அதிகாரி வேளாண்மை உற்பத்தித்துறை, ஊராட்சி வளர்ச்சித்துறை ஆகியவற்றின் பொறுப்பை ஏற்றுக்கொண்டு தம் அலுவலால் அரசுச் செயலாளராகவும் இருப்பாராயின் அவர் ஊராட்சி வளர்ச்சித்துறை வேளாண்மை உற்பத்திப் பாங்கில்

செயல்பட முடியும்; வேளாண்மைத் துறையும் ஊராட்சி வளர்ச்சித் துறையும் ஒருங்கிணைந்து செயல்படுவது இதனால் எளிதாகிவிடும். இதனை மேலும் எளிதாக்கும் பொருட்டு, அமைச்சரவையின் முதுநிலை உறுப்பினர் ஒருவர், கூடிய வரையில் வேளாண்மைத் துறைக்கும், உள்ளாட்சிக்கும் ஒருங்கே பொறுப்பு வகிக்கலாமென்று ஆணைக்குழு பரிவுரை செய்கிறது.

6.2.14. மாவட்ட வேளாண்மை அதிகாரி, ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வேளாண்மை நல வளர்ச்சிப் பணியை ஒவ்வொரு திங்களும் ஆய்வு செய்ய வேண்டுமென்று ஆணைக்குழு பரிவுரை செய்கிறது. மாவட்ட வேளாண்மை அதிகாரி ஆய்வு செய்யும்போது வேளாண்மை நல வளர்ச்சிப் பணி அதிகாரியும், ஊராட்சி ஒன்றிய ஆணையாளரும் வந்திருக்கவேண்டும். மாவட்ட வேளாண்மை அதிகாரியின் ஆய்வுரை குறித்து, மாவட்ட ஆட்சித் தலைவர் வேளாண்மைக் துறைத் துணை இயக்குநருடன் கலந்தாலோசித்து கருத்து தெரிவித்து, அதனை ஊராட்சி வளர்ச்சித் துறைத் தலைவருக்கும், வேளாண்மைத் துறை இயக்குநருக்கும் அனுப்பவேண்டும்.

6.2.15. வேளாண்மை நல வளர்ச்சிப் பணியின் வெற்றியானது, பணியாளர் உழவருடன் நல்லுறவு ஏற்படுத்திக்கொள்வதிலும், அவரது பண்ணை வீட்டில் நம்பிக்கையுடன் வரவேற்கத்தக்க வருகையாளராக நட்புறவை ஏற்படுத்திக்கொள்வதிலும் அவருக்குள்ள திறமையை முழுவதும் பொறுத்துள்ளது. இந்தப் பணியில் ஊராட்சி ஒன்றியங்கள் சிறப்புற்று விளங்குகின்றன. ஊர் நல உதவியாளர்கள் கிராமத்திலுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று தொடர்பு வைத்துக்கொள்கின்றனர். சிறந்த பயிற்சி பெற்ற தொழில் நுட்ப வல்லுநர், கிராம மக்கள் புரிந்து கொள்ளும் மொழியில் தமது கருத்துக்களை எடுத்துரைக்க முடியாமற் போனால், வளர்ச்சிப் பணியில் அவர் வெற்றி பெறுமல் தவற நேரிடலாம். எனவே, ஊராட்சி வளர்ச்சித் துறையிலுள்ள வளர்ச்சிப் பணியாளர்கள் நன்கு பயிற்சி பெற்றவர்களாகவும், கிராம மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளவர்களாகவும் இருப்பதால், அவர்களது பணியை வேளாண்மைத் துறை புறக்கணிப்பதற்கில்லை ; மாருக, இந்த அமைப்பின் ஆற்றல் முழுவதையும் அது பயன்படுத்திக்கொள்ள வேண்டும. மேற்கூறிய பரிவுரைகள் இதற்கு உதவியாயிருக்குமென்று ஆணைக்குழு கருதுகிறது.

(ஆ) கால்நடை வளர்ப்பு.

6.3.1. கால்நடை வளர்ப்புத் துறை 1—1—70-ல் சீரமைக்கப்படும் வரை, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் கால்நடை உதவியாளர் (தரம் I) தரத்தில் கால்நடை பராமரிப்பு நல வளர்ச்சி அதிகாரி ஒருவர் இருந்தார். இவர், கால்நடை பராமரிப்பு–நல வளர்ச்சிப் பணியைக் கவனித்து வந்தார். கால்நடை மருந்தகமோ, துணை நிலையங்களோ ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டின்கீழ் இல்லை. கால்நடை வளர்ப்புத் துறை சீரமைக்கப்பட்ட பின்னர், மாநிலத்திலுள்ள 1918 கால்நடை பராமரிப்புத் துணை நிலையங்கள் அனைத்தும் ஊராட்சி ஒன்றியங்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டிலும், கால்நடை வளர்ப்புத் துறையின் தொழில்

நுட்பக் கட்டுப்பாட்டின்கீழும் கொண்டுவரப்பட்டுள்ளன. கால்நடை எண்ணிக்கை, தொடர்புள்ள மற்றவை ஆகியவற்றையொட்டி 6 முதல் 10 கிராமங்களுக்கு ஒரு துணை நிலையம் அமைக்கப்படுகிறது. இந்தத் துணை நிலையம் ஒவ்வொன்றும் கால்நடை உதவியாளர் தரத்திலுள்ள கால்நடை பராமரிப்பு—நல வளர்ச்சிப் பணி அதிகாரியின் தலைமையில் செயல்படுகிறது. இவ்வாறாக பெரும்பாலான ஊராட்சி ஒன்றியங்களில், அவற்றிலுள்ள துணை நிலையங்களின் எண்ணிக்கையைப் பொறுத்து தற்போது 5 முதல் 9 வளர்ச்சிப் பணி அதிகாரிகள் உள்ளனர்.

6·3·2. துணை நிலையங்களின் பணிகளான கால்நடைச் செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்தல், நோயுற்ற—காயமடைந்த கால்நடைகளுக்கு முதலுதவி அளித்தல், தடுப்பு—வளர்ச்சிப் பணி ஆகியவற்றை கால்நடை வளர்ச்சிப் பணி உதவி மருத்துவர் மேற்பார்வையிடுகிறார். இவர், கால்நடை மருந்தகத்திலுள்ள முறையான கால்நடை உதவி மருத்துவருடன் இருப்பார். கால்நடை வளர்ச்சிப் பணி உதவி மருத்துவரும், முறையான கால்நடை உதவி மருத்துவர்களும் கால்நடை வளர்ப்புத் துறையின் முழு கட்டுப்பாட்டில் பணிபுரிகின்றனர். அவர்கள்மீது ஊராட்சி ஒன்றியத்துக்குக் கட்டுப்பாட்டு அதிகாரம் எதுவும் இல்லை. கால்நடை மருந்தகங்கள் இரண்டு உள்ள 90 ஊராட்சி ஒன்றியங்களில் சிறிது வேறுபாடு காணப்படுகிறது. அத்தகைய வளர்ச்சி வட்டாரங்களில் கால்நடை வளர்ச்சிப் பணி உதவி மருத்துவர்கள் பதவிகள் எதுவும் இல்லை. இரண்டு மருந்தகங்களுக்குப் பொறுப்பு வகிக்கும் முறையான கால்நடை உதவி மருத்துவர்கள் அப்பகுதியை இரண்டு மருந்தகங்களுக்குமாகப் பிரித்து, பிற்பகல் வேளையில் வளர்ச்சிப் பணியைக் கவனிக்கின்றனர்.

6.3.3. ஊர்வளர்ச்சி—உள்ளாட்சித் துறை கால்நடை வளர்ப்புத் திட்டங்களுக்காக செலவிட்டுவரும் தொகை ஊராட்சி ஒன்றியம் ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6,200 என்று கணக்கிடப்படுகிறது. இத்தொகையில் ரூ. 3,000 மாநில அளவில் கிராம வளர்ச்சித் துறை இயக்குநரால் ஒருங்கு தொகுக்கப்பட்டு கால்நடை மருந்தகங்கள் கட்டுவதற்காக சில ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்படுகிறது. மாவட்ட அளவில் ரூ. 1,000 ஆட்சித் தலைவரால் ஒருங்கு தொகுக்கப்படுகிறது. கால்நடை உதவி மருத்துவர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுவதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்கு அத்தொகை ஒதுக்கப்படுகிறது; ஆனால், மருத்துவரோ மருந்தகமோ ஊராட்சி ஒன்றியக் கட்டுப்பாட்டின்கீழ் இல்லை. ரூ. 2,200-ஐ மட்டுமே கோழி வளர்ப்பு, பன்றி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, கால்நடைத் தீவன மேம்பாடு போன்ற திட்டங்களுக்காக ஊராட்சி ஒன்றியங்கள் செலவிடுகின்றன.

6.3.4. தற்போதைய ஏற்பாடு ஊராட்சி ஒன்றியங்களுக்கோ கால்நடை வளர்ப்புத் துறைக்கோ மனநிறைவளிப்பதாய் இல்லை. கால்நடை வளர்ச்சி உதவி மருத்துவர்கள், முறையான கால்நடை உதவி மருத்துவர்கள், கால்நடை மருந்தகம் ஆகியவற்றின்மீது ஊராட்சி ஒன்றியங்கள் முழு நிர்வாகக் கட்டுப்பாட்டைச் செலுத்தவேண்டுமென்றும், அப்போதுதான் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் கால்நடை வளர்ப்புப் பணியை முழுவதும்

ஒன்றியங்கள் கட்டுப்படுத்தலாமெனவும் ஒன்றியங்கள் கருதுகின்றன. துறைத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு கிராம அளவில் பணியாளர்கள் வேறு எவரும் துறையில் இல்லாததால், துணை நிலையங்கள் அனைத்தும் ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கவேண்டியது அவசிய மல்ல என்று கால்நடை வளர்ப்புத் துறை அதிகாரிகள் கருதுகின்றனர். கால்நடை வளர்ச்சிப் பணி உதவி மருத்துவர்கள் கால்நடை பராமரிப்பு வளர்ச்சிப் பணி அதிகாரிகளது சிறந்த பணியைப் பெற முடிவதில்லை என்று அவர்கள் கருதுகின்றனர் ; ஏனெனில், அவர்கள் இரட்டைக் கட்டுப்பாட்டின்கீழ் தப்பித்துக்கொள்கின்றனர். துணை நிலையங்களும், அந்த நிலையப் பணியாளர்களும் கால்நடை வளர்ப்புத் துறையின் கட்டுப் பாட்டின்கீழ் மாற்றப்பட வேண்டுமென்று அவர்கள் விரும்புகின்றனர்.

6.3.5. ஆணைக்குழு இது குறித்து கவனமாக ஆய்வு செய்து, ஊராட்சி ஒன்றியங்கள் 1—1—70 க்கு முன்னர் இருந்த நிலைமைக்கு மீண்டும் கொண்டுவரப்பட வேண்டுமென்ற முடிவுக்கு வந்துள்ளது. ஒன்றியங்கள் கால்நடைப் பராமரிப்பு வளர்ச்சி அதிகாரி ஒருவரை மட்டும் தங்களது கட்டுப்பாட்டின்கீழ் வைத்துக்கொண்டு, துணை நிலையங்கள் அனைத்தையும், பணியாளர்களையும் கால்நடை வளர்ப்புத் துறையிடம் ஒப்படைக்கவேண்டும். இந்த நடவடிக்கை, சிகிச்சை—தடுப்பு—வளர்ச்சித் திட்டங்களைச் செயற் படுத்துவதற்கு களப்பணியாளர்கள்மீது இத்துறை உறுதியான அதிகாரத் தைச் செலுத்த வகைசெய்யும். அதே சமயத்தில், கால்நடைப் பராமரிப்பு—வளர்ச்சிப் பணி அதிகாரியின் மேற்பார்வையில் ஊர்நல உதவியாளர்கள் கால்நடை பராமரிப்பு வளர்ச்சிப் பணிகளை செய்வார்களென எதிர்பார்க்கப் படுவதால், அப்பணிகளில் ஊராட்சி ஒன்றியங்களின் செயல்திறன் குறையாமல் இருக்கும். ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கால்நடை பராமரிப்பு—வளர்ச்சிப் பணி அதிகாரி துறையின் சார்பாக ஒன்றியத்திடம் தொடர்பு கொண்டு, அவற்றிற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியைச் சரியான முறையில் செலவு செய்ய ஒன்றியங்களுக்கு உதவி செய்யலாம்.

6.3.6. கால்நடைப் பராமரிப்பு—வளர்ச்சிப் பணி அதிகாரியின் உதவி யுடன், சிறப்பாக முட்டைகள், கோழிக் குஞ்சுகள், பால், பன்றிகள் ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்குவதை ஊக்கப்படுத்துவதற்கென, மாநகரங்களுக்கு அண்மையிலுள்ள நகர்ப்புற வட்டாரங்களுக்கு அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யலாமென்று ஆணைக்குழு பரிவுரை செய்கிறது.

(இ) கல்வி.

6.4.1. மாநிலத்தில் நகராட்சிகள் அல்லாத பகுதியில் தனியார் நடத்தும் பள்ளிகளுக்கு உதவி மானியம் அளித்தல், பள்ளிகளில் நண்பகல் உணவு அளிக்கும் திட்டங்களை நிர்வகித்தல் ஆகியவை உட்பட தொடக்கக் கல்விக்கான பொறுப்பு 1958 ஆம் ஆண்டிலிருந்து ஊராட்சி ஒன்றியங்களிடம் சட்டப்படி ஒப்படைக்கப்பட்டுள்ளது. மக்கள் தொகைப் பெருக்க வீதம், இம்மாநிலத்திலுள்ள சிறுவர் அனைவருக்கும் இலவச மாகத் தொடக்கக் கல்வி அளிக்கும் கொள்கை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு பார்க்கையில், இது மிகப் பெரியதொரு பொறுப்பாகும்.

இப்பொறுப்பின் அளவை, கீழ்க்காணும் அளவுகளைக்கொண்டு ஓரளவு மதிப்பிட இயலும் :—

இனங்கள்	அளவின் அலகு.	1967	1968	1969	1970	1971	1972
ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளின் எண்ணிக்கை :							
தொடக்கப் பள்ளி	எண்ணிக்கை.	18,185	18,220	18,078	18,531	18,687	18,972
உயர் தொடக்கப் பள்ளிகள்.	,,	3,275	3,252	3,326	3,205	3,188	3,170
மானியம் பெறும் தொடக்கப்பள்ளிகள்	,,	4,760	4,756	4,667	4,541	4,435	4,358
மானியம் பெறும் உயர் தொடக்கப்பள்ளிகள்	,,	1,491	1,443	1,473	1,467	1,456	1,444
ஆசிரியர்களின் எண்ணிக்கை :							
ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள்.	,,	78,400	79,800	80,100	82,700	86.600	89,200
மானியம் பெறும் பள்ளிகள்	,,	35,000	35,200	35,500	35,900	36,400	36,100
மாணவர்களின் எண்ணிக்கை :							
ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள்	(லட்சத்தில்)	26·1	27·6	27·9	29·6	31·0	31·0
மானியம் பெறும் பள்ளிகள்	,,	11·3	11·7	11·9	11·9	12·0	12·0

6.4.2. 1967-ஆம் ஆண்டில் 27,711 பள்ளிகள் இருந்தன. இவற்றில் 1,13,400 ஆசிரியர்கள் பணிபுரிந்தனர். 37·4 லட்சம் மாணவர்கள் பயின்றனர். ஆனால், 1972 ஆம் ஆண்டில் 27,944 பள்ளிகள் இருந்தன. இவற்றில், 1,25,300 ஆசிரியர்கள் பணிபுரிந்தார்கள். 43·00 லட்சம் மாணவர்கள் பயின்றார்கள். இதிலிருந்து, பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை 0·8 சதவீதம் அதிகமாகி உள்ளது என்பதும், இப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 10·5 சதவீதம் உயர்ந்துள்ளது என்பதும், இவற்றில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 15·0 சதவீதம் உயர்ந்துள்ளது என்பதும் தெரியவருகிறது. ஆசிரியர்—மாணவர் விகிதாசாரம் பெருகியிருக்கையில், பள்ளிகளின் எண்ணிக்கை ஓரளவே அதிகரித்துள்ளது. இதற்குக் காரணம், நிதி நெருக்கடியேயாகும்.

6.4.3. தொடக்கக் கல்வி குறித்த செலவு பெருகி இருப்பது கீழ்க் கண்டவற்றிலிருந்து தெரியவருகிறது :—

ஆண்டு.		தொகை. (ரூபாய் கோடியில்.)
1967—68	..	19.78
1968—69	..	22·74
1969—70	..	25·20
1970—71	..	27·58
1971—72	..	33·05
1972—73	..	36·30
1973—74	..	36·61

மாணவர்களின் எண்ணிக்கை 15 சதவீதம் மட்டுமே உயர்ந்திருந்த போதிலும், ஆசிரியர்—மாணவர் விகிதாசாரம் பெருகியிருந்த போதிலும் செலவானது, 7 ஆண்டுகளில், ஏறத்தாழ இரு மடங்காகியுள்ளது. இதற்குக் காரணம், ஆசிரியர்களின் சம்பளம் பெருமளவிற்கு உயர்ந்ததேயாகும் என்பது வெளிப்படை.

6.4.4. தொடக்கக்கல்வி குறித்து ஊராட்சி ஒன்றியங்களின் செலவு குறைவாகவே உள்ளது. 1973-74-ஆம் ஆண்டுக்கான வரவு—செலவுத் திட்டத்தில் ஒதுக்கியுள்ள ரூ. 36·61 கோடியில், ரூ. 34·22 கோடி, சம்பளம், சில்லறைச் செலவுகள், புத்தகங்கள் முதலிய சாதாரணச் செலவுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியங்கள், மொத்தச் செலவில் 10 சதவீதத்திற்கும் குறைவாக ஏற்றுக்கொள்கின்றன. கீழ்க் கண்டவற்றிலிருந்து இது தெரியவருகிறது :

(ரூபாய் லட்சத்தில்.)

கல்வி குறித்த செலவு (சாதாரணமானது) :	3,421·57
அரசு மானியங்கள் :	
(அ) மக்கள் தொகை அடிப்படையில்	1,881·98
(இ) சிறப்பு வாய்ப்பாட்டின் அடிப்படையில்	1,225·68
பெரு மொத்தம்	3,107·66
ஊராட்சி ஒன்றியங்கள் ஏற்கவேண்டிய எஞ்சிய தொகை	313·91
இது, (அ) உள்ளூர் செஸ் தொகையிலிருந்தும் (4/9 பாகம்)	123·30
(இ) ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து பங்குத் தொகை மூலமும்	190·61

ஈடு செய்யப்படுகிறது.

உள்ளூர் செஸ்ஸையும் அரசு அளிக்கும் ஒருவகை மறைமுக மானியமாக நாம் கருதுவோமாயின், ஊராட்சி ஒன்றியங்கள், தங்களது நிதியிலிருந்து, மிகப் பெரியதோர் நிறுவனத்தின் செலவுத் தொகையில் சுமார் 5 சதவீதத்தைச் செலுத்திவிட்டு அந்த அமைப்பு முழுவதின்மீதும் கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளன என்று சொல்லலாம்.

6.4.5. ஆகவே, தொடக்கக் கல்வியை ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைப்பதானது, நிதி ஆதாயம் பெறும் அடிப்படையில்தான் என்று கொள்ள இயலாது. நிதி ஆதாயம் பெறுவதுதான் முக்கியமானதாக இருந்தால், இப்பணியை ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைப்பதற்கு நியாயம் எதும் இராது. அதிகப்படியான 5 சதவீதச் செலவைச் செய்து அரசே இத்திட்டத்தை நேரடியாக நிர்வகிக்கலாம்.

6.4.6. இம்மாநிலத்திலுள்ள எல்லா இடங்களையும் உள்ளடக்கும் இது போன்ற பெரியதொரு திட்டம், அக்கறையுள்ள பெற்றோர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட அவர்களது பிரதிநிதிகள் ஆகியோர் தீவிரமாகவும், உற்சாகத்துடனும் பங்கு பெறவில்லையாயின், இத்திட்டமானது திறம்பட நிர்வகிக்கப்படவும், மேற்பார்வையிடவும் இயலாது. எனவேதான், தொடக்கக் கல்விப் பணி ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாணவர்களைச் சேர்ப்பதிலும், மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் வருகைக்கு உறுதி செய்வதிலும், "பள்ளியிலிருந்து நின்று விடுபவர்களை"த் தடுத்தலிலும், உள்ளூர்ச் சிறு தேவைகளைக் கருத்தில் கொள்வதிலும், அவை குறித்து விரைவாக நடவடிக்கை எடுப்பதிலும், சமுதாயப் பள்ளிகளைக் கட்டுவதற்காக நன்கொடைகளைத் திரட்டுவதிலும், பள்ளி

உணவுத் திட்டங்களை நிர்வகிப்பதிலும், ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த உள்ளூர்த் தலைவர்களின் பணி மிகவும் பயன் தரத்தக்கதாயிருக்கக்கூடும். இவ்வாறாக, ஊராட்சி ஒன்றியங்கள், முற்றிலும் பொருத்தமான முறையில், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளின் நிர்வாகியாகப் பணிபுரிய நியமிக்கப்பட்டுள்ளன. கல்வித் துறை, இப்பள்ளிகளை, தொழில்நுட்ப—கல்வித்தரக் கண்ணோட்டத்தோடு மேற்பார்வையிடுகிறது. இருப்பினும், நடைமுறையில், ஒருசில ஊராட்சி ஒன்றியங்களே இந்தக் குறிக்கோளை எய்தியுள்ளன. பள்ளிகளை முறையாக நடத்துவதற்கான அவற்றின் பங்கு மிகவும் குறைவாக இருந்துவந்துள்ளதுடன், ஆசிரியர்களுக்குத் தொல்லைகொடுக்கும் நேர்வுகள் தெரிய வருகின்றன. வேறு இடங்களுக்கு மாற்றுதலை ஓர் அச்சுறுத்தும் கருவியாகப் பயன்படுத்தி, அரசியல் பிரச்சாரத்திற்கும், சொந்தக்காரியங்களைக் கவனிப்பதற்கும் ஆசிரியர்கள் பயன்படுத்தப் டுகின்றனர். பள்ளிகளின் நிர்வாகி என்ற முறையில் ஊராட்சி ஒன்றியங்கள், பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தின் ஆய்வு அலுவலர்கள் சுட்டிக் காட்டும் குறைபாடுகளைக் களைவதில் கவனம் செலுத்துவதேயில்லை.

6.4.7. குறிப்பாக, ஆசிரியர்கள் சம்பந்தமாகப் பணியாளர்கள் நிர்வாகத்தில் குறிப்பிட்ட சில சீர்திருத்தங்கள் தேவைப்படுவதாகத் தெரிகிறது. மகாராஷ்டிராவில் பின்பற்றப்படும் முறையைப் பின்பற்றுவதற்கு ஆணைக்குழு பரிவுரை செய்துள்ளது. அந்த முறையில், தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள், பணியாளர் குறித்த நிர்வாகத்தில் தலையிடுவதில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வளர்ச்சி அலுவலர், மாவட்டக் கல்வி அலுவலர்கள் ஆகியோர் அடங்கிய மாவட்டத் தேர்வுக்குழு ஒன்று விண்ணப்பங்களை ஆய்ந்து, தகுதி ஒதுக்கீடு குறித்த ஏனைய விதிகள் ஆகியவற்றின் அடிப்படையில், தெரிந்தெடுக்கப்பட்டோரின் பட்டியலைத் தொகுக்க வேண்டும். ஊராட்சிகள் சட்டத்தின் 53 (1) (a) பிரிவின்கீழ் அமைக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய நியமனக்குழு, மாவட்டக் குழு கொடுக்கிற பட்டியலிலிருந்து ஆசிரியர்களை நியமிக்கலாம்.

6.4.8. ஆசிரியர்களை ஓரிடத்திலிருந்து வேறோரிடத்திற்கு மாற்றுவது குறித்த கொள்கைகளும் நடைமுறைகளும், கிராம வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 23—9—72—ஆம் நாளிட்ட 2105 ஆம் எண் அரசு ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த அரசு ஆணைக்கிணங்க, ஊராட்சி ஒன்றியத்திற்குள் ஆசிரியர்களை மாற்றுவதற்குப் பொருத்தமான அதிகாரி ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் ஆவார். அவர் சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலரின் இசைவைப் பெற்ற பிறகே அந்த மாற்றத்தைச் செய்யலாம். இந்த இசைவைப் பெறவேண்டிய அவசியத்தால், இடமாற்றம் செய்வதில், வழக்கமாக, கணிசமான அளவுக்குத் தாமதம் ஏற்படுகிறது என்று ஆணைக்குழு முன்னர் சாட்சியம் அளித்த பல சாட்சிகள் கருதினர். மாவட்டக் கல்வி அலுவலரின் இசைவைப் பெறவேண்டும் என்றும், வலியுறுத்தப்படவேண்டிய அவசியமில்லை என்றும், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் பதவி மாற்றங்கள் செய்யலாம் என்றும், அதனால் பாதிக்கப்பட்ட நபர், வருவாய்க் கோட்ட அதிகாரிக்கு மேல் முறையீடு செய்துகொள்ள அனுமதிக்கப்படலாம் என்றும் ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்கள் பலர் விரும்பினர். இருப்பினும், இம்முடிவு

குறித்து, மாவட்டக் கல்வி அலுவலரைத் தொடர்பு கொள்ளச் செய்வது பொருத்தமானது என்று ஆணைக்குழு கருதுகிறது. அதே நேரத்தில், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், ஒழுங்கு நடவடிக்கைகளின் பேரில் பதவி மாற்றல் செய்யவேண்டியபொழுது, இணக்கமாகவும்—விரைவாகவும் அதனைச் செய்வதற்கு அவருக்கு வகை செய்யவேண்டும். எனவே, மாவட்டக் கல்வி அதிகாரி உடனடியாக தமது ஆலோசனையை வழங்க வேண்டும். எந்த ஒரு நேர்விலும் அது குறித்து ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களிடமிருந்து அதற்கான செயற்குறிப்பு வரப்பெற்ற நாளிலிருந்து 15 நாட்களுக்குள் மாவட்டக் கல்வி அதிகாரி தனது ஆலோசனையைத் தெரிவிக்க வேண்டும் என்று வரையறுக்கப்படலாம். வரையறுக்கப்பட்ட நாட்களுக்குள் மாவட்டக் கல்வி அதிகாரியிடமிருந்து பதில் எதும் வரவில்லையெனில், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் தனது முடிவுப்படி செயல்படத் தடையேதுமில்லை.

6.4.9. ஊராட்சி வளர்ச்சித் துறையில் பதவி உயர்வுக்கான வாய்ப்புக் குறைவாகவுள்ளதாலும், கல்வி இயக்குநர் அலுவலகத்தின் ஆலோசனைகளை ஏற்பதற்கு அதிக அளவு ஊக்கமளிக்கும் பொருட்டும், பட்டம் ஒன்றைப் பெற்றுள்ள கல்வி வளர்ச்சிப்பணி அதிகாரிகள் அனைவரையும் பி.டி./பி.எட். பயிற்சிபெற அனுப்பி, கல்வித்துறையில் பள்ளித் துணை ஆய்வாளராகப் பதவி உயர்வு பெறுதற்கு அவர்களுக்கு வாய்ப்பளிக்கப்படலாம் என்றும் ஆணைக்குழு பரிவுரை செய்கிறது. ஊராட்சி நிர்வாக அமைப்பின் பணியாளர்களிடையே பதவித் தேக்க நிலையைக் குறைக்க இது ஓரளவு உதவும்.

(ஈ) குடும்ப நலத் திட்டம்.

6.5.1. மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதென்பது 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் முக்கிய இரு நோக்கங்களுள் ஒன்றாகும். ஆகவே, ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும், குடும்ப நலத் திட்ட இயக்கங்களில் முழு அளவிற்கு ஒத்துழைக்க வேண்டும். குடும்ப நலத் திட்டத்திற்காகச் சிறப்புப் பணியாளர்களை ஊராட்சி ஒன்றியங்கள் பெற்றிராத போதிலும் அதுபோன்ற இயக்கங்களில், ஊராட்சி ஒன்றியங்களின் சாதனை சாலச் சிறந்ததாகவுள்ளது. மருத்துவம், வருவாய்த்துறைப் பணியாளர்கள் மூலம் தற்போது நிரப்பப்படும் வட்டார, மாவட்ட அளவிலான குடும்ப நலத் திட்ட வளர்ச்சிப்பணியாளர் பதவிகளை ஊராட்சி வளர்ச்சித்துறையின் நிர்வாகத்திற்கு மாற்றவேண்டும் என்றும், தகுந்த ஊர்நல உதவியாளர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆகியோரைத் தெரிந்தெடுத்து இந்தப் பதவிகள் நிரப்பப்பட வேண்டும் என்றும் ஆணைக்குழுவிற்கு முறையீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வேண்டுகோளில் பெருமளவு நியாயமிருக்கிறது என்று ஆணைக்குழு கருதுகிறது. ஆண்டு முழுதும் குடும்ப நலத் திட்டப் பணியைப் புரிய மருத்துவத்தில் தகுதிபெற்ற பணியாளர் தேவைப்படுகையில், குடும்ப நலத் திட்ட இயக்கங்களை ஏற்பாடு செய்ய, பொதுமக்களுடன் தொடர்பு கொண்டு விளம்பர நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிறப்புப் பயிற்சி

பெற்ற ஒருவரது பணி தேவைப்படுகிறது. அத்தகைய திறமைசாலிகளை மருத்தவப் பணியாளர்களிலிருந்த தெரிந்தெடுப்பதைவிட, ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களிலிருந்து தெரிந்தெடுப்பது எளிதாகும். எனவே, இப்பதவிகளை ஊராட்சி வளர்ச்சித்துறைக்கு மாற்ற ஆணைக்குழு பரிவுரை செய்கிறது. இதன் மூலம், குடும்ப நலத்திட்ட இயக்கங்களில் மேலும் தங்களது சாதனைகளை மேம்படுத்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு இயலும்.

(உ) மக்கள் நல்வாழ்வு.

6.6.1. மக்கள் நல்வாழ்வு நிர்வாகம் குறித்த தற்போதுள்ள ஏற்பாடுகள் மனநிறைவளிக்கத்தக்கனவாயுள்ளன. இருப்பினும், மருத்துவ நிர்வாகம் குறித்த எங்களது அறிக்கையில், குறிப்பிட்ட ஒரு சில மாற்றங்கள் செய்யக் கருதப்பட்டுள்ளது. இதனால், ஊராட்சி ஒன்றிய அளவில் சில விளைவுகள் ஏற்படலாம். இது குறித்து, மருத்துவ நிர்வாகம் குறித்த எங்களது அறிக்கையில் விரிவாக விளக்கப்படும்.

6.6.2. தற்போது ஊராட்சி ஒன்றியங்களிடமுள்ள மகப்பேறு நிலையங்கள் குறித்த நிர்வாகக் கட்டுப்பாட்டை, குடும்ப நலத் திட்டம்—சுகாதாரப் பணிகள் துறைக்கு மாற்றுவதே, செய்யக் கருதியுள்ள முக்கிய மாற்றமாகும். பொதுவாக, ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும் 7 மகப்பேறு நிலையங்கள் உள்ளன. இவற்றில் 4 நிலையங்கள் குடும்ப நலத் திட்டத் துறையின் முழுக் கட்டுப்பாட்டின் கீழும், 3 நிலையங்கள் இரு துறைகளின் கட்டுப்பாட்டின் கீழும் உள்ளன. பின்னால் கூறப்பட்டதைப் பொறுத்தவரையில், அதனுடைய நிர்வாகக் கட்டுப்பாடு ஊராட்சி ஒன்றியங்களிடமும், தொழில் நுட்பக் கட்டுப்பாடு குடும்ப நலத் திட்டம்—சுகாதாரப் பணிகள் துறையிடமும் உள்ளன. இந்த முறை காரணமாக, இந்த நிலையங்களைச் சீராகவும் திறம்படவும் நிர்வகிக்க இயலவில்லை என்று ஆணைக்குழு கருதுகிறது.

6.6.3. தற்போது ஆரம்பச் சுகாதார நிலையத்துடன் இணைந்துள்ள சுகாதார ஆய்வாளர்களில் ஒருவரும், அபாயகரமான அருவருப்பான தொழில்களுக்கு உரிமம் வழங்குவது தொடர்பான பணிக்குப் பொறுப்பு வகிப்போருமான சுகாதார ஆய்வாளர் ஒருவர் ஊராட்சி ஒன்றியம் உரிமம் வழங்கும் அதிகார மன்றமாக இருப்பதால்—ஊராட்சி ஒன்றியக் கட்டுப்பாட்டிற்கு மாற்றப்படவேண்டும் என்று ஆணைக்குழு கருதுகிறது. இதன் மூலம், ஆதாயந் தரத்தக்க இந்தப் பணியை விரைவாகவும், திறம்படவும் புரிய ஊராட்சி ஒன்றியங்களுக்கு இயலும்.

(ஊ) கூட்டுறவு.

6.7.1. கூட்டுறவுத்துறை மூலம் வேளாண்மைக்குக் கடன் வழங்குவது வேளாண்மை வளர்ச்சிக்கு முக்கியமானதாகும். எனவே, 'கூட்டுறவு' என்ற பொருள் ஊராட்சி ஒன்றிய அமைப்பிற்கு மாற்றப்பட்டபோது, பல நன்மைகள் ஏற்படுமென்று எதிர்பார்க்கப்பட்டது. இருப்பினும், நடைமுறையில், கூட்டுறவுத் துறையில் வளர்ச்சிப் பணிக்கான வாய்ப்பு

அதிகமில்லை என்ற எண்ணத்தைப் பெரும்பாலான கூட்டுறவு வளர்ச்சிப் பணி அலுவலர்கள் உண்டாக்கியுள்ளனர். அவர்களது பெரும்பாலான நேரம், கூட்டுறவுச் சட்டத்தின்கீழ் உள்ள முறைப்படுத்தும் பணிகளுக்கு செலவிடவேண்டியுள்ளதாலும். அத்தகைய பணிக்கு கூட்டுறவுத் துறையுடன் நெருங்கிய தொடர்பு தேவைப்படுகிறது என்பதாலும் கூட்டுறவுத் துறை அலுவலர்கள், ஊராட்சி ஒன்றியப் பணியாளர் குழுவில் திறம்பட ஒத்துழைக்கும் உறுப்பினர்' என்ற மனப்போக்கைப் பெற்றிருப்பதை விட, வேண்டாத வீட்டில் விரும்பாத விருந்தினர் வந்திருப்பதுபோல் நடந்து கொள்கின்றனர் என்ற மனப்போக்கு அவர்களிடையே வளர்ந்துள்ளது. கூட்டுறவு வளர்ச்சிப் பணி அலுவலர்கள் நீக்கப்படுவார்களாயின், அவர்கள் இல்லாதது ஒரு குறையாகத் தென்படாது என்று ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் பலர் ஆணைக்குழுவிடம் தெரிவித்துள்ளனர்.

6.7.2. கூட்டுறவு வளர்ச்சிப்பணி அலுவலர்களை ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து நீக்குவது அறிவார்ந்த செயல் ஆகாது என்று ஆணைக்குழு கருதுகிறது. தற்போது அவர்கள் தாம் ஆற்றவேண்டிய முக்கியப் பணியைச் சரிவர கவனிக்கவில்லை என்றாலும் அவர்களுக்கென்று முக்கியப் பணி உள்ளதென்பதை யாரும் மறுக்க முடியாது. கடன் வசதி. உரங்கள், உழவுக் கருவிகளைப் பழுதுபார்த்தல் போன்ற ஏனைய வசதிகள்முதலிய வேளாண்மைக்கான இன்றியமையாத தேவைகள் தற்போது பெரும்பாலும், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. அவை வழங்கப்படுவதில் பல சிக்கலான நடைமுறைகள் உள்ளன. அந்த நடைமுறைகள் உழவர்கள் அறியாதவையாகும். இந்தப் பயன்களை அடைய, பொருத்தமான கூட்டுறவுச் சங்கங்களில் உழவர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்து, அவற்றின் நடைமுறைகளைக் கற்றறிய வேண்டும். ஊர் நல உதவியாளர்கள் மூலம் இந்நடைமுறைகளை உழவர்களுக்குக் கற்பிப்பதில் கூட்டுறவு வளர்ச்சிப் பணி அலுவலர்களுக்கு முக்கிய பங்கு இருக்கிறது. திறம்படவும் விரிவாகவும் இவ்வாறு செய்யப்படவில்லையெனில், கூட்டுறவுச் சங்கங்களின் பயன் பணக்கார—படித்த உழவர்களுக்கு மட்டுமே சென்றடையும். கூட்டுறவு நிலையங்களின் மீது அவர்களுடைய ஆதிக்கம் எப்போதுமே இருந்து வந்துள்ளது. கூட்டுறவு நிலையங்களைப் பரந்த அடிப்படையில் இயங்கச் செய்வது வசரமான ஒரு பணியாகும். தகுந்த நிர்வாக முறைகள் மூலம் இது குறித்துத் தங்களது பொறுப்புக்களைக் கூட்டுறவு வளர்ச்சிப்பணி அலுவலர்கள் தெளிவாகத் தெரிந்துகொள்ளுமாறு செய்ய வேண்டும்.

(ஏ) தொழில்கள்.

6.8.1. பெரிய அல்லது நடுத்தர அல்லது சிறிய தொழில்களைத் தொடங்குவது அல்லது மேம்படுத்துவது தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி மன்றங்களால் செயல்படுத்தப்படவேண்டிய செயல் அல்ல. உள்ளாட்சி மன்றங்கள் கிராமத் தொழில்களை அல்லது குடிசைத் தொழில்களை வளர்க்கும் பணியை மேற்கொள்ளலாம்; ஆனால், இவ்வகையில் கூட நம்மிடம் கதர்—கிராமத் தொழில்கள் வாரியத்தில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற, தொழில் நுட்பத் திறன் வாய்ந்த, விற்பனையை முக்கிய

நோக்கமாகக் கொண்ட நிறுவனம் ஒன்று உள்ளது. ஒரே துறையில் இரு நிறுவனங்கள் செயல்படுவதற்கான அவசியம் எதுமில்லையென்று ஆணைக்குழு கருதுகிறது. இதுவும் தற்போது ஊராட்சி அமைப்பில் குறிப்பிட்ட வகையில் அல்லாமல் சாதாரணமாகப் பணியாற்றிக்கொண் டிருக்கும் தொழில் வளர்ச்சிப் பணி அதிகாரியும் கதர்—கிராமத் தொழில்கள் வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவரப்படலாம்.

(ஏ) பணிகள் திட்டம்

6.9.1. சிறு பாசன நீர்வாயில்களைப் பேணி வருதல், பள்ளிக் கட்டி டங்கள், மேல்நிலை நீர்த் தொட்டிகள் ஆகியவற்றைக் கட்டுதல், குடிநீர்க் கிணறுகள் தோண்டுதல், சாலைகள் அமைத்தல் முதலிய பலவகை பொதுப்பணிகளை ஊராட்சி ஒன்றியம் மேற்கொள்கிறது. இதன் பொருட்டு நெடுஞ்சாலைகள்—கிராமப் பணிகள் துறையின் இளநிலைப் பொறி யாளர் ஒருவர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றிலும் பணியாற்றி வருகிறார். இளநிலைப் பொறியாளரின் பணியை நெடுஞ்சாலைகள்—கிராமப் பணிகள் துறையின் உதவிப் பொறியாளரும் கோட்டப் பொறியாளரும் தொழில் நுட்ப ரீதியில் மேற்பார்வையிட்டு வருகின்றனர்.

6.9 2. ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள இளநிலைப் பொறியாளர்களுக்கு பேரூராட்சிகளின் தேவைகளைக் கவனிப்பதற்கு நேரம் கிடைப்பதில்லை. நெடுஞ்சாலைகள்—கிராமப் பணிகள் துறையின் எந்த ஒரு உட்கோட்டத்தி லுள்ள பேரூராட்சிகளின் எண்ணிக்கை 5 க்கு மேற்பட்டுள்ளதோ அத் தகைய ஒவ்வொரு உட்கோட்டத்தில் உள்ள பேரூராட்சிகளின் பணிகளைக் கவனிப்பதற்கென்றே இளநிலைப் பொறியாளர் பதவியொன்றை ஏற்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதென்று ஆணைக்குழு கருதுகிறது.

6.9.3. மாவட்டத்திற்கு வெளியிலுள்ள அதிகாரி ஒருவருடைய குறிப் புரைகளுக்கு அனுப்பப்படாமலேயே பெரும்பாலான கிராமப் பணிகளை நிறைவேற்றுவதற்கு இயலும் வகையில், பொதுப்பணித் துறையைக் காட்டிலும் நெடுஞ்சாலைகள்—கிராமப் பணிகள் துறையிலுள்ள அதிகாரி களுக்கு வேண்டுமென்றே அதிகாரங்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. ரூபாயின் மதிப்பு படிப்படியாகக் குறைந்ததனால் ஆண்டுக்காண்டு இவ்வதி காரங்கள் குறைந்து வந்துள்ளன; எனவே, இவை கூடுதலாக்கப்படும் வகையில் திருத்தியமைக்கப்படவேண்டும். கிராமப் பணிகள் தொடர்பான தொழில் நுட்ப ஒப்பளிப்பு வழங்கும் அதிகாரங்கள் கீழ்க்கண்ட முறையில் கூடுதலாக்கப்படலாமென்று ஆணைக்குழு கருதுகிறது:—

அதிகாரியின் பதவித்தரம்.	தற்போதுள்ள வரம்பு.	உத்தேச வரம்பு.
(1)	(2)	(3)
	ரூ.	ரூ.
இளநிலைப் பொறியாளர்	3,000	5,000
உதவிப் பொறியாளர்	10,000	20,000
கோட்டப் பொறியாளர்	40,000	1,00,000

இதனால், மாவட்டத்திற்கு வெளியிலுள்ள உயரதிகாரிகளை அணுக வேண்டிய அவசியமின்றியே கிராமப் பணிகள் பெரும்பாலானவற்றை விரைவில் நிறைவேற்ற இயலும்.

6.9.4. தற்போது 200 ஏக்கரும் அதற்குக் குறைவான பரப்பளவும் உள்ள ஆயக்கட்டுகளை கொண்ட ஏரிகளனைத்தும் ஊராட்சி ஒன்றியங்களினால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதனை விரிவான முறையில் பரிசீலித்த பின்னர், ஊராட்சி ஒன்றியங்கள் 100 ஏக்கரும் அதற்குக் குறைவான பரப்பளவும் உள்ள ஆயக்கட்டுகளைக் கொண்ட ஏரிகளைப் பராமரித்துவர அனுமதியளிக்கப்பட்டால், அதுவே போதுமானதென்றும், பெரிய ஏரிகள் பொதுப் பணித்துறைக்கு மாற்றப்படலாமென்றும் ஆணைக் குழு, பொதுப் பணித்துறை பற்றிய தன்னுடைய அறிக்கையில் பரிவுரை செய்துள்ளது. ஆணைக்குழு இக்கருத்தையே இவ்வறிக்கையில் மீண்டும் எடுத்துரைக்கிறது.

6.9.5. ஊராட்சி மன்றங்களின் எல்லைகளுக்குட்பட்ட சாலைகள் தற்போது சரியான முறையில் பராமரிக்கப்பட்டு வருவதில்லை. இச்சாலைகள் சரியான முறையில் பராமரிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் சில வழிமுறைகள் வகுக்கப்படலாமென்று ஆணைக்குழு கருதுகிறது.

6.9.6. புதிதாக அமைக்கப்பட்டுள்ள சாலைகளின் நீளம் அதிகரித்துள்ளதற்கேற்ப ஊராட்சி ஒன்றியச் சாலைகள் பராமரிப்புத் திட்டம் செயல்பட இயலவில்லை என்பதை ஆணைக்குழு கண்டறிந்துள்ளது. வறட்சி நிவாரணத் திட்டங்கள், கிராமப்புற ஆட்படை ஊற்றத் திட்டங்கள், வறட்சியால் பீடிக்கப்பட்ட பகுதித் திட்டங்கள், கிராமப்புற வேலை வாய்ப்புக்கான விரைவுத் திட்டங்கள் முதலிய பல்வேறு திட்டங்களின்கீழ் சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. கிராமச் சாலைகள் திட்டம், முறைப்படுத்தப்பட்ட அங்காடிகள் செஸ், மோட்டார் வண்டிகள் சட்டம், கரும்பு செஸ் நிதிகள் முதலியவற்றிலிருந்தும் கிராமச் சாலை அமைப்புக்கான நிதிகள் கிடைக்கின்றன. கீழ்க்கண்ட புள்ளி விவரத்தைக் கொண்டு 1967 ஆம் ஆண்டுக்கும் 1971 ஆம் ஆண்டுக்கும் இடையில் சாலைகளின் நீளம் எந்த அளவுக்கு அதிகரித்துள்ளது என்பதைக் காணலாம் :

சாலையின் வகை.	1—4—1967-ல் சாலையின் நீளம் (கிலோ மீட்டரில்).	1—4—1972-ல் சாலையின் நீளம் (கிலோ மீட்டரில்).
சாதாரணமானது	13,491	19,248
கடற்கரையோர சாலைகள்/ கயவாய்ப் பகுதி சாலைகள்.	2,453	5,264
மலைப்பகுதிச் சாலை	795	1,369
மொத்தம் ..	16,739	25,881

6.9.7 பராமரிக்கப்படவிருக்கும் சாலைகளின் நீளம் மட்டுமன்றி மக்கள் தொகையையும் அடிப்படையாகக் கொண்டு உள்ளூர்ச் சாலைகளுக்கான மானியம் வழங்கப்படுகிறது. ஆளொன்றுக்கு 18 காசுகள் வீதத்தில் நபர்வாரி மானியம் வழங்கப்படுகிறது. ஊர்வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 19—9—1969 நாளிட்ட 1779-வது அரசாணையின்படி, கீழ்க்கண்ட வீதங்களில் மைல் வாரியான மானியங்கள் வழங்கப்படுகின்றன :—

	(மைல் ஒன்றுக்கு)
சாதாரண சாலைகள்	ரூ. 600.
கடற்கரையோர/கயவாய்ப் பகுதி சாலைகள்	ரூ. 800
மலைப்பகுதி சாலைகள்	ரூ. 1,500.

நிதி நெருக்கடி காரணமாக, அரசு, உள்ளூர்ச் சாலைகளுக்கான மானியம் வழங்கும்போது 1961 மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் புள்ளி விவரங்களையும் 1—4—1967-ல் உள்ளவாறு சாலை நீளத்தையும் மட்டுமே கணக்கில் எடுத்துக்கொள்கிறது. குறிப்பிட்ட சில பகுதிகளில் 1961 மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் 2.72 கோடியாக இருந்த மக்கள் தொகை 1971 மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் 3.23 கோடியாக உயர்ந்துள்ளது. இவ்வாறாக, மக்கள் தொகை 18.7 சதவீத அளவுக்கும் சாலை நீளம் 56 சதவீத அளவுக்கும் உயர்ந்துள்ளது இதன் காரணமாக சாலைகளின் பெரும் பகுதியைப் பராமரிப்பது என்பது அறவே இயலாமல் போய் விட்டது பெரும் செலவில் புதிய சாலைகளை அமைத்துவிட்டு பராமரிப்பின்மை காரணமாக அவை பாழடைந்துபோக விடுவதில் பொருளேயில்லை. இப்பிரச்சினை கடுமையான அளவுக்குப் பெருகியுள்ளதால், இது பற்றி உடனடி மறு பரிசீலனை செய்யவேண்டியது அவசியமாகியுள்ளது. விரைவுத் திட்டம், கிராமப்புற ஆட்பலை ஊற்றத்திட்டம், வறட்சி நிவாரணத் திட்டம், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதித் திட்டம் முதலிய திட்டங்களின் கீழ்க் கிடைக்கக்கூடிய நிதிகளனைத்தையும் புதிய சாலைகள் அமைக்கப் பயன்படுத்திக் கொள்வதற்குப் பதிலாக, இந்நிதிகளின் ஒரு பகுதியை தற்போதுள்ள சாலைகளைப் பராமரிப்பதற்குப் பயன்படுத்திக் கொள்ளும் யோசனையைக் கருதிப் பார்க்கலாம். பராமரிப்புப் பணி, வேலை வாய்ப்புக்கும் வகை செய்து, இத்திட்டங்களின் முக்கிய நோக்கங்களை நிறைவேற்றவும் செய்கிறது. ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள சாலைகளனைத்தையும் சரியான முறையில் பராமரிப்பதற்குத் தேவையான நிதிவசதி அளிக்கப்பட வேண்டும்.

6.9.8 தற்போது ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டிடங்களை நெடுஞ்சாலைகள்—கிராமப் பணிகள் துறை பராமரித்து வருகிறது. ஊராட்சி ஒன்றியப் பொறியாளருக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. ஊராட்சி ஒன்றியங்கள் தங்களுடைய இளநிலைப் பொறியாளர்கள் உதவியைக் கொண்டே தங்களுடைய கட்டிடங்களைப் பராமரித்துவர அனுமதிப்பது மேலும் பொருத்தமாக இருக்கும். உண்மையிலேயே, இப்பணி ஊராட்சி ஒன்றியப் பொறியாளர்களின் தொழில் நுட்பத் தகுதியின்கீழ் வருவதாகும்.

204000

V211,6N73V
31L3;2

(ஐ) மகளிர் நலன்

6.10. மகளிர்க்கு தையற்கலை போன்ற கைத்தொழில்களைக் கற்றுத் தருவதற்கேற்ற கைத்தொழில் ஆசிரியர்கள் இல்லாத காரணத்தால் பெரும்பாலான மகளிர் சங்கங்கள் சிறந்த முறையில் செயல்பட இயலவில்லை. இச்சங்கங்கள் முனைந்து பணியாற்றும்படிச் செய்வதற்காக, பகுதிநேர அல்லது முழு நேர கைத்தொழில் ஆசிரியர்களை நியமிக்கலாமென்று ஆணைக்குழு கருதுகிறது. தற்போது தையல் இயந்திரங்களைப் பராமரித்து வருவதற்கு அல்லது பழுது பார்ப்பதற்கு எந்தவொரு தொகையும் செலவிடுவதற்கான அதிகாரம் ஊராட்சிகளுக்குக் கிடையாது. இதன் காரணமாக பெரும்பாலான தையல் இயந்திரங்கள் பழுதுபட்டும் பயனற்றும் போய்விட்டன. நியாயமான பழுது பார்த்தல் செலவுகளைச் செய்ய ஊராட்சி ஒன்றியங்களுக்கு/ஊராட்சிகளுக்கு அதிகாரம் வழங்கப்படலாம். வட்டாரங்களுடன் மேலும் சிறந்த முறையில் இணைந்து செயல்பட வசதியாக இருக்கும் பொருட்டும், மாவட்ட ஆட்சித் தலைவரின் பெயரில் கடிதத் தொடர்பு கொள்ள ஏதுவாக இருக்கும் பொருட்டும், மாவட்ட மகளிர்நல அதிகாரிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நேர்முக உதவியாளர்கள் என்ற பதவித் தரம் அளிக்கப் படவேண்டுமென்றும் ஆணைக்குழு கருதுகிறது. இந்த ஏற்பாடு, மாவட்ட வளர்ச்சி அதிகாரி, மாவட்ட நல அதிகாரி முதலியோர் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர்களாக நியமிக்கப்படுவதுடன் ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய ஒன்றாகும். ஆணைக்குழு இந்தக் கருத்துரையைப் பரிவுரை செய்கிறது.

7. மாவட்ட வளர்ச்சி மன்றங்கள்.

7·1. 1958 ஆம் ஆண்டு மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் சட்டத்தின்கீழ் (சட்டம் எண் 18/1958) இம்மாநிலத்தில் மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் செயல்படத் தொடங்கின. இச்சட்டத்தின்படி இம்மாநிலம் 23 வளர்ச்சி மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. அந்த மாவட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகவும் வளர்ச்சித் துறைகள் சம்பந்தப்பட்ட மாவட்ட அதிகாரிகளையும் அரசுச் சார்பற்றவர்களான உள்ளூர் எம். எல். ஏக்கள், எம். பிக்கள், எம். எல். சிக்கள், ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்கள், நகராட்சிகளின் தலைவர்கள் மத்தியக் கூட்டுறவு வங்கியின் தலைவர் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட மாவட்ட வளர்ச்சி மன்றம் ஒன்று அமைக்கப்பட்டது. இம்மன்றங்கள் ஆலோசனை அமைப்புகளாகும். நிர்வாகம் தொடர்பான பணிகள் அல்லது சட்டமியற்றும் பணிகள் எதும் இவற்றுக்குக் கிடையாது.

7·2. மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் பல, இம்மாநிலத்தின் நிர்வாகத்தை மேம்படுத்துவதில் மேலும் தீவிரமான பங்கேற்கக் கூடிய நிர்வாக அமைப்புகளாக அவற்றை மாற்றியமைக்க வேண்டுமென்னும் விருப்பத்தைத் தெரிவித்துள்ளன. மாவட்ட வளர்ச்சி மன்றங்களிடம் "திட்டவட்டமான பணிகள்" ஒப்படைக்கப்பட வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களில் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்த சிலரும் இதே மாதிரியான கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். எனவே, ஆணைக் குழுவானது இக்கருத்தைச் சற்று விரிவாக ஆராய்ந்துள்ளது.

7·3. ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் குறித்து பல்வந்த்ராய் மேத்தா குழு ஆலோசனை கூறியுள்ளவாறு "ஜனநாயக முறையில் அதிகாரங்களைப் பரவலாக்குதல்" என்னும் லட்சியத்தை அடைவதற்கோர் சாதனமாக உள்ளாட்சி நிர்வாகத்தை மூன்று நிலைகளாக்கும் முறையொன்று இந்தியா முழுவதிலும் நடைமுறையில் பின்பற்றப்பட்டுள்ளது. கிராம அளவில் ஊராட்சிகள், வட்டார அளவில் பஞ்சாயத்து சமிதிகள் அல்லது ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட அளவில் ஜில்லா பரிஷத்துக்கள் ஆகியவையே இந்த மூன்று நிலைகளாகும். வட்டார அளவிலுள்ள அமைப்புகளும் மாவட்ட அளவிலுள்ள அமைப்புகளும் வெவ்வேறானவை என்பதையும் அவற்றில் ஒரு வகை வளர்ச்சியடைய வேண்டுமாயின் அடுத்தவகை பாதிக்கப்படத்தான் செய்யும் என்பதை இந்தியா முழுவதிலும் கண்ட அனுபவம் காட்டுகிறது இவ்வாறுதான் மகாராஷ்டிர மாநிலத்திலுள்ள 'ஜில்லா பரிஷத்' வலுவானதோர் அமைப்பாக விளங்கும்போது 'பஞ்சாயத்து சமிதி' அந்த அளவுக்கு முக்கியமற்றதாக இருப்பதுமட்டுமன்றி உண்மையிலேயே 'பஞ்சாயத்து சமிதி' என்ற அமைப்பானது 'ஜில்லா பரிஷத்' அமைப்பின் சார்நிலை அமைப்பாகவும் இருக்கின்றது. இம்மாநிலத்தின் வட்ட வாரியங்கள் (Taluk Boards) மாவட்ட வாரியங்கள் வகித்து வந்த அதே அதிகார வரம்பினையும் செய்துவந்த அதே அலுவல்களையும் பெற்றிருந்த காரணத்தால்தான், வட்ட வாரியங்கள் 1934 ஆம் ஆண்டில் ஒழிக்கப்பட்டன. உள்ளாட்சி மன்றங்களின் அலுவல்கள் வரையறுக்கப்பட்டுள்ள காரணத்தால், ஒரு நிலையிலுள்ள பொறுப்புகளைக் கூடுதலாக்க வேண்டுமாயின் அதே அளவுக்கு பிற நிலைகளிலுள்ள பொறுப்புகளைக் குறைத்துத்தான் ஆகவேண்டும்.

7·4. இம்மாநிலத்தில், தொடக்கக் கல்வி, பொதுச் சுகாதாரம் முதலிய சாதாரணமான உள்ளாட்சி வாரிய அலுவல்கள் மட்டுமன்றி, வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு போன்று கிராமப்புற வளர்ச்சிக்கு முக்கியமான உற்பத்தி அலுவல்களில் பலவும் ஊராட்சிகளிடமும் ஊராட்சி ஒன்றியங்களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றியங்களின் அலுவல்களில் சிலவற்றை எடுத்துக்கொண்டு அதன் மூலம் அந்த ஊராட்சி ஒன்றியங்களின் அமைப்பையும் வலிமையையும் குறைத்தாலன்றி மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் அதிகாரங்களைக் கூடுதலாக்கவும் அதன் தன்மையை மாற்றவும் இயலாது. பெரும்பான்மை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியத்திடமுள்ள நிர்வாக அலுவல்களை, நியமனம் செய்யப்பட்ட மாவட்ட அமைப்புக்கு மாற்ற வேண்டியதற்கான வலுவான நியாயம் இருப்பதாகத் தோன்றவில்லை. சுமார் 15 லட்சம் அளவில் மக்கள் தொகை கொண்ட மாவட்ட வளர்ச்சி மன்றங்களைக் காட்டிலும் 66,000 முதல் 1,00,000 வரையிலான மக்கள் தொகை கொண்ட சிறிய அமைப்புகளாக ஊராட்சி ஒன்றியங்கள் இருப்பதால், அவை மக்களுடனும் கிராமங்களுடனும் மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டு உள்ளூர் மக்களின் தேவைகளையும் விருப்பங்களையும் விரைந்து நிறைவேற்ற இயலும்.

7·5. எனினும் மாவட்ட வளர்ச்சி மன்றங்களை, மறு பரிசீலனை செய்யும், பரிவுரை செய்யும், ஆலோசனை கூறும் அமைப்புகளாகச் செயல்படச் செய்யவும், மாவட்டத் திட்டங்களை வகுப்பதில் அவற்றை

மேலும் நெருங்கிய தொடர்புகொள்ளச் செய்யவும் தெளிவான நியாயம்
உள்ளது. திட்டத்திற்கான மைய அமைப்பு என்ற வகையில் மாவட்ட
மென்பது ஊராட்சி ஒன்றியத்தைக் காட்டிலும் மிகவும் பொருத்த
மானதோர் அமைப்பாகும்; உள்ளூர்த் தேவைகளின் முன்னுரிமைகளைக்
குறிப்பிட்டு, மாவட்டத் திட்டங்களில் சேர்த்துக்கொள்வதற்கான திட்டப்
பணிகளைத் தெரிந்தெடுப்பதில் மாவட்ட வளர்ச்சி மன்றமானது தீவிர
மானதும் பயனுள்ளதுமான பங்கேற்க இயலும். கிடைக்கின்ற நிதி
வாயில்கள், துறைவாரியான முன்னுரிமைகள் ஆகியவற்றைக் கொண்டே
மாவட்ட அளவில் உள்ளூர் மக்களின் விருப்பத்தை நிறைவேற்ற இன்னும்
அதிக வாய்ப்புள்ளது; மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட அமைப்பு
ஒன்றினால் இப்பணியைச் செவ்வனே நிறைவேற்ற முடிகிறது. ஐந்தாண்டுத்
திட்டங்களையும் ஆண்டுத் திட்டங்களையும் வகுப்பதில் மாவட்ட வளர்ச்சி
மன்றங்கள் மேலும் நெருங்கித் தொடர்பு கொள்ளுமாறு செய்யப்பட
லாம். இவ்வகையில், மாவட்டத் திட்ட அதிகாரி, மாவட்ட வளர்ச்சி
மன்றத்திற்குப் பயனுள்ள வகையில் உதவி புரிய முடியும்.

7·6. மாவட்ட வளர்ச்சி மன்றங்களை அறிவார்ந்த முறையில் பயன்
படுத்தினால், மாவட்ட அளவில் வளர்ச்சி நடவடிக்கைகள் அனைத்தை
யும் சமமட்ட நிலையில் ஒருங்கிணைக்கும் இக்கட்டான பணியை நிறை
வேற்றுவதில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அவை பெருந்துணை
புரியும். மாவட்ட வளர்ச்சி மன்றங்கள், சில துறைகளிடமிருந்து தகவல்
களையும் முன்னேற்ற அறிக்கைகளையும் கோரிப் பெறும் அதிகாரங்களை
ஏற்கெனவே பெற்றுள்ளன. வளர்ச்சித் துறைகள் (முறைப்படுத்தும்
அலுவல்களைக் கொண்ட துறைகளிலிருந்து வேறுபட்டவை) அனைத்திற்கும்
பொருந்தும் வகையில் இவ்வதிகாரம் விரிவுபடுத்தப்பட வேண்டும்;
மாவட்டத்திலுள்ள வளர்ச்சிப் பணிகளை மறு ஆய்வு செய்யவும், இடை
யூறுகளைக் கண்டறிந்து அவற்றைக் களைவதற்கான முறைகளை அரசுக்குப்
பரிவுரை செய்யவும் இயலும் வகையில் மாவட்ட வளர்ச்சி மன்றங்
களுக்கு ஊக்கமளிக்கப்பட வேண்டும்.

7·7. மாவட்ட வளர்ச்சி மன்றங்களின் அலுவலில் சில மாற்றங்
களைச் செய்தால் அம்மன்றங்கள் திறமையாகச் செயல்படும் வாய்ப்புள்ளது.
நிலைக் குழுக்களின் அதிகாரச் சார்பற்ற தலைவர் ஒவ்வோராண்டும்
தேர்ந்தெடுக்கப்படலாம். எந்தவொரு குழுவின் திறமையும் அதன்
செயலகத்தைப் பொறுத்துள்ளதால் நிலைக் குழுக்கள் அனைத்தும்
மாவட்ட வளர்ச்சி அதிகாரியை தங்கள் செயலாளராகக் கொண்டிருக்க
வேண்டும். மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் கருத்துத் தெரிவிக்கப்படும்
எந்தவொரு பிரச்சினையையும் சம்பந்தப்பட்ட நிலைக் குழுவின் பரிசீலனைக்கு
அனுப்பி வைக்கலாம். நிலைக்குழுவின் முடிவு, மாவட்ட ஆட்சித் தலைவர்,
நிலைக் குழுவின் தலைவர் ஆகிய இருவரும் இணைந்து ஆய்வு செய்தபிறகு
மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் முன் வைக்கப்படவேண்டும். மாவட்ட வளர்ச்சி
மன்றக் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம், உறுப்பினர்கள் வினாக்கள்
விடுத்து, அவற்றிக்கு மாவட்ட ஆட்சித்தலைவரும் மாவட்ட அதிகாரி

களும் விடையளிப்பதற்காக ஒதுக்கப்பட வேண்டும். கேள்வி நேரங்களில் அளிக்கப்படும் உறுதிமொழிகளைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவரும் தொடர்புடைய நிலைக்குழுக்களின் தலைவர்களும் நடவடிக்கை எடுக்கலாம். மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் ஒவ்வொரு கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் இரண்டாவது இனம், மாவட்ட வளர்ச்சி மன்றத்தால் நிறைவேற்றப்பட்ட முந்திய தீர்மானங்கள் அனைத்தையும் தொடர்ந்து எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து மாவட்ட வளர்ச்சி அதிகாரியால் அளிக்கப்படும் விவரமான அறிக்கை பற்றிய ஆய்வாக இருக்கவேண்டும். இந்த அறிக்கை மாவட்ட வளர்ச்சி மன்றத்திற்கு எடுத்துச் செல்லப்படுவதற்கு முன், மாவட்ட ஆட்சித் தலைவராலும் நிலைக்குழுக்களின் தலைவராலும் நுணுக்கமாக ஆய்வு செய்யப்பட்டிருக்க வேண்டும். மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் தீர்மானங்கள் குறித்து அரசிடமிருந்து பெறப்படும் பதில்கள், அவை பெறப்பட்ட பிறகு உடனடியாகக் கூட்டப்படும் அடுத்த கூட்டத்தில் இம் மன்றத்தின் முன் முழு விவரங்களுடன் வைக்கப்பட வேண்டும். இந்த மாற்றங்களினால், மாவட்ட வளர்ச்சி மன்றம் திறம்படச் செயல்படும் வாய்ப்புள்ளது.

7.8. மாவட்ட வளர்ச்சி மன்றங்கள், திட்டப் பணிகளின் பயன்களை மதிப்பிடுவதில் பயன்தரத்தக்க பணி ஆற்றவும் முடியும். மாவட்ட வளர்ச்சி மன்றங்களின் உறுப்பினர்கள் மக்களின், தேவைகளையும் விருப்பங்களையும் நன்றாக அறிந்திருப்பதாலும், மாவட்டத்தின் வளர்ச்சிப் பணிகள் அனைத்தையும் பற்றிய முழு விவரங்கள் மன்றத்திடம் உள்ளதாலும், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் இடங்களுக்கு நேரடியாகச் சென்று களப்பணி குறித்து ஆய்வு செய்வதற்கு இயலும் வகையில் அவற்றிற்கு அண்மையில் அமைந்துள்ளதாலும், திட்டங்களைச் செயற்படுத்துவதில் நேரடியாக ஈடுபடாததாலும், மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் திட்டப்பணிகள் குறித்து மதிப்பீடு செய்வதற்கு மிகவும் பொருத்தமுடையனவாயுள்ளன. அமைக்கப்படவிருக்கும் மாநிலத் திட்டப்பணி மதிப்பீட்டு அமைப்பு எதுவும், இவ்வகையில் மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் பெற்றுள்ள வாய்ப்புக்களைப் புறக்கணிக்க இயலாது.

7.9. ஆலோசனை கூறும் அமைப்பு ஒன்றின் ஆலோசனை விரைவாகவும் நேர்மையாகவும் பின்பற்றப்பட்டால்தான், அதன் ஆர்வச் செயலூக்க ஒழுங்குணர்வு மறைந்துவிடாமலிருக்கச் செய்ய முடியும். அதனுடைய ஆலோசனை எவ்வித நடவடிக்கையுமின்றித் தொடர்ந்து புறக்கணிக்கப்படுமானால், அது தனது பணியில் மந்தமாகவும் அசட்டையாகவும் இருக்கும். தற்போது மாவட்ட வளர்ச்சி மன்றங்களுக்குள்ள தடங்கல் இதுதான் என்று தெரிகிறது. மாவட்டவளர்ச்சி மன்றத்தால் செய்யப்படும் பரிவுரைகளை அரசு அசட்டையாகத் தள்ளிவிட்டு, பல சமயங்களில் அவற்றைப் புறக்கணித்து ஆணைகளைப் பிறப்பிக்கின்றது என ஆணைக் குழுவின் முன் பலர் புகார் செய்தனர். மாவட்ட வளர்ச்சிக் குழுவின் தீர்மானங்களுக்கு உடனடியாகப் பதிலளிப்பதும், அத்தீர்மானங்களைப் பெற்ற நாளிலிருந்து ஒரு திங்களுக்குள் அரசின் முடிவுகளைத் தெரிவிப்பதுமான ஒரு பாரம்பரியத்தை ஊர் வளர்ச்சி—உள்ளாட்சித் துறையில் அரசு உருவாக்க வேண்டுமென்று ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது.

ஏதாவதொரு தீர்மானம் ஏற்கப்படாவிட்டால் அதற்கான காரணங்கள் மாவட்ட வளர்ச்சி மன்றங்களுக்குத் தெளிவாக விளக்கப்படலாம். அதன் மூலம், தங்களது வேண்டுகோளைத் தள்ளிவிடுதற்கான அரசின் நோக்கினை அவை அறியலாம். மாவட்ட வளர்ச்சி மன்றங்களின் முயற்சிகளுக்கு ஏற்பட ஏற்ப உடனடியாகவும் பொருளுள்ள வகையிலும் செயற்படுவதனால் அவற்றின் தரத்தினையும் ஆர்வச் செயலூக்க ஒழுங்குணர்வினையும் வளர்ப்பது மிகவும் ஏற்புடைத்தாகும்.

7·10. தற்போது மாவட்ட வளர்ச்சி மன்றங்களின் செயலாளர்களாக மாவட்ட வளர்ச்சி அதிகாரிகள் பணியாற்றுகின்றனர். வளர்ச்சி நோக்கங்களுக்காக மாநிலத்திலுள்ள பெரிய வருவாய் மாவட்டங்கள் யாவும் இரண்டிரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அத்தகைய வருவாய் மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு மாவட்ட வளர்ச்சி அதிகாரிகள் உள்ளனர். மாவட்ட வளர்ச்சி அதிகாரிகளின் பதவிகளின் எண்ணிக்கையில் ஏற்ற இறக்கம் உள்ளதன் காரணமாக, தற்போது தனிப்பட்ட நடைமுறை ஒன்று வழக்கில் வந்துள்ளது; அதன்படி, வருவாய் மாவட்டமொன்றின் பணி, வளர்ச்சி அதிகாரி ஒவ்வொருவரும் வளர்ச்சி மாவட்டம் ஒன்றின் பொறுப்பிலுள்ளார் என்ற அடிப்படையில் இல்லாமல், அலுவல் முறையில் மாவட்ட வளர்ச்சி அதிகாரிகள் இருவருக்கும் பிரித்துக்கொடுக்கப்படுகிறது. வளர்ச்சி அதிகாரிகளில் ஒருவராவது, வளர்ச்சி மாவட்டங்கள் இரண்டிலே எதன் நிலை குறித்தும் முழுமையாக அறிந்திருக்கவில்லை என்பதால், இது மனநிறைவளிக்காததோர் ஏற்பாடு என்று ஆணைக்குழு கண்டறிந்து. வளர்ச்சி மாவட்டங்கள் இருக்கும் அளவிற்கு மாவட்ட வளர்ச்சி அதிகாரிகள் இப்போது இருப்பதால், மாவட்ட வளர்ச்சி மன்றம் ஒவ்வொன்றும் மாவட்ட வளர்ச்சி அதிகாரி ஒருவரின் பணிகளைத் தனக்கென முழுமையாகக் கொள்ளுமாறு ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது; தேவைப்பட்டால் ஒரு சில பணியாளரைக் கூடுதலாகச் சேர்த்துக் கொள்ளவேண்டும்; அப்போதுதான் மாவட்ட வளர்ச்சி அதிகாரி ஒவ்வொருவரும் தமக்கெனத் தனி அலுவலகத்தைப் பெற்றிருப்பார்.

8. கணக்குகளும் தணிக்கையும்.

8·1. ஊராட்சிகளின் நிதிகள், ஒன்றியத்தின் கணக்கில் வைத்துவரப்படுவதால், ஊராட்சி ஒன்றியத்தின் கணக்குகள் எழுதும் பணிச் சுமை, அதனுடைய கணக்கு வழக்கோடு மட்டுமல்லாமல் அதன் உறுப்பினர்களான ஊராட்சிகளின் பற்றுவரவுகளையும் கொண்டதாகும். 15 ஆண்டுகளில் வளர்ச்சி வட்டாரங்களில் நிதி பற்றிய நடவடிக்கைகளின் அளவு கணிசமாக உயர்ந்துள்ளது. நடப்பாண்டான 1973–74-ல் வட்டாரம் ஒவ்வொன்றின் பற்று வரவு சராசரி ரூ. 25 லட்சம் என்ற அளவிலிருக்கும். ஊராட்சி ஒன்றியங்களிடையே பற்றுவரவுகளில் காணப்படும் மாறுபாடு, இணைப்பு எண் I-ல் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையிலிருந்து அளவிடப்படலாம். இதனால் இயல்பாகவே விரிவான முறையில் கணக்கிடப்பட வேண்டியுள்ளது. தற்போது, இந்தப் பணி, ஊராட்சி ஒன்றியத்தில் கணக்காளர் ஒருவராலும் இளநிலை உதவியாளர் ஒருவராலும் செய்யப்பட்டு வரு

கின்றது. இந்தக் கணக்காளர் உதவியாளர் பதவித்தரத்தில் உள்ளார். இந்தப் பதவித்தரம் ரூ. 250—10—300—15—450 (திங்கள் ஒன்றுக்கு சராசரிச் சம்பளம் அகவிலைப்படி ரூ. 417) என்ற சம்பள வீதத்தைக் கொண்டது. சிறப்பு ஊதியமாக திங்கள் ஒன்றுக்கு ரூ. 15 அளிக்கப்படுகின்றது. அவருடைய பணி மிகவும் கடுமையானது, சிக்கலானது; உதவியாளரின் பணியைவிடக் கூடுதலானது. இந்தக் காரணங்களால், கணக்காளர்களாக நியமிக்கப்படும் உதவியாளர்கள், உடனடியாகத் திரும்பவும் உதவியாளர்களாக மாற்றம் பெற விழைகின்றனர். இவ்வாறு மிகவும் அடிக்கடி கணக்காளர்கள் மாறுகின்றனர். ஊராட்சி வளர்ச்சிக் கணக்குத் தேர்வு நீங்கலாக, வேறு எந்தவகைச் சிறப்புக் கணக்குத் தேர்வுத் தகுதியும் ஊராட்சி ஒன்றியக் கணக்காளர்கள் பெற்றிருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுவதில்லை. பொதுவாக அவர்கள், வணிக முறைக்கணக்கு வைப்பியல் அறிவோ அல்லது வாணிகக் கணக்குமுறை அறிவோ பெற்றிருப்பதில்லை. மேலும், அவர்கள், பயன்தரத்தக்க அனுபவம் பெறும் அளவுக்கு அப்பணியில் நீண்டநாள் இருப்பதில்லை. ஊராட்சி ஒன்றியங்களின் கணக்குகள் வைத்துவரும் முறை மோசமாக இருப்பதற்கு இவைதாம் பெரிதும் காரணம்.

8·2. பெரும்பான்மையான வளர்ச்சி வட்டாரங்களில் பற்று வரவுகள் முதல் நிலை நகராட்சியை விஞ்சி நிற்கின்றன; பல வட்டாரங்களில் தேர்வு நிலை நகராட்சிகளுக்கு நிகராகவுள்ளன. ஊராட்சி ஒன்றியங்களின் கணக்குகள் அமைப்பு முறை வலுப்படுத்தப்படுவதோடு மேம்படுத்தப்படவும் வேண்டுமென்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறினாலும் அது மிகையாகாது.

8·3. ஊராட்சி ஒன்றியக் கணக்காளர்கள் என்ற தனிப் பதவித்தரம் ஒன்றை ஏற்படுத்தி, அதனால், ஒன்றியக் கணக்கர்கள், கணக்கு முறையில் சிறப்புப் பயிற்சி பெறவியலுமாறு, அந்த அமைப்பிற்குள் முன்னேற்றம் பெறும் வாய்ப்பினைக்காணச் செய்யவும் ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. இந்தப் பதவித்தரத்தில், ஒன்றியங்களைச் சேர்ந்த கணக்காளர்கள், இளநிலைக் கணக்குக் உதவியாளர்கள், கோட்ட, மாவட்ட அலுவலகங்களிலுள்ள வளர்ச்சிக் கணக்காளர்கள் ஆகியோர் சேர்க்கப்படலாம். அது பின்வரும் நிலைகளைக் கொண்டதாக இருக்கலாம்:—

பதவிப் பெயர்.	சம்பள வீதம்.	திங்கள் ஒன்றுக்கு சராசரி ஊதியம்.	அகவிலைப் படி.
இளநிலைக் கணக்காளர்	210—5—245—10—325	ரூ	312
கணக்காளர்	250—10—300—15—450	ரூ.	417
முதுநிலைக் கணக்காளர்	275—10—375—15—450	ரூ.	427
ஊராட்சி வளர்ச்சிக் கணக்காளர்	300—10—350—15—500	ரூ.	467

ஆண்டொன்றுக்கு ரூ. 25 லட்சத்திற்குக் குறைவாகப் பற்றுவரவுகள் உடைய ஊராட்சி ஒன்றியங்களில் முதுநிலைக் கணக்காளர் ஒருவரும் இளநிலைக் கணக்காளர் ஒருவரும் நியமிக்கப்படலாம். ரூ. 25 லட்சத்திற்கு மேல் பற்றுவரவுகள் உடைய ஊராட்சி ஒன்றியங்களில் ஊராட்சி வளர்ச்சிக் கணக்காளர் ஒருவரும், கணக்காளர் ஒருவரும் நியமிக்கப்படலாம். கோட்ட, மாவட்ட அலுவலகங்களில் உள்ள கணக்காளர்கள், ஊராட்சி வளர்ச்சிக் கணக்காளர் பதவித் தரத்தில் தொடர்ந்திருக்கலாம். இளநிலைக் கணக்காளர் பதவிக்குத் தெரிந்தெடுக்கப்படுவர், ஊராட்சி வளர்ச்சிக் கணக்காளர் பதவித் தரத்திற்கு மேல் பதவி உயர்வு பெறும்வரை கணக்காளர் பதவித் தரத்திலிருப்பார் என்று கருதப்படுகிறது. தேவையான கால அளவு தொடர்ந்திருப்பதால் கணக்கில் சிறப்புத்தன்மை பெறுவது உறுதிப்படுகிறது அதனால் ஊராட்சி ஒன்றியங்களில் கணக்குப் பணியின் தன்மை மேம்படுகிறது. ஊராட்சி வளர்ச்சிக் கணக்காளர் பதவித் தரத்தில் உள்ளவர்கள், ஊர்வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்தில் உயர் கணக்காளர் பதவிகளுக்கும், ஊராட்சி வளர்ச்சி அமைப்பில் அதே ஊதியம் பெறும் பதவித் தரத்தில் உள்ள அதிகாரிகளுடனும் உயர் நிர்வாகப் பதவிகளுக்கும் நியமிக்கப்படக் கருதிப் பார்க்கப்படவேண்டும். வணிகமுறைக் கணக்கு வைப்பில் பட்டயத்தகுதியும் குறைந்த அளவு பொதுக் கல்வித் தகுதியும் உடையவர்கள் மட்டுமே இளநிலைக் கணக்காளர் பதவிக்குத் தெரிந்தெடுக்கப்படத் தகுதிபெற்றவர்கள் என்று வகுக்கப்படவேண்டும். கணக்காளர்களாகப் பதவி உயர்வு பெறத் தகுதியுடையவர்களாக, இளநிலைக் கணக்காளர்கள் ஊராட்சி வளர்ச்சி கணக்குத் தேர்வில் (Panchayat Development Accounts Test) தேர்வு பெற வேண்டியது அவசியமாயிருக்கும் முதற்கண். தற்போதுள்ள இளநிலை உதவியாளர்கள், கணக்கு—உதவியாளர்கள், ஊராட்சி வளர்ச்சிக் கணக்காளர்கள் ஆகியோர், கணக்குப் பணியில் பணிபுரிய விருப்பம் தெரிவிக்க வாய்ப்பளிக்கப்படுவதுடன் 8–4. பாராவில் குறிப்பிட்டுள்ளவாறு அவர்களுக்குச் சிறப்புப் பயிற்சியும் அளிக்கப்படலாம். வணிகமுறைக் கணக்கு வைப்புத் தேர்வுகளில் தேர்வு பெறவும் வசதிகள் அளிக்கப்படலாம்,

8·4. உள்ளாட்சி நிதிக் கணக்குத் தலைமை ஆராய்வாளர், (Examiner of Local Fund Accounts) ஒவ்வோராண்டும் மாவட்டத் தலைமையிடங்களில் முதுநிலைக் கணக்காளர்களாகப் பதவி உயர்வு பெற்றவர்களுக்கு 6 முதல் 8 வார காலத்துக்குச் சிறப்பு நினைவு கூர் பயிற்சி வகுப்புகள் நடத்த ஏற்பாடு செய்யவேண்டும். இந்த நினைவு கூர் பயிற்சிகளினால் அவர்கள், நாளது தேதி வரையிலான கணக்கு நடைமுறை வகுப்புகளை அறிந்து கொள்வதுடன், ஊராட்சி ஒன்றியக் கணக்குகளின் சிறப்புக் கூறுகள் பற்றி அறிந்து கொள்ளவும் முடியும்.

8·5. உள்ளாட்சி நிதிக் கணக்குத் தலைமை ஆராய்வாளர் 1973-ல் தந்துள்ள புள்ளி விவரங்களின்படி, 112 ஊராட்சி ஒன்றியங்கள் ரூ. 25 லட்சத்திற்கு மேல் பற்று வரவு உடையனவாயுள்ளன. இந்த அடிப்படையில், மேற்கூறப்பட்ட பரிவுரையினால் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,72,440 கூடுதலாகச் செலவு ஏற்படும். (இணைப்பு எண். II) ஊராட்சி ஒன்றியக்

கணக்குகளை முறையாக வைத்துக்கொள்வதன் முக்கியத்துவத்தைக் கருதிப்பார்த்தால், இச்செலவு மிகவும் அதிகமென ஆணைக்குழு கருத வில்லை. ஊராட்சி ஒன்றியம் ஒன்று ரூ. 25 லட்சத்திற்கு மேல் பற்று வரவு உடையதா அல்லவா என்று சான்றளிக்கக் கூடிய அதிகாரி உள்ளாட்சி நிதிக் கணக்குத் தலைமை ஆராய்வாளரே ஆவார்.

8·6. கடந்த 15 ஆண்டுகளில், ஊராட்சி ஒன்றிய அளவில் பணியின் அளவும் சிக்கல் தன்மையும் வளர்ந்துள்ளது, ஒன்றியத்தால் வைத்து வரப்பட வேண்டிய பல பதிவேடுகளிலும் கணக்குகளிலும் தெரிகின் றது. 1970 ஆம் ஆண்டில், நிதித் துறையைச் சேர்ந்த நிர்வாக அமைப்பு—நடைமுறைப் பிரிவு, இக் கணக்கு முறையைப் பற்றி ஆய்வு செய்து, பயனற்றவையும் தேவையற்றவையுமான பணி இனங்களை நீக்கி அதனைச் சீரமைக்கும் முயற்சியை மேற்கொண்டது. அப்பிரிவின் 22—8—70 ஆம் நாளிட்ட OM/2/70 ஆம் எண் அறிக்கை பயனளிக்கக் கூடிய ஆலோசனைகள் பலவற்றைக் கொண்டுள்ளது. இன்னும் பரிசீலனையில் உள்ள அந்த ஆலோசனைகள் மீது விரைந்து ஆணைகள் பிறப்பிக்குமாறு அரசிற்கு ஆணைக்குழு பரிந்துரைக்கின்றது. அதுபோலவே, கணக்கு நடைமுறைகளை நாளது தேதிக்கு ஏற்பச் சீரமைக்கவும், பழைய பத்தாம்பசலிப் பதிவேடுகளை அகற்றவும் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம்.

8·7. தற்போது, ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள் ஆகிய வற்றின் கணக்குகள் உள்ளாட்சி நிதிக் கணக்குகள் தலைமை ஆராய் வாளரால் ஆண்டிற்கு இரு முறை தணிக்கை செய்யப்படுகின்றன. மாநிலக் கணக்குத் துறைத் தலைவர் அலுவலகத்தைச் சேர்ந்த தணிக்கைக் குழுவும் ஆண்டுக்கு ஒருமுறை சோதனைத் தணிக்கை செய்கின்றது. ஊராட்சிகளின் கணக்குகள் ஊராட்சி ஒன்றிய ஊராட்சி வளர்ச்சி அதிகாரியைத் தவிர வெளியார் எவராலும் தணிக்கை செய்யப் படுவதில்லை.

8·8. உள்ளாட்சி நிதிக் கணக்குகள் தலைமை ஆராய்வாளர் தணிக்கை செய்வது ஆண்டுக்கு இருமுறையிலிருந்து ஒரு முறையாகக் குறைக்கப்படலாம் என்று நிதித்துறையைச் சேர்ந்த நிர்வாக அமைப்பு—நடைமுறைப் பிரிவு பரிந்துரைத்துள்ளது. ஆனால், உள்ளாட்சி நிதிக் கணக்குகள் தலைமை ஆராய்வாளரோ, தணிக்கை செய்வது இருமுறை யிலிருந்து பல முறைகளாக உயர்த்தப்பட வேண்டுமென்றும், ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்திலும் உடன்தணிக்கையும் முன் தணிக்கையும் நடைபெற வேண்டுமென்பது நமது குறிக்கோளாகவேண்டும் என்றும் இதற்காக, தணிக்கை இன்ஸ்பெக்டர் ஒருவர், (425—25—700 தரம்) தணிக்கை உதவியாளர்கள் இருவர் (ரூ. 250—10—300—15—450 தரம்) ஆகியோர் அடங்கிய தணிக்கைப் பிரிவு ஒன்று ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும் அமைக்கப்பட வேண்டும் என்றும் கருதுகிறார்.

8·9. ஆறு திங்களுக்கு ஒரு முறை தற்போது நடைபெறும் தணிக்கையினால் தணிக்கைப் பணி முழுமையாக நடைபெறவில்லை என்ற கருத்தினை உள்ளாட்சி நிதிக் கணக்குகள் தலைமை ஆராய்வாளர்

கொண்டுள்ளார். ஊராட்சி ஒன்றியங்களின் பற்றுவரவுகள் I-ம் தர தேர்வு நிலை நகராட்சிகளையும் விஞ்சுகின்றன என்பதைக் கருதிப் பார்க்கையில் தணிக்கைகளுக்கு இடையிலான கால அளவு பொதுவாக உடன்தணிக்கை கால அளவுக்குக் குறைக்கப்படவேண்டுமென அவர் கருதுகிருர். உடன் தணிக்கையில், கொடுக்கப்பட்டுள்ள திங்களுக்கான கணக்குகள் அடுத்த திங்கள் இறுதிக்குள் தணிக்கை செய்யப்பட்டு முடிவு செய்யப்படுகின்றன. உடன் தணிக்கைக்கென அளிக்கப்பட்டுள்ள பணியாளரைக் கொண்டே வளர்ச்சி வட்டாரத்தின் செலவுப்பட்டியல் அனைத்தையும் பலநிலைகளில் முன்தணிக்கை செய்வதையும், ஒன்றியத்தில் அடங்கியுள்ள ஊராட்சிகள் அனைத்தின் கணக்குகளையும் ஆண்டுக்கொரு முறையோ அல்லது அரையாண்டுக்கு ஒரு முறையோ முறைப்படி தணிக்கை செய்வதையும் மேற்கொள்ள முடியும் என்றும் அவர் கருதுகிருர்.

8.10. உள்ளாட்சி நிதிக் கணக்குகளின் தலைமை ஆராய்வாளர் எழுப்பிய பெருவாரியான தணிக்கை ஆட்சேபனைக் குறிப்புகள் பல்லாண்டுகளாக பதிலிறுக்கப்படாமலோ/சரி செய்யப்படாமலோ இருந்து வருகின்றன. 30-6-72-ம் நாள்வரை சரிசெய்யப்படாமல் உள்ள தணிக்கை ஆட்சேபனைக் குறிப்புகளின் எண்ணிக்கை அவை சம்பந்தப்பட்ட ஆண்டு வாரியாகப் பாகுபடுத்தப்பட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

ஆட்சேபனைக் குறிப்புகள் சம்பந்தப்பட்ட கணக்கு ஆண்டு.	முடிவாகாமல் உள்ள ஆட்சேபனைக் குறிப்புகளின் எண்ணிக்கை.	இதில் சம்பந்தப்பட்ட தொகையின் மதிப்பு.
		ரூ. காசு.
1960–61	77	52,630-30
1961–62	895	9'31,812-43
1962–63	1932	24,55,534-61
1963–64	3155	44,64,284-54
1964–65	4019	50,18,824-40
1965-66	4022	50,42,402-29
1966-67	4251	66,62,057-83
1967-68	5668	89,64,781-84
1968-69	7988	93,17,760-13
1969-70	13713	1,90,75,083-93
1970-71	21827	3,45,20,914-32
1971-72	10026	88,68,692-16
மொத்தம் ..	77,573	10,53,74,778-78

8·11. தொடக்கத்திலிருந்தே, முன் தணிக்கை முறையை நாம் பின் பற்றி இருந்திருப்போமேயானால், இந்த ஆட்சேபனைகளில் பெரும்பாலானவை எழுந்திருக்க முடியாது என்று உள்ளாட்சி நிதிக்கணக்குகள் தலைமை ஆராய்வாளர் கருதுகின்றார். இந்த ஆட்சேபனைகளுக்குத் தீர்வுகாண்பதில் ஏற்படும் நிர்வாகச் செலவுகள், முன் தணிக்கைப் பணி செய்வதற்குக் கூடுதல் தணிக்கைப் பணியாளரை நியமிக்கும் செலவைவிட அதிகமாயிருக்கும்போலிருக்கிறதே என்ற முறையில் சிந்தித்துப் பார்ப்பது சுவாரசியமானதாகும். ஊராட்சி அலுவல்களுக்கு பொதுக் கணக்கு ஆய்வுக்குழு போன்ற அமைப்பு ஒன்று உள்ளது என்கிற அச்சம் இல்லாதிருப்பதும் அதிர்ச்சியூட்டுமளவுக்கு ஆட்சேபனைக் குறிப்புகள் குவிந்துவிட்டதற்குக் காரணமாகக் கூறலாம்.

8-12. ஊராட்சி ஒன்றிய நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள ஊராட்சி நல வளர்ச்சி அதிகாரி, ஊராட்சிகள் கணக்குகளைத் தணிக்கை செய்கிற நடைமுறை, தணிக்கைச் சுதந்திரத்தில் குறுக்கிடுவதாகவும், விரும்பத்தகாத பழக்கங்களுக்கு வழிகோலுவதாகவுமுள்ளது எனக் குறை கூறப்பட்டுள்ளது. ஊராட்சித் தலைவர்கள், ஒன்றியப் பொறியாளர்கள், (ஊராட்சி) நல வளர்ச்சி அதிகாரிகள் ஆகியோருடைய ஒத்துழைப்புடன் போலித் திட்டங்கள் அல்லது நடைமுறையில் இல்லாத பணிகளுக்காக ஊராட்சி நிதிகளைப் பெற்று, குடும்ப நலத் திட்டப் பிரச்சாரத்திற்கான தவிர்க்க முடியாத (கூடுதல்) செலவைச் செய்யும் நடைமுறை பரவலாக இருப்பதாகத் தோன்றுகிறது. பலராலும் போற்றப்படுவதும் அரசின் ஆதரவு பெற்றுள்ளதுமான செலவினங்களுக்காகவே இவ்வாறு நிதிகள் எப்போதும் மாற்றிப் பயன்படுத்தப்படும் என்பதற்கு உத்தரவாதம் ஏதுவும் இருக்க முடியாது. ஊராட்சிக் கணக்குகள் தனிப்பட்ட முறையில் தணிக்கை செய்யப்பட்டால் இந்த நிலை அவ்வளவு எளிதில் தோன்றியிருக்க முடியாது.

8-13. இந்தப் பின்னணியில் பார்த்தால், வட்டார நிலையில் முன் தணிக்கை முறை கொண்டு வரப்பட வேண்டுமென்றும், ஊராட்சி ஒன்றியத்தின் அதிகாரத்திற்குட்படாத ஓர் அமைப்பினால் ஊராட்சிக் கணக்குகள் தணிக்கை செய்யப்பட வேண்டும் என்றும் முடிவுக்கு வரவேண்டியுள்ளது. ஆயினும் இவ்வாறு முடிவு செய்வதற்கு முன், இந்தத் தணிக்கை ஏற்பாடுகளினால் உண்டாகும் கூடுதல் செலவு வளர்ச்சித் திட்டங்களை வேகமாகச் செயல்படுத்துவதில் இது ஏற்படுத்தும் விளைவுகள், களப் பணியாளர் உள்ளங்களில் ஏற்படும் விளைவுகள் ஆகியவற்றைக் கருதிப் பார்க்க வேண்டும்.

8.14. ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும், ஓர் இன்ஸ்பெக்டர், இரு உதவியாளர்களைக் கொண்ட ஒரு தணிக்கைக் குழுவை அமைப்பதால் இவர்களது ஊதியங்களைப் பொறுத்தமட்டில் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 66·78 லட்சம் செலவாகும். (இணைப்பு III). ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் அனைத்திற்குமுள்ள மொத்த வருவாயில் இது 0·7 சதவீதம் மட்டுமே என்றாலும் தனியாகப் பார்த்தால் இது ஒரு கணிசமான தொகையாகும்.

8·15. தணிக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தாமலும், ஊராட்சி ஒன்றியத் தணிக்கையை மேற்கொள்ளாமலும், ஊராட்சிக் கணக்குகளை மட்டும் தணிக்கை செய்யும் பணியைக் கவனிப்பதற்காக, 14 இன்ஸ்பெக்டர்களும் (ரூ. 425–25–700; சராசரிச் செலவு திங்களுக்கு ரூ. 654) 100 தணிக்கை உதவியாளர்களும் (ரூ. 250-10-300-15-450; சராசரிச் செலவு திங்களுக்கு ரூ. 417) தமக்குத் தேவைப்படுவர் என்று உள்ளாட்சி நிதிக் கணக்குத் தலைமை ஆய்வாளர் சுட்டிக் காட்டியுள்ளார். இதற்காக அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 6·12 லட்சம் செலவாகும்.

8·16. இவ்வாறு அதிகச் செலவுகள் ஏற்படுவதோடு மட்டுமல்லாமல், ஊராட்சி ஒன்றிய நிலையில், உடன் தணிக்கை முன் தணிக்கை முறை முதலியவற்றைக் கொண்டு வருதல் வளர்ச்சிப் பணியின் வேகத்தை நிச்சயம் மட்டுப்படுத்தும். ஊராட்சி ஒன்றியத்திற்குக் கட்டுப்படாமல், ஒவ்வொரு பற்று வரவையும் பரிசீலித்துச் சரிபார்க்கிற நிலையான தணிக்கைக் குழு ஒன்று ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இருப்பது விரும்பத்தக்கதாயிராது; நெருக்கமாக இருந்து அன்றாடம் தொடர்புகொள்ளும் காரணத்தினால், தணிக்கைக் குழு தான் அறியாமலேயே தனது சுதந்திரம் பறிபோக அனுமதிக்கக்கூடும். தணிக்கையைத் தீவிரமாக்குவதாலேயே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது என்று இந்த ஆணைக் குழு கருதுகிறது. நன்கு பயிற்சிபெற்ற, புதுமையுடன் சிறப்பாகத் தணிக்கைச் செய்யக்கூடிய நிறுவனம் ஒன்றை அமைப்பது தான் இந்தப் பிரச்சினைக்குச் சரியான தீர்வாகும். வெளியிலிருந்து வருபவர்கள் தணிக்கை செய்வதால் எழக்கூடிய மறுப்புரைகளைத் தவிர்ப்பதன் அவசியத்தை எப்பொழுதும் நினைவிலிறுத்தி வரக்கூடிய இத்தகையதொரு தணிக்கை நிறுவனம், வளர்ச்சி வட்டாரத்தில் வளர்ச்சிப் பணிகளின் தேவைகளுக்கு ஏற்றவாறு நடந்துகொள்ள முடியும். இத்தகைய பதவித்தரம் ஒன்று ஏற்படுவது, 9. 3. பாராவில் சொல்லிய பரிவுரைகளினால் உறுதிப்படும். ஆகவே, முன் தணிக்கைக்காக உடன் தணிக்கைப் பணிக்காக ஊராட்சி ஒன்றியங்களில், தணிக்கைக் குழுக்களை ஏற்படுத்தலாம் என இந்த ஆணைக் குழு பரிவுரைக்கவில்லை.

8·17. ஊராட்சிகளின் தணிக்கையைப் பொறுத்தமட்டில், வளர்ச்சி வட்டாரப் பொறுப்பிலிருந்து (ஊராட்சி) நல வளர்ச்சி அதிகாரியை விடுவித்து, வருவாய்க் கோட்ட அதிகாரியின்/கோட்ட ஊராட்சி அதிகாரியின் நேரடிப் பொறுப்பின்கீழ் வைப்பதால் தணிக்கை பூரண சுதந்திரத்துடன் நடைபெறும் என்பது உறுதியாகலாம் என்று இந்த ஆணைக் குழு கருதுகிறது. ஊராட்சி ஒன்றிய நிலையில் பற்று வரவுகள் பெருவாரியாக இருக்கையில், தனிப்பட்ட ஊராட்சிகளில் இது குறைவாகத் தான் இருக்கிறது. ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் கட்டுப்பாட்டின் கீழ் வராத (ஊராட்சிகள்) நலவளர்ச்சி அதிகாரி ஊராட்சி ஒன்றியத்தின் அன்றாட அலுவலுடன் தொடர்பற்று இருப்பதால், அவர், விருப்பு வெறுப்பில்லாத தணிக்கை நடைபெறுவதை உறுதிபடுத்த முடியும். வேறு மாற்றம் எதையும் கருதிப் பார்ப்பதற்கு முன், தற்போதைக்கு இந்த மாற்றம் 5 ஆண்டு காலத்திற்குச் சோதித்துப் பார்க்கப்படலாம் என்று இந்த ஆணைக் குழு கருதுகிறது.

3-18. உள்ளே 3·9-வது பாராவில் கருதிய விரிவாக்கப்பட்ட புதிய ஊராட்சிகள் அமைந்ததும், தணிக்கை செய்யப்பட வேண்டிய ஊராட்சிகளின் மொத்த எண்ணிக்கை, தற்போதுள்ள எண்ணிக்கையில் சுமார் மூன்றிலொரு பகுதியாக இருக்கும். அந்த நிலையில் உள்ளாட்சி நிதித் தணிக்கையாளர்கள் தனித் தணிக்கை செய்வது கருதப்படுமானால், தேவைப்படுகிற தணிக்கையாளர்கள், இன்ஸ்பெக்டர்கள் ஆகியோரின் எண்ணிக்கையும் செலவும் மிகவும் குறைவாகவே இருக்க முடியும். ஆகவே, விரிவாக்கப்பட்ட புதிய ஊராட்சிகள் அமைக்கப்பட்ட பிறகு மாநிலம்முழுவதும் 5 ஆண்டுக் காலம் சோதித்துப்பார்ப்பதன் அடிப்படையில் (ஊராட்சிகள்) நலவளர்ச்சி தனி அதிகாரியின் தணிக்கை மனநிறைவளிப்பதாயில்லை என்று தெரிந்த பின்னரும் மட்டுமே, ஊராட்சிக் கணக்குகளைத் தணிக்கை செய்ய உள்ளாட்சி நிதித் தணிக்கையாளர்களை அனுமதிப்பதென்பதை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று இந்த ஆணைக் குழு கருதுகிறது.

8-19. ஊராட்சி ஒன்றியங்களின் தனித் தணிக்கையின் மூலம் எழுப்பப்பட்ட மறுப்புரைகள் மிகுந்த கவனத்துடன் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவை விரைவில் தீர்க்கப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு, பொதுக் கணக்குகள் ஆய்வுக் குழுவின் அடிப்படையில், தனிப்பட்ட சட்டமன்றக் குழு ஒன்றை அமைக்க ஆணைக்குழு பரிந்துரைக்கிறது. இக்குழு, ஒவ்வொரு மாவட்டத் தலைமையிடத்திலும் தனது கூட்டங்களை நடத்தலாம். வட்டார வளர்ச்சி அதிகாரி, வருவாய்க் கோட்ட அதிகாரி, மாவட்ட வளர்ச்சி அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் இக்குழுவிற்குப் பதிலளிக்கும்படி செய்யப்படலாம். பொதுக் கணக்குகள் ஆய்வுக் குழுவிற்குக் கணக்குத்துறைத் தலைவர் எவ்வாறு உதவி செய்கிறாரோ அவ்வாறே உள்ளாட்சி நிதிக்கணக்கு ஆய்வாளரும் இக்குழுவிற்கு உதவி செய்யலாம். நகராட்சிகள், மாநகராட்சிகள் தொடர்பான மறுப்புரைகளைக் கவனிக்கவும் இக்குழுவிற்கு அதிகாரமளிக்கலாம்.

9. பணியாளர் நிர்வாகம்.

9-1. ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்திற்கும் ஒரேமாதிரியான பணியாளர் அமைப்பு உள்ளது. ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள், வளர்ச்சிப்பணி அதிகாரிகள், மேலாளர்கள், கணக்கர்கள், உதவியாளர்கள், ஊர் நல உதவியாளர்கள், ஜீப் வலவர்கள் முதலிய அனைவரும் அரசுப் பணியாளர்களாவர். இவர்களது பணிகள் ஊராட்சி ஒன்றியங்களுக்கு இலவசமாக அளிக்கப்பட்டுள்ளன. இவர்களோடு, ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திற்கும் சொந்தமாக இளநிலை உதவியாளர்கள், தலைமை எழுத்தர்கள், தட்டச்சர்கள், ஏவலாள், காசாளர் முதலிய பணியாளர் சிலரும் உள்ளனர். பேரூராட்சிகளின் நிர்வாக அதிகாரிகள் அரசுப் பணியாளர்களாவர். இவர்கள் பேரூராட்சிகளுக்கு முகமையில் அனுப்பப்படுகின்றனர். இவர்களின் ஊதியம் குறித்து, ஆகும் செலவு முழுவதையும் பேரூராட்சிகள் ஏற்கின்றன. பேரூராட்சிகளுக்கும் சொந்தமாகச் சில பணியாளர்கள் உள்ளனர். சில இடங்களில் பகுதி நேர எழுத்தர் ஒருவர் குப்பைக்காரர்கள் சிலர் ஆகியோர் இருப்பது தவிர, ஊராட்சிகளுக்குச் சொந்தமாகப் பணியாளர்கள் வேறு எவருமிலர்.

9-2. அரசுப் பணியாளரும் பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் பணியாளரும் இரு வெவ்வேறு வகைப்படுவர். அரசுப் பணியாளர்கள் அவர்களுக்குப் பொருத்தமான நிர்வாகப் பிரிவுகளுக்குள் மாற்றப்படத்தக்கவராவர். ஆனால், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களைப் பொருத்தமட்டில், அவர்களை எந்த ஊராட்சி ஒன்றியம் பேரூராட்சி நியமித்ததோ அந்த ஊராட்சி ஒன்றியத்திலிருந்து/பேரூராட்சியிலிருந்து சாதாரண அவர்கள் மாற்றப்பட முடியாது.

9-3 இந்த இருவகைப் பணியாளர்கள் வெவ்வேறாக இருந்தாலும், பேரூராட்சிப் பணியிலிருந்தும் ஊராட்சி ஒன்றியப் பணியிலிருந்தும் அரசுப் பணிக்குப் பதவி உயர்வு பெற வகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறாக, பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த தலைமை எழுத்தர்கள், இளநிலை உதவியாளர்கள், அரசுப் பணிகளுக்கு அதாவது, பேரூராட்சிகளில் நிர்வாக அதிகாரிகளாகவும் ஊராட்சி ஒன்றியங்களில் உதவியாளர்களாகவும் கணக்கர்களாகவும் பதவி உயர்வு பெறத் தகுதியுடையவராவர்.

9-4. பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள இளநிலை உதவியாளர், தலைமை எழுத்தர் பதவிகளும், ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள தட்டச்சர், காசாளர், சிற்றெழுத்தர், ஏவலாள் பதவிகளும் முறையான மாநில அரசுப் பதவித்தரங்களாக மாற்றப்பட வேண்டுமென்று ஆணைக் குழுவிடம் முறையிடப்பட்டுள்ளது. இப்பதவிகளுக்கு நிகராக அரசுப் பணியில் உள்ளவர்களுக்கு எத்தகைய தகுதிகள், பொறுப்புகள், கடமைகள் உள்ளனவோ அதே தகுதிகள், பொறுப்புகள், கடமைகள் இப்பதவிகளை வகித்துவருபவர்களுக்கு உண்டு. எனவே, இவர்கள் தனியானதொரு விதித் தொகுப்பின் கீழ் வருவதற்கும் இவர்களைக் கீழ்நிலையில் வைத்திருப்பதற்கும் தெளிவான நியாயம் எதுமில்லை. ஒரே அமைப்பில் ஒத்தகடமைகளை ஆற்றும் பணியாளர்கள், பணி மூப்பு நிலை, ஊதியம், சிறப்பு உரிமைகள் ஆகியவற்றைப் பொருத்தமட்டில், வெவ்வேறாகக் கருதப்படும்போது, ஒழுங்குமுறையும் ஒழுங்குணர்வும் பாதிக்கப்படுகின்றன. இப்பணியாளர்களை மாநில அரசுப் பணியாளர்களாக ஆக்குவதனால், ஒரு பேரூராட்சியிலிருந்து/ஊராட்சி ஒன்றியத்திலிருந்து மற்றொரு பேரூராட்சிக்கு/ஊராட்சி ஒன்றியத்திற்கு, நிர்வாகப் பிரிவிற்குள்ளேயே இவர்களை மாற்ற இயலும்.

9-5. மாநில அரசுப் பணியாளர்களாக ஆக்குவதனால் தற்போது ஆட்களை பணிக்குத் தெரிந்தெடுப்பதில் உள்ள விரும்பத்தகாத நடைமுறைகளும் நீங்கும். தற்போதெல்லாம் பேரூராட்சி/ஊராட்சி ஒன்றியத்தின் விருப்பப்படி உள்ளூரிலேயே நியமனங்கள் செய்யப்படுகின்றன. அவை அரசுப் பணிகளுக்கு ஆட்களைத் தெரிந்தெடுப்பது தொடர்பான வரையறைகள், சிறப்புக்கூறுகள் ஆகியவற்றை எப்போதுமே பின்பற்றுவதில்லை. கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ள மாற்றங்கள் செய்யப்படின், வருங்காலத்தில் மாநில அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம் மூலமாகப் பணிக்கு ஆட்களைத் தெரிந்தெடுக்க ஏற்பாடு செய்ய முடியும்.

9-6. இதில் பெரிதும் நியாயம் இருப்பதாகத் தெரியவருகிறது. ஊராட்சி ஒன்றியத்தில்/பேரூராட்சியில் உள்ள பணியாளர்கள் எண்ணிக்கை, அவர்களை முறையான மாநில அரசுப் பணியாளர்களாக மாற்றுவதனுல் ஏற்படும் நிதிப் பொறுப்புகள் ஆகியவை குறித்து கிராம வளர்ச்சி இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட தகவல் IV-ஆம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பணியாளர்களை அரசுப் பதவித்தரங்களில் எடுத்துக்கொண்டு, ஊராட்சி ஒன்றியங்களிலும் பேரூராட்சிகளிலும் பணியாற்ற அனுப்பி வைத்தால், இது குறித்து பேரூராட்சிகளும் ஊராட்சி ஒன்றியங்களும் ஏற்கவிருக்கும் கூடுதல் செலவு அதிகமாக இராது என்பதை மேற்கண்ட இணைப்பிலிருந்து தெரிந்துகொள்ளலாம். எனவே, இப்பதவிகளை மாநில அரசுப் பதவிகளாக ஆக்குவதனுல் அதிக நன்மை ஏற்படும் என்று ஆணைக்குழு கருதுவதால் அவ்வாறே பரிந்துரைக்கிறது.

9·7. ஊராட்சி ஒன்றிய அமைப்பில் பணியாற்றி வரும் அரசுப் பணியாளர்கள் இரு வெவ்வேருன வகையைச் சேர்ந்தவராவர். அரசுத் தொழில் நுட்பத் துறைகள் சிலவற்றைச் சேர்ந்தவர்களும் ஊராட்சி ஒன்றியங்களில் குறிப்பிட்ட காலத்திற்குப் பணியாற்ற முகமையில் அனுப்பப்பட்டவர்களுமான அதிகாரிகள், பணியாளர்கள் ஆகியோர் முதல் வகையைச் சேர்ந்தவராவர். வேளாண்மை வளர்ச்சிப் பணி அதிகாரிகள், கூட்டுறவு வளர்ச்சிப் பணி அதிகாரிகள், கால்நடை வளர்ப்பு வளர்ச்சிப் பணி அதிகாரிகள், இளநிலைப் பொறியாளர்கள் முதலியோர் இவ்வகையைச் சேர்ந்தவராவர். ஊராட்சி வளர்ச்சிப் பணியைச் சேர்ந்த அதிகாரிகள், பணியாளர் ஆகியோர் இரண்டாவது வகையைச் சேர்ந்தவராவர். அவர்கள் பின்வருமாறு: உதவியாளர்கள், கணக்கர்கள், ஊர் நல உதவியாளர்கள், ஊராட்சி வளர்ச்சிப் பணி அதிகாரிகள், கல்வி வளர்ச்சிப் பணி அதிகாரிகள், ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களின் மேலாளர்கள், வருவாய்க் கோட்ட அதிகாரி அலுவலகத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலும் உள்ள ஊராட்சி வளர்ச்சித் தலைமை எழுத்தர்கள், கணக்கர்கள், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள், பேரூராட்சி நிர்வாக அதிகாரிகள், மாவட்ட ஊராட்சி அதிகாரிகள், மாவட்ட வளர்ச்சி அதிகாரிகள் முதலியோர். ஊராட்சி வளர்ச்சிப் பணியைச் சேர்ந்த அதிகாரிகள், பணியாளர்கள் ஆகியோரின் தற்போதைய அமைப்புமுறை V-ஆம் எண் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. பல்வேறு வகைப் பதவிகள் அவற்றின் எண்ணிக்கை, சம்பள வீதங்கள், சராசரி செலவுகள் ஆகியவை VI ஆம் எண் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. ஊராடசி வளர்ச்சிப் பணியில் சேருவதற்கான தகுதிகள், இளநிலை உதவியாளர்கள், ஊர்நல உதவியாளர்கள் (நிலை II) ஆகியோருக்குள்ள தகுதிகளே ஆகும். உதவியாளர், ஊர்நல உதவியாளர் பதவிகள் ஒன்றுக்கொன்று மாற்றப்படத்தக்கவையல்ல; ஆனுல் உதவியாளர், கணக்கர் பதவிகள் ஒன்றுக்கொன்று மாற்றப்படத்தக்கவையாகும். இந்த அமைப்பின்கீழ் சீர்திருத்தம் செய்வதற்கான சில முக்கியமான பகுதிகள் ஆணைக்குழுவின் நாட்டத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. ஊராட்சி வளர்ச்சித்துறையில், நடைமுறையில் எல்லா நிலையிலும் அதிகாரிகள், பணியாளர்களின் பதவி உயர்வில் தேக்கம் ஏற்பட்டிருப்பது அத்துறையை எதிர்நோக்கியுள்ள மிகக் கடுமையான பிரச்சினையாகும். இவ்வாறு தேக்கம் ஏற்பட்டிருக்கும் கால அளவு,

எந்தெந்த நிலையில் தேக்கம் ஏற்பட்டுள்ளது ஆகியவைபற்றி கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்தின் உதவியுடன் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. அதன் முடிவுகள் VII-ஆம் எண் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. இப் பிரச்சினை II-ஆம்நிலை ஊர்நல உதவியாளர்கள் அளவில் மிகக் கடுமையாக இருப்பதாகத் தோன்றுகிறது. மொத்தம் உள்ள II ஆம் நிலை ஊர்நல உதவியாளர்கள் 2,980 பேரில், 1,106 பேர் 10 ஆண்டு களாகப் பதவியுயர்வு எதுவுமின்றி அதே பதவியில் பணியாற்றி வந்துள்ளனர். இந்நிலை, இயல்பாகவே ஊர்நல உதவியாளர்களிடையே கணிசமான அளவிற்கு ஆர்வத்தைச் சிதைத்து மனமுறிவை ஏற்படுத் தியுள்ளது. ஊர்நல உதவியாளர்கள் கிராம மக்களுடன் தொடர்பு கொண்டு பல்வேறு வளர்ச்சித் துறைகளால் ஏற்பாடு செய்யப்படுகின்ற வளர்ச்சிப் பணி பற்றி, குறிப்பாக வேளாண்மை வளர்ச்சிப் பணிபற்றி அவர்களுக்கு எடுத்துரைத்துப் பல்வகை நோக்கங்களுடன் செயல்படு கின்றனர்; சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் முழு வெற்றியும் அவர் களுடைய ஆர்வம், திறமை இவற்றையே முழுதும் சார்ந்திருக்கிறது. ஊர்நல உதவியாளர்களின் பதவி உயர்வுக்கான புதிய வழிகளைக் காண்பதற்கு, அவர்களுடைய குறைகளைத் தீர்க்கும் நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட வேண்டும் என ஆணைக்குழு கருதுகிறது. அவர்கள் பின்வருவன போன்ற பதவிகளுக்குப் பதவியுயர்த்தப்படு வதற்குத் தகுதியுடையவர்களாகச் செய்யப்பட வேண்டும்: ஊராட்சி வளர்ச்சி அதிகாரி, கல்வி வளர்ச்சி அதிகாரி, வேளாண்மை வளர்ச்சிப் பணி அதிகாரி, கூட்டுறவு வளர்ச்சிப் பணி அதிகாரி, வட்டார அளவிலான குடும்ப நலத் திட்ட வளர்ச்சிப் பிரச்சாரகர், ஊராட்சி ஒன்றிய மேலாளர்.

9·8. இது தொடர்பாக ஆணைக்குழு அளிக்கும் செயற்குறிப்பிற்காணும் பயனுள்ள வழி என்னவெனில், வேளாண்மை, கூட்டுறவு, கல்வி முதலான வளர்ச்சித் துறைகளில் முன்னேறிச் செல்வதற்கு ஊர்நல உதவியாளர் களுக்கு வழியமைத்துத் தருதலாகும். இந்த முறையைச் செயலுக்குக் கொண்டு வரும் பொருட்டு, ஊர்நல உதவியாளர்கள் பதவிகட்கு ஆட்சேர்ப்பு செய்தல் திட்டங்கள், பணியிருப்புப் பயிற்சி, அவர்களது பணியை மதிப்பீடு செய்தல் ஆகியவற்றில் மாறுதல்கள் செய்யக் கருதப் பட்டுள்ளது.

9.9. பல்வேறு துறைகளிலும் பதவியுயர்வு பெறுவதற்கு ஊர்நல உதவியாளர்களைத் தகுதியுடையவர்களாகச் செய்யும் அளவிற்குத் துறையின் நடவடிக்கைகளில் உள்ள இன்றியமையாக் கூறுகளை எளிதில் புரிந்து கொள்ளுவதில் அவர்களுக்கு உள்ள திறமையின் மீது அவ்வத்துறை களின் இயக்குநர் அலுவலகங்கள் நம்பிக்கைக் கொள்ளத் தூண்டும் வகையில் அப்பதவிக்குத் தற்போதுள்ள ஆட்சேர்ப்பு முறை அவ்வளவாக மனநிறைவளிப்பதாக இல்லை. தொடக்கத்தில் ஊர்நல உதவியாளர்கள் மாநில அளவிலமைந்த பிரிவைச் சேர்ந்தவர்களாயிருந்தனர்; மாநில அரசுப் பணியாளர் தேர்வுக் கழகத்தின் மூலம் அவர்கள் சேர்க்கப்பட் டனர். மறுப்புக்கு இடமில்லாத, நியாயமான இந்த முறை பின்னர்

கைவிடப்பட்டது. அதன் பின்னர், ஊர்நல உதவியாளர்கள், பெரும் பாலும், தனிப்பட்ட அடிப்படையில் வளர்ச்சி இணை ஆணையாளரால் சேர்க்கப்பட்டனர். தற்போது பணிபுரிந்து வருகின்ற ஊர்நல உதவியா ளர்களில் மிகப் பெரும்பாலோர் இந்த வழியில் சேர்க்கப்பட்டவர்களே யாவர். மாவட்டப் பிரிவுகளின் அடிப்படையில் இப்பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யும் அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் அண்மையில் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பதவியை மாநில அரசுப் பணி யாளர் தேர்வுக் கழகத்தின் வரம்பிற்கு வெளியே கொண்டு வருவதற்குப் போதுமான காரணங்கள் இல்லையென்று ஆணைக்குழு கருதுகிறது. இப்பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யும் பணி மாநில அரசுப் பணியாளர் தேர்வுக் கழகத்திடமே ஒப்படைக்கப்படலாம் என்று ஆணைக் குழு பரிந்து ரைக்கிறது. இப்பதவிக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்கும் பணியில் கிராம வளர்ச்சித் துறை இயக்குநர் அல்லது அவரது இணை இயக்குநர் அரசுப் பணியாளர் தேர்வுக்கழகத்துடன் இணைந்து செயல்படச் செய்யலாம்.

9. 10. ஊர்நல உதவியாளர்கள் தற்போது முற்றிலும் களப்பணி யாளர்களாகவுள்ளனர்; அலுவலகப் பணியைக் கற்பதில் இவர்களுக்கு வாய்ப்பு எதுவும் கிடைப்பதில்லை. பின்னால் உயர்ந்த நிர்வாகப் பதவிகளை வகிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்ற சார்நிலைப் பணியா ளர்களின் பணித் திட்டம் அவர்களுக்கு அலுவலகப்பணி அனுபவம், களப்பணி அனுபவம் ஆகிய இரண்டினையும் அளிக்கும் வகையில் வகுத் தமைக்குப்பட வேண்டும், ஊராட்சி வளர்ச்சித் துறையைப் பொறுத்த மட்டில், பெரும்பாலும், கிராம வளர்ச்சித்துறை இயக்குநர் அலுவல கத்திலும் பேரூராட்சிகளிலும் உள்ள குறைந்த எண்ணிக்கையிலான உதவியாளர், இளநிலை உதவியாளர் பதவிகளை நிரப்புவதற்காகத் தவிர, மற்றப்படி, இவ்விரண்டு பதவித் தரங்களை தனியே வைத்திருப் பதற்கு அவசியம் எதுமில்லை என்று ஆணைக்குழு கருதுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அலுவலகங்களிலும், கோட்ட அலுவலகங்களிலு முள்ள ஊராட்சி வளர்ச்சிப் பிரிவுகளிலும், ஊராட்சி ஒன்றிய அலுவல கங்களிலும் ஊர்நல உதவியாளர்கள் அலுவலகப் பணி அனுபவம் பெறும்பொருட்டு உதவியாளர்களாகவும் இளநிலை உதவியாளர்களாகவும் பணிபுரிவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். ஊர்நல உதவியாளர்களின் பணி பின்வருமாறு அமைந்திட வேண்டும் என்று ஆணைக்குழு வழி வகுக்கிறது. II-ம் நிலை ஊர்நல உதவியாளர் 3 ஆண்டுகள் களப்பணி யாற்றிய பின்னர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணி யேற்பார். ஓராண்டு அல்லது ஈராண்டுகளுக்கு அலுவலகத்தில் பணி யாற்றிய பின்னர் அவர் I ஆம் நிலை ஊர்நல உதவியாளராக 5 ஆண்டுக் காலத்திற்கு மீண்டும் களப்பணியாற்றச் செல்வார். அக்கால முடிவில் அவர் அலுவலகத்தில் உதவியாளராகப் பணிபுரியத் தொடங்கி நிர்வாக நிலையில் பதவி உயர்வு பெறும் பொருட்டுக் காத்திருப்பார். இந்த நிலையில் அவர் விருப்பார்வத்தையொட்டி, அவர் பின்வரும் அதிகாரி களில் ஒருவராகப் பதவியேற்பதற்குத் தகுதிபெறச் செய்யும் பயிற்சியினைப் பெற்றுவர அனுப்பப்படலாம்; அவையாவன: வளர்ச்சிப் பணி அதிகாரி (வேளாண்மை); வளர்ச்சிப் பணி அதிகாரி (கூட்டுறவு); வளர்ச்சிப் பணி அதிகாரி (கல்வி); வட்டார அளவிலான குடும்பநலத் திட்ட வளர்ச்சிப்

பணிப்பிரச்சாரகர். இப்பயிற்சிகளுக்கு அனுப்பப்படுவதற்காக ஊர்நல உதவியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் பணி பின்வருவோர் அடங்கிய குழுவொன்றால் கவனமாகச் செய்யப்பட வேண்டும்: மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வளர்ச்சி அதிகாரி மாவட்ட வேளாண்மை அதிகாரி/வேளாண்மைத் துறைத் துணை இயக்குநர், பள்ளிக் கல்வித் துணை இயக்குநர், கூட்டுறவுச் சங்கங்கள் இணைப்பதிவாளர். அவர் இதற்கென வரையறுக்கப்பட்ட தேர்வுகளில் வெற்றிபெறுவதைச் சார்ந்தும், இதற்கென வரையறுக்கப்பட்ட தகுதிப் பட்டயம் அல்லது பட்டம் பெறுவதைச் சார்ந்தும், அவர் வளர்ச்சிப் பணி அதிகாரியாகப் பதவியுயர்த்தப்படுவாரென நம்பிக்கை கொள்ளலாம். ஊர்நல உதவியாளர்களின் பணி பற்றிய மதிப்பேடுகளில் காணுகின்றவாறு, அவர்களது விருப்பார்வ அடிப்படையில் தேர்வு நடத்தப்படும். வேளாண்மை வளர்ச்சிப் பணியில் ஊர்நல உதவியாளர்களுக்குள்ள திறமை, ஆர்வம் இவற்றைக் கருத்திற்கொண்டு வளர்ச்சிப்பணி அதிகாரி (வேளாண்மை), அவர்களின் பணி பற்றி மதிப்பிட வேண்டும் என ஆணைக் குழு ஏற்கெனவே 6 2.5, பாராவில் பரிந்துரைத்துள்ளது. இது போலவே, வளர்ச்சி பணி அதிகாரி (கூட்டுறவு), வளர்ச்சிப் பணி அதிகாரி (கல்வி), வட்டார அளவிலான குடும்பநலத் திட்ட வளர்ச்சிப் பணிப் பிரச்சாரகர் ஆகியோரிடமிருந்தும், அவ்வவர் பணிபுரியும் துறைகள் தொடர்பான ஊர்நல உதவியாளரின் நாட்டம், ஆர்வம் குறித்து மேற் சொன்னது போன்ற மதிப்பீடுகளைப் பெறுவது நன்மை பயப்பதாக இருக்கலாம். பல்வேறு துறைகளில் உயர் பதவிகளுக்கு ஊர்நல உதவியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் சமயத்தில் இந்த மதிப்பீடுகளின் முக்கியத்துவம் புலனாகும்.

9·11. ஊர்நல உதவியாளர், ஒருமுறை வளர்ச்சிப்பணி அதிகாரி (வேளாண்மை), வளர்ச்சிப் பணி அதிகாரி (கூட்டுறவு) அல்லது வளர்ச்சிப்பணி அதிகாரி (கல்வி) முதலிய பதவிகளுக்குப் பதவியுயர்த்தப்பட்டால், அவர் இன்னும் இருவகைகளில் மேற்பதவிகளுக்கு உயர்வதற்கு வாய்ப்பு உண்டு. அவர் ஊராட்சி வளர்ச்சி அமைப்பில் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அளவிற்கும், கூட்டுறவு, கல்வி அல்லது வேளாண்மை ஆகிய துறைகளிலும் கூட அதுபோன்ற அளவிற்கும் பதவி உயர்வு பெறுவதற்குத் தகுதியுடையவராவார். இத்தகையதொரு ஏற்பாட்டைப் பின்பற்றினால் அது ஊர்நல உதவியாளர்களுக்குப் பெருமளவிற்கு பதவி உயர்வு வாய்ப்புகளை அளிக்கும்; அத்தகைய ஏற்பாடு, அவர்கள், குறிப்பாக வேளாண்மை, கூட்டுறவு, கல்வி ஆகிய துறைகளில் மிகச் சிறப்பாகப் பணிபுரிய வேண்டுமெனும் ஊக்கத்தை அவர்கள் உள்ளத்தில் வலுவாகத் தோற்றுவிக்கும்.

9.12. கணக்கிடும் அமைப்புமுறை ஏனைய நிர்வாக அமைப்புகளிலிருந்து பிரிக்கப்படலாம் என்று 8·3 பாராவில் ஆணைக்குழு ஏற்கெனவே பரிந்துரைத்துள்ளது. ஊர்நல உதவியாளர்கள் கணக்காளர்களாகப் பணிபுரியவேண்டிய அவசியமில்லை; எனவே, ஊர்நல உதவியாளர்கள் பதவியும், உதவியாளர்கள் பதவியும், ஒன்றிலிருந்து ஒன்றுக்கு மாற்றப்படுதற்குரியவையாய் இருக்க வேண்டும் எனவும், அதே சமயத்தில்,

கணக்காளர் பதவியும் ஊர்நல உதவியாளர் பதவியும் அவ்வாறு ஒன்றி லிருந்து ஒன்றுக்கு மாற்றப்படுவதற்குரியவையாய் இருக்கவேண்டியதில்லை என்றும் ஆணைக்குழு பரிந்துரைந்துள்ளது.

9·13 மேலாளர்கள், வளர்ச்சிப் பணி அதிகாரி (ஊராட்சி), வளர்ச்சிப் பணி அதிகாரி (கல்வி) ஆகிய பதவிகளும், ஊராட்சி வளர்ச்சிக் கணக்காளர்கள் பதவியும் ஒரே சம்பள வீதத்தை உடையன; அதாவது, ரூ. 300—15—420—20—500 என்னும் சம்பள வீதத்தில் உள்ளவை; தற்போது அப்பதவிகளிலிருப்போர், ஒரு பதவியிலிருந்து இன்னொன் றுக்கு மாற்றப்படலாம். இப்பதவிகளை வகிப்போர் கீழ்க்காணும் பதவி களுக்குப் பதவியுயர்த்தப்படுவதற்குத் தகுதியுடையவராவர்: (a) வரு வாய்க் கோட்ட அதிகாரிகள் அலுவலகத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலும் ஊராட்சி வளர்ச்சித் தலைமை எழுத்தர்கள்; (b) ஊராட்சி கூட்டு அதிகாரிகள். இப்பதவிகளின் சம்பள வீதம் ரூ. 350—15—425—25—600 ஆகும். இவை வருவாய்த்துறையிலுள்ள துணைத்தாசில்தார் பதவிக்குச் சமமானவையாக வகைப்படுத்தப்படலாம். இதற்கு அடுத்த பதவியுயர்வு ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் பதவி யாகும்; இப்பதவி தாசில்தார் பதவிக்குச் சமமானதாகும்.

9.14. ரூ. 350-15—425—25--600 என்ற சம்பள வீதத்தில் 200 பதவிகள் மட்டுமேயுள்ளன என்றும், ரூ. 300—15—420—20—500 என்ற சம்பள வீதத்தில் உள்ள 1,384 பேர், 434 பதவிகளே உள்ள ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் பதவித் தரத்திற்குப் பதவி உயர்வு பெறவேண்டு மாயின், மேற்குறிப்பிட்ட 200 பதவிகளில் ஒன்றில் நியமனம் செய்யப் பட்டுத்தான் பதவி உயர்வு பெறமுடியும் என்றும் ஆணைக்குழுவுக்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதனால் குறுகிய காலத்துக்கே வகிக்கப்போகும் ஒரு பதவிக்குப் பதவி உயர்வுபெற ஏராளமானவர்கள் பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டியதாய் உள்ளது. எனவே, (1) மேலாளர், (2) ஊராட்சி வளர்ச்சிப் பணி அதிகாரி, (3) கல்வி வளர்ச்சிப் பணி அதிகாரி, (4) ஊராட்சி வளர்ச்சிக் கணக்காளர், (5) ஊராட்சி வளர்ச்சித் தலைமை எழுத்தர், (6) ஊராட்சிக் கூடுதல் அதிகாரி ஆகிய ஆறு பதவிகள் அனைத்தும் ரூ. 350—15--425—25—600 என்ற சம்பள வீதத்தில் துணைத் தாசில்தார் பதவித் தரத்திற்கு நிகரானவையாகச் செய்யப்பட லாம் என ஆணைக்குழுவிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால், அதிகாரிகள் அமைப்பில் எண்ணிக்கையில் ஒருசிலவாக இருக்கும் பதவியை வகித்த பின்னரே மேல்பதவி கிட்டும் என்ற இடர்ப்பாடு களையப்பட்டு ஊராட்சி வளர்ச்சித் துறையிலுள்ள பதவித் தரங்களை வருவாய்த் துறையிலுள்ள பதவித் தரங்களுக்கு இணையானவையாக மாற்ற இயலும். இந்த ஆறு பதவிகளையும் துணைத் தாசில்தார் பதவித் தரத்திற்கு இணையாக மாற்று வதற்கென மேற்கூறப்பட்ட கருத்து நிறைவேற்றப்படுவதற்கு ஆண்டுக்கு ரூ. 13.45 லட்சம் கூடுதல் செலவு ஏற்படும். (VIII-ம் எண் இணைப்பைக் காண்க.)

9.15. இந்தக் கருத்துரையை ஆணைக்குழு கவனமாகப் பரிசீலித் துள்ளது. இந்தப் பெருமளவு கூடுதல் செலவு ஏற்படுவதைத் தவிர, இந்தப் பதவிகள் ஆறினையும் ஒன்றாக இணைப்பது அதிகாரிகள் அமைப்பு

நிலையில் கட்டுப்பாடு, ஒழுங்கு ஆகியவற்றின் அடிப்படையில் பார்த்தால், விரும்பத்தக்கதல்ல. ஊராட்சிக் கூடுதல் அதிகாரி, ஊராட்சி வளர்ச்சித் தலைமை எழுத்தர் ஆகியோர், வளர்ச்சிப் பணி அதிகாரிகள், ஊராட்சி ஒன்றிய மேலாளர்கள், ஊராட்சி வளர்ச்சிக் கணக்காளர்கள் ஆகியோரின் பதவித்தரங்களைக் காட்டிலும் உயர்ந்த பதவித் தரத்தைப் பெற்று, இவர்களுக்குள்ள பொறுப்புகளைக் காட்டிலும் உயர்ந்த பொறுப்புகளை வகிக்கின்றனர். ஊராட்சி வளர்ச்சித் தலைமை எழுத்தர்கள் ஊராட்சி வளர்ச்சிக் கணக்காளர்களை உண்மையில் கட்டுப்படுத்தி மேற்பார்வையிடுகின்றனர். இந்தப் பதவிகள் ஒன்றுக்கொன்று நிகரான பதவிகள் எனச் செய்யப்படுவதால், கட்டுப்பாடு, மேற்பார்வை ஆகிய பணிகளைப் பலனற்றதாக்கி, வருவாய்க் கோட்ட அதிகாரி/மாவட்ட ஊராட்சி அதிகாரி, ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் ஆகியோரின் நிலையில் தவிர்க்கக்கூடிய பணிச்சுமையைப் பெருக்கும் அதிகாரிகள் அமைப்பில் பதவி உயர்வுக்குள்ள குறுகிய வாய்ப்பு இடைநிலை விரும்பத்தகாதது என்று கருதுவதும் அவசியமில்லை. இந்த நிலையில் பதவி மாற்றங்கள் காரணமாகத் துறைக்கு இடர்ப்பாடு ஏதும் சிறப்பாக ஏற்படவில்லை. எனவே, இந்தக் கருத்துரையை ஆணைக்குழு பரிவுரை செய்ய இயலவில்லை. எனினும், வருவாய்க் கோட்டத்தின் பரப்பளவு குறைக்கபபடுவதன் காரணமாக ஊராட்சிக் கூடுதல் அதிகாரிகளின் 100 பதவிகள் அற்றுப்போகும். இதனால், 10-வது அத்தியாயத்தில் ஆணைக் குழு கருத்து தெரிவித்துள்ள மாற்று ஏற்பாட்டில் பதவி உயர்வு இடைநிலை வாய்ப்புகள் மேலும் குறைவாகும். அத்தகைய நேர்வில், இந்த இரண்டு வகைப் பணியாளர்களையும் (அதாவது ஊராட்சி வளர்ச்சித் தலைமை எழுத்தர்களை ஒருபுறமும் ஊராட்சி வளர்ச்சிப்பணி அதிகாரி, கல்வி வளர்ச்சிப்பணி அதிகாரி, மேலாளர்கள், ஊராட்சி வளர்ச்சிக் கணக்காளர்கள் ஆகியோரை மற்றொருபுறமும்) ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களாகப் பதவி உயர்வு பெற நேரடியாகத் தகுதியுடையவர்களாக்க வேண்டியது அவசியமாகலாம்.

9.16. பேரூராட்சி நிர்வாக அதிகாரிகள் பதவித் தரத்தை ஊர்நல உதவியாளர்களின் பதவித் தரத்திலிருந்து பிரிக்க வேண்டுமா என்பது குறித்தும் அரசு ஆணைக்குழுவைக் கேட்டுள்ளது. கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பேரூராட்சி நிர்வாக அதிகாரிகள் மூவகைப்பட்டவர்களாவர்:—

தரம்.	சம்பள வீதம்.	மாதம் ஒன்றுக்கு ஆகும் சராசரிச் செலவு.	பதவிகளின் எண்ணிக்கை.
II	ரூ. 210-5—245-10—325.	ரூ. 312.	163.
I	ரூ. 250-10—400	ரூ. 387.	359.
தேர்வுத் தரம்.	ரூ. 295-10—375-15–540.	ரூ. 455.	78.

அண்மைக் காலம்வரை, ஊர்நல உதவியாளர்களின் பதவித் தரம் I, II ஆகியவற்றில் உள்ளவர்களை நிர்வாக அதிகாரிகள் பதவித் தரம் I, II ஆகியவற்றிலுள்ளவர்களுடனும், நிர்வாக அதிகாரிகள் பதவித் தரம் I, II ஆகியவற்றில் உள்ளவர்களை ஊர்நல உதவியாளர்களின் பதவித் தரம் I, II ஆகியவற்றில் உள்ளவர்களுடனும் ஊராட்சி

வளர்ச்சிப் பணி அதிகாரிகள் பதவி தேர்வுத் தர அதிகாரிகளின் பதவியுடனும், தேர்வுத்தர அதிகாரிகளின் பதவி ஊராட்சி வளர்ச்சிப் பணி அதிகாரிகளின் பதவியுடனும் மாற்றப்படத்தக்கனவாய் இருந்தன. நிர்வாக அதிகாரிகள் தரம் I, II ஆகியவை, ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள ஆகியவற்றில் பணிபுரியும் இளநிலை உதவியாளர்கள், தலைமை எழுத்தர்கள் ஆகியோர்களுக்கான பதவியுயர்வுப் பதவிகளாயிருந்தன. இந்த ஏற்பாட்டில் சில முக்கிய குறைபாடுகள் இருந்தன. முதற்கண், ஊராட்சி ஒன்றியங்களிலும் பேரூராட்சிகளிலும் பணிபுரியும் இளநிலை உதவியாளர்கள், தலைமை எழுத்தர்கள் ஆகியோர் பதவி உயர்வு பெறுவதற்கு ஏற்கெனவே குறைவாக இருந்த வாய்ப்புகள் இந்தப் பதவிகளுக்கு ஊர்நல உதவியாளர்களையும் ஊராட்சி வளர்ச்சிப் பணி அதிகாரிகளையும் மாற்றம் செய்வதன் காரணமாக மேலும் குறைந்தன. இரண்டாவதாக, பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றில் பணிபுரிந்த தலைமை எழுத்தர்கள், இளநிலை உதவியாளர்கள் பதவித் தரங்களிலிருந்து பதவி உயர்வுபெற்ற நிர்வாக அதிகாரிகளை ஊர்நல உதவியாளர்களாக மாற்றம் செய்ததால, வேளாண்மை, அது தொடர்பான தொழில்கள் ஆகியவற்றில் இரண்டாண்டு சிறப்புப் பயிற்சி பெற்றிருக்க வேண்டும் என்ற சிறப்புத் தகுதி வேண்டிய ஒரு பதவியில், பயிற்சி பெருதவர்கள் பணிபுரியும் நிலை ஏற்பட்டது. இந்தக் காரணங்களால், ஊர்நல உதவியாளர்களை, நிர்வாக அதிகாரிகள் பதவிகளுக்கும் நிர்வாக அதிகாரிகளை ஊர்நல உதவியாளர்களின் பதவிகளுக்கும் மாற்றக்கூடாது எனவும், நிர்வாக அதிகாரிகளின் பதவிகள், நேரடியாக ஆள் எடுப்பதன் மூலமும், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் தலைமை எழுத்தர்கள், இளநிலை உதவியாளர்கள் ஆகியோரின் பதவித் தரத்திலிருந்து பதவி உயர்வு அளிப்பதன் மூலமும் நிறைவு செய்யப்பட வேண்டும் எனவும் ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 2-7-71ஆம் நாளிட்ட 1579 ஆம் எண் அரசு ஆணையில் அரசு ஆணை பிறப்பித்தது. ஊர் வளர்ச்சி–உள்ளாட்சித் துறையின் 27-3-72-ம் நாளிட்ட 96696/E3/71-3 ஆம் எண் அரசுக் குறிப்பாணையில், நிர்வாகச் சீர்திருத்த ஆணைக் குழுவின் ஆய்வுரையை எதிர்பார்த்து இந்த ஆணை செயல்படுத்தப்படாமல் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

9.17. இது குறித்து ஆணைக்குழு கவனமாகப் பரிசீலனை செய்தது. ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 2–7–71 ஆம் நாளிட்ட 1579 ஆம் எண் அரசு ஆணையில் வெளியிடப்பட்ட ஆணைகள் சரியாகவும், விரும்பத்தக்க முறையிலும், அமைந்துள்ளன என்றும் அவை செயல்படுத்தப்பட வேண்டுமென்றும் கருதுகிறது. பயிற்சிபெருதவர்கள் ஊர்நல உதவியாளர்களாகப் பணிபுரிவதைத் தவிர்க்க வேண்டிய அவசியம் காரணமாக, ஊர்நல உதவிப் பணியாளர்கள், பேரூராட்சிகளின் நிர்வாகப் பணியாளர்கள் ஆகியோருக்கிடையே பதவி மாற்றம் செய்யப்படும் முறை கைவிடப்படவேண்டும். இப்புதிய அமைப்பில், பேரூராட்சிகளில் பணிபுரியும் இளநிலை உதவியாளர்கள், தலைமை எழுத்தர்கள் ஆகியோர் நிர்வாக அதிகாரி தரம் II-க்குப் பதவி உயர்வு பெற்று, தேர்வுத்தர நிர்வாக அதிகாரியின் நிலைக்கு நாளடைவில் உயர்த்தப்படுவர். இந்த நிலையில், ஊராட்சி வளர்ச்சிப்பணி அதிகாரிகளுடன் அவர்களையும் அவர்களுடன் ஊராட்சி

வளர்ச்சிப்பணி அதிகாரிகளேயும் மாற்றம் செய்யப்படத் தக்கவர்களாக்க வேண்டும்; அதன் பின்னர், ஊராட்சி வளர்ச்சிப்பணி அதிகாரிகள் அமைப்புடன் இணைக்கப்படலாம். தேர்வுத்தர நிர்வாக அதிகாரிகளே நகராட்சி ஆணையாளர்களாகப் பதவி உயர்வு பெறத் தகுதியுடையவர்களாக்குவது குறித்தும் அரசு பரிசீலிக்கலாம்.

9.18. பாரா 9·6-ல், ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள இளநிலை உதவியாளர்கள், தலைமை எழுத்தர்கள், தட்டச்சர்கள், காசாளர்கள், ஏவலாட்கள் ஆகியோரின் பதவிகளே முறையான அரசுப் பதவிகளாக மாற்றுவதற்கு ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. ஒருமுறை இவ்வாறு செய்தால், தலைமை எழுத்தர்கள், இளநிலை உதவியாளர்கள் ஆகியோரின் பதவித் தரம், ஊர்நல உதவியாளர்களின் பதவித் தரத்தின் ஓர் அங்கமாகவும், காசாளர்கள் பதவித் தரம் கணக்குப் பிரிவு அதிகாரிகள் பதவித் தரத்தின் ஓர் அங்கமாகவும் ஆகிவிடும். தொடக்கத்தத்தில், ஊர்நல உதவியாளர்கள் தரங்களேயும், உதவியாளர்கள்/இளநிலை உதவியாளர்கள் தரங்களேயும் இணைக்கும் நடைமுறையில் சில இடர்ப்பாடுகள் இருக்கும். 30 வயதிற்குக் குறைந்த இளநிலை உதவியாளர்களுக்கு/உதவியாளர்களுக்கு, ஊர்நல உதவியாளர்களாகப் பயிற்சி அளிக்கப்படலாம். 30 வயதிற்கு மேற்பட்டவர்கள் பேரூராட்சிகளிலும், கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்திலும் நியமிக்கப்படலாம் அல்லது வேறு துறைகளுக்கு மாற்றப்படலாம். ஊர்நல உதவியாளர்கள் தரத்தில் பயிற்சி பெற்றவர்கள் மட்டுமே பணிபுரிய இது வகை செய்யும்.

9.19. இக்குழு, தனது விசாரணைகளின்போது, ஊராட்சி ஒன்றியங்களில் "சமூக நலப் பணியாளர்கள்" என்று ஒரு வகையினர் இருப்பதை அறிந்தது. இத்துறையில் இவ்வகைப் பணியாளர்கள் மொத்தம் 746 பேர் உள்ளனர்; அவர்களது சம்பள வீதம் ரூ. 200–5—250–10—300 ஆகும். அவர்கள் முன்னேறுவதற்கு வழியில்லை. அவர்களுக்கென்று தெளிவான பணிகள் எவையும் வரையறுக்கப்படவில்லை. அவர்கள் என்ன செய்வதென்றே தெரியாமல், ஊராட்சி ஒன்றியங்களில் அங்குமிங்குமாகச் சென்று கொண்டிருக்கின்றனர். இந்தச் சமூக நலப் பணியாளர்களில் பெரும்பாலோர், மும்முரமான களப்பணிகள் செய்யும் வயதைக் கடந்தவர்கள். அவர்களில் பெரும்பாலோர் குறைந்த அளவு பொதுக் கல்வித் தகுதிகள் கூட பெற்றிருக்கவில்லை என்பது ஆச்சரியமாக உள்ளது. ஊராட்சி ஒன்றிய அமைப்பில், இத்தகையவர்கள் இருப்பது, வட்டாரப் பணியாளர்களிடையே ஒழுக்கச் சிதைவை ஏற்படுத்தும். இப்பதவி வகை ஒழிக்கப்பட்டு, தகுதியுடைய இளைஞர்கள் பிற பதவிகளில் அமர்த்தப்படவேண்டும் எனக் குழு கருதுகிறது. வயதானவர்களுக்கும் உரிய தகுதி இல்லாதவர்களுக்கும் பொருத்தமான இழப்பீட்டுத் தொகையுடன் கட்டாயப் பணி ஓய்வு அளிக்கப்பட வேண்டும்.

9.20. ஊராட்சி வளர்ச்சித் துறையில் உள்ள தேக்க நிலையைப் போக்க, அரசு, ஊராட்சி வளர்ச்சித் துறையின் அதிகாரிகளேயும் பணியாளர்களேயும் குடும்பநலத் திட்டம், சிறு சேமிப்பு, சத்துணவுத் திட்டங்கள்,

வறட்சி நிவாரணம், சிறு உழவர்கள் மேம்பாடு, கண்ணொளி வழங்கும் திட்டம், மாவட்ட அளவில் திட்டமிடுதல் ஆகியவற்றிற்காக ஏற்படுத்தப் பட்ட பதவிகளில் நியமிக்கலாம் என்று ஊராட்சி வளர்ச்சித் துறையின் பணிச் சங்கங்கள் கூட்டமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது. இப்பணிகளில் தற்பொழுது, மாவட்ட ஆட்சி துணைத் தலைவர்கள் பதவித் தரத்தில் 16 அதிகாரிகளும் தாசில்தார்கள் பதவித் தரத்தில் 34 அதி காரிகளும் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் பெரும்பாலும் வருவாய்த் துறையிலிருந்து எடுக்கப்பட்டவர்கள். இத்திட்டங்களை நிறைவேற்றுவதில் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள் மிகவும் நெருங்கிய தொடர்பு கொண் டுள்ளவர்களாதலால், இப்பதவிகள், ஊராட்சி வளர்ச்சித் துறையின் பணியாளர்களைக் கொண்டு நிரப்பப்படவேண்டும் என்னும் அவர்களது வேண்டுகோள் நியாயமானதாகத் தெரிகிறது. இந்த வேண்டுகோளை ஆணைக்குழு பரிவுரைக்கிறது.

9.21. ஊராட்சி வளர்ச்சித் துறையில், பல்வேறு வகைப் பணிகளுக் கென பலவகைப் பணி விதிகள் உள்ளன. அவற்றில் பல, உடனடித் தேவைகளுக்கு ஏற்ப, 1959 முதல் 1972 வரை வெவ்வேறு காலங்களில் தற்காலிகமாக இயற்றப்பட்டவை; எனவே, அவை போதிய அளவுக்கு சீராகவும் ஒத்தவையாகவும் இல்லை. அதன் விளைவாக, பல்வேறு வகைப் பணியாளர்களின் முன்னேற்றம் குறித்த முறைகள் குழப்பமான தாகி, பணியாளர் நிர்வாகம் அலுப்பூட்டத்தக்கதாகவும் உள்ளது. சீரான பணியாளர் நிர்வாகத்திற்கு வசதியளிக்கும் வகையில், இந்தப் பணி விதிகளை மறு ஆய்வு செய்து ஒருங்கிணைந்த ஒன்றாகத் தொகுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. முன்னுரிமை அடிப்படையில் இப் பணியைச் செய்வதற்காக தேவையான பணியாளர்களுடன் தனி அதிகாரி ஒருவர் ஆறு மாத காலத்திற்கு நியமிக்கப்படலாம் என்று ஆணைக்குழு பரிவுரைக்கிறது:

10. ஊராட்சி வளர்ச்சிப் பணியை மேலும் செவ்விய முறையில் மேற்பார்வையிடல்.

10.1. ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பேரூராட்சிகள் தற்பொழுது வருவாய்க் கோட்ட அதிகாரியால் மேற்பார்வையிடப்படு கின்றன; அவருக்கு அலுவலகத்தில், ஊராட்சி வளர்ச்சிப் பிரிவும், களப்பணியில் கோட்ட ஊராட்சி அதிகாரி ஒருவரும் உதவி புரிகின்றனர். கோட்ட ஊராட்சி அதிகாரிகள் சம்பள வீதம் ரூ. 500-25—625-30—745-35—850 ஆகும்; இவர்களது பதவித் தரம்; வருவாய்க் கோட்ட அதிகாரிக்கும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கும் இடைப்பட்டது. 300-க்கு மேற்பட்ட ஊராட்சிகள் மேற்பார்வையிடப்பட வேண்டியுள்ள ஒரு கோட்டத்தில், துணைத் தாசில்தார் பதவித் தரத்தில் கூடுதல் ஊராட்சி அதிகாரி ஒருவரும் உள்ளார். தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின்கீழ் ஊராட்சிகள்மீது உள்ளாட்சி வாரியங்களின் வட்டார ஆய்வாளருக்குள்ள அதிகாரங்களை வருவாய்க் கோட்ட அதிகாரி செலுத்துகிறார்; ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள்மீதும் அவர்களது பணியாளர்கள்மீதும் இவருக்கு நிர்வாகக் கட்டுப்பாடு உண்டு.

10.2 மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட ஆட்சி துணைத் தலைவர்கள் பதவித் தரமும் சம்பள வீதமும் உடைய மாவட்ட வளர்ச்சி அதிகாரிகள் இருவரின் உதவியுடன் மாவட்டத்தில் உள்ள ஊராட்சி வளர்ச்சிப் பணி முழுவதையும் மேற்பார்வையிடுகிறார். மாவட்ட வளர்ச்சி அதிகாரிகள், கோட்ட ஊராட்சி அதிகாரிகள், ஊராட்சிக் கூடுதல் அதிகாரிகள் ஆகிய பதவிகள் ஊராட்சி வளர்ச்சிப் பணியினைச் சேர்ந்தவை; இவை, அத்துறையைச் சேர்ந்த அதிகாரிகளைக் கொண்டும் பணியாளர்களைக் கொண்டும் நிரப்பப்படுகின்றன. வருவாய்க் கோட்ட அதிகாரிகள், மாநில சிவில் பணியைச் (நிர்வாகப் பிரிவு I) சேர்ந்தவர்கள். ஊராட்சி வளர்ச்சித் துறையின் பணியாளர்கள் இப்பதவிகளுக்குப் பதவி உயர்வு பெறத் தகுதி உடையவர்களல்லர்.

10.3. மாநில அளவில், ஊராட்சி வளர்ச்சிப் பணி கிராம வளர்ச்சித் துறை இயக்குநரால் மேற்பார்வை செய்யப்படுகிறது. இவர் வழக்கமாக முதுநிலை சம்பள வீதம் பெறும் (Senior Time Scale) ஓர் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருப்பார். இவருக்கு இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், கணக்கு அதிகாரிகள் ஆகியோர் உதவி புரிவர். மாவட்ட வளர்ச்சி அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு அளிப்பதன் மூலம் துணை இயக்குநர்கள் பதவிகளும் இணை இயக்குநர்கள் பதவிகளும் நிரப்பப்படுகின்றன.

10.4. (a) வருவாய்க் கோட்ட அளவில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களின் மேற்பார்வையை வருவாய்க் கோட்ட அதிகாரிகளிடம் ஒப்படைக்காமல், மாவட்ட ஆட்சித் துணைத் தலைவர்களின் பதவித் தரத்திலும் சம்பள வீதத்திலும் உள்ளவர்களும், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள், கோட்ட ஊராட்சி அதிகாரிகள் ஆகியோரிடையே இருந்து பதவி, உயர்வு அளிக்கப்பட்டு, கோட்ட வளர்ச்சி அதிகாரிகள் எனப் பதவிப் பெயர் கொடுக்கப்படவிருப்பவர்களுமாகிய புதியதொரு வகை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவேண்டும் என்றும்; (b) மாவட்ட அளவிலான மேற்பார்வைப் பணியைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவரே செய்யலாம் என்றும், ஆனால், மாவட்ட வருவாய் அதிகாரிகளின் தரம், சம்பளத்துடன் கூடிய ஒருவரும், மாவட்ட ஆட்சித் துணைத் தலைவரின் தரம், சம்பளத்துடன் கூடிய மற்றொருவருமாக இரண்டு ஊராட்சி வளர்ச்சித் துறை அதிகாரிகள் அவருக்கு உதவிபுரிய வேண்டும் என்றும் ஊராட்சி வளர்ச்சித் துறையின் பணிச் சங்கங்களின் கூட்டமைப்பு, அரசிடமும், ஆணைக் குழுவிடமும் முறையீடு செய்துள்ளது. அரசும், இதைக் குழுவின் கருத்திற்காக அனுப்பியுள்ளது.

10.5. கூட்டமைப்பின் கோரிக்கை, வருவாய்க் கோட்ட அதிகாரிகள், அவர்கள் பொறுப்பேற்றுச் செய்ய வேண்டியுள்ள பிற பணிகளின் வகை, அளவு ஆகியவை காரணமாக தற்பொழுது ஊராட்சி வளர்ச்சிப் பணியில் எவ்விதக் கவனமும் செலுத்த முடியவில்லை என்னும் கருத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஊராட்சி வளர்ச்சித் துறையிலிருந்து பதவி உயர்வு பெற்று வந்த அதிகாரிகளுக்கு, ஊராட்சி ஒன்றிய அமைப்பில் உள்ள பணிகள் பற்றி நன்கு தெரிந்திருக்கு

மாதலால், அவர்களுக்கு இது வருவாய்க் கோட்ட அதிகாரிகளைவிட நன்மையாக அமையும் என்று கூறப்படுகிறது. துறையில் உள்ள தேக்க நிலையை ஓரளவுக்குக் குறைக்க மாவட்ட ஆட்சித் துணைத் தலைவர்கள் பதவித் தரத்தில் 48 புதிய பதவிகளையும், மாவட்ட வருவாய் அதிகாரிகள் பதவித் தரத்தில் 14 புதிய பதவிகளையும் ஏற்படுத்த வேண்டுமென்பதே கூட்டமைப்பு செய்துள்ள கோரிக்கையின் முக்கிய நோக்கமாகும்.

10.6. ஆணைக்குழு இதுபற்றி மிகக் கவனமாகப் பரிசீலித்துள்ளது. கோரிக்கை எந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செய்து கொள்ளப்பட்டதோ அதனை இவ்வாணைக் குழுவினால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. வருவாய்க் கோட்ட அதிகாரிகள் பலதரப்பட்ட பொறுப்புகளைக் கவனிக்க வேண்டியுள்ளதால், அவர்கள் அதிகப் பணிச்சுமை உள்ளவர்கள் என்பதில் ஐயமில்லை. இருந்தும்கூட, அவர்கள், தங்களது நேரத்தில் பெரும்பங்கை ஊராட்சி வளர்ச்சிப் பணியை மேற்பார்வையிடுவதில் செலவிடுகின்றனர். பொதுவாக டெபுடி கலெக்டர்களும், சப்-கலெக்டர்களும் குறிப்பாக, அவர்களிடையே இளம் வயதினர் ஊராட்சி வளர்ச்சிப் பணியில் சிறப்பாக அதிக ஆர்வம்காட்டி பாதுகாப்பானதும் சிறந்ததுமான தலைமையையும் ஏற்படுத்தியுள்ளனர் என்றுஇவ்வாணைக்குழு அறிகிறது. ஊராட்சி ஒன்றியங்களை மேற்பார்வையிடுகிற மிகைப் பணிபுரியும் வருவாய்க்கோட்ட அதிகாரிகளின் மிகுந்த பணிச்சுமையைக் குறைப்பதற்கான வழி, அவர்களை அந் நிலையிலிருந்து அகற்றுவது அல்ல என்றும், அவருக்குள்ள அதிகார வரம்பினையும் அவர் மீதுள்ள பணிச் சுமையையும் குறைப்பதே ஆகும் என்றும் ஆணைக்குழு கருத்து கொண்டுள்ளது. ஆணைக்குழு, இம் மாநிலத்தில் தற்போதுள்ள மாவட்ட நிர்வாக அமைப்பினைப் பற்றி கூடவே ஆய்வு செய்து வருகிறது. தமிழ்நாட்டில் சுமார் 3 முதல் 4 மில்லியன் மக்கள் தொகை கொண்ட மாவட்டங்கள் பெரும்பாலானவை அளவில் பெரியவையாக உள்ளன என்று எல்லா நிலையிலும் ஒத்துக் கொள்ளப்பட்டுள்ளது. பெரும்பாலான பிற மாநிலங்களில் உள்ள அமைப்பினைப் பின்பற்றி, மாவட்ட ஆட்சித் தலைவர் ஒருவரால் செவ்விய முறையில் நிர்வகிக்கப்பட வேண்டிய மாவட்டத்தின் உகந்த அளவு தற்போதுள்ள அளவினில் சுமார் பாதி, அதாவது, $1\frac{1}{2}$ மில்லியன் மக்கள் தொகையைக் கொண்டதாக இருக்க வேண்டும். வருவாய்-பொது நிர்வாகம் குறித்த தனது அறிக்கையில் ஆணைக்குழு இப்பிரச்சினைகள் பற்றி விரிவாக விவாதித்துள்ளது. அந்த அறிக்கை தயாராகி வருகிறது. ஆணைக்குழு கருதுகிற புதிய அமைப்பின்படி, மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் வட்டத்திற்குப் பொறுப்பு வகிக்கிற அதிகாரிக்குமிடையே இடைப்பட்ட அலுவலர் பதவி தேவையில்லை. தற்போதுள்ள வருவாய்க் கோட்ட அதிகாரி, வட்டத் தாசில்தார் ஆகியோரின் அலுவல்கள் தற்போதுள்ள வட்ட அலுவலகத்திலிருந்து மாவட்டத் துணை ஆட்சித் தலைவர் பதவித் தரத்தில் உள்ள ஓர் அதிகாரியால் வசதியாக நிறைவேற்றப்படலாம். வாலாயமான பணியினைக் கவனிக்க தாசில்தார் பதவித் தரத்திலும், துணைத் தாசில்தார் பதவித் தரத்திலும் சார்நிலைப் பணியாளர்கள் அவருக்கு உதவிபுரிவர். இதனால் மாவட்ட நிர்வாக அமைப்பில் ஒரு தொடர்பு துண்டிக்கப்பட்டு, அந்த

அளவிற்கு நிர்வாகத்தை விரைவுபடுத்த வசதியாயிருக்கும். வருவாய்க் கோட்ட அதிகாரியின் அதிகார வரம்பு தற்போது இரண்டு முதல் மூன்று வட்டங்களைக் கொண்டதாகும். அதற்குப் பதிலாக ஒரே ஒரு வட்டத்தினைக் கொண்டதாக அவரது அதிகார வரம்பை அமைப்பதே இச் செயற்குறிப்பின் நோக்கமாகும். கோட்டம் ஒன்றில் சராசரியாக உள்ள வளர்ச்சி வட்டாரங் களின் எண்ணிக்கை தற்போது எட்டாக உள்ளது. அதிகார வரம்பு குறைக்கப்பட்ட ஒரு வட்டத்தில், மாவட்டத் துணை ஆட்சியர் பதவித் தரத்தில் உள்ள இந்த அதிகாரியின்கீழ் மூன்று முதல் நான்கு வளர்ச்சி வட்டாரங்கள் மட்டுமே இருக்கும். பிற நிர்வாகக் கிளைகள் அனைத்திலும் அவருக்கு உள்ள பொதுவான பணிச்சுமை பாதியாக்கப்பட்டிருக்கும். இந்த மாற்றத்தினால் வளர்ச்சிப் பணிகளை மிகவும் முனைப்பாக மேற்பார்வை யிட அவருக்குப் போதிய காலமும் சுதந்திரமும் கிடைப்பதுடன், ஊராட்சி அமைப்பில் பயனுள்ள தலைமையை அவருக்கு அளிக்கும்.

10·7. ஊராட்சி ஒன்றிய அளவில் பல வளர்ச்சித் துறைகளின் அதிகாரிகள் பணிக்கு சமநிலையில் ஒத்துழைப்பு நிலவ வகை செய்வதே ஊராட்சி ஒன்றிய ஆணையாளரின் அடிப்படைப் பணியாகும். நிர்வாகத்தில் இது முற்றிலும் ஒரு பயிற்சியாகும். நிர்வாக ஒருங்கிணைப்பில் சிறப்பாகப் பயிற்சி பெற்றுள்ள அதிகாரிகள் சிலரால் உரியவாறு மேற்பார்வையிடப்பட வேண்டிய பணியாகும். வருவாய்க் கோட்ட அதிகாரி வெறும் நிலவரியினை வசூல் செய்பவர் மட்டுமல்ல. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அந்தப் பதவிப் பெயருக்குப் பொருள் இருந்திருக்கக்கூடும். நிலவரி ஏற்பாடு செய்வதும், நிலம் குறித்து நிலுவையாக உள்ள வரிகளை வசூலிப்பதும் இந்தப் பதவியின் முக்கிய அலுவலாக அப்போது இருந்தது. அந்தக் காலத்தில் கூட, காவலரின் உதவியுடன் சட்டம், ஒழுங்கைப் பாதுகாத்தல், கோட்ட அளவில் பல்வேறு துறைகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உதவுதல் போன்ற பிற முக்கியமான பொறுப்புகளும் வருவாய்க் கோட்ட அதிகாரிக்குப் பொது நிர்வாகத்தில் இருந்தது. நிலவரிக்கு தற்போது அவ்வளவு முக்கியத்துவம் இல்லை. சட்டம், ஒழுங்கைப் பாதுகாத்தல், சமுதாயத்திற்கு மிகவும் அவசியமான பொருள்களை வழங்குதல், தேர்தல்கள் நடத்துதல், உள்ளாட்சி அதிகார மன்றங்களை மேற்பார்வையிடுதல், பல்வேறு வளர்ச்சித் துறைகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் போன்ற பொது நிர்வாகப் பணிகளை கவனிப்பதே பெரும்பாலும் தற்போது வருவாய்க் கோட்ட அதிகாரியின் பணியாகும். தற்போதைய நிலைமைகளில் அந்த அதிகாரிக்குப் பொருத்த மான பதவிப் பெயர், "கோட்ட நிர்வாக அதிகாரி" அல்லது "மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்" என்றிருக்கலாம். ஏனெனில், அவர் கோட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உதவி புரியும் அதிகாரியாகப் பணியாற்றுகிறார். அவர் மாநில சிவில் பணியின் (நிர்வாகப் பிரிவு) உறுப்பினராவார். மாநிலத்தில் உள்ள முக்கிய நிர்வாக, ஒருங்கிணைப்பு அலுவல்கள் அனைத்தையும் கவனிப்பதற்காக அந்தப் பணி இந்திய ஆட்சிப் பணியுடன் சேர்த்து அமைக்கப்பட்டுள்ளது. மாநில சிவில் பணி யின் உறுப்பினர்கள் கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி அளிக்கப் படுகின்றனர். வாழ்க்கைத் தொழில் முறையில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்கள் முதுநிலை நிர்வாகப் பதவிகளில் வேரூன்றிச்

செவ்விய முறையில் செயல்பட அப்பயிற்சி அவர்களுக்குப் பெரிதும் உதவுகிறது. அவர்களுக்கு வெளிப்பகட்டு இராமலிருந்து புதிய பிரச்சினை களை அணுகுவதில் அவர்கள் எச்சரிக்கையுடன் இருக்கக்கூடும். ஆனால், புதிதாகத் தோன்றிய ஜனநாயக நிறுவனங்கள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அந்த அதிகாரிகளுக்கு இது அவசியமான தொரு தகுதியாக அமைகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மன்றங்கள் தவறிழைக்கலாம்; அடிக்கடி அவை தவறிழைக்கவும் செய்கின்றன. குடிமக்களின் அரசியல் கல்வியில் இது தவிர்க்க முடியாததொரு பகுதி யாகும். உள்ளாட்சி நிறுவனங்களில் எப்போதாவது ஏற்படும் தவறுகளின் போது அவற்றைத் தாங்களே திருத்திக் கொள்ள அவை அனுமதிக்கப்பட வேண்டும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. ஏனெனில், தவறுகள் திருத்திக் கொள்ளப்படும் போதுதான் உண்மையான அரசியல் கல்வி ஆரம்பமாகிறது. சில நேர்வுகளில் அவர்கள் விரைந்து செயல்படுவதற்கு எவ்வித மறுப்பும் இருக்கக்கூடாது. அவ்வாறு அவை விரைந்து செயல் படுவதினால் பெருமளவிற்கு வெளியில் பின் விளைவுகளை ஏற்படுத்தாத வரையில் அவை விரைந்து செயல்பட அனுமதிக்கப்படவேண்டும். ஒரு குடிமகனுக்கும் மற்றொரு குடிமகனுக்கும் இடையே உள்ள நீதி, ஒப்புரவு குறித்த முக்கிய கோட்பாடுகளை மீறுவதற்கு இந்த நிறுவனங்கள் அனுமதிக்கப்படக்கூடாது. எனவே, அத்தகைய அத்துமீறல்களையும், அதிகாரம், விவேகம் ஆகியவற்றின் வரம்புகளை மீறுவதற்கான பிற முயற்சிகளையும் தடுக்க, உள்ளாட்சி நிறுவனங்கள் செயல்படுவது குறித்து மாநில நிர்வாகம் விழிப்புடன் இருக்க வேண்டும். நிர்வாக அதிகாரத்தைச் செயல்படுத்துவதற்குரிய பயிற்சியையும், பின்னணியையும், பெற்றவர் களும், தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி மன்றங்களுக்கல்லாமல் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் பற்றுறுதி கொண்டவர்களுமான நபர்களே இந்த அலுவலைத் திறம்பட நிறைவேற்ற இயலும். தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி மன்றங்களில் தொடர்ந்து பணியாற்றியவர்களும், முறைப்படுத்தும் பணி அனுபவம் இல்லாதவர்களுமான அதிகாரிகள் இப்பொறுப்பினை நிறை வேற்றுவதற்குரிய தகுதியானவர்கள் அல்லர். குறிப்பாக உள்ளாட்சி நிறுவனங்களின் ஆரம்ப நிலையில் இப்பொறுப்பினை நிறைவேற்ற அவர்கள் ஏற்றவர்கள் அல்லர்.

10.8. ஊராட்சி ஒன்றிய அமைப்பின் மீதான கட்டுப்பாடும் மேற் பார்வையும் மாவட்டத் துணை ஆட்சியரிடமிருந்து மாற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கை, வரலாற்று உண்மைகளையும் நடப்பு உண்மைகளையும் புறக்கணிப்பதாக உள்ளது. முன்னரே கூறப்பட்டுள்ளபடி வருவாய் ஆய அமைப்பு, இம் மாநிலத்தில் பல அலுவல்களைக் கொண்ட உயரிய பொது நிர்வாக அமைப்பாக எப்போதுமே இருந்து வந்துள்ளது. அந்த அமைப்பில் அவர்கள் வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுவதில் அனுபவமும் உடையவர் கள் ஆவர். 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் செயலுக்கு வரும் வரையில், பிர்க்கா வளர்ச்சித் திட்டங்கள், தேசிய வளர்ச்சிப் பணி சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவை இந்த அமைப்பின் மூலம் நிர்வகிக்கப்பட்டன. மாவட்ட ஆட்சித் தலைவர் தனது மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் எல்லா வளர்ச்சி நடவடிக்கைகள், முறைப் படுத்தும் நடவடிக்கைகள், நலப் பணிகள் ஆகியவற்றை ஒருங்கிணை

பவராக எப்போதுமே பணியாற்றி வந்துள்ளார். தன்னுடைய நேரடி நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள மாவட்டப் பணியாளர்களின் உதவி யுடன் தான் அவர் இந்த அலுவல்களை வெற்றிகரமாக நிறைவேற்ற முடிந்தது. நம்முடைய மாநிலத்தில் உள்ள உள்ளாட்சி மன்றங்கள் பொதுமக்களின் சுகாதார வசதிகளை மட்டுமே கவனித்து வந்தபோதும் கூட, மாவட்ட ஆட்சித் தலைவர்களும், மாவட்டத் துணை ஆட்சியர்களும் அவற்றின் மீது முக்கிய கட்டுப்பாட்டு அதிகாரம் வகித்து வந்தனர். உள்ளாட்சி மன்றங்களிடம், சாதாரணமாக அந்த மன்றங்களின் அதிகார—வரம்பிற்கப்பாற்பட்ட முக்கியமான உற்பத்தி அலுவல்கள் பலவற்றை ஒப்படைப்பதன் மூலம், தல சுய ஆட்சி குறித்து முன்னர் இயற்றப்பட்ட சட்டங்களை விட தமிழ்நாடு 1958—ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் ஒருபடி மேலே சென்றுள்ளது. இவ்வாறு முக்கிய உற்பத்திப் பணிகள் ஒப்படைக்கப் பட்டதன் மூலம், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்களும் மாவட்ட ஆட்சித் தலைவர்களும் உள்ளாட்சி மன்றங்களுடன் மேலும் நெருங்கிய தொடர்பு கொள்ள வேண்டிய நிலை எற்பட்டது. ஏனெனில், முழு வளர்ச்சி யடையாத, தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி மன்றங்களில் சர்வசாதாரண மாக நிலவுகிற கட்சிகளுக்கிடையிலான பூசல்கள் காரணமாக உற்பத்திப்பணி கள் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்துவது அவர்களது தலையாய பொறுப்பாகும். கிராமப் பகுதிகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சி மாநில அரசின் முக்கியமான பொறுப்பாகவும் மாவட்ட நிர்வாகத்தின் தலையாய கடமையாக வும் உள்ளது. மாவட்ட நிர்வாகத்தின் முக்கியமான இரு அதிகாரிகள் மாவட்ட ஆட்சித் தலைவரும், மாவட்டத் துணை ஆட்சித் தலைவரும் ஆவர். இவர்கள் இருவரும் கிராம வளர்ச்சி திட்டங்களில் ஏராளமான பணம் செலவிடும் துறைகளில் பணியை மேற்பார்வையிடுதல், கட்டுப்பாட்டு அதிகாரம் செலுத்துதல், ஒருங்கிணைத்தல், ஊக்குவித்தல், மதிப்பிடுதல் ஆகிய பணிகளைச் செய்யாமலிருக்க முடியாது. புதிதாக ஒப்படைக்கப்பட்ட உற்பத்தி அலுவல்கள் அந்த அமைப்புகளிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டு அந்தத் துறை இயக்குநர் அலுவலகங்களிடம் ஒப்படைக்கப்பட்டால்தான் இந்த அமைப்புகளை மேற்பார்வையிடும் அதிகாரத்தை, அந்த அமைப்பு களின் நிர்வாகப் பணியிலிருந்து பதவி உயர்வு பெற்றவர்களிடம் ஒப்படைப்பது குறித்து அரசு கருதிப் பார்க்கலாம். துறை இயக்குநர் அலுவலகங்கள் புதிய நிலைக்கு இன்னும் தங்களது இசைவைத் தெரிவிக்க வில்லை. பழைய நிலையே மீண்டும் வேண்டுமென்று அவை வலியுறுத்தி வருகின்றன.

10.9. ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் அளவிலும், அதற்கு மேல் உள்ள நிலைகளிலுமுள்ள தேக்கநிலை குறித்த பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அந்த அதிகாரிகளை, மாவட்டத் துணை ஆட்சித் தலைவரது நிலைக்குப் பதவி உயர்வு பெறுவதற்குத் தகுதியுடையவர்களாகச் செய்ய வேண்டும், வருவாய்த் துறையைச் சேர்ந்த தாசில்தார்களுடன் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களையும் கோட்ட ஊராட்சி அதிகாரிகளையும் மாவட்டத் துணை ஆட்சித் தலைவராகப் பதவி உயர்வு பெறுவதற்குத் தகுதியுடையவர்களாகச் செய்ய வேண்டும். அரசு வருவாய்த்துறை அதிகாரிகள் பணியைத் தவிர வேறு சில அரசுப் பணிகளிலும் உள்ளவர்கள் ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் ஆகின்றனர். அதுபோன்றே அரசு வருவாய்த்துறை அதிகாரிகள் பணிக்கு (நிர்வாகப் பிரிவு I) ஒன்றுக்கு மேற்பட்ட அரசு சார்நிலைப் பணியிலுள்ள

வர்கள் இடம் பெறலாம். இது வரையில் வருவாய் சார்நிலைப் பணியாளர்களான தாசில்தார்கள் மட்டுமே மாவட்டத் துணை ஆட்சித் தலைவராகப் பதவி உயர்வு பெறத் தகுதியுடையவர்களாக இருந்தனர். சிறப்பாகப் பணி புரிந்துள்ள ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களும் கோட்ட ஊராட்சி அதிகாரிகளும் மாவட்டத் துணை ஆட்சித் தலைவராகப் பதவி உயர்வு பெறத் தகுதியுடையவர்களாகச் செய்யப்படலாமென ஆணைக்குழு தற்போது பரிவுரை செய்கிறது. ஊராட்சி வளர்ச்சி-வேளாண்மை உற்பத்தி ஆணையாளரும் நில வரி ஆணையாளரும் அமைந்த குழு, குறித்த காலத்திற்கொருமுறை பதவி உயர்வு அளிப்பது குறித்துப் பரிசீலனை செய்து ஆட்களைத் தெரிந்தெடுத்து முடிவு செய்யலாம். ஊராட்சி வளர்ச்சிப் பணியிலிருந்து பதவி உயர்வு பெறுபவர்களுக்கு மாவட்டத் துணை ஆட்சித் தலைவர் பதவிகளில் குறிப்பிட்ட சதவீதத்தை ஒதுக்குவது அவசியமாகலாம். வருவாய்க் கோட்ட அதிகாரியின் ஆட்சி வரம்பு தாலுகாவாகக் குறைக்கப்படும் போது மாவட்டத் துணை ஆட்சித் தலைவரது பதவிகள் புதிதாக 69 ஏற்படுத்த வேண்டியிருக்கும். புதிய பதவிகளில் 50 சதவீதத்தை ஊராட்சி வளர்ச்சிப் பணியாளர்களின் பதவி உயர்வுக்காக ஒதுக்கலாம். இதைத் தவிர, இன்னும் புதிதாக 69 மாவட்டத் துணை ஆட்சித் தலைவர் பதவிகளை ஏற்படுத்துவது, கோட்ட ஊராட்சி அதிகாரிகள் பதவிகளிலும் இன்னும் சில பதவிகளைப் புதிதாக ஏற்படுத்த வகை செய்யும். இது, ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அளவிலான அதிகாரிகளுக்குக் கணிசமான அளவு பணிச்சுமையைக் குறைக்கும்.

10·10. தாசில்தார்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவராகப் பதவி உயர்வு பெறுவதற்கு முன்னர், ஊராட்சி வளர்ச்சிப் பணி தொடர்பான தேர்வில் தேறவேண்டும். அவர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளராகக் குறைந்தது ஓராண்டுக் காலம் பணியாற்ற வேண்டுமென்று வரையறுக்க வேண்டும். இது தற்போதைய முறையில் காணப்படும் குறையை அதாவது புதிதாக மாவட்டத் துணை ஆட்சித் தலைவராகப் பதவி உயர்வு பெறுபவர் ஊராட்சி நிர்வாக அமைப்பின் அலுவல்களைக் கவனிக்கத் தொடங்கும்போது அவர் அது குறித்துப் போதுமான அளவு தெரிந்து வைத்திராதிருக்கும் குறையைப் போக்கும். அத்தகைய ஒரு விதித்துறை, அரசு வருவாய்த் துறை அதிகாரிகள் பணி குறித்த நியமன விதிகளில் இருந்தது. இந்தப் பயனுள்ள ஏற்பாடு எதனைக் கருதி கைவிடப்பட்டதோ அது புரிபடாப் புதிராயிருக்கிறது. இதேபோல், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களும், கோட்ட ஊராட்சி அதிகாரிகளும் பதவி உயர்வுக்கான தகுதியைப பெறுவதற்கு முன்னர், வருவாய்த் தேர்வுகளில் தேறியிருக்க வேண்டும்; மேலும், குறைந்தது ஓராண்டுக் காலம் தாசில்தாராகப் பணியாற்றியிருக்க வேண்டும். மாவட்டத் துணை ஆட்சித் தலைவராகப் பதவி உயர்வு பெற்றவர் இவ்விரு துறைகளின் பணி குறித்து அறிந்திருக்க இந்த ஏற்பாடு வகை செய்யும்.

10·11. தற்போது ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் மட்டுமே, கோட்ட ஊராட்சி அதிகாரிகளாகப் பதவி உயர்வு பெறமுடியும். தாசில்தார்களும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களும், 5 ஆண்டுக் காலம் பணியாற்றிய

பின்னர், கோட்ட ஊராட்சி அதிகாரிகள் அளவில் பதவி உயர்த்தப்படத் தகுதியுடையவர்களாகச் செய்யப்படவேண்டும்.

10·12. மாவட்டத் துணை ஆட்சித் தலைவரது அளவில், பொது நிர்வாகத்தையும் வளர்ச்சிப் பணி நிர்வாகத்தையும் ஒருங்கிணைப்பதால் நிர்வாக அனுகூலங்களும் செயல் அனுகூலங்களும் கிட்டும்; இதனை நாம் புறக்கணிக்கக்கூடாது. ஊராட்சி வரிகளை வசூலிக்கும் பணியை புதிய வகையைச் சேர்ந்த கிராம அதிகாரிகள் தொடர்ந்து செய்யலாம் என ஆணைக்குழு 3·26 பாராவில் பரிவுரை செய்துள்ளது. ஊராட்சி வளர்ச்சிப் பணிக்குப் பொறுப்பு வகிக்கும் மாவட்டத் துணை ஆட்சித் தலைவர் கோட்ட வளர்ச்சித் தலைவர் எவருமே செய்ய எண்ணமுடியாத அளவுக்கு இந்த வரிகளை உரிய காலத்தில் திறம்படவும் உடனடியடியாகவும் வசூலிக்க இயலும்.

10·13. 10·9, 10·10, 10·11 பாராக்களில் தெரிவித்துள்ள ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதில் கிடைக்கும் அனுபவத்தையொட்டி, தாசில்தார், துணைத் தாசில்தார், இளநிலை உதவியாளர்கள் போன்ற பல்வேறு மட்டங்களில், வருவாய்த்துறைப் பிரிவுப் பணியாளர்களையும், ஊராட்சி வளர்ச்சிப் பிரிவுப் பணியாளர்களையும், அத்துறைகளுக்கிடையே மாற்றுவதன் மூலம், மாவட்டத்தில் வருவாய்–ஊராட்சி வளர்ச்சி பணியாளரமைப்புகளில் அடுத்தப் பத்தாண்டில் ஒருங்கிணைப்பு படிப்படியாக ஏற்படுமென்று ஆணைக்குழு கருதுகிறது. அத்தகைய நிலையில், வருவாய்த்துறைப் பிரிவைச் சேர்ந்த துணைத் தாசில்தார்கள், ஊராட்சி வளர்ச்சிப் பிரிவைச் சேர்ந்த வளர்ச்சிப் பணி அதிகாரிகள், ஊராட்சி வளர்ச்சிக் கணக்கர்கள், மேலாளர்கள் ஆகியோருக்கிடையே ஒரே மாதிரியான சம்பள வீதங்களை ஏற்படுத்துவது அவசியமாகும். "பொது நிர்வாக-வளர்ச்சிப் பணி" என்று பொருத்தமாக பெயரிடப்படக்கூடிய பொதுப் பணி படிப்படியாக உருவாகும் என ஆணைக் குழு கருதுகிறது.

10·14. ஊராட்சி வளர்ச்சிப் பணியில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு "உதவி புரிவதற்கு" மாவட்ட வருவாய் அதிகாரிகள் தரத்தில் புதிய பதவிகளை ஏற்படுத்தும் கருத்தை ஆணைக்குழு ஏற்கவில்லை. ஏனெனில், மாவட்ட ஆட்சித் தலைவர் வளர்ச்சிப் பணியைத் தாமே கவனிக்க வேண்டும். வரி வருவாய், நிலம் ஆகியவை குறித்த வழக்கமான நிர்வாகப் பணியின் சுமையைக் குறைக்க மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உதவியாக மாவட்ட வருவாய் அதிகாரி உள்ளார். இதனால் மாவட்ட ஆட்சித் தலைவர், வளர்ச்சிப் பணிகளில் நாட்டம் செலுத்த இயலும். நிலைமை இவ்வாறிருக்க வளர்ச்சிப் பணி குறித்த அலுவல்களையும் கவனித்து அப்பணியினின்றும் மாவட்ட ஆட்சித் தலைவரை விடுவிக்க மாவட்ட வருவாய் அதிகாரி தரத்தில் மற்றொரு அதிகாரியை நியமிப்பது என்பது வாதத்திற்கு ஒவ்வாததாகும். மாவட்டத் துணை ஆட்சித் தலைவரது தரத்தில் மாவட்ட வளர்ச்சி அதிகாரிகள் இருவர் அன்றாடப் பணிகளில் உதவி புரிய, மாவட்ட ஆட்சித் தலைவர் நேரடியாக ஊராட்சி வளர்ச்சிப் பணிகளையாற்றும் தற்போதைய ஏற்பாடே மிகவும் மன நிறைவளிப்பதாகும் என்று ஆணைக் குழு கருதுகிறது. சராசரியாக 35 வளர்ச்சி வட்டாரங்களைக் கொண்டு வருவாய்

மாவட்டங்கள் பரந்த பரப்புடையதாய் இருப்பதால், ஒவ்வொன்றையும் மாவட்ட ஆட்சித் தலைவர் தானே நேரடியாகக் கவனிப்பது என்பது பெரும்பாலும் இயலக்கூடியதல்ல என்பது ஐயமறத் தெரிகிறது. மாவட்ட வருவாய் அதிகாரிகளைப் புதிதாக நியமிப்பது, இப் பிரச்சினைக்குத் தீர்வு அல்ல ; ஆனால், வருவாய் மாவட்டங்களின் பரப்பளவை வளர்ச்சி மாவட்டங்களின் பரப்புக்குக் குறைப்பதேயாகும். மாவட்ட வருவாய்—பொது நிர்வாகம் குறித்த தனது அறிக்கையில் இதற்கு வேண்டிய பரிவுரைகளை ஆணைக்குழு செய்து வருகிறது.

10.15. மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்களாகப் பதவி உயர்வு பெறுவதற்கு, ஊராட்சி வளர்ச்சித் துறைப் பணியாளர்கள் தகுதியுடையோராக ஆகவேண்டும் என்ற ஆணைக் குழுவின் கருத்துரை, ஏனையோருடன் தங்களுக்குள்ள வாய்ப்பையும் பயன்படுத்தி மாவட்ட வருவாய் அலுவலர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அளவுக்கு அவர்களும் உயர இயலும் என்பதற்கு உறுதி செய்யும்.

10.16. தற்போது, ஊராட்சி வளர்ச்சித் துறைத் தலைவர், ஐ.ஏ.எஸ். அதிகாரியின் முதுநிலை சம்பள வீதத்தில் உள்ளார். இந்தப் பதவிக்காக நியமிக்கப்படக்கூடிய அலுவலர்கள், வழக்கமாக, மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பணியை மேற்பார்வையிடுதற்கும், நன்கு பணி புரியுமாறு அவர்களைத் தூண்டுவதற்குமான பணி முதுநிலையைப் பெற்றிருப்பதில்லை. மேலும் அவர்கள், துறைத் தலைவர்களின் பணிகளைச் சம நிலையில் ஒருங்கிணைப்பதற்குமான உயர்தரத்தையும் அவர்கள் பெற்றிருக்கவில்லை. இது ஒரு மனநிறைவளிக்கத்தக்க ஏற்பாடு இல்லை என்று ஆணைக்குழு கருதுகிறது. ஊராட்சி வளர்ச்சித் துறைத் தலைவர், மாவட்ட ஆட்சித் தலைவர்கள்மீது முன்னுரிமையை வகுத்துச் செயல்படுத்துவதற்கான உயர்தரத்தையும் அதிகாரத்தையும் பெறும்வண்ணம், ஊராட்சி வளர்ச்சித் துறைத் தலைவர் வருவாய் வாரிய உறுப்பினரின் பணி முதுநிலைக்குச் சமமாக இருக்க வேண்டும் என்று ஆணைக்குழு பரிவுரை செய்கிறது. இதே அலுவலருக்கு, வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, காடுகள், மீனளம், கூட்டுறவு, சிறிய—பெரிய பாசனம் முதலிய துறைகளினிடையே சம நிலையில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்கான பொறுப்புடன்கூடிய வேளாண்மை உற்பத்தி ஆணையாளர் என்று பதவிப் பெயர் கொடுக்கப்பட வேண்டும். கொள்கை குறித்த முடிவுக்குத் தொடர்பும் செல்வாக்கும் இவருக்கு இருப்பதற்கு உறுதி செய்யும் வண்ணம், வேளாண்மை—ஊராட்சி வளர்ச்சித் துறைகளுக்கு அலுவல் முறையில் அரசுச் செயலாளர் என்று இவர் அறிவிக்கப்படவும் வேண்டும் என்று ஆணைக்குழு மேலும் பரிவுரை செய்கிறது. இந்தத் தரத்தில் உள்ள வேளாண்மை உற்பத்தி—ஊராட்சி வளர்ச்சி ஆணையாளர் ஒருவர், வேளாண்மையையே மையமாகக் கொண்ட தன்மையை ஊராட்சி வளர்ச்சிப் பணிக்குத் தருவதுடன், மேல்நிலையிலிருந்து திறம்பட கட்டளையிடவும் முடியும்.

10.17. அரசுக்கு ஆலோசனை வழங்கும் மாநில அளவிலான ஊராட்சி வளர்ச்சி ஆலோசனைக்குழு, முறையாகவும், அடிக்கடியும் கூடுவதில்லை. இக்குழுக் கூட்டம், குறைந்தது ஆண்டுக்கு ஒரு முறையாவது, முறையாகக் கூட்டப் படலாம் என்று ஆணைக் குழு பரிவுரை செய்கிறது.

11. அதிகாரப் பிரிவினை

11.1. தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின்கீழ் நிலைபெற்றுள்ள அல்லது பிரித்தளிக்கப்பட்ட சட்டப்படிக்கான அதிகாரங்கள், ஊராட்சி வளர்ச்சித் துறை சம்பந்தமான நிர்வாக அதிகாரங்கள் ஆகியவை, அரசாலும், கிராம வளர்ச்சி இயக்குநராலும், மாவட்ட ஆட்சித் தலைவர்களாலும், வருவாய்க் கோட்ட அலுவலர்களாலும் தற்போது செலுத்தப்பட்டு வருகின்றன. இந்த அதிகாரங்கள், அதிகாரப் பிரிவினை ஆகியவற்றைத் திருத்தியமைப்பதற்கான அடங்கல் செயற்குறிப்பு ஒன்றை, கிராம வளர்ச்சி இயக்குநர், அண்மையில், அரசுக்கு அனுப்பியுள்ளார்.

11.2. அதிகாரப் பிரிவினைகளைத் திருத்தியமைக்கும்போது, கீழ்க் காணும் கோட்பாடுகள் பின்பற்றப் படலாம் என்று ஆணைக்குழு பரிவுரை செய்கிறது :—(a) ஊராட்சி–பேரூராட்சிகள் சம்பந்தமான பெரும்பாலான பொருட்கள் குறித்து, வருவாய்க் கோட்ட அலுவலர்கள் அளவிலே தீர்த்துக் கொள்ளப்பட வேண்டும், (b) ஊராட்சி ஒன்றியங்கள சம்பந்த மான பெரும்பாலான பொருட்கள் குறித்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அளவில் அல்லது அவர்களுக்குக் கீழ்ப்பட்ட அளவில் தீர்த்துக் கொள்ளப் படவேண்டும், (c) ஊர் நல உதவியாளர்கள் வரையில் ஊராட்சி வளர்ச்சித் துறைப் பணியாளர்கள் சம்பந்தமான பெரும்பாலான நிர்வாக அதிகாரங்கள் வருவாய்க் கோட்ட அலுவலர்கள் அளவில் செலுத்தப்பட வேண்டும், (d) ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள், கோட்ட ஊராட்சி அலுவலர்கள் ஆகியோர் வரையில் ஊராட்சி வளர்ச்சித் துறைப் பணி யாளர்கள் சம்பந்தமான பெரும்பாலான நிர்வாக அதிகாரங்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அளவில் அல்லது அவர்களுக்குக் கீழ்ப்பட்ட அளவில் செலுத்தப்பட வேண்டும். இக்காரியத்திற்காக, ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள், கோட்ட ஊராட்சி அலுவலர்கள் ஆகியோரின் தற்போதைய நிர்வாகம், மாவட்டப் பிரிவுகள் வடிவில் சீரமைக்கப்படலாம், (e) மாவட்ட வளர்ச்சி அலுவலர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு நேர்முக உதவியாளர்களாகப் பணிபுரிவதால், அதிகாரங்கள் எதனையும், மாவட்ட வளர்ச்சி அலுவலர்களுக்கு நேரடியாகப் பிரித்தளிக்க அவசியம் ஏதும் அரசுக்கு இல்லை. அதிகாரங்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குப் பிரித்தளிக்கப்படலாம். அவர்கள், அந்த அதிகாரங்களை, மாவட்ட வளர்ச்சி அலுவலர்களின் உதவியோடு செலுத்தலாம்.

11.3. உள்ளூர் அலுவலர்களுக்கு அதிக அதிகாரங்களைப் பிரித் தளிப்பது விரும்பத்தக்கது என்று கருதப்படுகிற வேறு ஒரு துறையும் உள்ளது. பெரும்பாலான ஊராட்சி ஒன்றியங்களில், அவற்றின் பொது நிதியிலிருந்து, செலவிடப்படாத உபரியான தொகை உள்ளது. 1972 ஆம் ஆண்டு மே திங்கள் நிலவரப்படி மொத்தமுள்ள 374 ஊராட்சி ஒன்றியங் களில் 348 ஊராட்சி ஒன்றியங்களில் ரூ. 17·49 கோடி அளவுக்கு உபரி நிதி இருந்தது. ஊராட்சி ஒன்றியங்களின் உபரி நிதிகள் வகையில் மாவட்டவாரியான பகுப்பாய்வு IX ஆம் எண் இணைப்பில் கொடுக்கப் பட்டிருக்கிறது. 141 ஊராட்சி ஒன்றியங்களில், ரூ. 5 லட்சத்திற்கு

மேலான உபரி நிதி இருப்பது இதிலிருந்து தெரியவருகிறது. உபரி நிதிகளைச் செலவழிக்க ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிகாரம் ஏதுமில்லை. உபரி நிதிகளிலிருந்து செலவு செய்ய அதிகாரமளிப்பதற்கான பொருத்த மான அதிகாரி, கிராம வளர்ச்சி இயக்குநராவார். அவரும், கிராம வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 10—3—1966 ஆம் நாளிட்ட 364 ஆம் எண் அரசு ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள சில காரியங்களுக்கான செலவுக்கு மட்டுமே அதிகாரமளிக்கலாம். ஊராட்சி ஒன்றியங்களின் உபரி நிதிகள் தனி நிதியாக வைக்கப்படுவதோ அல்லது முதலீடு செய்யப் படுவதோ இல்லை. அவை, அரசுக் கணக்கில் வைத்து வரப்பட்டு, அரசின் வழி-வகை நிலைமையைப் பெருக்குவதற்கு உதவுகின்றன. உபரி நிதியின் அளவையும், அவற்றை ஆதாயந்தரத்தக்க விதத்தில் முதலீடு செய்வதற்கு அல்லது உள்ளூர்த் தேவைகளைச் சரிக்கட்ட பயன் தரத்தக்க விதத்தில் செலவிடுவதற்கு ஊராட்சி ஒன்றியங்களுக்குள்ள வாய்ப்புகளையும் கருதிப்பார்க்கும்போது இந்நிதியைச் செலவழிப்பதற்கு தற்போதுள்ள வரையறைகளும் மாநில அளவில் செலவிடுவதற்கு அதிகாரமளிப் பதற்கான விருப்புரிமையை மைய ஏற்பாட்டின்கீழ் வைத்து வருவதும் ஜனநாயகமுறையில் அதிகாரங்களைப் பரவலாக்கும் தாராள கோட்பாடுகளை ஒத்திருக்கவில்லை என்று ஆணைக்குழு கருதுகிறது.

11.4. ஆணைக்குழு சந்தித்த ஊராட்சி ஒன்றியங்களின் பெரும்பாலான தலைவர்களும், உறுப்பினர்களும், பொருத்தமானவர்களாகவும் உலக அறிவைப் பெற்றவர்களாகவும், பொது நலனில் அவர்களது விருப் புரிமையைச் செலுத்துவதற்கு நம்பிக்கைக்குகந்தவர்களாகவும் உள்ளனர் என்பது தெரியவந்தது. நிர்வாக அமைப்பில் இத்தகையோர் இருக்கையில், அதிகாரங்கள் இன்னும் அதிக அளவுக்குத் தாராளமாகப் பரவலாக்கப் படலாம். ஒரு சோதனை ஏற்பாடாக, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள், தங்களது உபரி நிதிகளிலிருந்து, ஓர் ஆண்டில் ரூ. 15,000 என்ற உயர் அளவுக்கு உட்பட்டு, எந்த ஒரு திட்டம் குறித்தும் ரூ. 2,500-க்கு மேற்படாத தொகையை உயர் அதிகாரியின் முன் அனுமதியின்றிச் செலவு செய்ய, அக்குழுக்களுக்கு விருப்புரிமையளிக்கலாம். அரசு தாம் விரும்பினால், அத்தகைய திட்டங்களின்கீழ் வரவேண்டிய விரிவான பணி இனங்களை வரையறுக்கலாம். ஆனால், அவற்றைத் தெரிந்தெடுக்கும் பொறுப்பு முக்கியமாக ஊராட்சி ஒன்றியக் குழுக்களிடமே இருக்க வேண்டும். ஏதேனும் ஒரு திட்டத்திற்கு ரூ. 25,000 வரையில் செலவிட அனுமதியளிக்கும் அதிகாரத்தை வருவாய்க் கோட்ட அதிகாரிகளுக்கு வழங்கலாம்; ஏதேனும் ஒரு திட்டத்திற்கு ரூபாய் ஒரு லட்சம் வரையில் செலவிட அனுமதியளிக்கும் அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் களுக்கு வழங்கலாம். பெருமளவில் செலவாகக் கூடிய திட்டங்களுக்கு அனுமதிபெற மட்டுமே மாவட்டத்திற்கு வெளியில், துறைத் தலைவர் அளவிற்கு செல்ல வேண்டும்.

11.5. அதே போன்று ஊராட்சி ஒன்றியங்களின் நிர்வாகத்தை முறைப்படுத்த தாராள வழிமுறைகள் வகுக்கப்பட வேண்டும். குறை பாடுகளைச் சரிப்படுத்தி மாநிலம் முழுவதிலும் ஒரே சீரான முறையை ஏற்படுத்தும் ஆர்வத்தில் அரசானது, ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களின

ஒவ்வொரு சிறிய அலுவலும் எவ்வாறு நடத்தப்பட வேண்டுமென்று நூற்றுக்கணக்கான முறைப்படுத்தல் ஆணைகளைப் பிறப்பித்துள்ளது. இந்த முறையினால் உள்ளூர் நிலைமைகளுக்கேற்ற சிறந்த வகையில் காரியங்களைச் செய்து முடிப்பதற்கான இணக்கத் தன்மையும் உள்ளூர் மக்களின் விருப்புரிமையும் பலியிடப்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றிய அலுவலகம் ஒன்றுதான் அலுவலகத் தலைமையதிகாரி தம்முடைய விருப்பப்படி அலுவலகத்தை அமைத்துக் கொண்டு பணிகளை நடத்திச் செல்லும் விருப்புரிமை இல்லாதவராக உள்ளார். அலுவலகத்தை அடக்கி ஒடுக்கக்கூடிய இத்தகைய செயலின் காரணமாக எங்கெல்லாம் முயற்சியும் ஆர்வமும் பெருமளவில் வேண்டப்படுகின்றனவோ அங் கெல்லாம் அவை குழிதோண்டிப் புதைக்கப்படுகின்றன. ஒரே சீரான முறை குறித்த இந்த பயங்கர ஆர்வத்தை ஒழித்துக்கட்ட வேண்டு மென்றும் இதன் விளைவாக ஒரு விஷயம் குறித்து உள்ளூர் மக்களின் தீர்ப்பும் முடிவெடுக்கும் ஆற்றலும் ஊக்கமடைகின்றன என்றும் ஆணைக் குழு பரிவுரை செய்கிறது.

11.6. ஊராட்சி ஒன்றியங்களால் கடிதங்கள் எவ்வாறு கையாளப்பட வேண்டுமென்றும் பல்வேறு அதிகாரிகளிடம் அவை எவ்வாறு பகிர்ந் தளிக்கப்பட வேண்டுமென்றும் வெவ்வேறு வகையான கடிதப் போக்கு வரத்துக்களை யார் யார் கவனித்துக் கொள்ள வேண்டுமென்றும் ஊர் வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 3—8—1971 நாளிட்ட 1805-வது அரசாணையில் விரிவான நடைமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. நடை முறையில் இந்த அரசாணையில் கண்டுள்ள கட்டளைகள் பல ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் குழப்பத்தைத் தோற்றுவித்துள்ளன. பெரும்பாலான கடிதப் போக்குவரத்துக்கள் குறித்து அலுவலக மேலாளருக்குத் தகவல் தெரிவிக்கப்படுவதில்லை ; அதே சமயம், நேரிடப்பணி நிர்வாகிகளாக விளங்கும் வளர்ச்சி அதிகாரிகளோ தன் பதிவேடுகளைச் சரிபார்ப்பதிலும் வரைவுக் கடிதப் போக்குவரத்துக்கு ஒப்புதல் வழங்குவதிலுமே காலம் கழிக்க வேண்டியுள்ளது தலைமை இடத்திலிருந்து இம்மாதிரி நடவடிக்கைகள் மேற்கொள்வது தவிர்க்கப்பட வேண்டும். ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் தம்முடைய பாணியிலே அலுவலை நடத்திச் செல்லும் வகையில் தமது அலுவலகத்தை நிர்வகிக்கும் விருப்புரிமை அவருக்கு வழங்கப்படலாம்.

11.7. இவ்வறிக்கையை முடிக்கும் முன்னர், இந்த ஆணைக் குழுவானது தன்னுடைய விசாரணைகளின்போது பல்வேறு ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், ஊராட்சித் தலைவர்கள் ஆகியோர் மனமுவந்து நல்கிய ஒத்துழைப்புக்கு தன்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ள விழைகிறது. அவர்களில் பெரும்பாலோர் பல விஷயங்களில் தங்களுக்கிருக்கும் திறமையையும் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை அணுகு வதில் தங்களுடைய அறிவார்ந்த ஆற்றலையும் வெளிப்படுத்தினார்கள். பஞ்சாயத்து ஆட்சி அமைப்பில் என்னதான் குறைபாடுகள் இருந்த போதிலும் நம்முடைய மாநிலத்திலுள்ள அந்த அமைப்பு அத்தகைய திறமையும் அறிவாற்றலும் மிக்க உள்ளூர்த் தலைவர்களை உருவாக்குவதில் பெருமிதம் அடையத்தக்க அளவுக்கு வெற்றி கண்டுள்ளது. இவர்கள்

சிறந்த திறமையுள்ளவர்கள். எனவே, இவர்களிடம் போதுமான ஆற்றலும் தீர்க்கமும் இல்லை என்று கூறி, பஞ்சாயத்து ஆட்சி முறையின் தோல்விகளுக்கும் குறைபாடுகளுக்கும் அதுதான் காரணம் என்று கூறவியலாது அதற்கு மாறாக, எந்தெந்த விஷயங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென்பதில் மேல் மட்டத்தில் சரியான முறையில் முடிவு செய்யாமையும், மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளப் போதுமான வாயில்கள் இல்லாமையுமே பஞ்சாயத்து ஆட்சி முறையின் தோல்விகளுக்கும் குறைபாடுகளுக்கும் காரணமாக இருக்கக்கூடுமென்று ஆணைக்குழு கருதுகிறது

பரிவுரைகளின் சுருக்கம்

பரிவுரைகளின் சுருக்கம்

தொடர் எண்.	பரிவுரைகள்.
(1)	(2)
1. (a)	பெரும்பாலான ஊராட்சிகள் அளவில் மிகச் சிறியவை; தனித்தியங்க நிதிவசதியற்றவை. எனவே, அரசு, ஊராட்சிகள் அமைப்பது குறித்துத் தங்களது கொள்கையை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும்; உள்ளூர் மக்களது விருப்பத்திற்கு இசைவாக, இப்போதுள்ள ஊராட்சிகளை இரண்டாகப் பிரிக்கும் போக்கை நிறுத்தவேண்டும். (பாரா 3, 5)
1. (b)	ஊராட்சிகளை அமைப்பதில் பின்பற்றவேண்டிய தக்க அடிப் படைகளாவன:— (i) ஊராட்சி ஒவ்வொன்றும் சுமார் 5000 மக்கள்தொகை கொண்டதாயிருக்க வேண்டும். ரூ. 5000 வரை ஆண்டு வரிக்கேட்புத் தொகை கொண்டதாயிருக்கவேண்டும். (ii) மாவட்ட வரி வருவாய் நிர்வாகம் குறித்து இந்த ஆணைக்குழு அளித்துள்ள அறிக்கையில் தெரிவித் துள்ள புதிய, பெரிய வருவாய்க் கிராமத் தொகுதியை அது ஒத்திருக்கவேண்டும். (iii) கிராம வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 3—8—71 நாளிட்ட 1805–ம் எண் ஆணையைச் செயல்படுத்துமுன் ஊர் நல உதவியாளரின் அதிகார வரம்பின் அள விற்கு ஏறத்தாழ சமமாக ஊராட்சி அமைந்திருக்க வேண்டும். இந்த அடிப்படையைப் பின்பற்றி, சூழ் நிலைகள் அனுமதிக்கக்கூடிய அளவுக்கு ஊராட்சிகளைச் சீரமைக்க அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டு மென்று இந்த ஆணைக்குழு பரிவுரைக்கிறது. (பாரா 3. 10)
2.	தற்போது சில ஊராட்சிகளில் ஒருசேர அமையாத சிற்றூர்கள் உள்ளன. அடைவாயுள்ள சிற்றூர்கள் 2 அல்லது 3 துண்டு களாகப் பிரிந்து ஒவ்வொரு துண்டும் வெவ்வேறு ஊராட்சி யுடன் இணைக்கப்பட்டுள்ள நிலையும் உள்ளது. இத்தகைய ஊராட்சிகள் எல்லாவற்றையும் கண்டறிந்து அவற்றைச் சீரான முறையில் மீண்டும் தொகுதிப்படுத்துவதற்குரிய செயற்குறிப்புகளை அனுப்புமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் களுக்குக் கட்டளையிடுவதன்மூலம் அவற்றைத் திருத்த உடனடி யாக நடவடிக்கை தொடங்க வேண்டியுள்ளது. (பாரா 3. 11)

தொடர் எண்.	பரிவுரைகள்.
(1)	(2)
3.	ஊராட்சிகளின் ஆண்டு வரிக்கேட்புத் தொகை ரூ. 40,000க்கு மேற்படாத வரையிலும், அவற்றின் மக்கள்தொகை 15,000க்கு மேற்படாத வரையிலும் அவற்றைப் பேரூராட்சிகளாக மாற்ற வேண்டிய அவசியமில்லை. (பாரா 3. 13)
4.	வாகன வரியும், தொழில் வரியும்கூட ஆண்டுக்கு ஒருமுறை விதித்து வாங்கப்படலாம். (பாரா 3. 15)
5.	மீன்பிடி குத்தகை உரிமைகளை மீனவர் கூட்டுறவுகளுக்குச் சலுகை அடிப்படையில் தற்போது கொடுக்கும் முறைக்குப் பதிலாக, அந்த உரிமைகளைப் பொது ஏலத்தில் விடுவதற்கு ஊராட்சிகளுக்கு அனுமதியளிக்கலாம். (பாரா 3. 15)
6.	ஊராட்சி வரிகளை வசூலிக்கும் பொறுப்பு தொடர்ந்து கிராம அதிகாரிகளிடமே இருக்கவேண்டும். ஊராட்சி வரி வசூல்களை உயர்த்துவதில் உடனடியாக கவனம் செலுத்தவேண்டுமென வருவாய்த் துறை வாரியத்திற்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் கட்டளை பிறப்பிக்கப்படலாம். (பாரா 3. 28)
7.	பெரிதாக்கப்பட்ட வருவாய் கிராமத் தொகுதிகளின் பரப்பை ஒத்துள்ள விரிவுபடுத்திய ஊராட்சிகளில், கிராம அதிகாரிகள் தங்களது இயல்பான கடமைகளில் ஒரு பகுதியாக ஊராட்சிகளின் வரி வசூல் பணிகளுக்குரிய எழுத்தர் பணிகளையும் இலவசமாகச் செய்யவேண்டும். கிராமக் கணக்குப்பிள்ளை ஊராட்சி நிர்வாகப் பணியில் ஊராட்சி மன்றத் தலைவருக்கு உதவுவார். (பாரா 3. 27, 3. 28)
8.	ஊராட்சிகளின் தெருவிளக்குகளுக்கு மீட்டர்கள் பொருத்தப்பட்டு மின்சாரம் வழங்கப்படலாம்—அவற்றிற்கான குறைந்த அளவுக் கட்டணங்களை ஊராட்சிகளின் தேவைக்கேற்பவும் அவற்றின் வருவாய் அளவிற்கேற்பவும் குறைத்துவிடலாம். பயனற்றுப்போகும் மின்குமிழ்களுக்குப் பதில் புதிய மின்குமிழ்களை (bulbs) வாங்கும் பொறுப்பு ஊராட்சிகளிடமே இருக்கலாம். அவை மின்குமிழ்களை வெளிச்சந்தையில் வாங்கலாம்; அல்லது கிராம வளர்ச்சித்துறை இயக்குநர் மூலமாக பொருள்கள் வழங்கல்—விற்றல் குறித்த தலைமை இயக்குநர் (DGS & D) வரையறுக்கும் கட்டண வீத ஒப்பந்தத்தின்கீழ் அவற்றை வாங்கலாம். (பாரா 3. 32)
9.	2000க்கு மேற்பட்ட மக்கள் தொகையுடன் ஊராட்சி ஒவ்வொன்றிற்கும் இன்றியமையாத குறைந்த அளவு துப்புரவு ஏற்பாடுகளைச் செய்வதற்காக, ஆண்டொன்றிற்கு ரூ. 1,500 என வரையறுக்கப்பட்ட மானியம் அளிக்கப்படலாம். அதற்குக் குறைந்த மக்கள் தொகையுடைய ஊராட்சிகளுக்கு இதற்கென ஆண்டொன்றிற்கு ரூ. 1,000 வழங்கப்படலாம். (பாரா 3.33)

தொடர் எண். (1)	பரிவுரைகள். (2)
10.	தற்போது ரூ. 1,000 அல்லது அதற்குக் குறைவாகச் செலவாகும் பணிகளைப் பொறுத்தவரையில், அவற்றைச் செய்வதற்கும், அளவிடுவதற்கும் ஊராட்சித் தலைவருக்கு அனுமதியுண்டு. இந்நடைமுறை கைவிடப்படலாம். பணிகளின் அளவுகள் ஊராட்சி ஒன்றிய மேற்பார்வையாளர்களால் அளக்கப்பட்டு ஊராட்சி ஒன்றியப் பொறியாளரால் சரிபார்க்கப்படலாம். (பாரா 3. 33)
11.	கிராம ஊராட்சி மன்றங்கள் தங்கள் நிதியைச் சீரான வழிகளில் பயன்படுத்துவதற்காக விதிகள் இயற்றப்பட்டு செயற்படுத்தப்படலாம். (பாரா 3. 35)
12.	பேரூராட்சிகளில் நிதி வசதிகளை மேம்படுத்துவதற்காக பாரா 4, 2-ல் கூறப்பட்டுள்ள பரிவுரைகளை அரசு பரிசீலிக்கலாம். (பாரா 4. 2)
13.	பேரூராட்சிகளில் வீட்டு வரி தொடர்பாக, வருவாய்க் கோட்ட அதிகாரிக்கு மேல் முறையீடு செய்துகொள்ள வகைசெய்யப்படலாம். (பாரா 4. 3)
14.	வளர்ச்சி மாவட்டத்திலுள்ள பேரூராட்சி மன்றத் தலைவர்களில் ஒருவர் மாவட்ட வளர்ச்சி மன்ற உறுப்பினராக நியமிக்கப்படலாம். (பாரா 4. 4)
15.	வளர்ச்சி வட்டாரங்களின் எல்லைகளைப் பெருமளவிற்கு மாற்றியமைப்பதற்கு எவ்வித அவசியமுமில்லை. (பாரா 5. 1)
16.	பேரூராட்சிகள், நகர்ப்புற வட்டாரங்கள், மலை வட்டாரங்கள் ஆகியவற்றின் சிறப்புப் பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்யவும் அவற்றின் சிறப்புத் தேவைகளை ஈடுசெய்ய மாதிரி வரவு-செலவுத் திட்டம் வகுக்கவும் குழு ஒன்று அமைக்கப்படலாம். (பாரா 5. 4)
17.	ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்கள் தற்போது மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஊராட்சி ஒன்றியத் தலைவர்களை மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறையை மேற்கொள்ளும்படி இந்த ஆணைக்குழு பரிந்துரைக்கிறது. (பாரா 5. 7)
18.	சட்டமன்ற உறுப்பினர்கள் ஊராட்சி ஒன்றியத் தலைவர் பதவிகளை வகிப்பதற்கு அமைத்திருக்கும் முறை கைவிடப்படலாம். (பாரா 5. 8)

தொடர் எண். (1)	பரிவுரைகள். (2)
19.	நிலவரி, செஸ்—சர்சார்ஜ் ஆகியவற்றின் வீதங்களை அந்தந்தப் பகுதிகளுக்கேற்றவாறு மாற்றியமைப்பதற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள உரிமை திரும்பப் பெறப்படலாம். மாநிலம் முழுவதும் ஒரே சீரான வீதத்தில் மாநில அரசு சர்சார்ஜை (மேல்வரியை) விதிக்கலாம். (பாரா 5. 11)
20.	ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிதிகளைப் பிரித்துக் கொடுத்தல், அவற்றிற்கிடையே வரி வருவாய்த் தொகுப்பு ஏற்பாட்டிலிருந்து பங்கிட்டுக் கொடுத்தல் ஆகியவற்றை 5 ஆண்டுகளுக்கொருமுறை அமைக்கப்படுகிற மாநில ஊராட்சி நிதி ஆணைக் குழுவின் பரிவுரைகளையொட்டி 5 ஆண்டுகளுக்கொருமுறை வரையறுக்கலாம்; (பாரா 5. 12)
21.	கிராமங்களில் தனியாருக்குச் சொந்தமான வாரச் சந்தைகளை ஊராட்சி ஒன்றியங்கள் எடுத்துக்கொண்டு அவற்றை நேரடியாக நடத்த அனுமதிக்கலாம். (பாரா 5. 12)
22.	ஊர்நல உதவியாளர்களுக்கும் வளர்ச்சிப் பணி அதிகாரிகளுக்கும் அவர்கள் விரைந்து பல பகுதிகளுக்குச் சென்று பணி புரிவது இயலும்பொருட்டும், ஜீப் கார்களையே நாடியிருக்க வேண்டிய தேவையைக் குறைக்கவும் அவர்களே சொந்தமாக தக்க வண்டிகளை வாங்கிக்கொள்வதற்கு அவர்களுக்குக் கடன்கள் வழங்கலாம். (பாரா 5. 14)
23.	செய்து முடிக்கப்பட்டுள்ள வேளாண்மைப் பணியின் தரத்தையொட்டி மாவட்டத்தில் எல்லா நிலைகளிலும் பணியாளர் தகுதியை மதிப்பிடவேண்டும். (பாரா 6. 2. 7)
24.	வேளாண்மைப் பணியில் தனி ஆர்வமுள்ள ஊர்நல உதவியாளர்கள், பல்கலைக் கழகச் சிறப்புப் பயிற்சி பெறுவதற்குட்பட்டு, (வேளாண்மை) வளர்ச்சிப்பணி அதிகாரிகள் அளவுக்குப் பதவி உயர்வு பெறத் தகுதியுடையவர்களாகச் செய்யப்படவேண்டும். அவ்வாறு பதவி உயர்வு அளிப்பதற்காக 200 (வேளாண்மை) வளர்ச்சிப் பணி அதிகாரிகள் பதவிகள் ஒதுக்கப்படலாம். (பாரா 6. 2. 10)
25.	ஊர்நல உதவியாளர் அனைவரும் பலவகைப் பணிகளையும் மேற்கொள்ளும் பணியாளராக இருக்கவேண்டும். சிறப்பாக வேளாண்மையில் அவர்கள் நாட்டம் செலுத்தவேண்டும். உற்பத்திப்பணி ஊர்நல உதவியாளர்கள் என அவர்களை இரண்டு தொகுதியினராகப் பிரிக்கவேண்டிய தேவையில்லை. (பாரா 6. 2. 11)

தொடர் எண். (1)	பரிவுரைகள். (2)
26.	மாவட்டத்தில் ஒவ்வொரு வேளாண்மை இயக்கமும் நடைபெறவேண்டிய காலத்தை, மாவட்ட ஆட்சித்தலைவர், வேளாண்மைத்துறைத் துணை இயக்குநர், மாவட்ட வேளாண்மை அலுவலர் ஆகியோரைக் கலந்தாலோசித்தபிறகு மும்முரச் சாகுபடிக்குத் தடை ஏற்படாத வகையில் வரையறுக்கவேண்டும். (பாரா 6. 2. 12)
27.	மாநில அளவில், ஊராட்சி வளர்ச்சிக்கும், வேளாண்மை உற்பத்திக்கும் பொதுவாக வருவாய்த்துறை வாரிய உறுப்பினர் பதவித்தரத்தில் ஆணையாளர் ஒருவர் இருக்கவேண்டும். நடைமுறைக்குச் சாத்தியமாகிற வரையில், வேளாண்மைத் துறையும் உள்ளாட்சித் துறையும் ஒரே அமைச்சரின் பொறுப்பிலிருக்க வேண்டும். (பாரா 6. 2. 13).
28.	மாவட்ட வேளாண்மை அலுவலர், ஒவ்வொரு திங்களும் ஊராட்சி ஒன்றியத்தின் வேளாண்மைப் பணிகளை ஆய்வு செய்யவேண்டும். (வேளாண்மை) வளர்ச்சி அதிகாரியும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரும் இந்த ஆய்வுக் கூட்டங்களில் கலந்துகொள்ள வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவரும், (வேளாண்மை) துணை இயக்குநரும் இந்த ஆய்வுபற்றித் தங்களது குறிப்புரைகளை எழுதி அவற்றை வேளாண்மைத் துறை இயக்குநருக்கும் ஊராட்சி வளர்ச்சி ஆணையாளருக்கும் அனுப்பவேண்டும் (பாரா 6. 2. 14.).
29·1.	(கால்நடை வளர்ப்பு) வளர்ச்சி அதிகாரி ஒருவரை மட்டும் இருத்திக்கொண்டு, எஞ்சிய கால்நடை வளர்ச்சிப் பணியாளர்களையும் கால்நடை வளர்ச்சித் துணை நிலையங்களையும் கால்நடை வளர்ச்சித் துறையின் பொறுப்பிற்கு மாற்றிவிடவேண்டும். (பாரா 6. 3. 5.).
29·2.	பெரும் நகரங்களுக்கு அருகிலமைந்துள்ள நகர வளர்ச்சி வட்டாரங்களுக்குக் கோழிப் பண்ணைத் திட்டங்கள், பாற்பண்ணை, பன்றி வளர்த்தல் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காக சிறப்பு மானியங்கள் அளிக்கப்படலாம். (பாரா 6. 3. 6.).
30.	மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வளர்ச்சி அதிகாரி, தொடர்புடைய மாவட்டக் கல்வி அதிகாரிகள் ஆகியோர் அடங்கிய மாவட்டத் தேர்வுக் குழுவொன்று, ஆசிரியர் பதவிகளுக்கான ஆசிரியர்களைத் தெரிந்தெடுத்து, தேர்வு பெற்றவர்கள் பட்டியல் ஒன்றைத் தயாரிக்கலாம்; அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அடங்கிய பட்டியலிலிருந்து ஆசிரியர்களை ஊராட்சி ஒன்றியங்கள் நியமிக்கலாம். (பாரா 6. 4. 7.).

தொடர் எண்.	பரிவுரைகள்.
(1)	(2)
31.	மாவட்டக் கல்வி அதிகாரியிடமிருந்து 15 நாட்களுக்குள் பதில் எதுவும் வராவிட்டால், ஊராட்சி ஒன்றிய ஆணையாளரே பதவி மாற்றல்களைச் செய்வதற்கு இயலுமாறு, ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 23—9—1972ஆம் நாளிட்ட 2105ஆம் எண் அரசாணையைத் திருத்தலாம். (பாரா 6. 4. 8).
32.	(கல்வி) வளர்ச்சி அதிகாரிகளிடையே உள்ள பட்டதாரிகளை பி.டி./பி.எட். பட்டப் பயிற்சிக்கு அனுப்பி, அவர்கள் கல்வித் துறையில் பதவி உயர்வு பெறத் தகுதி பெறுமாறு செய்யலாம். (பாரா 6. 4. 9).
33.	வளர்ச்சி வட்டார நிலை குடும்பநல வளர்ச்சிக் கல்வி அதிகாரிகள், மாவட்டக் குடும்பநல வளர்ச்சிப் பணி அதிகாரிகள் ஆகிய பதவிகளை நிரப்புவதற்கு ஊர்நல உதவியாளர்களையும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரையும் தெரிந்தெடுக்கலாம். (பாரா 6. 5. 1).
34.	ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் உள்ள மகப்பேறு நிலையங்கள் அனைத்தும், சுகாதாரப் பணிகள்—குடும்பநலத் திட்டத் துறைக்கு மாற்றப்படலாம். (பாரா 6. 6. 2).
35.	வணிக உரிமம் வழங்கும் பணிகளின் பொறுப்பிலுள்ள சுகாதார ஆய்வாளர்கள் ஊராட்சி ஒன்றியத்தின் நிர்வாகத்திற்கு மாற்றப்படவேண்டும். (பாரா 6. 6. 3).
36.	(கூட்டுறவு) வளர்ச்சிப் பணி அதிகாரிகள் ஊராட்சி ஒன்றியப் பணியில் தொடர்ந்து இருத்திக்கொள்ளப்பட்டு, அவர்கள் (a) கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதிலும், (b) பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களிலிருந்து கடன் வசதிகளையும் ஏனைய வசதிகளையும் பெறுவதற்கு இன்ன வழிமுறைகளைப் பின்பற்றவேண்டுமென உழவர்களுக்குக் கற்பித்தலிலும் கவனம் செலுத்தும்படிக் கேட்டுக்கொள்ள வேண்டும். (பாரா 6. 7. 2).
37.	(தொழில்கள்) வளர்ச்சிப் பணி அதிகாரிகள் கதர்-கிராமத் தொழில்கள் வாரியத்திற்கு மாற்றப்படலாம். (பாரா 6.8.1).
38.	5 பேரூராட்சிகளுக்கு மேலுள்ள நெடுஞ்சாலைகள்—கிராமப் பணிகள் துறையின் ஒவ்வொரு துணைக் கோட்டத்திலும் பேரூராட்சிகளின் பணிகளைக் கவனிப்பதற்கென்றே தனியாக இளநிலைப் பொறியாளர் ஒருவர் இருக்கவேண்டும். (பாரா 6. 9. 2).

தொடர் எண். (1)	பரிவுரைகள். (2)
39.	கிராமப் பணிகளுக்குத் தொழில்நுட்ப ஒப்பளிப்பு வழங்குவதற்காக நெடுஞ்சாலைகள், கிராமப் பணிகள் துறையின் பொறியாளர்களுக்கு உள்ள அதிகாரங்கள் கீழ்க்கண்ட வகையில் உயர்த்தப்படலாம்: இளநிலைப் பொறியாளர் .. ரூ. 5,000. உதவிப் பொறியாளர் .. ரூ. 20,000. கோட்டப் பொறியாளர் .. ரூ. 1,00,000.
40.	100 எக்கர்களுக்குமேல் ஆயக்கட்டுப் பகுதிகளைக் கொண்டுள்ள ஏரிகள், பொதுப்பணித் துறையின் நிர்வாகத்திற்கு மாற்றப்படலாம். (பாரா 6. 9. 4.)
41.	ஊராட்சிச் சாலைகளைச் சரிவரப் பராமரிப்பதற்காக ஏற்பாடுகள் செய்யப்படலாம். (பாரா 6. 9. 5.)
42.	அண்மையில் எடுக்கப்பட்ட மக்கட் தொகைக் கணக்கு, சாலைகளின் நீளம் இவை குறித்து அண்மையில் கிடைத்துள்ள தகவல்களுக்கேற்ப உள்ளூர் சாலைகள் மானியத்திற்கான அடிப்படைக் கோட்பாடுகள் மாற்றியமைக்கப்படலாம். (பாரா 5. 9. 7.)
43.	பற்பல கிராம வேலை வாய்ப்புத் திட்டங்களுக்கான நிதியின் ஒரு பகுதி சாலைப் பராமரிப்புப் பணிக்குப் பயன்படுத்தப்படவேண்டும். (பாரா 6. 9. 7.)
44.	ஊராட்சி ஒன்றியங்கள் தங்களது அலுவலகக் கட்டிடங்களைத் தங்களது இளநிலைப் பொறியாளர்களின் உதவியுடன் பேணிவர அனுமதிக்கப்படலாம். (பாரா 6. 9. 8.)
45.	முழுநேர அல்லது பகுதிநேர கைவினைப் பயிற்சி ஆசிரியர்களை நியமிக்கவும், மகளிர் நலத்திட்டச் செலவுகளினால் கிடைக்கும் பயனை அடையும் பொருட்டு தையல் யந்திரங்கள் முதலியவற்றை வைத்து வரவும் அவற்றைப் பழுது பார்க்கவும் ஊராட்சி மன்றங்கள் அனுமதிக்கப்படலாம். (பாரா 6. 10.)
46.	மாவட்ட மகளிர் நல அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நேர்முக உதவியாளர்களாகப் பதவிப் பெயரிடப்படலாம். (பாரா 6. 10.)
47.	மாவட்ட வளர்ச்சி மன்றங்களிடம் நிர்வாகப் பணிகளோ வரி விதிப்புப் பணிகளோ ஒப்படைக்கப்பட வேண்டியதில்லை (பாரா 7. 4.)

தொடர் எண்	பிரிவுரைகள்
(1)	(2)
48.	மாவட்ட ஐந்தாண்டுத் திட்டங்களையும் ஆண்டுத் திட்டங்களையும் தயாரிப்பதில் மாவட்ட வளர்ச்சி மன்றங்களைச் சேர்த்து கொள்ளலாம். திட்டப் பணிகள் அனைத்தையும் மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் சீர்தூக்கிப் பார்த்து, அவற்றை மதிப்பிடலாம். (பாரா 7. 5. 7. 6. 7. 8.)
49.	மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களை நடத்துவதில் 7. 7 பத்தியில் குறிப்பிடப்பட்ட நடைமுறை மாற்றங்களை மேற்கொள்ளலாம். (பாரா 7. 7.)
50.	மாவட்ட வளர்ச்சி மன்றங்களின் தீர்மானங்கள் குறித்து விரைந்து நடவடிக்கை எடுக்கும் மரபை அரசு உருவாக்கலாம். தீர்மானங்களை ஏற்றுக்கொள்ள முடியாவிட்டால் அல்லது நிறைவேற்ற முடியாவிட்டால் அதற்குப் போதிய காரணங்களை மேற்படி மன்றங்களுக்கு அரசு தெரிவிக்கலாம். (பாரா 7. 9.)
51.	ஒவ்வொரு மாவட்ட வளர்ச்சி மன்றத்திற்கும் தனியாக மாவட்ட வளர்ச்சி அதிகாரி ஒருவர் நியமிக்கபபடலாம். அவருக்கென்று அனைத்து வசதிகள் கொண்ட அலுவலகம் ஒன்றைத் தனிப்பட அமைத்து கொடுக்கலாம். (பாரா 7. 10.)
52.	கீழ்க்காணும் பதவித்தரங்களைக் கொண்ட ஊராட்சி ஒன்றியக் கணக்கர்கள் (Panchayat Union Accountants) என்று தனியாக ஒரு பதவித்தரம் ஏற்படுத்தப்படலாம் :—

பதவிகள்	சம்பள வீதம்
இளநிலைக் கணக்கர் (Junior Accountant)	ரூ. 210–5–245–10–325.
கணக்கர் (Accountant)	ரூ. 250–10–300–15–450.
முதுநிலைக் கணக்கர் (Senior Accountant)	ரூ. 275–10–375–15–450.
ஊராட்சி வளர்ச்சிக் கணக்கர் (PD Accountant)	ரூ. 300–10–350–15–500.

(பாரா 8. 3.)

53.	ரூ. 25 லட்சத்திற்கு மேற்பட்டு பற்றுவரவுள்ள ஊராட்சி ஒன்றியங்களில் ஊராட்சி வளர்ச்சிக் கணக்கர் ஒருவரும் ஒரு கணக்கரும் நியமிக்கப்படலாம் ; சிறு அளவில் பற்று—வரவுள்ள ஊராட்சி ஒன்றியங்களில் முதுநிலை கணக்கர் ஒருவரும் இளநிலைக் கணக்கர் ஒருவரும் நியமிக்கப்படலாம். (பாரா 8. 3)

தொடர் எண்	பரிவுரைகள்
(1)	(2)
54.	வணிகக் கணக்கு வைப்பு முறையில் (Commercial Book-Keeping) தகுதி பெற்றுள்ளவர்கள் மட்டுமே இளநிலை கணக்கர்களாகப் பணிக்குத் தெரிந்தெடுக்கப்பட வேண்டும் உள்ளாட்சி நிதிக்கணக்கு ஆய்வாளர், முதுநிலைக் கணக்கர்கள் அனைவருக்கும் சிறப்புப் பயிற்சி வகுப்பு ஒன்றை நடத்த வேண்டும். (பாரா 8. 3, 8. 4.)
55.	கணக்கு நடைமுறைகள் சீரமைக்கப்படலாம். வழக்கற்றுப் போன பதிவேடுகள் நிர்வாக அமைப்பு நடைமுறை ஆய்வுகள் மேற்கொள்வதன் மூலம் ஐந்தாண்டுகளுக்கொரு முறை நீக்கப்படலாம். (பாரா 8.6)
56.	முன்-தணிக்கை (Preaudit), உடன் தணிக்கை (Concurrent audit) முதலியவற்றை மேற்கொள்வதற்காக ஊராட்சி ஒன்றியங்களில் தணிக்கைப் பிரிவுகள் ஏற்படுத்துவதை ஆணைக்குழு பரிந்துரைக்கவில்லை. (பாரா 8.16)
57.	ஊராட்சி மன்றக் கணக்குகளின் தணிக்கை தனியாக நடைபெறுவதை உறுதிப்படுத்துவதற்காக, ஊராட்சி ஒன்றியத்திலிருந்து (ஊராட்சிகள்) வளர்ச்சிப் பணி அதிகாரி பிரிக்கப்பட்டு வருவாய்க் கோட்ட அதிகாரி அலுவலகத்தில் பணிபுரியுமாறு செய்யப்படவேண்டும். (பாரா 8.17)
58.	உள்ளாட்சி நிதித் தணிக்கையாளர்கள் எழுப்பும் மறுப்புரைகள் விரைவாகத் தீர்த்து வைக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக, பொதுக் கணக்குகள் ஆய்வுக் குழுவைப் போன்ற தனிச் சட்டமன்றக் குழு ஒன்று அமைக்கப்படலாம். இக்குழு ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டங்கள் நடத்தலாம். (பாரா 8.19)
59.	பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் எழுத்தர் பணியாளர்களை மாநில அரசுப் பணியாளர்களாக்கலாம். (பாரா 9.6)
60.	(வேளாண்மை) வளர்ச்சிப் பணி அதிகாரி, (கூட்டுறவு) வளர்ச்சிப் பணி அதிகாரி, (ஊராட்சி) வளர்ச்சிப் பணி அதிகாரி, (கல்வி) வளர்ச்சிப் பணி அதிகாரி, மேலாளர் மற்றும் வட்டார அளவில் குடும்பநலத்திட்ட பரப்பாளர்கள் முதலிய பதவிகளுக்கு பதவி உயர்வு பெற ஊர்நல உதவியாளர்கள் தகுதியுடையவர்களாக்கப்படவேண்டும். (பாரா 9.7)
61.	மாநில அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழுவின் மூலம் ஊர்நல உதவியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். (பாரா (9.9)

தொடர் எண்	பிரிவுரைகள்
(1)	(2)
62.	மாவட்டத்தில் ஊராட்சி வளர்ச்சிப் பிரிவில் உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள் பதவிகள் போன்ற தனியான பதவித் தரங்கள் எதுவும் இருக்கக் கூடாது. எல்லா வகையாலும் அனுபவம் பெறுவதற்காக ஊர்நல உதவியாளர்கள் அலுவலகப் பணிகளும் களப் பணிகளும் புரிய வேண்டும். (பாரா 9.10)
63.	(கல்வி) வளர்ச்சிப் பணி அதிகாரி, (ஊராட்சி) வளர்ச்சிப் பணி அதிகாரி, மேலாளர், ஊராட்சி வளர்ச்சிக் கணக்காளர்கள் ஆகிய பதவிகளை ஊராட்சி வளர்ச்சித் தலைமை எழுத்தர்கள், கூடுதல் ஊராட்சி அதிகாரிகள் பதவிகளுக்குத் தரம் உயர்த்துவதை ஆணைக்குழு ஆதரிக்கவில்லை. கூடுதல் ஊராட்சி அதிகாரிகள் பதவிகள் ஒழிக்கப்பட்டதை அடுத்து, இந்த இருவகைப் பணியாளர்களுமே [அதாவது ஒருபுறம் ஊராட்சி வளர்ச்சித் தலைமை எழுத்தர்களும், மற்றொருபுறம் (கல்வி) வளர்ச்சிப் பணி அதிகாரி, (ஊராட்சி) வளர்ச்சிப்பணி அதிகாரி, மேலாளர், ஊராட்சி வளர்ச்சிக் கணக்கர்கள் ஆகியோரும்] ஊராட்சி ஒன்றியப் பொறுப்பு அதிகாரிகளாகப் பதவி உயர்வு பெற நேரடித் தகுதியுடையவர்களாக்கப்படலாம். (பாரா 9.15)
64.	ஊர்நல உதவியாளர்கள் பதவியும் பேரூராட்சிகளின் நிர்வாக அதிகாரிகள் பதவிகளும் ஒன்றுக்கொன்று மாற்றப்படத் தக்கவையாக இருப்பது நிறுத்தப்படவேண்டும். (பாரா 9.17)
65.	சமூக நலப்பணியாளர்கள் பதவிகள் ஒழிக்கப்படவேண்டும். (பாரா 9.19)
66.	குடும்ப நலத் திட்டம், சிறுசேமிப்பு, சத்துணவுத் திட்டம், வறட்சி நிவாரணம், கண்ணொளி வழங்கும் திட்டம் போன்ற திட்டங்களின் கீழ் உள்ள தாசில்தார்கள் மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள் ஆகிய பதவித் தரத்தில் உள்ள பல்வேறு பதவிகளுக்கு நியமிப்பதில் ஊராட்சி வளர்ச்சித் துறையின் பணியாளர்களைக் கருதிப் பார்க்க வேண்டும். (பாரா 9.20)
67.	ஊராட்சி வளர்ச்சித் துறையின் பணி விதிகளை ஆய்ந்து தொகுத்தலுக்காக, தேவையான பணியாளர்களுடன் கூடிய தனி அலுவலர் ஒருவர் ஆறு திங்களுக்கு நியமிக்கப்படலாம். (பாரா 9.21)

68. * ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் ஆகியவற்றிடம், வளர்ச்சி உற்பத்திப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளவரை, இவற்றின் அலுவலர்கள், பணியாளர்கள் ஆகியோரின் பணி, கிராம வளர்ச்சி குறித்து முக்கியமாகச் சம்பந்தப்பட்டுள்ள மாவட்டத்தின் முக்கிய இரு அலுவலர்களான வருவாய்க்கோட்ட அலுவலர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆகியோரால் மேற்பார்வையிடப்படவும், ஆலோசனை கூறப்படவும் வேண்டியுள்ளது. (பாரா 10.8)

69. * வருவாய்க் கோட்ட அலுவலரின் பணிச்சுமையைக் குறைப்பதற்காகவும் வளர்ச்சிப் பணி குறித்து அவர் கவனம் செலுத்துவதற்குப் போதிய காலம் அளிப்பதற்காகவும், அவருடைய ஆட்சி வரம்பு எல்லையை தாலுகா அளவுக்குக் குறைக்கவேண்டும். (பாரா 10.9)

70. * ஊராட்சி ஒன்றியப் பொறுப்பு அதிகாரிகள், கோட்ட ஊராட்சி அலுவலர்கள், ஊராட்சி வளர்ச்சித் துறையிலுள்ள நிகரான பணியாளர்கள் ஆகியோர் வருவாய்த்துறையின் தாசில்தார்கள் போலவே, மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்களாகப் பதவி உயர்வு அளிக்கப்படத் தகுதியுடையோராக ஆக்கப்பட வேண்டும். (பாரா 10,9)

71. * மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்களின் அதிகார வரம்பு, வட்ட அளவுக்குக் குறைக்கப்படும்போது புதிதாக ஏற்படும் மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள் பதவிகளில் 50 சத வீதம், ஊராட்சி வளர்ச்சித்துறைப் பணியாளர்களுக்குப் போதிய பதவி உயர்வு அளிப்பதற்காக ஒதுக்கிவைக்கப்படலாம். (பாரா 10.9(

72. * புதிதாக 69 மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள் பதவிகளை உண்டாக்குவதால், கோட்ட ஊராட்சி அலுவலர்கள் பதவிகளின் எண்ணிக்கை பெருகும். இதனால், ஊராட்சி வளர்ச்சித் துறையிலுள்ள பணியாளர் தேக்க நிலை ஓரளவு குறையும். (பாரா 10.9)

73. * மாவட்டத் துணை ஆட்சித் தலைவராகப் பதவி உயர்வுபெறுதற்கு தாசில்தார், ஓராண்டுக்காலம், ஊராட்சி ஒன்றியப் பொறுப்பு அதிகாரியாகப் பணி புரிந்து, ஊராட்சி வளர்ச்சித் தேர்வுகளில் தேறவேண்டும். அதேபோல் ஊராட்சி ஒன்றியப் பொறுப்பு அதிகாரியும் மாவட்டத் துணை ஆட்சித் தலைவராகப் பதவி உயர்வு பெறுவதற்கு ஓராண்டுக்காலம், தாசில்தாராகப் பணி புரிந்து, வருவாய்த் தேர்வுகளில் தேறவேண்டும். (பாரா 10.10)

74.* அத்தகைய பதவி உயர்வு அளிப்பதற்காக, நிலவரி ஆணையாளர், வேளாண்மை உற்பத்தி—ஊராட்சி வளர்ச்சி ஆணையாளர் ஆகியோர் கொண்ட குழு ஒன்று விண்ணப்பத்தாரர்களைப் பரிசீலித்து, பதவி உயர்வு அளிப்பதற்கான பணியாளர்களைத் தெரிந்தெடுக்கும். (பாரா 10·9)

75.* 5 ஆண்டுப் பணிக்குப் பிறகு, தாசில்தார்களும் கோட்ட ஊராட்சி அதிகாரிகள் தரத்திற்குப் பதவி உயர்வு பெறத் தகுதியுடையவர்களாயிருக்க வேண்டும். (பாரா 10·11)

76.* எல்லா நிலைகளிலும் மாவட்ட நிர்வாகம் தொடர்பான வருவாய், ஊராட்சி வளர்ச்சிப் பிரிவுகள் ஆகியவை பத்தாண்டுக் காலத்தில் படிப்படியாக ஒருங்கிணைய வேண்டும் என்றும், "பொது நிர்வாகம்—வளர்ச்சிப்பணி" என்று குறிப்பிடக்கூடிய பொதுப் பணியமைப்பு ஒன்று உருவாக வேண்டும் என்றும் ஆணைக்குழு கருதுகிறது. (பாரா 10·13)

77.* மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நேரடியாகவே வளர்ச்சிப் பணியை மேற்கொள்ளவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுவதால், மாவட்ட வளர்ச்சி அதிகாரி பதவித் தரத்தை மாவட்ட வருவாய் அதிகாரி பதவித் தரத்திற்கு உயர்த்தவேண்டிய அவசியமில்லை. மாவட்டங்களின் பரப்பளவைக் குறைக்கும் பணியிலே நாட்டம் செலுத்தவேண்டும். (பாரா 10·14)

78. ஊராட்சி வளர்ச்சித் துறைக்கு வருவாய்த் துறை வாரிய உறுப்பினர் பதவித் தரமுள்ள அதிகாரியொருவர் தலைமை வகிக்கவேண்டும்; அவர் ஊராட்சி வளர்ச்சி—வேளாண்மை உற்பத்தி ஆணையாளர் என்றழைக்கப்படவேண்டும். அவர் உள்ளாட்சித் துறை, வேளாண்மைத் துறை ஆகியவற்றில் தமது அலுவல் காரணமாக அரசுச் செயலாளராகவும் இருக்க வேண்டும். (பாரா 10·16)

79. மாநில அளவிலான ஊராட்சி வளர்ச்சி ஆலோசனைக் குழுக் கூட்டங்கள் ஆண்டுக்கொருமுறையேனும் கூட்டப்படவேண்டும். (பாரா 10·15)

80. அதிகாரப் பிரிவினையை மாற்றியமைப்பது குறித்து முடிவெடுக்கையில், 11·2 பாராவில் குறிப்பிடப்பட்டுள்ள கொள்கைகள் பின்பற்றப்படலாம். (பாரா 11·2)

CONNEMARA PUBLIC LIBRARY
19 DEC 1973

81. ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் தங்களுடைய உடரி நிதியிலிருந்து எந்த ஒரு திட்டத்திற்கும் ரூ. 2,500 க்கு மேற்படாமல் (ஆண்டொன்றுக்கு உயர்ந்த அளவு ரூ. 15,000/–என்பதற் குட்பட்டு செலவிட அனுமதிக்கப்படலாம். இதனால் உயரதி காரிகள் எவரிடமிருந்தும் அனுமதி பெறவேண்டிய அவசியம் அவற்றிற்கு இராது. (பாரா 11·4)

82. வருவாய்க் கோட்ட அதிகாரியும் மாவட்ட ஆட்சித் தலைவரும், ஊராட்சி ஒன்றியங்கள் மேற்கொள்ளும் எந்த ஒரு திட்டத் திற்கும் முறையே ரூ. 25,000/– ரூ. ஒரு லட்சம் வரையில் செலவிட அனுமதியளிப்பதற்கான அதிகாரம் வழங்கப்பெற லாம். (பாரா 11·4)

83. ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களின் நிர்வாகம் குறித்து தலைமையிடத்திலிருந்து கட்டளைகள் பிறப்பிக்கப்படுவது மிகவும் குறைக்கப்படவேண்டும். ஊராட்சி ஒன்றியப் பொறுப்பு அதிகாரிகள் உள்ளூர் நிலைமைகளுக்கேற்ப தங்களது அலுவலகங்களைத் தாமாகவே தங்கள் விருப்பப்படி அமைப்ப தற்கும், பணியை நடத்திச் செல்வதற்கும் அனுமதிக்கப்பட வேண்டும். (கிராம வளர்ச்சி–உள்ளாட்சித் துறையின் 3. 8. 71 ஆம் நாளிட்ட 1805 ஆம் எண். அரசாணைஇந்த நோக்கத்திற்கேற்ப தக்கவாறு திருத்தப்படலாம்.)
(பாரா 11·5, 11·6)

---

* உறுப்பினர் திரு ஏ. ஆர். சுப்பையா முதலியார், எம். எல். ஏ. தெரிவித்த கருத்து வேறுபாட்டுக் குறிப்புரைக்குட்பட்டது.

டி. ஏ. வர்கீஸ்,
தலைவர்.

கே எஸ். சிவசுப்ரமணியன்,
உறுப்பினர்.

12–7–1973

வி. கார்த்திகேயன்,
உறுப்பினர்.

ஏ. ஆர். சுப்பையா, எம். எல். ஏ.
உறுப்பினர்.

வி. கிருஷ்ணசாமி,
உறுப்பினர்–செயலாளர்.

ஊர் வளர்ச்சி நிர்வாகம் குறித்த அறிக்கை

[திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார், எம்.எல்.ஏ., அவர்களின் கருத்து வேறுபாட்டுக் குறிப்பு.]

ஊராட்சி அமைப்பு மேலதிகாரிகளின் ஆணைப்படி இயங்கவேண்டும். குறிப்பாக, வருவாய்க் கோட்ட அதிகாரியின் நேரடி மேற்பார்வையின் கீழ் இயங்கவேண்டும் என்பது குறித்து அத்தியாயம் 10-இல் கூறப் பட்டுள்ளவாறு, ஆணைக்குழுவில் எனது தோழமை உறுப்பினர்களின் பொது அணுகு முறையை என்னால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. இந்த முடிவிற்குச் சாதகமாக அவர்களால் கூறப்படும் வாதங்கள், ஊராட்சி நிர்வாகத்தில் வருவாய்க் கோட்ட அதிகாரியின் உண்மையான பங்கினைச் சரியாக மதிப்பிடாமல் அவர்களால் எழுப்பப்பட்டனவாகும்.

2. ஊராட்சி வளர்ச்சிப் பணியை, வருவாய்க் கோட்ட அதிகாரி மேற்பார்வையிடுகின்ற முறை கடந்த 15 ஆண்டுகளாகச் செயலில் உள்ளது ; ஆனால், அதனால் விரும்பிய விளைவுகள் ஏற்படவில்லை. குழுவிலுள்ள எனது தோழர்கள் இதனை ஏற்றுக் கொண்டுள்ள போதிலும், வருவாய்க் கோட்ட அதிகாரிகள் மிகுந்த பணிச்சுமையால், இப்பணியைக் கவனிக்க நேரமில்லாதவர்களாயுள்ளார்கள் என்று அதற்குக் காரணம் கூறுகின்றனர். ஆகவே, வருவாய்க் கோட்ட அதிகாரியின் அதிகார வரம்புப் பகுதியைச் சரிபாதியாக்குவதன் மூலம் அவருடைய பணிச் சுமையைக் குறைக்கவேண்டுமென அவர்கள் பரிந்துரைத்துள்ளனர். இந்த அணுகு முறையினால் நிலைமை மேம்படும் என நான் கருத வில்லை. ஏனென்றால், நிலைமையின் உண்மையான நிலவரத்தை யொட்டி அந்த அணுகுமுறை அமையவில்லை. வருவாய்க் கோட்ட அதிகாரி ஊராட்சி நிர்வாகத்தில் ஊக்கங்கொண்டு தகுந்த முறையில் தலைமை தாங்கி நடத்த இயலவில்லையென்றால், அக்குறை அப்பதவிக்குத் தெரிந்தெடுக்கப்படும் முறை, பதவி அமைந்திருக்கும் முறை ஆகியவற் றையே சார்ந்ததாகும். வருவாய்க் கோட்ட அதிகாரிகளில் பெரும் பாலோர் வருவாய்ச் சார்நிலைப் பணியில் கீழ்நிலை எழுத்தராகச் சேர்ந்து மேல் நிலை எழுத்தர், ரெவின்யூ இன்ஸ்பெக்டர், துணைத் தாசில்தார், தாசில்தார், துணை மாவட்ட ஆட்சித் தலைவர் என்று படிப்படியாக 20 ஆண்டுக்கால அளவில் பதவியில் உயர்கிறார்கள். பதவி உயர்வு பெற்று ஒருவர் துணை மாவட்ட ஆட்சித் தலைவராக வரும்போது அவருடைய வயது 45 ஆக இருக்கும். ஒவ்வொரு நிலையிலும் தேர்வானது தகுதி அடிப்படையிலேயே அதாவது அறிவுத்திறன், உழைப்பு, ஊக்கம், நேர்மை ஆகியவற்றின் அடிப்படையிலேயே பதவி உயர்வு கிடைத்திருப்பது போல் தோன்றக் கூடும். அலுவலர் இரகசியக் குறிப்பேட்டு முறை நடை முறையிலிருந்ததால், உண்மையில் பதவி உயர்வு மேலே குறிப்பிடப் பட்ட தன்மைகளின் மதிப்பீட்டின் அடிப்படையினைச் சார்ந்திருக்கவில்லை; கடுமையான தவறுகளைத் தவிர்ப்பதைப் பொறுத்தே பதவி உயர்வு கிடைக்கிறது. எந்தவிதமான துணிவு முயற்சியும் மேற்கொள் ளாமல் நிதானமாக ஒரே சீராக யந்திர கதியில் பணியாற்றுபவரே சாதா ரணமாக பதவி உயர்வுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். குணநலன்கள்

பற்றிய குறிப்புகள் பொதுவாக மேம்போக்கானவை: நற்பணி பற்றிய குறிப்புகள் திட்டவட்டமாகக் குறிப்பிடப்படுவதில்லை. பாதகமான குறிப்புரைகள் செய்யத்தக்க செய்யாமை அல்லது செய்யத்தக்க அல்ல செய்தல் குறிப்பிட்ட செயல்களோடு தொடர்புடையனவாயிருக்க வேண்டும். ஏனென்றால், அத்தகைய குறிப்புரைகள் சம்பந்தப்பட்டவருக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். ஆகையால், புகார் செய்யும் அதிகாரி தம்மைக் காத்துக் கொள்ளும் வகையில் தம்முடைய புகார் நியாயமானது என்பதை மெய்ப்பிக்க வேண்டும். எதிலும் எச்சரிக்கையாக இருப்பதற்கும் எதிலும் அச்சமுற்று தீர்மானமாகச் செயல்பட இயலாத பண்பை' வளர்ப்பதற்கு இது வழிகோலுகிறது. உரிய காலத்தில் உரிய பணியைச் செய்யாமல் தயங்கித் தயங்கி, பணியைத் தள்ளிப்போடுகின்ற தன்மையுடைய சாதாரணமான திறமையுடையவர்கள், இதனால், கூர்த்த மதியும் செயலார்வமும் பெற்றும் நல்லெண்ணம் காரணமாக வரையறையை மீறிச் செயல்படுபவர்களைவிட, முன்னேற வழி ஏற்படுகின்றது.

3. பெருமளவு இந்த அடிப்படையில் தெரிந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள், தம்முடைய வயது முதிர்ந்த நாட்களில் பின்வரும் ஒழுங்குமுறைப் பணிகளை மிகச் சிறந்த முறையில் செய்யலாம். சட்டம்-ஒழுங்கை நிலை நிறுத்துவது. (நெருக்கடி சூழ்நிலையில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கையைக் குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவை தெளிவாகக் கூறுகின்றது) அரசுக்குச் சேரவேண்டிய வருவாயை வசூலித்தல்—(வாரிய நிலை ஆணைகள், வருவாய் நிர்வாகம் குறித்து விரிவான கட்டளைகளைக் கொண்டுள்ளது) அல்லது பல்வேறு துறைகளின் பணிகளில் ஒருங்கிணைந்து செயற்படுவது மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரின் உயர் தனி அதிகாரத்தை எவரும் மறுக்க முடியாது. வருவாய்க் கோட்ட அதிகாரி அவருடன் அலுவல் முறையில் நெருக்கமானவர் என்பது அனைவருக்கும் தெரிந்ததே. ஊராட்சி வளர்ச்சித் திட்டங்களைத் திறம்படச் செயற்படுத்துவதற்கு முற்றிலும் மாறுபட்ட தன்மைகளைப் பெற்றிருக்க வேண்டும். இத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத் தேவையான மிக இன்றியமையாத தன்மை, கிராம மக்களை அணுகி, ஊக்கமூட்டி ஊராட்சி அமைப்பினால் ஏற்படுத்தப்பட்டுள்ள பல்வேறு வளர்ச்சிப் பணிகள் அவரது இல்லந்தேடிக்கொண்டுவரும் நவீன தொழில் நுட்ப உத்திகளைப் பின்பற்றுவதில் அவர் காட்டும் பழங்கால மெத்தனத்தைவிட்டு விடச் செய்வதாகும். கிராம மக்களைப் பொறுத்தவரையில் 'வருவாய்க் கோட்ட அதிகாரி என்பவர் முரட்டு அதிகாரமுள்ளவர். அவரிடமிருந்து தள்ளி நிற்பதே சாலச் சிறந்தது' என்று அவர்கள் நினைக்கின்றனர். தம்முடன் தகராறு செய்யும் அண்டை வீட்டுக்காரர் மீது பழிதீர்க்கவேண்டும்போது மட்டும் அவர்கள் வருவாய்க் கோட்ட அதிகாரியை அணுகுகின்றனர்.

4. ஊராட்சி வளர்ச்சிப் பணி, அப்பணியில் அடிப்படை அனுபவம் பெற்று, அதனைப்பற்றிய விவரமான அறிவு உடையவர்களால் மேற்பார்வையிடப்பட வேண்டும். முழு வளர்ச்சிக்கான ஆர்வமுடையவர்களாய், பணியினை நன்றாகப் புரிந்துகொண்டு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுடன் அனுதாபத்துடன் இணைந்து இருந்து ஒரு

குழுவாக வண்டி மாடுகள்போல் இணைந்து பணியாற்றுபவர்களாய் முரண்பட்ட கருத்துக்களுக்கும் கோரிக்கைகளுக்கும் ஈடுகொடுத்துச் சரிக்கட்ட முடிந்தவர்களாய் மக்கள், அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் ஊக்க மிகுந்த ஒத்துழைப்புடனும் ஆர்வத்துடனும் அமைதியாக வளர்ச்சிப் பணியை மேற்கொள்பவர்களாய் உள்ளவர்களே இப்பணிக்குத் தேவையானவர்கள். பற்பல ஆண்டுகளாக வருவாய்த்துறை அதிகாரிகளுடன் நான் நெருங்கிய தொடர்புகொண்டு அத்துறைபற்றி அறிந்துள்ளதாய், வருவாய்த்துறை அதிகாரிகள் இந்தவகை நிர்வாகத் தலைவர்களாக விளங்க முடியாது என்பது எனக்கு உறுதியாகப்படுகிறது. ஊராட்சி வளர்ச்சித் துறை அதிகாரிகளே தேவையான பின்னணியைப் பெற்றுள்ளதால், அவர்களே அத்தகைய நிர்வாகத் தலைவர்களாக விளங்குவர் என்பதை நம்பலாம்.

5. தற்போது வருவாய், ஊராட்சி வளர்ச்சித் துறைகளுக்கிடையே பணியாளர் பரிமாற்றம் இல்லை. வருவாய் அதிகாரிகள், துணை மாவட்ட ஆட்சித் தலைவர்களாகப் பதவி உயர்வு பெற்று வருவாய்க் கோட்ட அதிகாரிகளாக நியமிக்கப்படும்வரை, அவர்களுக்கு ஊராட்சி வளர்ச்சிப் பணியில் தொடர்பிருப்பதில்லை. இவ்வாறாக, வருவாய்க் கோட்ட அதிகாரிகள், ஊராட்சி வளர்ச்சிப் பணியின் முன்னறிவோ அல்லது நேரடி அனுபவமோ இல்லாது அப்பணியை மேற்பார்வையிடத் தொடங்குகின்றனர். வட்டம் ஒன்றிற்கு ஒரு வருவாய்க் கோட்ட அதிகாரியை நியமிப்பது என்கிற எனது குழுவில் தோழமை உறுப்பினர்களின் பரிவுரையினால் நிர்வாகம் சீர்படுவதற்கு வாய்ப்பில்லை. தற்போது தேவைப்படுவது என்னவெனில், இந்த அமைப்பினைக் கட்டுப்படுத்தும் அதிகாரியின் நோக்கில் இது ஒரு புரட்சிகரமான மாறுதலே. இம்மாற்றத்தை, வருவாய்க் கோட்ட அதிகாரியின் தற்போதைய பின்னணி, பயிற்சி ஆகியவற்றின் அடிப்படையில் எதிர்பார்க்க முடியாது.

6. துணை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பல நோக்கப் பணிபுரிபவர்களாயுள்ளனர்; அவர்களில் பலர் சிறிது காலத்திற்கே கோட்டங்களின் வருவாய்க் கோட்ட அதிகாரிகளாக உள்ளனர். அண்மை ஆண்டுகளில், கோட்டங்களிலிருந்து வருவாய்க் கோட்ட அதிகாரிகள் பலர், ஊராட்சி வளர்ச்சிப் பணிக்குத் தொடர்பில்லாத பணிகளுக்கு ஓராண்டிற்குள்ளேயே மாற்றப்பட்டுள்ளனர். இவ்வாறு ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் இடைவிடாமல், புதிதாக வரும் வருவாய்க் கோட்ட அதிகாரிகளுக்கு மீண்டும் மீண்டும் ஒன்றியம்பற்றி எடுத்துக்கூற வேண்டியவர்களாயுள்ளனர். இம்முயற்சி எரிச்சலூட்டக்கூடியதாகும்.

7. ஆகையால், கோட்ட அளவில், கோட்ட வளர்ச்சி அதிகாரிகள் (Divisional Development Officers) என்ற பதவிப் பெயர்பெறும் ஊராட்சி வளர்ச்சித் துறையைச் சேர்ந்த புதிய அதிகாரிகளால் ஊராட்சி வளர்ச்சிப் பணி மேற்பார்வையிடப்பட வேண்டும் என்று நான் கருதுகிறேன். அவர்கள், வருவாய்த் துறையைச் சேர்ந்த துணை மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பதவித் தரம், சம்பள வீதம் ஆகியவற்றிற்கு இணையான பதவித் தரத்தையும் சம்பள வீதத்தையும் பெறுவார்கள். அவர்கள், தற்போதைய கோட்ட ஊராட்சி அதிகாரிகள், ஊராட்சி ஒன்றிய

ஆணையாளர்கள் ஆகியோரிடையேயிருந்து பதவி உயர்வு பெற்றவர்களா யிருப்பர். வருவாய்க் கோட்ட அதிகாரியைச் சார்ந்திராமல் அவர்கள் தனித்துச் செயல்படுவர்.

8. இவ்வாறு செய்யப்பட்டபின், கோடட ஊராட்சி அதிகாரிகளின் பதவிகள் எடுக்கப்பட்டுவிடலாம். புதிய கோட்ட வளர்ச்சி அதிகாரிகள், கோட்ட ஊராட்சி அதிகாரிகளின் பணியினையும் புரிவதற்குப் போது மான நேரம் உடையவர்களாயிருப்பர். பெரும் கோட்டங்களின், கூடுதல் ஊராட்சி அதிகாரிகள் தொடர்ந்திருக்கலாம். ஆனல், இவர்கள் கோட்ட வளர்ச்சி அதிகாரியின் சட்டுப்பாட்டின்கீழ் இருக்கவேண்டும். தற்போது, மாவட்ட அளவில், ஊராட்சி வளர்ச்சிப் பணியில் மாவட்ட ஆட்சித் தலை வருக்கு உதவியாகத் துணை மாவட்ட ஆட்சித் தலைவர் பதவித் தரத்தில் மாவட்ட வளர்ச்சி அதிகாரிசள் இருவர் உள்ளனர். இந்த இரு பதவி களில் ஒன்று, கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்தில் உள்ள துணை இயக்குநர் தரத்துக்த உயர்த்தப்படலாம் என்று நான் பரிந்துரைக் கின்றேன். இந்தப் பதவி, ஊராட்சி வளர்ச்சித் துணை இயக்குநர் என்று பெயரிடப் பெறலாம். இரண்டாவது பதவி துணை மாவட்ட ஆட்சித் தலைவர் பதவித் தரத்தில் தொடர்ந்திருக்கலாம். ஆனல் ஊராட்சி வளர்ச்சி உதவி இயக்குநர் என்ற பெயரிலேயே அவ்வாறு தொடர்ந்திருக்கலாம். மாவட்டத்தில் ஊராட்சிப் பணியின் அகநிலைப் பணிமுறை, உதவி இயக்குநர், கோட்ட வளர்ச்சி அதிகாரிகள் ஆகி யோரின் உதவியுடன் துணை இயக்குநரால் நிர்வாகம் செய்யப்பட லாம். மாவட்ட ஆட்சித் தலைவர், இந்த அமைப்பின்மீது பொது மேலாண்மை பெற்று, மாவட்டத்தில் உள்ள ஏனைய வளர்ச்சித் துறை களுடன் இதன் நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்துச் செயலாற்றுவார்.

9. 1972 ஆம் ஆண்டு மே திங்களில் கோடைகானலில் நடைபெற்ற தெரிந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், ஆணையாளர் மாநாட்டில் உள்ளாட்சி அமைச்சரவர்கள் இதுபோன்ற செயற்குறிப்புக் களைப் பரிந்துரைத்தார். அதிகாரியல்லாதோர், அதிகாரிகளாயிருப்போர் பெரும்பான்மையினரின் கருத்தும் அத்தகைய சீர்திருத்தத்திற்கு ஆதர வாயுள்ளது. வருவாய்க் கோட்ட அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர் கள் ஆகியோரில் சிலரும் அத்தகைய கருத்திற்கு ஆணைக்குழுவிடம் ஆதரவு தெரிவித்தனர்.

10. என்னல் கருத்துத் தெரிவிக்கப்பட்ட சீர்திருத்தம், துறைக்குள் ளேயே நிர்வாகத் தலைமை வளர்ச்சிக்கான வாய்ப்புக்களை உருவாக்கு மென்பதால், அது மிகவும் சிக்கனமானதும், ஊராட்சி வளர்ச்சி அமைப் பின் உள் ஒட்டுறவுக்கும் கட்டுப்பாட்டிற்கும் ஏற்றதாயிருக்குமென்று நான் திண்ணமாக நம்புகிறேன்.

இணைப்புகள்

இணைப்பு எண் I

ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள ஊராட்சி ஒன்றியங்களின் பற்று–வரவு வேறுபாடுகளின் அளவைக் காட்டும் ஒப்பீட்டு அறிக்கை.

(குறிப்பு.—ஒப்பீடு செய்யப்படும் இந்த பற்று–வரவு ஒவ்வொரு மாவட்டத்திலும் மிக உயர்ந்த பற்று–வரவு கொண்ட ஓர் ஊராட்சி ஒன்றியம் மிகக் குறைந்த பற்று–வரவு கொண்ட ஓர் ஊராட்சி ஒன்றியம் ஆகிய இரு ஊராட்சி ஒன்றியங்களைக் குறிப்பிடுவதாகும்.)

தொடர் எண். (1)	மாவட்டத்தின் பெயர். (2)	வரவு (ரூ. லட்சத்தில்)		செலவு (ரூ. லட்சத்தில்)	
		உயர்ந்த பட்சம். (3)	குறைந்த பட்சம். (4)	உயர்ந்த பட்சம். (5)	குறைந்த பட்சம். (6)
1	மதுரை	38·93	15·77	38·60	18·05
2	இராமநாதபுரம்	29·10	16·04	31·53	15·55
3	சேலம்	29·28	12·04	28·56	11·85
4	தருமபுரி	38·22	12·40	42·74	13·02
5	கோயம்புத்தூர்	33·99	8·43	31·79	8·88
6	தென்னார்க்காடு	34·68	11·70	33·24	12·08
7	வடஆர்க்காடு	44·50	17·48	44·37	18·71
8	செங்கற்பட்டு	34·07	15.07	34·80	14·43
9	தஞ்சாவூர்	42·00	16·11	44·36	15·90
10	திருநெல்வேலி	32·43	14·81	34.41	14·89
11	திருச்சிராப்பள்ளி	48·40	14·86	48·32	19·52

ஆதாரம்: உள்ளாட்சி நிதிக் கணக்குகள் ஆராய்வாளர் அலுவலகம்.

இணைப்பு எண் II

8.2 பாராவில் கண்டுள்ள பரிவுரையைச் செயற்படுத்துவதற்கான செலவைத் தீர்மானிப்பதற்கான நடைமுறை ஏ6 தற்போதைய செலவு:

ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை. (1)	தற்போதுள்ள பணியாளர். (2)	சம்பள வீதம். (3)	சராசரி சம்பளம் + அகவிலைப்படி. (4)	திங்கள் ஒன்றுக்கு சிறப்புச் சம்பளம். (5)	ஆண்டுச் செலவு. (6)
374	1 உதவியாளர்	250–10–300–15–450	417	15	19,38,816
	1 இளநிலை உதவியாளர்	210–5 245–10 325	312	..	14,00,256
				A	33,39,072

செயற்குறிப்பிலுள்ள அமைப்பிற்காகும் செலவு :

ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை. (1)	நியமிக்கக் கருதப்பட்டுள்ள பணியாளர். (2)	ஊதிய வீதம். (3)	சராசரி ஊதியம் + திங்களொன்றுக்கு அகவிலைப்படி. (4)	ஆண்டுச் செலவு. (5)
112	1 ஊராட்சி வளர்ச்சிக் கண்க்காளர்.	300–10–350–15–500	467	6,27,648
	1 கணக்காளர்.	250–10–300–15–450	417	5,60,448
262	1 முதுநிலைக் கணக்காளர்.	275–10–375–15–450	427	13,42,448
	1 இளநிலைக் கணக்காளர்.	210–5–245–10–325	312	9,80,928
			B	35,11,512

ஆண்டொன்றுக்கு கூடுதல் செலவு : B—A= 1,72,440
ரூ. 1·72 லட்சம்.

இணைப்பு எண் III

ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும் கணக்குத் தணிக்கைப் பிரிவு ஒன்றைத் தொடங்குவதற்கு ஆண்டு தோறும் ஏற்படும் சராசரி செலவைத் தீர்மானிப்பதற்கான நடைமுறை ஏடு.

(பாரா 8.14 ஐப் பார்க்கவும்.)

வட்டாரங்களின் எண்ணிக்கை 374

ஒவ்வொரு வட்டாரத்திலும் கணக்குத் தணிக்கைப் பிரிவு:

பதவியின் பெயர்.	ஊதிய வீதம்.	சராசரி செலவு.
கணக்குத் தணிக்கை ஆய்வாளர் (1)	425—25—700	திங்களொன்றுக்கு ரூ. 654.
கணக்குத் தணிக்கை உதவியாளர் (2)	250—10—300—15—450	திங்களொன்றுக்கு ரூ. 834.
கணக்குத் தணிக்கைப் பிரிவு ஒன்றுக்கு திங்கள்தோறும் சராசரி செலவு		= ரூ. 1,488
கணக்குத் தணிக்கைப் பிரிவு ஒன்றுக்கு ஆண்டுதோறும் சராசரி செலவு		= ரூ. 1,488 × 12
		= ரூ. 17856
374 வட்டாரங்கள் அனைத்திலும் கணக்குத் தணிக்கைப் பிரிவு ஒன்றுக்கு ஆண்டுதோறும் சராசரி செலவு		= ரூ. 17,856 × 374
		= ரூ. 66,78,144
		அல்லது ரூ. 66·78 லட்சம்.

இணைப்பு எண் IV

அரசுப் பதவிகளாக மாற்றப்படவிருக்கும் பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியப் பதவிகளின் விவரங்களை அளிக்கும் விவர அறிக்கை

ஊராட்சி ஒன்றியப் பணியாளர் :

பதவி. (1)	எண்ணிக்கை. (2)	சம்பள வீதம். (3)	ஆண்டுச் செலவு. (4)
			ரூ.
தலைமை எழுத்தர்	374	250–10–400+10 அல்லது 15 ரூ. சிறப்புச் சம்பளம்	15,18,750
இளநிலை உதவியாளர்	2,244	200–5–250–10–300.	68,93,568
தட்டச்சர்	377	ஷை +15 ரூ. சிறப்புச் சம்பளம்	12,26,004
காசாளர்	374	ஷை	11,71,368
சிற்றெழுத்தர்	842	140–3–155–4–175–5–210.	18,03,564
மகப் பேறு உதவியாளர்	2,615	160–5–240.	1,04,32,900
	6,826		2,30,46,154

பேரூராட்சிப் பணியாளர் :

பதவி.	எண்ணிக்கை.	சம்பள வீதம்.	ஆண்டுச் செலவு.
(1)	(2)	(3)	(4)
			ரூ.
தலைமை எழுத்தர்	79	250-10-400+10 அல்லது 15 ரூ. சிறப்புச்சம்பளம்	3,19,950
இளநிலை உதவியாளர்	1,226	200-5-250-10-300	37,66,272
வருவாய் ஆய்வாளர்	20	ஷை	61,440
	1,325		41,47,662

பேரூராட்சிப் பணியாளர்களும் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களும் முறையான அரசு ஊழியர்கள் பெறும் அளவிலேயே சம்பளவீதம், அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப் படி முதலியவற்றைப் பெறுகின்றனர். அவர்களுக்குப் பங்குத் தொகையல்லாததோர் பொது வருங்கால வைப்பு நிதியும் உண்டு. இச்சமயம் அவர்களுக்கு ஓய்வூதியச் சலுகையும் பணிக் கொடை சலுகையும் கிடையாது. ஆனால், அவர்களை இச்சலுகை பெறத் தகுதியுடையர்களாக்குவது குறித்து அரசு ஏற்கெனவே பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. அவர்களும் அதே மருத்துவ, விடுமுறைச் சலுகைகளைப் பெறுகின்றனர். எனவே, அவர்களை அரசு ஊழியர்களாக மாற்றிப் பேரூராட்சிகளும் ஊராட்சி ஒன்றியங்களும் பணியாளர் குறித்த செலவை ஏற்பதன் மேல் -அந்தப் பேரூராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் கடன் அடிப்படையில் அவர்களது பணியை வழங்குவதனால் அவற்றின் ஊதியப்பட்டி எந்த விதத்திலும் கூடுதலாகிவிடாது. சிறிய அளவுக்கு நிலுவையாக உள்ள ஓய்வூதியப் பங்குத் தொகை வழங்கப்பட வேண்டியிருக்கலாம்.

ஆதாரம் : கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகம்.

இணைப்பு எண் V.

கிராம வளர்ச்சித் துறையில் தற்போதுள்ள அதிகாரிகள்



இணைப்பு எண் VI

ஊராட்சி வளர்ச்சித் துறையிலுள்ள பதவிகளின் பட்டியல்

தொடர் எண்	பதவிப் பெயர்	சம்பள வீதம் (ரூபாயில்)	திங்கள் ஒன்றுக்கான சராசரி சம்பளம் +அக விலைப் படி	பதவிகளின் எண்ணிக்கை
(1)	(2)	(3)	(4)	(5)
1	ஊர்நல உதவியாளர்கள் தரம் II	210—5—245—10—325	312	2980
2	ஷை தரம் I	250—10—300—15—450	417	1225
3	கிராமவளர்ச்சிப் பயிற்சி நிலையங்களிலுள்ள பயிற்றுநர்கள்	250—10—400	387	5
4	வளர்ச்சிப்பணி அலுவலர் (கல்வி)	300—15—420—20—500	477	374
	வளர்ச்சிப்பணி அலுவலர் (ஊராட்சி)	,,	,,	446
	கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்திலுள்ள மேல் பிரிவுக் கணக்காளர்கள்	,,	,,	48
	பேரூராட்சிகளிலுள்ள நிர்வாக அலுவலர்கள் (தேர்வுத்தரம்)	,,	,,	77
	சமுதாய வளர்ச்சி குறித்த மாநில நிலையத்திலுள்ள கணக்காளர்.	,,	,,	1

தொடர் எண்.	பதவிப் பெயர்.	சம்பள வீதம் (ரூபாயில்).	திங்கள் ஒன்றுக்கான சராசரி சம்பளம்+ அகவிலைப் படி.	பதவிகளின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)	(5)
5	நிர்வாக அலுவலர், பேரூராட்சி, தரம் I.	250—10—300—15—450	417	374
6	நிர்வாக அலுவலர், பேரூராட்சி, தரம் II.	210—5—245—10—325	312	156
7	ஊராட்சி ஒன்றியங்களின் மேலாளரும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், வருவாய்க் கோட்ட அலுவலர் அலுவலகம் ஆகியவற்றின் ஊராட்சி வளர்ச்சிக் கணக்காளரும்.	300—15—420—20—500	477	433
8	உதவியாளர்கள்/ கணக்காளர்கள்	250—10—300—15—450	417	1539
9	இளநிலை உதவியாளர்கள்/ தட்டச்சர்கள்/ சுருக்கெழுத்து-தட்டச்சர்கள்	210—5—245—10—325	312	378
10	கூடுதல் ஊராட்சி அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் ஊராட்சி வளர்ச்சித் தலைமை எழுத்தர், வருவாய்க் கோட்ட அதிகாரி அலுவலகத்தின் ஊராட்சி வளர்ச்சித் தலைமை எழுத்தர்.	350—15—425—25—600	558	100
11	தொழில்கள் வளர்ச்சிப்பணி அதிகாரி.	325—15—475—20—575 25—650	548	204

12	வட்டார வளர்ச்சி அதிகாரிகள்	425—25—700	654	374
	கூடுதல் வட்டார வளர்ச்சி அதிகாரிகள்.	,,	,,	22
	ஹுஜூர் சிரஸ்ததார் ஊராட்சி வளர்ச்சி.	,,	,,	13
	கண்காணிப்பாளர், இராம வளர்ச்சித்	,,	,,	18
	ஆய்வாளர், செய்முறை சத்துணவுத் திட்டம்.	,,	,,	1
	துணைத் தலைவர், கிராம வளர்ச்சிப் பயிற்சி நிலையம்.	,,	,,	5
	சிறப்பு வளர்ச்சி வட்டார அதிகாரி, குழந்தைகள் காப்பகம்.	,,	,,	1
13	கோட்ட ஊராட்சி அதிகாரிகள் (சிறப்புத் தேர்வுத் தரம்)	500—25—625—30—745 35—850	772	47
	வட்டார வளர்ச்சி அதிகாரி, தென்னார்க்காடு.	,,	,,	1
14	மாவட்ட வளர்ச்சி அதிகாரி கிராம வளர்ச்சி இயக்குநரின் நேர்முக உதவியாளர்.	575—25—600—40—1,000	880	23
	சமுதாய வளர்ச்சித்திட்டம் பயிற்றுநர்கள்.	,,	,,	2
15	கிராம வளர்ச்சித் துணை இயக்குநர்	800—40—1,000 50—1250	1,125	1
	முதல்வர், கிராம வளர்ச்சிப் பயிற்சி நிலையம்.	,,	,,	5
	முதல்வர், சமுதாய வளர்ச்சி மாநில நிலையம்.	,,	,,	1
16	கிராம வளர்ச்சி இணை இயக்குநர்	1.000—50—1,400	1,303	2

ஊராட்சி வளர்ச்சி நிர்வாகம்

ஊராட்சி வளர்ச்சித் துறையில் பணியாளர் தேக்க நிலை இருந்து வருகிறது என்பது

பதவி உயர்வில்லாமல் ஒரே பதவியில்

தொடர் எண்ணும், பதவியும்.	ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை நிலையானது.	தற்காலிகமானது.	மொத்தம்.	காலியிடங்களின் எண்ணிக்கை (இருப்புப் பதவிகள் கணக்கில் கொள்ளப்படவில்லை)	5 ஆண்டுப் பணிக்குக் குறைவாகப் பணியாற்றியவர்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1. வட்டார வளர்ச்சி அதிகாரிகள்.	373	61	434	..	168
2. ஊராட்சி வளர்ச்சித் தலைமை உதவியாளர்.	..	100	100	..	98
3. (தொழில்கள்) வளர்ச்சிப் பணி அதிகாரிகள்.	204	..	204	81	..
4. கல்வி வளர்ச்சிப் பணி அதிகாரிகள்.	207	172	379	11	122
5. நிர்வாக அதிகாரிகள் (நிலை I).	353	21	374	..	170
6. நிர்வாக அதிகாரிகள் (நிலை II).	142	14	156	1	84
7. மேலாளர்கள்.	372	61	433	..	122
8. அரசுத் தரப்பு உதவியாளர்கள் /கணக்கர்கள்.	1,134	405	1,539	..	425

குறித்த அறிக்கை.

நிலையின் அளவு எவ்வளவு காலமாக அந்தத் தேக்க
குறித்த பகுப்பாய்வு.

தேக்கமடைந்துள்ளவர்களின் எண்ணிக்கை.

5 முதல் 6 ஆண்டுகள் பணியாற்றியவர்.	6 முதல் 7 ஆண்டுகள் பணியாற்றியவர்.	7 முதல் 8 ஆண்டுகள் பணியாற்றியவர்.	8 முதல் 9 ஆண்டுகள் பணியாற்றியவர்.	9 முதல் 10 ஆண்டுகள் பணியாற்றியவர்.	10 ஆண்டுகளுக்கு மேற்பட்டு பணியாற்றியவர்.	குறிப்புரை.
(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)
40	68	25	62		11	
1	1	..	..	..	..	..
..	2	1	33	23	64	அரசு ஆணைகளை யொட்டி காலியிடங்கள் நிரப்பப் படவில்லை.
19	28	41	17	25	116	..
51	2	11	50	9	81	..
3	1	8	16	12	31	..
43	49	47	19	16	137	..
219	253	53	47	73	469	

தொடர் எண்ணும். பதவியும்.	ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை. நிலையானது.	தற்காலிகமானது.	மொத்தம்.	காலியிடங்களின் எண்ணிக்கை (விடுப்புப் பதவிகள் கணக்கில் கொள்ளப்படவில்லை).	5 ஆண்டுப் பணிக்குக் குறைவாகப் பணியாற்றியவர்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
9. அரசுத் தரப்பு இளநிலை உதவியாளர்கள் / தட்டச்சர்.	57	321	378	38	284
10. ஊர்நல உதவியாளர்கள் (நிலை I).	8	370	1,225	5	287
11. ஊர்நல உதவியாளர்கள் (நிலை II)	1,987	993	2,980	136	322
12. பேரூராட்சி, ஊராட்சி ஒன்றிய இளநிலை உதவியாளர்.	3,011	459	3,470	39	1,001
13. ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய தலைமை எழுத்தர்கள்.	453	..	453	7	189
14. தேர்வுத்தர நிர்வாக அதிகாரி உட்பட வளர்ச்சிப் பணி அதிகாரி (ஊராட்சிகள்).	410	162	572	3	223

5 முதல் 6 ஆண்டுகள் பணியாற்றியவர். (7)	6 முதல் 7 ஆண்டுகள் பணியாற்றியவர். (8)	7 முதல் 8 ஆண்டுகள் பணியாற்றியவர். (9)	8 முதல் 9 ஆண்டுகள் பணியாற்றியவர், (10)	9 முதல் 10 ஆண்டுகள் பணியாற்றியவர். (11)	10 ஆண்டுகளுக்கு மேற்பட்டு பணியாற்றியவர். (12)	குறிப்புரை (13)
16	14	8	2	..	16	38 காலியிடங்களில் பிற துறைப் பணியாளர்கள் பணியாற்றுகின்றனர்.
67	181	170	126	186	203	..
110	114	340	506	346	1,106	..
430	334	266	289	156	955	..
103	54	20	12	13	55	..
43	23	34	152	18	77	ஒருவர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இணைப்பு VIII.

சில பதவிகளைச் சரிநிகராக்குவது குறித்த செலவு.

தொடர் எண்.	பதவி.	மொத்த எண்ணிக்கை.	சம்பள வீதம்.	சராசரி சம்பளம்+ அகவிலைப்படி (மாதமொன்றுக்கு)
(1)	(2)	(3)	(4)	(5)
1.	கல்வி வளர்ச்சிப் பணி அதிகாரி.	379	300—15—420—20..500	477
2.	ஊராட்சி வளர்ச்சிப்பணி அதிகாரி.	572	300—15—420—20—500	477
3.	மேலாளர்களும், ஊராட்சி வளர்ச்சி கணக்கர்களும்.	433	300—15—420—20—500	477
4.	ஊராட்சி வளர்ச்சித் தலைமை எழுத்தர் களும், கூடுதல் ஊராட்சி அதிகாரி களும்.	200	350—15—425—25—600	558

1, 2, 3-ல் உள்ள பதவிகளை 4-ல் உள்ள பதவிகளுடன் சமப்படுத்துவதன் மூலம் ஆகும் கூடுதல் செலவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

$1384 \times (558-477)$ = ரூ. 1,12,104 திங்களொன்றுக்கு

அல்லது

ஆண்டு ஒன்றுக்கு ரூ. 13,45,248

அல்லது ரூ. 13·45 லட்சம்.

இணைப்பு IX.

பொது நிதியில் உபரியாகவும், பற்றுக்குறையாகவும் தொகை உள்ள ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை (1972 மே திங்களில் உள்ளவாறு).

தொடர் எண்.	மாவட்டத்தின் பெயர்.	பற்றுக்குறை உள்ள ஊராட்சிகளின் எண்ணிக்கை.	உபரியாக உள்ள ஊராட்சி ஒன்றியங்கள்: ஒரு லட்சரூபாய்க்குக் குறைவாக.	ஒரு லட்ச ரூபாயும் அதற்கு மேற்பட்டு ஆனல் இரண்டு லட்ச ரூபாய்க்குக் குறைவாக.	இரண்டு லட்ச ரூபாயும் அதற்கு மேற்பட்டு ஆனல் மூன்று லட்ச ரூபாய்க்குக் குறைவாக.	மூன்று லட்ச ரூபாயும் அதற்கு மேற்பட்டு ஆனல் 4 லட்ச ரூபாய்க்குக் குறைவாக.	நான்கு லட்ச ரூபாயும் அதற்கு மேற்பட்டு ஆனல் ரூபாய் ஐந்து லட்சத்திற்குக் குறைவாக.	ஐந்து லட்ச ரூபாயும் அதற்கு மேற்பட்டும்.	மொத்தம்.	ஊராட்சி ஒன்றியங்களின் மொத்த எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)
(1)	வட ஆர்க்காடு	4	5	3	5	6	3	10	32	36
(2)	தென் ஆர்க்காடு	..	1	4	5	4	9	11	34	34
(3)	செங்கற்பட்டு	4	5	4	4	3	1	66	23	27
(4)	கோயம்புத்தூர்	..	..	1	4	9	4	23	41	41
(5)	தருமபுரி	..	2	..	3	1	..	10	16	16
(6)	கன்னியாகுமரி	..	3	1	3	..	1	1		9

இணைப்பு IX.

பொது நிதியில் உபரியாகவும், பற்றுக்குறையாகவும் தொகை உள்ள ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை (1972 மே திங்களில் உள்ளவாறு).

தொடர் எண்.	மாவட்டத்தின் பெயர்.	பற்றுக்குறை உள்ள ஊராட்சி களின் எண்ணிக்கை.	உபரியாக உள்ள ஊராட்சி ஒன்றியங்கள். ஒரு லட்ச ரூபாய்க்குக் குறைவாக	ஒரு லட்ச ரூபாயும் அதற்கு மேற்பட்டு ஆனால் இரண்டு லட்ச ரூபாய்க்குக் குறைவாக.	இரண்டு லட்ச ரூபாயும் அதற்கு மேற்பட்டு ஆனால் மூன்று லட்ச ரூபாய்க்குக் குறைவாக.	மூன்று லட்ச ரூபாயும் அதற்கு மேற்பட்டு ஆனால் 4 லட்ச ரூபாய்க்குக் குறைவாக.	நான்கு லட்ச ரூபாயும் அதற்கு மேற்பட்டு ஆனால் ஐந்து லட்சத்திற்குக் குறைவாக.	ஐந்து லட்ச ரூபாயும் அதற்கு மேற்பட்டும்.	மொத்தம்.	ஊராட்சி ஒன்றியங்களின் மொத்த எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)
(7)	மதுரை	1	1	2	4	5	4	17	33	34
(8)	நீலகிரி	1	..	1	1	..	..	1	3	4
(9)	இராமநாதபுரம்	7	4	5	5	4	3	44	25	32
(10)	சேலம்	1	2	6	5	10	3	8	34	35
(11)	தஞ்சாவூர்	..	2	2	..	3	3	26	36	36
(12)	திருச்சிராப்பள்ளி	..	1	2	2	6	7	21	39	39
(13)	திருநெல்வேலி	8	3	7	5	1	4	3	23	31
	மொத்தம் ..	26	29	38	46	52	42	141	348	374

CONNEMARA PUBLIC LIBRARY
1 DEC 1973
MADRAS